) 12-12-2002

Issued 12-12-2002

(A)

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

புதன்கிழமை, ஏப்ரல் 24, 2002– தொகுதி 24 – எண் 1

**Wednesday the 24 April, 2002 – Volume 24– No. 1**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Legislative Assembly Secretariat, Fort St. George,**
**Chennai - 600 009**

*விலை ரூ. 3.00]*

**[Price Rs. 3.00**

**24-4-2002**

## உள்ளடக்கம்

பக்கங்கள்


| | |
|---|---|
| ஆளுநரும் அமைச்சரவையும் | iii-vii |
| Governor and Council of Ministers | ix-xii |
| பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xiii-xvi |
| பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | xvii-xxvii |
| **1. வினாக்கள்-விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 1-37 |
| **2. தகவல் கோரல்—** | |
| (அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் | 37 |
| (ஆ) புத்துயிர் பயிற்சி பெற்ற பள்ளி ஆசிரியர்கள் மாறுதல் செய்யப்பட்டிருப்பது | 38 |
| **3. சிறப்புக் கவன ஈர்ப்பு—** | |
| சைதாப்பேட்டை, வாணியம்பாடி தொகுதிகள், இடைத் தேர்தல் அறிவிப்புக்குப் பின் அதிகாரிகள் மாற்றம் | 38-47 |
| திரு. இ. புகழேந்தி | 39-42 |
| திரு. சி. ஞானசேகரன் | 42-43 |
| திரு. ஜி.கே. மணி | 43-45 |
| திரு. ப. அரசன் | 45-46 |
| மாண்புமிகு திரு. சி. துரைராஜ் | 46-47 |

தமிழ்நாடு ஆவண... 224375 ...அலகம்

பக்கங்கள்

4. கவன ஈர்ப்பு—

ஓச்சேரி முதல் நாட்றாமபள்ளி வரை தேசிய நெடுஞ்சாலை விஸ்தரிக்கப்பட்டு வருவதால் ஏற்பட்டுள்ள நிலை ... 47-53

5. அறிக்கைகள் அளித்தல்—

பொதுக் கணக்குக் குழு ... 53

6. மானியக் கோரிக்கைகள், 2002-2003, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி ... 53-144

(அ) கோரிக்கை எண் 21 - உள் துறை - காவல்

(ஆ) கோரிக்கை எண் 22 - உள் துறை - தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள்

*மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா ... 53,67,76,86 95-96,114 115,119 121-124,130

*திரு. ஜெ. அன்பழகன் ... 77-84

*திரு. அ. அன்வர் ராஜா ... 85-113

*திரு. சி. ஞானசேகரன் ... 117-121 125-13

*திருமதி டி. யசோதா ... 132-140 142-144

7. அரசினர் தீர்மானம்—

விதி 32-ஐத் தளர்த்தல் ... 144-14

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— ... 145-14

...புத்தக... சென்னை...



## ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர்—திரு. பெ.ஸ்ரீ. ராமமோகன் ராவ்

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. முதலமைச்சர் .. மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா :

பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல் துறை மற்றும் சிறுபான்மையினர் நலன்.

2. பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் :

பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள், சிறுபாசனம் உட்பட பாசனம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை. கருப்பஞ்சாற்றுக் கசண்டு. இலஞ்ச ஒழிப்பு மற்றும் சிறைகள்.

3. நிதி மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

நிதி, திட்டமிடல், தேர்தல் மற்றும் சட்டமன்றம், சட்டமியற்றல், எடைகள், அளவைகள், கடன் கொடுத்தல் மீதான சட்டம் உட்பட கடன் நிவாரணம். சீட்டு நிதிகள், நிறுவனங்களைப் பதிவு செய்தல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல்.

4. கல்வி அமைச்சர் .. மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:

கல்வி, தொழில்நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல், விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், தொல்பொருளியல், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாடு, வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

5. சட்டத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் :
சட்டம் மற்றும் நீதிமன்றங்கள்.

6. இந்துசமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி :
இந்துசமய மற்றும் அறநிலையங்கள்.

7. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. செ. செம்மலை :
மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி, குடும்ப நலன்.

8. உள்ளாட்சித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. சி. துரைராஜ் :
நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

9. கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ப. தனபால் :
கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல், விலைக் கட்டுப்பாடு மற்றும் புள்ளியியல்.

10. வருவாய்த் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம் :
வருவாய், மாவட்ட வருவாய்த் துறை பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், பத்திரப் பதிவு, முத்திரைத் தாள் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம், கிராமதானம் மற்றும் கடவுச் சீட்டுகள்.



11. வேளாண்மைத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம் :
வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்பு மேம்பாடு.

12. சமூக நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திருமதி பா. வளர்மதி :
மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், இரவலர் மறுவாழ்வு இல்லங்கள், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம்.

13. ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி :
ஆதிதிராவிடர் நலன், பழங்குடியினர், கொத்தடிமைத் தொழிலாளர்கள் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்.

14. போக்குவரத்துத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன் :
போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் சட்டம், துறைமுகங்கள்.

15. மின் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன் :
மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு.

16. தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி :
தொழிற்சாலைகள், இரும்பு, உருக்குக் கட்டுப்பாடு, சுரங்கங்கள், கனிமங்கள், மின்னணுவியல் மற்றும் வணிக வரிகள்.

**17. வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ப. மோகன் :**
வனம், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு.

**18. ஊரகத் தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன் :**
குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள், கதர் கிராமத் தொழில் வாரியம்.

**19. வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத் :**
வீட்டு வசதி, வீட்டு வசதி மேம்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், குடிசை மாற்றுத் திட்டங்கள், இடவசதிக் கட்டுப்பாடு, நகர்ப்பகுதி வளர்ச்சி, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

**20. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் :**
கால்நடை பராமரிப்பு.

**21. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே. சுதர்சனம் :**
பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன்.

**22. தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. வ.து. நடராஜன் :**
தொழிலாளர்கள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் வக்ஃபு.

**23. பால் வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன் :**
பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி.



**ι. செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. க.க. பாலசுப்ரமணியன் :**
செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், திரைப்படச் சட்டம், செய்தித்தாள் கட்டுப்பாடு.

**ί. கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம் :**
கைத்தறி மற்றும் துணித் தொழில்.

**. மீன் வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன் :**
மீன் வளம்.

**. சுற்றுலாத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. அ. மில்லர் :**
சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR—THIRU P.S. RAMAMOHAN RAO

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

**Chief Minister** .. **The Hon. Selvi J Jayalalithaa:**

Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, District Revenue Officers, Home, Police and Minorities Welfare.

**Minister for Public Works and Prohibition and Excise** .. **The Hon. Thiru O. Panneerselvam:**

Public Works, Highways, Irrigation including Minor Irrigation, Prohibition and Excise, Molasses, Prevention of Corruption and Prisons.

**Minister for Finance and Information Technology** .. **The Hon. Thiru C. Ponnaiyan:**

Finance, Planning, Elections and Legislature, Legislation, Weights and Measures, Debt Relief including Legislation on Money lending, Chits and Registration of Companies and Information Technology.

**Minister for Education** .. **The Hon. Dr. M. Thambidurai:**

Education, Technical Education, Science and Technology, Sports and Youth Welfare, Archaeology, Tamil Development and Tamil Culture, Indians Overseas, Refugees and Evacuees.

5. Minister for Law .. **The Hon. Thiru D. Jayakumar:**

Law and Courts.

6. Minister for Hindu Religious and Charitable Endowments .. **The Hon. Thiru P.C. Ramasamy:**

Hindu Religious and Charitable Endowments.

7. Minister for Health .. **The Hon. Thiru S. Semmalai:**

Health, Medical Education and Family Welfare.

8. Minister for Local Administration .. **The Hon. Thiru C. Durairaj:**

Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply.

9. Minister for Co-operation, Food and Civil Supplies and Consumer Protection .. **The Hon. Thiru P. Dhanabal:**

Co-operation, Food, Civil Supplies, Price Control and Statistics.

10. Minister for Revenue .. **The Hon. Thiru N. Thalavai Sundaram:**

Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration, Stamp Act, Stationery and Printing, Government Press, Bhoodhan & Gramdhan and Passports.

11. Minister for Agriculture .. **The Hon. Thiru R. Jeevanantham:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess, Sugarcane Development.



12. Minister for Social Welfare .. **The Hon. Tmt. B. Valarmathi:**

Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Beggar Homes, Orphanages and Correctional Administration.

13. Minister for Adi-Dravidar Welfare .. **The Hon. Thiru S. Karuppasamy:**

Adi-Dravidar Welfare, Hill Tribes, Bonded Labour and Welfare of Ex-servicemen.

14. Minister for Transport .. **The Hon. Thiru R. Viswanathan:**

Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

15. Minister for Electricity .. **The Hon. Thiru Nainar Nagendran:**

Electricity, Non-conventional Energy Development.

16. Minister for Industries and Commercial Taxes .. **The Hon. Thiru Se. Ma. Velusamy:**

Industries, Iron and Steel Control, Mines & Minerals, Electronics and Commercial Taxes.

17. Minister for Forests and Environment .. **The Hon. Thiru P. Mohan:**

Forests & Environment and Pollution Control.

18. Minister for Rural Industries .. **The Hon. Thiru R. Vilwanathan:**

Rural Industries including Cottage Industries, Small Scale Industries, Khadi and Village Industries Board.

| | | |
|---|---|---|
| 19. | Minister for Housing and Urban Development | .. **The Hon. Thiru M.C. Sampath:** Housing, Housing Development, Town Planning, Slum Clearance, Accommodation Control, Urban Development and C.M.D.A. |
| 20. | Minister for Animal Husbandry | .. **The Hon. Thiru Anitha R. Radhakrishnan:** Animal Husbandry. |
| 21. | Minister for Backward Classes | .. **The Hon. Thiru K. Sudarsanam:** Backward Classes, Most Backward Classes and De-notified Communities. |
| 22. | Minister for Labour | .. **The Hon. Thiru Va. Thu. Natarajan:** Labour, Employment and Training, Urban and Rural Employment, Census and Wakfs. |
| 23. | Minister for Dairy Development | .. **The Hon. Thiru S. Ramachandran:** Milk and Dairy Development. |
| 24. | Minister for Information and Publicity | .. **The Hon. Thiru K.K. Balasubramanian:** Information and Publicity, Film Technology, Cinematograph Act, Newsprint Control. |
| 25. | Minister for Handlooms and Textiles | .. **The Hon. Thiru V. Somasundaram:** Handlooms and Textiles. |
| 26. | Minister for Fisheries | .. **The Hon. Thiru M. Radhakrishnan:** Fisheries. |
| 27. | Minister for Tourism | .. **The Hon. Thiru A. Miller:** Tourism and Tourism Development Corporation. |



## பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

**பேரவைத் தலைவர்**

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து

**பேரவைத் துணைத் தலைவர்**

மாண்புமிகு திரு. அ. அருணாசலம்

**மாற்றுத் தலைவர்கள்***

திரு. பி.ஆர். சுந்தரம்

திரு. அ. பாப்பா சுந்தரம்

திரு. ப. இராஜரெத்தினம்

திரு. எம்.ஏ. ஹக்கீம்

திரு. செ.கு. தமிழரசன்

திரு. லா. சந்தானம்

**முதன்மைச் செயலாளர்**

திரு. செ.சு. ஜானகிராமன்

**செயலாளர்**

திரு. வெ. இராசாராமன்

*12-3-2002 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

| | | |
|---|---|---|
| திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்.சி., பி.ஜி.எல். | .. | கூடுதல் செயலாளர் |
| திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| திரு. செ. சந்திரகுமார், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி வீ.நா. உமா, பி.ஏ., (விடுப்பு) | .. | குழு அலுவலர் |
| திரு. தி. திருமாவளவன், பி.எஸ்.சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | .. | பேரவைத் தலைவரின் சிறப்புத் தனிச் செயலர் |
| திரு. சி. சடகோபி, எம்.ஏ., எம்.பி.ஏ. | .. | பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| திரு. சு. ராஜகுரு | .. | குழு அலுவலர் |
| திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்.சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | .. | துணைச் செயலாளர் |



| | | |
|---|---|---|
| திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. மா. செல்வராஜ், பி.எஸ்.சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | .. | குழு அலுவலர் |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | .. | குழு அலுவலர் |
| திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. (விடுப்பு) | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | .. | குழு அலுவலர் |
| திரு. தி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்.சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்.சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். (விடுப்பு) | .. | தலைமை நிருபர் |
| திருமதி என். மீனாட்சி, எம்.ஏ. பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல். | .. | தலைமை நிருபர் |

| | | |
|---|---|---|
| திரு. தி. உமாபதி, பி.ஏ. | .. | தலைமை நிருபர் |
| திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. கோ. தேவராஜன், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி ச.இரா. சுகுணா, பி.ஏ. | .. | தலைமை நிருபர் |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திரு. ந. ருத்திரமணி, எம்.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திரு. க. கிருஷ்ணன், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி சீ. நிர்மலா, பி.காம். | .. | தலைமை நிருபர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | தலைமை நிருபர் |
| திரு. நா. வீரராகவன், எம்.ஏ., பி.ஜி.டி.சி.ஏ. | .. | தலைமை நிருபர் |
| செல்வி சு. வத்சலா, பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |



## பேரவை உறுப்பினர்கள்

*(அகர வரிசைப்படி)*

## பெயர்களும் தொகுதிகளும்

| | | | |
|---|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | .. | திருவாரூர் (செ.வ.) |
| 2. | அண்ணாதுரை, திரு. செ. | .. | ஜெயங்கொண்டம் |
| 3. | அண்ணாமலை, திரு. கு. | .. | தென்காசி |
| 4. | அண்ணாவி, திரு. ப. | .. | தொட்டியம் |
| 5. | அப்பாவு, திரு. மு. | .. | ராதாபுரம் |
| 6. | அய்யாறு வாண்டையார், திரு. கே. | .. | திருவையாறு |
| 7. | அரசன், திரு. ப. | .. | அறந்தாங்கி |
| 8. | அருணாசலம், திரு. அ. | .. | வரகூர் (செ.வ.) |
| 9. | அருள், திரு. பி.எஸ். | .. | புவனகிரி |
| 10. | அழகம்மாள், திருமதி, வி. | .. | தலைவாசல் (செ.வ.) |
| 11. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | .. | திருச்செந்தூர் |
| 12. | அன்பழகன், திரு. ஆகு.சீ. | .. | பெரணமல்லூர் |
| 13. | அன்பழகன், திரு. கு. | .. | நிலக்கோட்டை (செ.வ.) |
| 14. | அன்பழகன், திரு. கே.பி. | .. | பாலக்கோடு |
| 15. | அன்பழகன், திரு. ஜெ. | .. | தியாகராய நகர் |
| 16. | அன்பழகன், பேராசிரியர் க. | .. | துறைமுகம் |
| 17. | அன்பில் பெரியசாமி, திரு. | .. | திருச்சிராப்பள்ளி-2 |
| 18. | அன்வர் ராஜா, திரு. அ. | .. | இராமநாதபுரம் |
| 19. | ஆண்டிவேல், திரு. ப. | .. | வேடசந்தூர் |
| 20. | ஆறுமுகம், திரு. கே. | .. | செங்கல்பட்டு |

21. ஆறுமுகம், திரு. த. .. திருவொற்றியூர்
22. ஆற்காடு நா. வீராசாமி, திரு. .. அண்ணா நகர்
23. ஆஸ்டின், திரு. .. நாகர்கோவில்
24. இரவிராஜ், திரு. கோ. .. திருத்தணி
25. இராசேந்திரன், திரு. சி. .. திருவோணம்
26. இராசேந்திரன், திரு. சோ. .. கோவில்பட்டி
27. இராமசாமி, திரு. கே.ஆர். .. திருவாடனை
28. இராமசாமி, திரு. பி.சி. .. மொடக்குறிச்சி
29. இராமச்சந்திரன், திரு. எஸ். .. கலசப்பாக்கம்
30. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். .. கம்பம்
31. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். .. சாத்தூர்
32. இராமு, திரு. ந. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.
33. இராம் பிரபு, திரு. இரா. .. பரமக்குடி (செ.வ.)
34. இராஜசேகர், திரு. மா. .. ராஜபாளையம் (செ.வ.)
35. இராஜரெத்தினம், திரு. ப. .. பெரம்பலூர் (செ.வ.)
36. இராஜா, திரு. டி.கே. .. திருப்பத்தூர்
37. இராஜேந்திர பிரசாத், திரு. கே.பி. .. பத்மநாபபுரம்
38. இராஜேந்திரன், திரு. பி.ஜி. .. ஆலங்குளம்
39. இலட்சுமணன், திரு. கே.என். .. மயிலாப்பூர்
40. இளவழகன், திரு. ப. .. அரியலூர்
41. இளையகண்ணு, திரு. கா.தி. .. ஏற்காடு (ஆவா.)
42. இன்பத் தமிழன், திரு. இரா.தா. .. ஸ்ரீவில்லிபுத்தூர்



43. ஈஸ்வரன், திரு. ரா. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)
44. உசேன், திரு. எஸ்.ஏ.எம். .. திருவல்லிக்கேணி
45. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். .. தஞ்சாவூர்
46. உமாதேவன், திரு. கே.கே. .. திருப்பத்தூர்
47. உலகரட்சகன், திரு. பி.எஸ். .. செய்யாறு
48. ஏழுமலை, திரு. வெ. .. செஞ்சி
49. கணபதி, திரு. ந. .. வானூர் (செ.வ.)
50. கணேசன், திரு. ஐ. .. எடப்பாடி
51. கணேசன், திரு. ஆர்.டி. .. தேனி
52. கண்ணன், திரு. ஏ.எஸ். .. பொன்னேரி (செ.வ.)
53. கந்தசாமி, திரு. க.ரா. .. சத்தியமங்கலம்
54. கந்தசாமி, திரு. கா. .. குன்னூர் (செ.வ.)
55. கருணாகரன், திரு. கே.சி. .. சிங்காநல்லூர்
56. கருணாநிதி, திரு. மு. .. சேப்பாக்கம்
57. கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரநயினார்கோவில் (செவ)
58. கருப்பணன், திரு. கே.சி. .. பவானி
59. கருப்பாயி, டாக்டர் திருமதி ஆ .. குளத்தூர் (செ.வ.)
60. கலாவதி, திருமதி கு. .. சேந்தமங்கலம் (ஆவா.)
61. கனகதாரா, செல்வி சி. .. பேரணாமபட்டு (செ.வ.)
62. கனிதா சம்பத், திருமதி எஸ். .. திருப்போரூர் (செ.வ.)
63. காசாம்பு பூமாலை, திருமதி .. சங்கராபுரம்
64. காமராஜ், திரு. மே.ப. .. தாரமங்கலம்
65. கார்த்தி, திரு. மு. .. சேலம்-2

66. காளிமுத்து, டாக்டர் கா. .. திருமங்கலம்
67. கிருஷ்ணமூர்த்தி, திரு. வே. .. அரூர் (செ.வ.)
68. கிருஷ்ணன், திரு. ஆர். .. அந்தியூர் (செ.வ.)
69. குமாரதாஸ், டாக்டர் தே. .. கிள்ளியூர்
70. குரு என்கிற குருநாதன், திரு. ஜெ. .. ஆண்டிமடம்
71. கோதண்டராமன், திரு. ஜி. .. முகையூர்
72. கோபிநாத், திரு. கே. .. ஓசூர்
73. கோவிந்தசாமி, டாக்டர் ஆர். .. விருத்தாசலம்
74. கோவிந்தராஜ், திரு. வெ. .. கிருஷ்ணகிரி
75. கோவை தங்கம், திரு. .. வால்பாறை (செ.வ.)
76. சக்திவேல் முருகன், திரு. எம். .. அம்பாசமுத்திரம்
77. சக்ரபாணி, திரு. ஆர் .. ஒட்டன்சத்திரம்
78. சசிகலா, திருமதி ஆர். .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
79. சண்முகநாதன், திரு. எஸ்.பி. .. ஸ்ரீவைகுண்டம்
80. சண்முகம், திரு. சி. .. பூந்தமல்லி
81. சண்முகம், திரு. சி.வி. .. திண்டிவனம்
82. சண்முகவேலு, திரு. சி. .. உடுமலைப்பேட்டை
83. சந்தானம், திரு. லா. .. உசிலம்பட்டி
84. சந்திரசேகரன், திரு. எம்.எஸ். .. இராணிப்பேட்டை
85. சந்திரமோகன், திரு. நா. .. சீர்காழி (செ.வ.)
86. சந்திரன், திரு. வீ. .. சிவகங்கை
87. சம்பத், திரு. எம்.சி. .. நெல்லிக்குப்பம்
88. சரவணன், திரு. துரை. கி. .. சிதம்பரம்



89. சரோஜா, திருமதி இரா. .. உப்பிலியாபுரம் (ஆ.வா.)
90. சாமி, திரு. ஆர். .. மேலூர்
91. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்
92. சிதம்பரம், திரு. ப. .. பவானிசாகர்
93. சிவகாமி, திருமதி வி. .. தாராபுரம் (செ.வ.)
94. சிவசாமி, திரு. கே.கே. .. அருப்புக்கோட்டை
95. சிவசாமி, திரு. சி. .. திருப்பூர்
96. சிவசுப்பிரமணியன், திரு. டி.என். .. கரூர்
97. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி
98. சிவபெருமாள், திரு. அ. .. ஒட்டப்பிடாரம் (செ.வ.)
99. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம்
100. சின்னசாமி, திரு. மா. .. பழனி (செ.வ.)
101. சீனிவேல், திரு. எஸ்.எம். .. திருப்பரங்குன்றம்
102. சுதர்சனம், திரு. கே. .. கும்மிடிப்பூண்டி
103. சுதர்சனம், திரு. டி. .. திருவள்ளூர்
104. சுந்தரம், திரு. பி.ஆர். .. ராசிபுரம்
105. சுந்தராம்பாள், திருமதி செ. .. மேட்டூர்
106. சுப்பிரமணியன், திரு. வீ. .. கண்டமங்கலம் (செ.வ.)
107. சுப்பையா பாண்டியன், திரு. எம். .. கடையநல்லூர்
108. சூரியகலா, திருமதி சி.எம். .. குடியாத்தம்
109. செம்மலை, திரு. செ. .. ஓமலூர்
110. செல்லையா, திரு. வி.ஏ. .. மருங்காபுரி
111. செல்வம், திரு. எஸ்.கே. .. வீரபாண்டி

112. செல்வராஜ், திரு. ஏ.கே. .. மேட்டுப்பாளையம்
113. செல்வி முருகேசன், திருமதி .. காங்கேயம்
114. சேகரன், திரு. கே.என். .. திருவெறும்பூர்
115. சேகர்பாபு, திரு. பி.கே. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
116. சோமசுந்தரம், திரு. வி. .. உத்திரமேரூர்
117. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்
118. ஞானமூர்த்தி, திரு. கே.ஜி.பி. .. திருநாவலூர்
119. தமிழரசன், திரு. செ.கு. .. நன்னிலம் (செ.வ.)
120. தமிழ்மொழி ராஜதத்தன், திருமதி .. மேல்மலையனூர்
121. தம்பிதுரை, டாக்டர் மு. .. பர்கூர்
122. தவமணி, திரு. க. .. திருவிடைமருதூர்
123. தளவாய் சுந்தரம், திரு. ந. .. கன்னியாகுமரி
124. தனபால், திரு. ப. .. சங்கரி (செ.வ.)
125. தாமோதரன், திரு. எஸ். .. விருதுநகர்
126. தாமோதரன், திரு. செ. .. கிணத்துக்கடவு
127. தாமோதிரன், திரு. ப.வெ. .. பொங்கலூர்
128. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. .. பேராவூரணி
129. திருநாவுக்கரசு, திரு. எஸ்.எஸ். .. காஞ்சிபுரம்
130. திருமாவளவன், திரு. இரா. .. மங்களூர் (செ.வ.)
131. துரைமுருகன், திரு. .. காட்பாடி
132. துரைராஜ், திரு. சி. .. சேடப்பட்டி
133. தென்னரசு, திரு. கே.எஸ். .. ஈரோடு



134. நடராஜன், திரு. அ. .. குத்தாலம்
135. நடராஜன், திரு. எஸ். .. நாட்றாம்பள்ளி
136. நடராஜன், திரு. பி.கே.டி. .. ஆத்தூர்
137. நடராஜன், திரு. வது. .. இளையான்குடி
138. நயினார் நாகேந்திரன், திரு. .. திருநெல்வேலி
139. நரசிம்மன், திரு. பி.எம். .. பள்ளிப்பட்டு
140. நளினி மனோகரன், திருமதி .. போளூர்
141. நன்மாறன், திரு. என். .. மதுரை கிழக்கு
142. நீலகண்டன், திரு. ப. .. ஆற்காடு
143. நெப்போலியன், திரு. து. .. வில்லிவாக்கம்
144. பச்சைமால், திரு. தா. .. குளச்சல்
145. பதினெட்டாம்படியான், திரு. க. .. முதுகுளத்தூர்
146. பரணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி-1
147. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)
148. பவானி கருணாகரன், திருமதி கே. .. அரக்கோணம் (செ.வ.)
149. பழனிசாமி, திரு. கே.எஸ். .. பெருந்துறை
150. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
151. பழனியப்பன், திரு. பெ. .. மொரப்பூர்
152. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி
153. பன்னீர்செல்வம், திரு. ஓ. .. பெரியகுளம்
154. பாண்டுரங்கன், திரு. கே. .. அணைக்கட்டு
155. பாப்பா சுந்தரம், திரு. அ. .. குளித்தலை
156. பாரமலை, திரு. க. .. மானாமதுரை (செ.வ.)

| | | |
|---|---|---|
| 157. | பாரிமோகன், திரு. கி. | .. தருமபுரி |
| 158. | பாலகிருஷ்ணன், திரு. சோ. | .. கடலாடி |
| 159. | பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.ஆர். | .. தொண்டாமுத்தூர் |
| 160. | பாலசுப்ரமணியன், திரு. க.க. | .. ஸ்ரீரங்கம் |
| 161. | பாலபாரதி, செல்வி க. | .. திண்டுக்கல் |
| 162. | பாலன், திரு. எஸ்.எம். | .. லால்குடி |
| 163. | பால் மனோஜ் பாண்டியன், திரு. பி.எச். | .. சேரன்மகாதேவி |
| 164. | பிச்சாண்டி, திரு. கு. | .. திருவண்ணாமலை |
| 165. | புகழேந்தி, திரு. இ. | .. கடலூர் |
| 166. | பூபதி மாரியப்பன், திருமதி | .. வலங்கைமான் (செ.வ.) |
| 167. | பெருமாள், திரு. என்.கே. | .. விளாத்திக்குளம் |
| 168. | பொன்முடி, டாக்டர் க. | .. விழுப்புரம் |
| 169. | பொன்னம்பலம், திரு. ப. | .. சமயநல்லூர் (செ.வ.) |
| 170. | பொன்னையன், திரு. சி. | .. திருச்செங்கோடு |
| 171. | பேராளூர் வரதன், திரு. | .. செங்கம் (செ.வ.) |
| 172. | மகாலிங்கம், திரு. எஸ். | . அவினாசி (செ.வ.) |
| 173. | மகேந்திரன், திரு. கே. | .. பெரம்பூர் (செ.வ.) |
| 174. | மகேஸ்வரி, திருமதி எஸ். | .. கோயம்புத்தூர் மேற்கு |
| 175. | மணி, திரு. கோ.சி. | .. கும்பகோணம் |
| 176. | மணி, திரு. டி. | .. விளவங்கோடு |
| 177. | மணி, திரு. ஜி.கே. | .. பெண்ணாகரம் |
| 178. | மணி நாடார், திரு. எஸ்.எஸ். | .. சாத்தான்குளம் |



| | | |
|---|---|---|
| 179. | மலையப்பசாமி, திரு. அ.இரா. | .. கபிலர்மலை |
| 180. | மல்லிகா சின்னசாமி, திருமதி | .. முசிறி |
| 181. | மாணிக்கராஜ், திரு. எஸ். | .. நாங்குநேரி |
| 182. | மில்லர், திரு. அ. | .. கூடலூர் |
| 183. | முரளிதரன், திரு. கே.வி. | .. தளி |
| 184. | முருகவேல் ராஜன், திரு. க. | .. வந்தவாசி (செ.வ.) |
| 185. | முருகேசன், திரு. ஆகு. | .. ஆத்தூர் |
| 186. | முனுசாமி, திரு. கா.பூ. | .. காவேரிப்பட்டினம் |
| 187. | மைதீன்கான், திரு. டி.பி.எம். | .. பாளையங்கோட்டை |
| 188. | மோகன், திரு. ப. | .. சின்னசேலம் |
| 189. | யசோதா, திருமதி டி. | .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 190. | ரங்கநாதன், திரு. ப. | .. புரசைவாக்கம் |
| 191. | ரங்கராஜன், திரு. என்.ஆர். | .. பட்டுக்கோட்டை |
| 192. | ரமணீதரன், திரு. எஸ்.எஸ். | .. கோபிசெட்டிப்பாளையம் |
| 193. | ராதாகிருஷ்ணன், திரு. எம். | .. திருமயம் |
| 194. | ராமராஜ், திரு. ச. | .. போடிநாயக்கனூர் |
| 195. | ராம்குமார், திரு. எம். | .. பாபநாசம் |
| 196. | ராஜகோபால், திரு. ஆ | .. சிவகாசி |
| 197. | ராஜம்மாள், திருமதி எஸ். | .. தூத்துக்குடி |
| 198. | ராஜா, திரு. எச். | .. காரைக்குடி |
| 199. | ராஜாங்கம், திரு. வி.ஆர். | .. சோழவந்தான் |
| 200. | ராஜு, திரு. எச்.எம். | .. உதகமண்டலம் |
| 201. | ரெங்கநாதன், திரு. என். | .. பூம்புகார் |

202. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், திரு. மா.ப. .. பேரூர்
203. லட்சுமணன், திரு. வி.கே. .. கோயம்புத்தூர் கிழக்கு
204. லியாவுதீன் சேட், திரு. இ.ஏ. .. அரவக்குறிச்சி
205. வளர்மதி, திருமதி பா. .. ஆலந்தூர்
206. வளர்மதி ஜெபாராஜ், திருமதி .. மதுரை மேற்கு
207. வள்ளல் பெருமான், டாக்டர் பி. .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
208. வாசுதேவன், திரு. பெ. .. மதுராந்தகம்
209. விசுவநாதன், திரு. இரா. .. நத்தம்
210. வில்வநாதன், திரு. இரா. .. சோளிங்கர்
211. வினாயகமூர்த்தி, திரு. எஸ்.ஜி. .. பூங்காநகர்
212. விஜயபாஸ்கர், டாக்டர் சி. .. புதுக்கோட்டை
213. விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி ப. .. பனமரத்துப்பட்டி
214. வீரபாண்டியன், திரு. ஜெ.க. .. மயிலாடுதுறை
215. வெங்கடாசலம், திரு. அ. .. ஆலங்குடி
216. வெங்கடாஜலம், திரு. செ. .. சேலம்-I
217. வேதரத்தினம், திரு. எஸ்.கே. .. வேதாரண்யம்
218. வேலுசாமி, திரு. செ.ம. .. பல்லடம்
219. வேலு, திரு. எ.வ. .. தண்டராம்பட்டு
220. வேல்முருகன், திரு. தி. .. பண்ருட்டி
221. வைத்தியலிங்கம், திரு. மீ. அ. .. தாம்பரம்
222. வைத்திலிங்கம், திரு. ஆர். .. ஒரத்தநாடு



223. ஜீவானந்தம், திரு. இரா. .. நாகப்பட்டினம்
224. ஜெமினி கே. ராமச்சந்திரன், திரு. .. ஆரணி
225. ஜெயக்குமார், திரு. கு. .. நாமக்கல் (செ.வ.)
226. ஜெயக்குமார், திரு. டி. .. இராயபுரம்
227. ஜெயராமன், திரு. வி. .. பொள்ளாச்சி
228. ஜெயலலிதா, செல்வி ஜெ .. ஆண்டிப்பட்டி
229. ஸ்டாலின், திரு. மு.க. .. ஆயிரம் விளக்கு
230. ஹக்கீம், திரு. எம்.ஏ. .. மதுரை மத்தி
231. ஹேமச்சந்திரன், திரு. ஜே. .. திருவட்டாறு
232. சான்ட்ரா டான் க்ரவல், திருமதி .. (நியமனம்)
233. (வெற்றிடம்) .. சைதாப்பேட்டை
234. (வெற்றிடம்) .. வாணியம்பாடி
235. (வெற்றிடம்) .. அச்சரப்பாக்கம் (செ.வ.)

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. என்.ஆர். சந்திரன் .. தலைமை வழக்கறிஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## சித்திரை 11, சித்ரபானு - திருவள்ளுவர் ஆண்டு 2033

## 2002 ஏப்ரல் 24, புதன்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10.00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தால்
ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து."

நடைபெற்ற குற்றங்களை நடுநிலை தவறாமல் ஆராய்ந்தறிந்து மீண்டும் அவை நிகழாவண்ணம் அக்குற்றங்களுக்கேற்பத் தண்டனை கிடைக்கச் செய்வதே அரசின் கடமையாகும்.

## 1. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்-விடைகள். வினா எண் 215, திரு. மா. சின்னசாமி மற்றும் திரு. வை. சிவபுண்ணியம். மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்.*

**215—**

**தென்னக நதிகளை இணைத்தல்**

***7511—திரு. மா. சின்னசாமி,**
**திரு. வை. சிவபுண்ணியம் :**

*மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2002 ஏப்ரல் 24

தென்னக நதிகளை இணைக்க அரசு எடுத்துவரும் ஆக்கப்பூர்வமான நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீபகற்ப நதிகளை இணைக்க மத்திய அரசு நிறுவனமான தேசிய நீர் மேம்பாட்டு முகமையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு அரசு இதற்கு தனது முழு ஆதரவைத் தருவதுடன் ஒத்துழைப்பையும் நல்கி வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மா. சின்னசாமி.

**திரு. மா. சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் தொட்டு வணங்குகிறேன். தென்னக நதிகளை இணைக்க அம்மாவின் அரசு மத்திய அரசுடன் கலந்தாலோசித்து, ஒரு நல்ல முடிவு எடுக்குமானால், தமிழகம் ஒரு மிகப் பெரிய வளம்பெறும் மாநிலமாக மாறும். ஆகவே, அம்மாவின் அரசு மத்திய அரசுடன் கலந்தாலோசித்து, இந்த நீண்ட நாள் பிரச்சினைக்குத் தீர்வு காண முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய நீர் மேம்பாட்டு முகமையினால் தீபகற்ப நதிகளை இணைக்கின்ற திட்டமாக மகாநதியிலிருந்து கோதாவரியையும் கோதாவரியை பின்னர் கிருஷ்ணாவுடனும், கிருஷ்ணா நதியை பின்னர் காவிரியுடனும், காவிரியிலிருந்து மீண்டும் குண்டாறு வரையும் இணைப்பதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி ஆய்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த இணைப்புத் திட்டங்கள் நிறைவேற்றுவது குறித்து மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 11-9-2001 அன்று நம்முடைய பாரதப் பிரதமர் அவர்களுக்குக் கடிதம் மூலமாகவும் எழுதி வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். தமிழக அரசு தொடர் நடவடிக்கை எடுத்து, இந்தத் திட்டத்திற்கு உண்டான சாத்தியக்கூறுகளை விரைவுபடுத்துவதற்கான பணியை மேற்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.



2002 ஏப்ரல் 24]

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மிக முக்கியமான கேள்வி. குறிப்பாக, தென்னக நதிகளை இணைக்க வேண்டும் என்பதற்கான முயற்சியை அதற்குரிய முன் முயற்சிகளை நம்முடைய தமிழ்நாடு அரசு எடுத்துக் கொண்டிருப்பதைப் பாராட்டுகிறேன். குறிப்பாக, கடந்த ஆளுநர் உரையிலே அது குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, அதற்கான முயற்சிகள் எடுக்கப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிக்கின்றார்கள். குறிப்பாக மகாநதி, கிருஷ்ணா, கோதாவரி, பெண்ணாறு, குண்டாறு, காவிரி, வைகை, தாமிரபரணி இந்த நதிகளை எல்லாம் இணைப்பதன் மூலமாக மிகப் பெரிய வெள்ளச் சேதத்தை, இந்தியா முழுவதிலும் ஏற்படுகிற வெள்ளச் சேதத்தை- ஒரு பகுதியிலே தடுக்க முடியும். மிகப் பெரிய வறட்சிக்கு உள்ளாகிய மாநிலங்களையும் பாதுகாக்கவும் முடியும். குறிப்பாக, தமிழ்நாட்டிலே வறட்சியைப் போக்குவதற்கான முயற்சியாகவும் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தை அறிமுகப்படுத்தி இருக்கிற இந்த நிலையில் இந்தத் தென்னக நதிகளை இணைக்கும் முயற்சிகளை மத்திய அரசிடத்திலே வலியுறுத்தி, விரைவாக அதற்கான திட்டங்களைத் தீட்டுவதற்கு முயற்சிகளை அரசு விரைந்து மேற்கொள்ளுமா? அதற்குரிய முயற்சிகள் எடுக்கப்பட்டு இருக்கிறது என்று சொல்லப்பட்டு இருந்தாலும்கூட சிறிய பிரச்சினையாக இருந்தாலும்கூட மத்திய அரசு தீர்ப்பதற்கான முயற்சிகளை எடுப்பதிலே காலதாமதம் இருக்கிற காரணத்தினாலே, இதை விரைவுபடுத்துவதற்கான முயற்சி எடுப்பதற்கு அரசு தனிக் கவனம் செலுத்துமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீபகற்ப நதிகளை இணைப்பதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தின் அடிப்படையில் நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தீவிரமான முயற்சி எடுத்து, அந்தப் பணி சீக்கிரம் தொடங்கி முடிக்கப்படவேண்டும் என்பதில் மிகவும் அவா கொண்டிருக்கிறார்கள். சாத்தியக்கூறுகள் உண்டா என்பதற்கான பணிகள், ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அந்தப் பணி 2012-ல் தொடங்கப்பட்டு 2043-ல் முடிக்கப்படும் என்று திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டத்தின் அடிப்படையில் பணிகள் மேற்கொண்டு ஆய்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

[2002 ஏப்ரல் 24

முற்பகல் 10-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னக நதிகளை இணைப்பதற்காக நம்முடைய அரசு எடுத்திருக்கிற முயற்சிக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். அமைச்சர் அவர்கள் மகாநதி, கோதாவரி, காவிரி போன்ற நதிகளை இணைப்பது பற்றிச் சொன்னபோது, எங்களுடைய மாவட்டத்தில் மிக முக்கியமாக ஓடிக்கொண்டிருக்கிற பாலாற்றை விட்டுவிட்டார்கள். பாலாற்றை இணைத்தால்தான் செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் போன்ற மாவட்டங்கள் பயன்பெறும். அதேபோல ஆந்திராவினுடைய ஒரு பகுதியும் அதிலே வருகிறது, கர்நாடகத்தினுடைய ஒரு பகுதியும் வருகிறது. பாலாற்றையும் அதிலே இணைப்பதற்குச் சாத்தியக்கூறுகள் இருப்பதாக ஏறகெனவே ஆய்வு அறிக்கைகள் எல்லாம் இருக்கின்றன. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஞானசேகரன், இன்னும் கல்யாணமே ஆகவில்லை, குழந்தை பிறப்பதைப் பற்றி பேசிக் கொண்டிருக்கிறீர்களே? (சிரிப்பு)

**திரு. சி. ஞானசேகரன்:** மத்திய அரசு இதற்கான ஒப்புதலைத் தந்துவிட்டதா? அதற்கான செலவு எவ்வளவு ஆகும்? காரணம், 2012-வது ஆண்டு தொடங்குவதாகச் சொல்லியிருக்கிறீர்கள். அதேபோல தேசிய நீர் மேம்பாட்டு முகமை இதற்கான ஆய்வினை நடத்தியிருக்கிறதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையினை ஆய்வு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். தாமோதரன்.

**திரு. எஸ். தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி நீர்ப் பாசனத்தால் தமிழ்நாட்டில் மூன்றில் ஒரு பங்கு விவசாயம் நடைபெறுகிறது. தமிழ்நாட்டிலே போதுமான நீர் வளம் இல்லை. காவிரியைவிட கிருஷ்ணா ஆறு சுமார் மூன்று மடங்கு பெரியது. தற்போது சென்னை மக்களுக்கும் குடிநீர் கொடுக்கிறது. இதைவிட மூன்று



2002 ஏப்ரல் 24]

மடங்கு கோதாவரி ஆறு பெரியது. கோதாவரியைவிட இரண்டு மடங்கு மகாநதி பெரியது. மகாநதி, கோதாவரி, கிருஷ்ணா, காவிரி, வைகை, தாமிரபரணியை இணைப்பதன் மூலம் விவசாயம் நல்ல முறையிலே பெருகும். தண்ணீர்ப் பஞ்சம் அறவே தீரும். 1985-ல் கோதாவரியில் ஓடிய ஒரு வார தண்ணீர் தமிழ்நாட்டின் அனைத்துத் தேவைகளுக்கும் ஒரு வருடத்திற்குப் போதுமானது என வல்லுநர்கள் கணக்குக் கொடுத்துள்ளனர். 15 இலட்சம் cusecs-க்கு மேல் ஸ்ரீசைலத்தில் சமயத்தில் தண்ணீர் செல்கிறது. தமிழ்நாட்டைவிட மூன்றில் ஒரு பங்கான அரியானாவில், தமிழ்நாட்டைவிட மூன்று மடங்கு விளைச்சல் நடைபெறுகிறது. இதற்கு அதிகமான ....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தாமோதரன், முடியுங்கள்.

**திரு. எஸ். தாமோதரன்:** முடித்துவிடுகிறேன். இதற்கு அதிகமான தண்ணீர்தான் காரணம். ஆகவே, இந்தத் திட்டத்தை எப்பாடுபட்டாவது நிறைவேற்ற இந்த அரசு முன்வருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன். இதை நிறைவேற்றும் பொருட்டு எத்தனை ஆயிரம் கோடி ரூபாய் வருடத்திற்கு தமிழ்நாட்டிற்கு செலவு மிச்சம் ஆகும் என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய நீர் மேம்பாட்டு முகமையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டு, தீபகற்ப நதிகளை ஒருங்கிணைப்பதற்குண்டான சாத்தியக்கூறுகள் குறித்து ஆய்வு நடைபெற்றுக் கொண்டிருப்பது என்பது, அந்தப் பகுதிகளில் உற்பத்தி ஆகின்ற நீர் அந்த மாநிலங்களின் தேவைக்குப் போக, உபரியாக இருக்கின்ற நீர் கடலிலே கலக்கிறதே, அந்த வீணாகக் கடலில் கலக்கின்ற நீரை, தேவையிருக்கின்ற மாநிலங்களுக்குத் திருப்பி விடுவதற்குண்டான பணிதான் இந்தப் பணி என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன், அந்தப் பணியை விரைவுபடுத்துவதற்காகத் தான், தேவையிருக்கின்ற மாநிலங்களுக்கு, தேவை இல்லாமல் கடலில் வீணாகக் கலக்கின்ற மாநிலங்களிலிருந்து இந்த நீரை கொண்டுவந்து, இங்கே உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடுதான் தேசிய நீர் மேம்பாட்டு முகமையின் மூலமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றது. இதனுடைய ஆய்வுப் பணிகள் தொடர்ந்து நடத்துவதற்கு நம்முடைய மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தீவிர முயற்சி எடுத்து, இந்தப் பணி சீக்கிரம் முடிந்து, அதனுடைய பலன் இங்கு வந்து சேர்வதற்குண்டான

[2002 ஏப்ரல் 24

முயற்சிகளை நம்முடைய அரசு உறுதியாக எடுக்கும் என்பதனை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மகாநதி, கிருஷ்ணா, கங்கை, கோதாவரி நதிகளை இணைக்கின்ற செயற்குறிப்பு மத்திய அரசிடம் உள்ளது என்று குறிப்பிட்டார். ஆனால், 20 ஆண்டுகளுக்கு முன்பு மத்தியிலே நீர் வள அமைச்சராக இருந்த திரு. வி.சி. சுக்லா அவர்களும் ஒரு திட்டத்தை, கருத்துருவை, மத்திய அரசிலே உருவாக்கி அந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவோம் என்று உறுதி அளித்திருக்கின்ற முறையில், கங்கையையும் காவிரியையும் இணைக்கின்ற ஒரு திட்டம் ஆய்விலே உள்ளதாக அறிவித்துள்ளார்கள். அந்தத் திட்டம் எந்த அளவில் உள்ளது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரங்கநாதன், முதலில் தென்னக நதிகளை இணைப்போம். அதற்கு அப்புறம் மற்றதைப் பார்ப்போம்.

வினா எண் 216, திரு. ஜே. ஹேமச்சந்திரன், மாண்புமிகு நிதி மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.

**216—**

**திட்டப் பணிகள்**

***4690—திரு. ஜே. ஹேமச்சந்திரன்:**

மாண்புமிகு நிதி மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேற்குத் தொடர்ச்சி மலைத் திட்டத்தின்கீழ் 1999-2000, 2000-2001 ஆகிய வருடங்களில் கன்னியாகுமரி மாவட்டத்தில் எத்தனை பணிகள் செய்யப்பட்டுள்ளன?

(ஆ) அவை யாவை?

(இ) 2001-2002-ல் ஏதேனும் வேலை நடைமுறைப்படுத்தும் திட்டம் அரசிற்கு இருக்கிறதா?



2002 ஏப்ரல் 24]

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) 1999-2000 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் இம்மாவட்டத்தில் ஏழு துறைகளின் மூலம் பல்வேறு பணிகள் செயல்படுத்தப்பட்டன.

2000-2001 ஆம் ஆண்டில் நான்கு துறைகளின் மூலம் பல்வேறு பணிகளுக்கு இசைவளிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டன.

(ஆ) 1999-2000 மற்றும் 2000-2001 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு 1999-2000 ஆம் ஆண்டில் ரூபாய் 82.49 இலட்சமும், 2000-2001-ல் ரூபாய் 52.78 இலட்சமும், மண்வளப் பாதுகாப்பு, காடு வளர்ப்பு, கால்நடைப் பராமரிப்பு, நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணி, பட்டு வளர்ச்சி, பனைப்பொருள் வளர்ச்சி, கதர் மற்றும் கிராமத் தொழில்கள் ஆகியவற்றுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது.

(இ) 2001-2002 ஆம் ஆண்டில் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு மண்வளப் பாதுகாப்பு, காடு வளர்ப்பு, தோட்டக் கலை, கால்நடைப் பராமரிப்பு, பால் உற்பத்தி, சிறுபாசனம், நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணி, தொலையுணர்வு மையம், சமுதாய நடவடிக்கைகள் (நீர்வள ஆதாரம் தொடர்பான பயிற்சி), பனைப் பொருள் வளர்ச்சி ஆகியவற்றுக்கு ரூபாய் 99.62 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

முற்பகல் 10-10

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மேற்குத் தொடர்ச்சி மலைத் திட்டத்தினுடைய உண்மையான நோக்கம் என்ன? அது எந்தெந்தத் துறைகள் வழியாக அமல்படுத்தப்படுகிறது? இதனால் மக்களுக்குக் கிடைக்கப் பெற்றிருக்கின்ற யதார்த்தமான பலன்கள் சம்பந்தமான விவரங்கள் யாவை? அதற்கு மேலாக மாநிலத்திற்கு ஒட்டுமொத்தமாக இந்தத் திட்டத்தின் கீழே எவ்வளவு பணம் ஒதுக்கப்படுகிறது? அதிலே எத்தனை சதவிகிதம் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு வழங்கப்படுகிறது?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தினுடைய நோக்கம் மலைப் பகுதிகளிலே வாழ்கின்ற மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதாகும். இதுதான் ஐந்தாவது ஐந்தாண்டு திட்ட காலத்தினுடைய முக்கியக் கொள்கையாக

[2002 ஏப்ரல் 24

மைய அரசு வகுத்திருக்கிறது. அதையொட்டி இப்பகுதியிலே உள்ள இயற்கையின் வளத்தைப் பாதுகாப்பது, சுற்றுச்சூழலைப் பாதுகாப்பது, அதன் மூலமாக அங்கே உள்ள அபரிமிதமான உயிரினங்களைப் பாதுகாப்பது மற்றும் மனித இனப் பெருக்கத்தினால் இயற்கைக்கு ஏற்பட்ட சீரழிவுகளைச் சரி செய்வது, அங்கே உள்ள மக்களுக்கும் படிப்பறிவின் மூலம் சுற்றுச்சூழலின் வளர்ச்சிக்காக செயல்படுத்தும் திட்டங்களில் அவர்களை ஈடுபடுத்துவது. இதையொட்டி மண்வளப் பாதுகாப்பு, தோட்டக் கலை, காடு வளர்ப்பு, சிறு பாசனம், நெடுஞ்சாலை, ஊரகப் பணி, கால்நடைப் பராமரிப்பு, மீன் வளம், பட்டு வளர்ச்சி கதர் கிராமத் தொழில்கள், பனைப் பொருள் வளர்ச்சி ஆகிய துறைகளின் மூலம் இந்தத் திட்டங்களை ஈடேற்றுவது. இவையே இந்தத் திட்டத்தினுடைய குறிக்கோளாகும்.

1999-2000 ஆம் ஆண்டு இந்தத் திட்டத்திற்கு தமிழகத்திற்கு ஒட்டுமொத்தமாக ரூபாய் 1,160.45 இலட்சம் ஒதுக்கப்பட்டது. 2000-2001 ஆம் ஆண்டுக்கு இத்திட்டத்தின் மூலம் 1,094 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. அதைப்போலவே 2001-2002 ஆம் ஆண்டுக்கு இத் திட்டத்திற்கு தற்போது 1,099 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆயிரத்திற்கு அதிகமான கோடி ரூபாய் ஒவ்வொரு வருடத்திலேயும் இந்தத் திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்டு மலைவாழ் மக்களுக்கு வசதிகள் செய்து கொடுக்கப்படுவதாக குறிப்பிட்டார்கள். ஆனால் எங்களுடைய மாவட்டத்திலே எங்களுக்கு இருக்கிற அனுபவம் என்னவென்றால், அந்த மலைவாழ் மக்களுக்கு, அவர்கள் உற்பத்தி செய்கின்ற பொருட்களை எடுத்துச் செல்வதற்கு ஒரு சாலை அமைப்பதற்குக்கூட வனத் துறை தகராறு பண்ணுகிறது. பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் கொடுப்பதற்கு ஒரு கிணறு போடுவதற்குக்கூட அவர்கள் தகராறு பண்ணுகிறார்கள். இதற்கு மேலாக அவர்களுக்கு electricity line கொண்டு செல்வதற்கு line இழுப்பதற்குக்கூட தகராறு பண்ணுகிறார்கள். இப்படி உண்மையிலேயே நிலைமைகள் இருக்கக்கூடிய நேரத்திலே இந்தத் திட்டத்தினுடைய பலன், மத்திய அரசு எந்த நோக்கத்தோடு இந்தத் திட்டத்தை உருவாக்கியிருக்கிறதோ, அது பூரணமாக அந்த மக்களுக்குப் போய்ச் சேருகிறதா இல்லையா என்பதைப் பற்றி ஓர் ஆய்வு ஏற்படுத்துவதற்கு இந்த அரசு முன்வருமா?



2002 ஏப்ரல் 24]

யதார்த்தமாக நான் ஒன்றை இந்த நேரத்தில் ஒரு எடுத்துக்காட்டு என்ற முறையிலே சொல்லுகிறேன். 1992 ஆம் வருடத்திலே ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு காரணமாக ஒரு பெரிய பாலம் அங்கே இருந்து அடித்துச் செல்லப்பட்டது. அதற்குப் பிறகு அந்த மக்கள் ஊருக்கு வருவதற்கு ஒரு பாலம் வசதிகூட இல்லாத நிலையிலே ஒரு பாலம் கட்ட வேண்டும் என்று கேட்டு பல வருடங்களாக தொடர்ந்து . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்விக்கு வாருங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** தொடர்ந்து மனுக்கள் போட்டதற்குப் பிறகும் ஒரு பாலம்கூட கட்டுவதற்கு இந்தத் திட்டத்திலே நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஆகவே, இந்தத் திட்டத்தினுடைய உண்மையான நோக்கம் மலைவாழ் மக்களுக்குப் போய்ச் சேருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமா? இதுவரையில் நடந்ததிலே முறைகேடுகள் இருக்கிறதா என்பதைக் கண்டுபிடிப்பதற்கான ஆய்வு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தினுடைய நோக்கம், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல் மலைவாழ் மக்களுடைய நலனைப் பேணிப் பாதுகாக்கக்கூடிய திட்டம். இந்தப் பலன் மக்களை சென்று அடைய வேண்டும் என்பதுதான் அரசினுடைய தலையாய கொள்கை. இந்த அடிப்படையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட இதுகுறித்து ஒரு review மேற்கொண்டார்கள். இந்தப் பலன் மலைவாழ் மக்களைச் சென்று அடையக்கூடிய அளவிற்கு வனத் துறை அதிகாரிகள் நேர்மையோடு செயல்பட வேண்டும்; கடமையுணர்வோடு செயல்பட வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள். எங்கெங்கு இந்தத் திட்டம் தொய்வு நிலையில் இருக்கிறது, செயல்படாமல் இருக்கிறது; மக்களுக்குப் பலன் சென்றடையவில்லை என்பதனையும் கண்டறிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் தவறு எங்கேனும் நடந்திருந்தால் கடுமையான நடவடிக்கை, கட்டாயம் எடுக்கப்படும். அதுமட்டுமல்ல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு ஒரு பாலம் அங்கு உடைந்தது, பல ஆண்டுகளாக அது ஈடேற்றப்படவில்லை என்று சொன்னார்கள். அதுகுறித்து அரசு துரித நடவடிக்கை எடுத்து, அந்தக் குறையை ஈடேற்ற, அந்த மக்களுடைய இந்தக் குறையை ஈடேற்ற, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஈடேற்ற அரசு நடவடிக்கை எடுக்கும்.

[2002 ஏப்ரல் 24

முற்பகல் 10-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி தமிழ்மொழி ராஜதத்தன்.

**திருமதி தமிழ்மொழி ராஜதத்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டம், செஞ்சி தாலுகாவில் மேற்குத் தொடர்ச்சி மலைத் திட்டத்தின்கீழ் பணிகள் இந்த நிதியாண்டில் தொடங்கப்படுமா? இந்தத் திட்டம் தொடங்கப்படுமானால் என்னுடைய தொகுதியைச் சேர்ந்த பல கிராமங்கள் இதனால் பலன் அடையும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த நிதியாண்டில் பணிகளைத் தொடங்குவதற்கு நிதியை ஒதுக்கித் தருவார்களா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர்களுடைய தொகுதியின் கோரிக்கையை எழுத்து மூலமாகத் தரட்டும். ஆய்ந்து அதற்கேற்ப அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தைச் சிறப்பாக நிறைவேற்றுவதற்கான முயற்சி மேற்கொள்கிற விவரங்களை இங்கே எடுத்துச் சொன்னார்கள். மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியிலே வாழ்ந்து கொண்டிருக்கிற மலைவாழ் மக்கள் சாகுபடி அல்லது உற்பத்தி செய்கிற அந்தப் பொருள்களை, அந்தப் பலன்களை அவர்கள் நேரடியாக அனுபவித்துக்கொள்வதற்கான வாய்ப்புகள் மிகக் குறைவாக இருப்பதாக தொடர்ந்து செய்திகள் வருகின்றன. அதிலும் குறிப்பாக, காவல் துறையின் மூலமாக அவர்களுக்கு மிகப் பெரிய நெருக்கடி கொடுக்கப்படுவதாகவும் சொல்லப்படுகிறது வனத் துறை, காவல் துறையின் மூலமாக. ஆகவே, இந்த நிலைகளைப் போக்கி, கேரள மாநிலத்திலே இருப்பதைப்போல் 2-சி பட்டா என்ற முறைகளைப் பயன்படுத்தி அந்த மரங்களையோ அல்லது பலன் தருகிற மரங்களையோ அந்தப் பகுதியிலே வாழுகிற பழங்குடி மக்கள் பயன்படுத்துவதற்கு அல்லது அதை வளர்ப்பதற்கான முயற்சிகள் எடுத்து .....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், இது மூலக் கேள்விக்குக் கொஞ்சம்கூட சம்பந்தம் இல்லை. திரு. போளூர் வரதன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** அதை ஒட்டிய பகுதிதான்.



2002 ஏப்ரல் 24]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. மேற்குத் தொடர்ச்சி மலைத் திட்டம் என்பது வேறு. பழங்குடி மக்கள் என்பது வேறு. (குறுக்கீடு) சரி, அமைச்சரிடம் பதில் இருக்கிறதா? சரி, சிவபுண்ணியம் சொல்லுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** நான் அதற்குத் தொடர்பான கேள்வியைத்தான் கேட்கிறேன், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்குத் தொடர்ச்சி மலைத் திட்டத்தின் அடிப்படையிலே அங்கு வாழ்கிற அந்தப் பகுதி மக்கள் பயன்பெறச் செய்வதற்கான திட்டமாக அதை முறைப்படுத்தாமல் இருப்பதை முறைப்படுத்துவதற்கான முயற்சிகளை எடுத்து அதன் பலனை அனுபவிப்பதற்கு அந்த மக்களுக்கு வாய்ப்பு அளிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் நடந்த ஆய்வுக் கூட்டத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதுகுறித்து ஆராய்ந்தார்கள். அந்தப் பலன் அந்தப் பகுதியிலே வாழ்கிற மலைவாழ் மக்களுக்கே சென்று சேரக்கூடிய ஒரு திட்டம் வகுக்கப்பட உள்ளது என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இந்த அவை மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பல்வேறு விவரங்களை இங்கே தந்திருக்கிறார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் மலைப்பாங்கான பகுதி என்று வருகின்றபோது, 3 தாலுகாக்கள் அதற்குள்ளே இடம் பெறுகின்றன. விளவங்கோடு தாலுகா, கல்குளம், தோவாளையினுடைய ஒரு பகுதி. எனவே, இந்த மேற்குத் தொடர்ச்சி மலைத் திட்டத்திலே ஆழமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கின்ற கருத்துப்படி பார்த்தால், மலைப் பாங்கான பகுதியில் அதிகப்படியாக அங்கு வாழ்கின்ற மக்களுக்கும், அபிவிருத்திப் பணிகள் முழுவதும் செய்ய வேண்டும். ஆனால், இதுவரையிலே இந்த மலைப்பாங்கான பகுதியை இந்தத் துறை கண்டுகொள்ளவே இல்லை என்பது ஒன்று. இதிலே வருகின்ற பணத்தில் ஒரு பெரிய பகுதி எனக்குத் தெரிந்ததுவரை மாவட்டத்தினுடைய தலைநகர் நாகர்கோவில் வட்டாரத்திற்குள்ளேயே செலவிடப்படுகின்ற ஒரு தவறான நிலை அங்கே காணப்படுகின்றது. அதுபோல, இன்னொன்று, பனைபொருள், அதற்காக இதில் அதிகப்படியாகச் செலவிடுவதற்கு வாய்ப்புகள் உண்டு என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால், அந்தப் பனைபொருள் என்பது கடந்த

ஒரு 10, 15 வருடங்களாக என்ன நிலையை அடைந்திருக்கின்றது என்று சொன்னால், பனைமரம் ஏறுவதற்கு மக்கள் தயாராகவே இல்லாத ஒரு நிலை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, கேள்விக்கு வாருங்கள்.

**திரு. டி. மணி:** அந்தத் துறை இன்றைக்குச் செயல்படாத நிலையில் உள்ளது. ஆகவே, இந்தப் பனைபொருள் ஆராய்ச்சி மையமானாலும் சரி, அதைவிட இந்த மேற்குத் தொடர்ச்சி மலைத் திட்டத்திலே வரக்கூடிய மலைப்பாங்கான பகுதிகளில், அது வனத்தைப் பாதுகாத்துக்கொள்வதற்கு. அதுபோன்று, அந்தப் பகுதியிலே வாழ்கின்ற மக்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு, அவர்களுக்கு உதவக்கூடிய அளவில் இனியாகிலும் இந்தத் திட்டத்தை அமல்படுத்துகின்ற நேரத்தில், மாவட்டத்திலே இருக்கின்ற எம்.எல்.ஏ.-க்களைக்கூட குறைந்தபட்சம் கலந்துபேசி ஒரு திட்டத்தை உருவாக்குவது மிகப் பொருத்தமாக இருக்கும் எனக் கருதுகிறேன். அந்த வகையிலே நடவடிக்கை மேற்கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-20

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைவாழ் மக்களுடைய நலனுக்காக ஒதுக்கப்பட்டிருக்கின்ற இந்த நிதி மற்ற பிரிவிற்குச் செலவிடப்படக்கூடிய ஒரு நிலை ஏற்பட்டது என்றால், அது முறைகேடான ஒன்று. அது கடந்த காலத்தில் எப்படி நடந்தது என்பதனைக் கண்டுபிடித்து தக்க நடவடிக்கையை கட்டாயம் இந்த அரசு எடுக்கும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப் போல மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது, அவர்களுடைய தொழில் தொடர்பான மேம்பாடுகளை இதன் மூலம் ஊக்குவிப்பது என்பதுதான் இந்தத் திட்டத்தினுடைய நோக்கம். அது பனைத் தொழிலாக இருந்தாலும், எந்தத் தொழிலாக இருந்தாலும், மலைவாழ் மக்களுக்கு அந்தப் பலன் சென்றடையக்கூடிய அளவிற்கு ஆக்கப்பூர்வமான அணுகுமுறைகளை மேற்கொள்ள அரசு தற்போது நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர்களுடைய எண்ணம் கட்டாயம் ஈடேறும் என அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. போளூர் வரதன்.

**திரு. போளூர் வரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எஸ்.டி. இன மக்களுக்கு 1,000 கோடிக்கு மேல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்று நிதியமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.



அந்த நிதி அந்த மக்களுக்கு முழுவதுமாக கடந்த ஆண்டிலே செலவழிக்கப்பட்டு இருக்கிறதா? எந்தெந்தப் பணிகளுக்கு செலவழிக்கப்பட்டிருக்கிறது? அப்படி செலவழிக்கப்படவில்லை என்று சொன்னால், வேறு துறைகளுக்கு அது மாற்றப்பட்டிருக்கிறதா . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பில்லை.

வினா எண் 217, திரு. எம். ராம்குமார், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**217—**

**பொது நூலகம்**

***6712—திரு. எம். ராம்குமார்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாபநாசம் தொகுதி, இன்னம்பூர் ஊராட்சியில் பொது நூலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பாபநாசம் தொகுதி, இன்னம்பூர் ஊராட்சியில் நூலகம் அமைக்க நிர்ணயிக்கப்பட்ட நிபந்தனைகளை அவ்வூர் மக்கள் நிறைவு செய்யும்பட்சத்தில் அவ்வூரில் ஒரு பகுதி நேர நூலகம் திறக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம். ராம்குமார், இருக்கையில் இல்லை.

வினா எண் 218, திரு. பி.கே. சேகர்பாபு, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**218—**

**கோயில் நிலம்**

***18625-திரு. பி.கே. சேகர்பாபு:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2002 ஏப்ரல் 24

(அ) வில்லிவாக்கம் கிராமம், மொப்பிலியம்மன் கோயிலுக்குச் சொந்தமான 7 ஏக்கர் 46 சென்ட் அளவுள்ள (சர்வே எண் 166) இடத்தைத் தனியார் இருவர் உரிமை கொண்டாடி வருவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், கோயில் நிலத்தை மீட்க என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது?

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வில்லிவாக்கம், அருள்மிகு மொப்பிலியம்மன் திருக்கோயிலுக்குச் சொந்தமான சர்வே எண் 166-ல் உள்ள 7.46 ஏக்கர் நிலத்தின் ஒரு பகுதியை, 18-11-2001 அன்று ஆக்கிரமிப்பு செய்யும் நோக்கத்துடன் கிருஷ்ணன், பழனி மற்றும் நந்தகுமார் என்ற மூன்று நபர்களும் புல்டோசர் வைத்து செடி கொடிகளை அப்புறப்படுத்திக் கொண்டிருந்தனர். அம் மூன்று நபர்களும் வில்லிவாக்கம் காவல் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டு, மேற்படி நபர்கள்மீது புகார் செய்யப்பட்டுளளது. ஆக்கிரமிப்பு ஏதும் நடக்காத வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்கூறிய இந்த மொப்பிலியம்மன் கோயிலுக்குச் சொந்தமான இடம் காலஞ்சென்ற வெங்கடரத்தின ரெட்டியார் என்பவர் இந்தக் கோயிலுக்கு 1944ஆம் ஆண்டு தானமாகக் கொடுத்த நிலம். இந்தக் கோயிலினுடைய பட்டா எண் 297 புரசை-பெரம்பூர் தாலுகா, வில்லிவாக்கம் கிராம எண் 73. 18-11-2001 அன்று ஆக்கிரமிப்பு செய்தவர்கள்மீது புகார் கொடுத்திருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அப்படி செய்யப்பட்டப் புகாரின் அடிப்படையில் இதுவரையில் அந்த நபர்களின் மீது எந்தவிதமான வழக்கும் பதிவு செய்யப்படவில்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். மேலும், இந்த 7.46 ஏக்கர் நிலத்தில் 3 ஏக்கருக்கு அதிகமான நிலம் ஏற்கெனவே ஆக்கிரமிப்புக்கு உள்ளாகியிருக்கிறது. மீதமுள்ள நிலத்தைப் பாதுகாக்கின்ற நோக்கத்தோடு அரசு தனியாக ஒரு குழு அமைத்து விசாரித்து, உரிய நடவடிக்கை எடுத்து பல கோடி ரூபாய்க்கு மேல் மதிப்புள்ள இந்த நிலத்தைப் பாதுகாக்க அரசு ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு அமைச்சரிடத்திலிருந்து அறிய விரும்புகிறேன்.



2002 ஏப்ரல் 24]

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்த முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள், "ஒரு தவறு செய்தால், அதைத் தெரிந்து செய்தால், அவன் தேவன் என்றாலும் விடமாட்டேன்" என்று பாடியிருக்கிறார். அதனுடைய அடிப்படையில் அவருடைய வாரிசாக செயல்படுகின்ற புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, யார் எங்கு தவறு செய்தாலும் அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுப்பார்கள், கண்டிப்பார்கள், தண்டிப்பாாகள் என்பதை உங்கள் மூலமாக நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 219, திரு. துரை. கி. சரவணன் (குறுக்கீடு) திரு. பி.கே. சேகர் பாபு, இன்னொரு கேள்வியா?

முற்பகல் 10-25

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலையத் துறைக்கு உரிய சொத்துக்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தோடு 1982 ஆம் ஆண்டு மறைந்த மனிதப் புனிதன் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் சட்டம் 14-ன்கீழ் ஆக்கிரமிப்பாளர்கள்மீது குண்டர் தடுப்புச் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுப்பதற்கு வழிவகை செய்கின்ற வகையில் ஒரு சட்டத்தை இயற்றியுள்ளார்கள். மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கோயில் நிலங்களை ஆக்கிரமிப்பவர்கள்மீது இந்தச் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்க முன்வருவாரா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குண்டர் சட்டம் பாயும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அது சரியாக எனக்கு நினைவு இல்லை. எனவே, மாண்புமிகு புரட்சித் தலைவி தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அவர்களைக் கலந்து இதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை உங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நெப்போலியன்.

**திரு. து. நெப்போலியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. என்னுடைய வில்லிவாக்கம் தொகுதிக்குட்பட்ட மொப்பிலியம்மன் கோயிலுக்குச் சொந்தமான 7 ஏக்கர் 46 சென்ட் அளவுள்ள இடத்தை தனியார் இருவர் உரிமை கொண்டாடி வருவது அரசுக்குத் தெரியுமா என்று மாண்புமிகு உறுப்பினர் சேகர்பாபு அவர்கள் கேள்வி எழுப்பி

உள்ளார்கள். இதேபோல, சென்ற மாதம், 5-3-2002 அன்றும் வில்லிவாக்கம் தொகுதிக்குட்பட்ட மதுரவாயல் 8-வது வார்டில் சக்ரபாணி நகரில் காஞ்சிபுரம் தொண்டை மண்டல ஆதீனத்திற்குச் சொந்தமான நிலத்தையும் ஆக்கிரமிப்புச் செய்துள்ளார்கள். அதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்றும் கேள்வி எழுப்பியுள்ளார். மாண்புமிகு சேகர்பாபு அவர்கள் என்னுடைய தொகுதி பெரிய தொகுதி என்று தெரிந்து, என்னுடைய சிரமத்தைக் குறைப்பதற்காக, என்னுடைய தொகுதியில் உள்ள பிரச்சினைகளையெல்லாம் எடுத்து இந்தச் சபையில் கூறியிருக்கிற அவருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு 3-3-2002 அன்று இந்தச் செய்தி புகார் மூலமாக வந்திருக்கிறது. அமைச்சர் அவர்கள் 5-3-2002 அன்று நேரடியாகச் சென்று பார்வையிட்டிருக்கிறார். அவருடன் அதிகாரிகளும் சென்று பார்வையிட்டிருக்கிறார்கள். நாங்கள் பார்வையிட்டதற்குப் பிறகுதான் இந்த ஆக்கிரமிப்புத் துரிதமாக நடந்து கொண்டிருக்கிறது என்று எனக்குப் புகார் வந்திருக்கிறது. அதற்குரிய தக்க நடவடிக்கையை எடுப்பதற்கு இந்த அரசு முன்வருமா? அங்கே துவாரங்கள் எல்லாம் போட்டு கட்டடங்கள் எழுப்பப்படுகின்றன என்பது அரசுக்குத் தெரியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிய வில்லிவாக்கம், அருள்மிகு மொப்பிலியம்மன் திருக்கோயில், அதைப் பற்றி இப்போது சொல்லியிருக்கிறோம். 7.46 ஏக்கர் அளவுள்ள நிலத்தை ஆக்கிரமிப்புச் செய்தவர்கள் பெயரை இங்கே முதலிலே சொன்னேன். அதைப்போலவே, மதுரவாயலில் நடைபெற்ற, அந்த ஆலயத்தினுடைய சொத்துக்களைப் பாதுகாப்பதற்காக—அது அறநிலையத் துறைக்குச் சொந்தமில்லை என்று சொன்னாலும், தனியாருடைய மடத்திற்குச் சொந்தமாக இருந்தாலும், அரசுக்குத் தகவல் தெரிந்ததற்குப் பின்னாலே சம்பந்தப்பட்ட அலுவலர்களை, தாசில்தாரையெல்லாம் அழைத்துச் சென்று, அந்த இடத்தைப் பார்வையிட்டோம். அங்கே வேண்டுமென்றே சில அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்கள்தான் அப்படிப்பட்ட நிலையை ஏற்பாடு செய்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அங்கே சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவரிடமும் சொல்லி, அங்கே இருக்கின்ற தாசில்தாரிடத்திலே சொல்லி, இனி யாரும் இந்த இடத்திலே நுழையக் கூடாது. இது ஒரு மடத்திற்குச் சொந்தமான இடம், எனவே இதன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லி, மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலேயும், காவல் துறைக் கண்காணிப்பாளரிடத்திலேயும்



புகார் கொடுக்கப்பட்டிருக்கிறது. நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அப்படி நடவடிக்கை இதுவரையில் எடுக்கப்படவில்லையென்றால், கூடிய விரைவில் நடவடிக்கை எடுக்கப்பட்டு, அவர்கள்மீது என்ன குற்றம் பதிவு செய்ய வேண்டுமோ அது பதிவு செய்யப்படும் என்பதை அன்போடு இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. திருமாவளவன்.

**திரு. இரா. திருமாவளவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வில்லிவாக்கத்தில் 7.46 ஏக்கர் அளவுள்ள நிலம், அறநிலையத் துறைக்குச் சொந்தமான நிலம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு இருப்பதாக இங்கே விவாதிக்கப்படுகிறது. ஆனால், தமிழக அளவில், முன்னாள் அறநிலையத் துறை அமைச்சர் திரு. தமிழ்க்குடிமகன் அவர்கள் ஒரு பேட்டியிலே குறிப்பிடும்போது, இந்து அறநிலையத் துறைக்குச் சொந்தமான 5 1/2 இலட்சம் ஏக்கர் நிலங்களில் 4 1/2 இலட்சம் ஏக்கர் நிலங்கள் ஆக்கிரமிப்பில் இருப்பதாகவும், ஒரு இலட்சம் ஏக்கர் நிலம் மட்டுமே குத்தகைக்கு விடப்படுவதாகவும் ஒரு முறை குறிப்பிட்டார். இந்த 4 1/2 இலட்சம் ஏக்கர் நிலத்தையும், அந்த ஆக்கிரமிப்புகளை அகற்றி மீட்பதற்கான நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன். அத்துடன் மதுரை மாவட்டம் மேலூர் அருகே தென்னகரம்.... *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. பொதுவாக ஒரு கேள்வி கேளுங்கள். வில்லிவாக்கம் பற்றிதான் அவரிடம் பதில் இருக்கிறது. (குறுக்கீடு) சம்பந்தமான கேள்வி என்றாலும் அவரிடம் பதில் இருக்காது. மதுரை மாவட்டம் பற்றி தனிக் கேள்வி போடுங்கள். (குறுக்கீடு) அமைச்சர், இதற்குப் பதில் சொல்லுங்கள்.

**திரு. இரா. திருமாவளவன்:** அறநிலையத் துறை சம்பந்தமான கேள்வி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சரிடம் பதில் இருக்காது. தனிக் கேள்வி போடுங்கள்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் சொல்லிய அனைத்து கேள்விகளில் அடங்கிய கருத்துகளும் சிந்திக்கப்படும்.

[2002 ஏப்ரல் 24

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 219, திரு. துரை. கி. சரவணன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**219—**

**படுக்கை வசதிகள்**

***9326—திரு. துரை. கி. சரவணன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிதம்பரம் நகர பொது மருத்துவமனையில் நோயாளிகள் படுக்கை எண்ணிக்கையை அதிகப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சிதம்பரம் அரசினர் காமராஜர் மருத்துவமனையில் படுக்கை எண்ணிக்கையை அதிகப்படுத்துவதற்கான திட்டம் அரசிடம் தற்போது இல்லை.

முற்பகல் 10-30

**திரு. துரை. கி. சரவணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம் அரசு பொது மருத்துவமனை, சிதம்பரம் தாலுகா தலைமை மருத்துவமனையாகும். சிதம்பரம் தாலுகாவிற்கு உட்பட்ட, சிதம்பரம் நகரம், பரங்கிபேட்டை ஒன்றியம், புவனகிரி ஒன்றியம், கீரிப்பாளையம் ஒன்றியம் மற்றும் குமராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த 300 கிராம மக்களுக்கு மேலுள்ள ஏழை எளிய மக்கள் இந்த மருத்துவமனையில் வந்து தங்களது நோய்களைத் தீர்த்துக்கொள்கிறார்கள். தினமும் சுமார் 1,000 முதல் 1,200 புற நோயாளிகள் வந்து இங்கே சிகிச்சை எடுத்துக்கொள்கிறார்கள். தினமும் சுமார் 100 முதல் 125 உள் நோயாளிகள் இங்கே இருக்கவேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. இந்தச் சூழ்நிலையில் அங்கு ஆண்களுக்கென்று Medical Ward 16 படுக்கைகளும், Surgical Ward 16 படுக்கைகளும் மற்றும் பெண்களுக்கென்று Medical plus Surgical Ward 16 படுக்கைகளும், Labour Ward 16 படுக்கைகளும் மற்றும் Special Cases என்பதற்காக இதர வகைகளுக்காக 72 படுக்கைகளும், மொத்தம் 131 படுக்கைகள் கொண்டதாக உள்ளது. ஆனால், இதில் தினம் 100 முதல் 125 உள் நோயாளிகள் இருக்கவேண்டிய சூழ்நிலையில் இந்த Medical and Surgical Ward-லே அதிகம் இருக்க வேண்டிய சூழ்நிலை உள்ளது. ஆகவே அந்தச் சூழ்நிலையில் அந்த நோயாளிகளெல்லாம் தரையிலே படுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து அந்தப் படுக்கை எண்ணிக்கையை அதிகப்படுத்துவாரா என்று கேட்டுக்கொள்கிறேன்.



2002 ஏப்ரல் 24]

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம் ஒரு மிகப் பெரிய நகரம். 3 1/2 இலட்சம் மக்கள் தொகைக்கு மேல் அங்கே இருக்கிறார்கள். தற்போது அரசினர் காமராஜர் மருத்துவமனைக்கு 131 படுக்கைகள்தான் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் உள்நோயாளிகளின் எண்ணிக்கை 150-க்கு மேல் வருகிறது. உள்ளபடியே அரசும் அந்தப் படுக்கை எண்ணிக்கையை உயர்த்துவதற்குத்தான் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. இந்த நிலையில் உலக வங்கி நிதி உதவியுடன் கண்ணொளி இழப்பு தடுப்புத் திட்டத்தின்கீழ் 16 படுக்கைகளுடன், அறுவை அரங்குடன்கூடிய கட்டடம் கட்டுவதற்கு அங்கே நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அத்தோடு Homoeopathy மருத்துவப் பிரிவை ஏற்படுத்துவதற்கு 1998-லே அரசாணை பிறப்பிக்கப்பட்டும் அந்தப் பிரிவு இன்னும் தொடங்கப்படாத நிலைமை இருக்கிறது. அந்தப் பிரிவையும் தொடங்குவதற்கு நாங்கள் நடவடிக்கை எடுத்து வருகிறோம். இப்பொழுது நமது இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அரசு பொறுப்பேற்ற பிறகு, மருத்துவர்கள் பணியிடங்கள் அனைத்தும் அங்கே நிரப்பப்பட்டுவிட்டன. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தின் அடிப்படையில் நிதி நிலைமை சீரடைந்தவுடன் தேவைக்கேற்ப படுக்கைகளின் எண்ணிக்கை உயர்த்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 220, திரு. இ. புகழேந்தி (குறுக்கீடு) திரு. சரவணன்.

**திரு. துரை. கி. சரவணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறும்போது, அங்குள்ள அனைத்து மருத்துவப் பணியிடங்களும் நிரப்பப்பட்டுவிட்டதாகக் கூறினார்கள். ஆனால் தற்போது அங்கு குழந்தை நல மருத்துவரும், Anaesthesia மயக்கநிலை மருத்துவரும் தற்போது அங்கு பணியில் சேரவில்லை என்பதைத் தங்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, அந்தப் பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், அங்கு அவசர சிகிச்சைக்காகத் தனிப்

[2002 ஏப்ரல் 24

பிரிவு கட்டடம் கிடையாது. அதைப்போல மகப்பேறு பிரிவிற்கென்று தனிப் பிரிவு கட்டடம் கிடையாது. ஆகவே அதையும் தாங்கள் கவனத்தில் கொண்டு வரும் நிதியாண்டில் அதற்கு நிதி ஒதுக்கி அந்தக் கட்டடங்களைக் கட்டித்தர ஆவன செய்யுமாறு தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அந்த அரசு மருத்துவமனைக்கு அனுமதிக்கப்பட்ட டாக்டர்கள் பணியிடம் மொத்தம் 11. அந்த 11 இடங்களும் நிரப்பப்பட்டுவிட்டன. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல 2 இடங்களுக்கு, அதாவது மயக்க மருந்து நிபுணர் பணியிடத்திற்கும், குழந்தைகள் சிகிச்சைப் பிரிவு பணியிடத்திற்கும் Assistant Surgeon-Surgery தகுதியோடு 2 பணியிடங்களையும் நிரப்பிவிட்டார்கள். அங்கே மயக்க மருந்து நிபுணர் ஒருவரும், குழந்தைகள் சிகிச்சைப் பிரிவிற்கு ஒரு மருத்துவரும் நியமிக்கப்பட வேண்டிய அவசியத்தை அரசு உணர்ந்திருக்கிறது. எனவே, அந்த 2 பணியிடங்களும் விரைவிலே நிரப்பப்படும். தற்போது அங்கே பணிகள் எதுவும் பாதிக்கப்படக்கூடாது என்ற அடிப்படையிலே மயக்க மருந்து நிபுணர் மாற்றுப் பணியிலிருந்து அனுப்பப்பட்டு வருகிறார்.

முற்பகல் 10-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 220, திரு. இ. புகழேந்தி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**220—**

### குடிநீர்

***284—திரு. இ. புகழேந்தி:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் நகரில் குடிநீர்ப் பிரச்சினை நீங்கிட ஏற்கெனவே தொடங்கப்பட்ட திட்டம் விரைவில் நிறைவேற்றிட அரசு நடவடிக்கை எடுக்குமா?



2002 ஏப்ரல் 24]

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கடலூர் நகரில் குடிநீர்ப் பிரச்சினையை நீக்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டு, திட்டப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் நகராட்சி 100 ஆண்டுகளுக்கு மேலாக நகராட்சியாகவே இருக்கக்கூடிய ஒரு பெரிய நகரமாகும். அது வளர்ந்து வரக்கூடிய நகரமாகவும் இருக்கக்கூடிய காரணத்தினால், திடீரென ஏற்படக்கூடிய குடிநீர்த் தட்டுப்பாடு, குடிநீர்ப் பிரச்சினைகள் இவற்றைக் களைய வேண்டி கடந்த ஆட்சியிலே முதல்வராக கலைஞர் அவர்கள் இருந்தபோது, 17.00 கோடி ரூபாயில் திட்டம் ஒன்று அறிவிக்கப்பட்டு, மாண்புமிகு அன்றைய உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த அண்ணன் கோ.சி. மணி அவர்கள் தலைமையில் தொடங்கப்பட்டது. புதிய குழாய்கள் போடுவதும், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டுவதற்கான பணிகளும் நடைபெற்றுக்கொண்டு வந்தன. இப்போது மீண்டும் அமைச்சர் அவர்கள், அது துரிதப்படுத்தப்படும், விரைவுப்படுத்தப்படும் என்று கூறியிருக்கிறார்கள். நான் அறிந்துகொள்ள விரும்புவது, அதற்கான காலம் நிர்ணயித்திருக்கிறார்களா? எவ்வளவு காலத்திற்குள்ளாக இந்தப் பணியை முடிப்பது என்று முடிவு செய்திருக்கிறார்களா? அதற்காக எவ்வளவு தொகை ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள்? விரைவாக அந்தப் பணியை நடத்துவதற்கு வேறு எந்தவிதமான துரிதப் பணியை மேற்கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தங்கள் மூலமாக அமைச்சரிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் நகருக்கு 1,691.00 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திட்டம் தயார் செய்யப்பட்டு, அரசு ஒப்புதல் வழங்கி, ஒப்பந்தப்புள்ளி கோரி, 18-4-2001 அன்று ஒரு குறிப்பிட்ட கம்பெனி பணியைத் தொடங்கியிருக்கிறது. அந்தக் கம்பெனிக்கு இந்தக் காலத்திற்குள் இத்தனை சதவிகிதப் பணி செய்து முடிக்கவேண்டுமென்று நிர்ணயம் செய்திருந்தும், அந்தக் குறிப்பிட்ட காலத்திற்குள் அந்தக் கம்பெனியானது முடிக்காமல் பணியில் மந்தமும், தாமதமும் செய்த காரணத்தினால், அந்தப் பணியை மேற்கொண்ட கம்பெனியினுடைய ஒப்பந்தத்தை இரத்து செய்து, வேறு புதிய ஒப்பந்தம் கோரப்பட்டு, 27-5-2002 இறுதி நாளாகக் குறிப்பிட்டு,

[2002 ஏப்ரல் 24

இந்தப் பணி விரைவாக நடத்தப்பட வேண்டும் என்று, 2003 ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்குள் முடித்து மக்கள் பயனுக்குக் கொண்டுவர உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003 ஆம் ஆண்டுவரை காலம் நிர்ணயித்திருப்பதாக இங்கே அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதற்குள்ளாக இடைப்பட்ட காலங்களில் — கடலூர் மக்கள் குடிநீர்ப் பிரச்சினையிலிருந்து மீள்வதற்கு, அவர்களுக்கு நல்ல குடிநீர் வழங்குவதற்கு நகராட்சி மூலமாக எடுத்துக்கொண்டிருக்கின்ற துரித கால நடவடிக்கைகள் என்ன? போர்க்கால பணிகள் போல இந்த அரசு ஏதேனும் கூடுதலாக நிதியொதுக்கி, கடலூர் மக்களின் குடிநீர்ப் பிரச்சினையை அந்தக் காலத்திற்குள்ளாக வருவதை நீக்குவதற்கு ஏதேனும் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமும் அறிக்கை பெறப்பட்டு, ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் குடிநீர்ப் பிரச்சினையைப் போக்குவதற்கு இந்த அரசு நிதி ஒதுக்கீடு செய்து அனுப்பியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. திருமாவளவன்.

**திரு. இரா. திருமாவளவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக அரசு பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது. அதிலே ஒன்று, ராஜீவ் காந்தி தேசிய குடிநீர்த் திட்டம். இந்தத் திட்டத்தின்படி மக்களின் பங்காக 10 சதவிகிதம் செலுத்தவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த நிதியை சட்டமன்ற உறுப்பினர்களுடைய மேம்பாட்டு நிதியிலிருந்து செலுத்துவதற்கு வாய்ப்பிருக்கிறது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி, கடலூர் குடிநீர்த் திட்டம் குறித்து.

வினா எண் 221, திருமதி வி. சிவகாமி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.



2002 ஏப்ரல் 24]

**221—**

**காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டம்**

***6766—திருமதி வி. சிவகாமி:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டத்தில் வெள்ளக்கோவில் வரை அமல்படுத்தப்பட்ட காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் தாராபுரம் தொகுதிக்கு எப்போது அமல்படுத்தப்படும்?

(ஆ) இந்த நிதியாண்டில் நிறைவேற்றப்படுமா?

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தாராபுரம் நகராட்சி, கொளத்துப்பாளையம், சின்னக்காம்பாளையம் பேரூராட்சிகள் மற்றும் 76 குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கும் திட்டம், முத்தூர்-காங்கேயம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூன்றாவது நிலையின்கீழ் உள்ளது. இத்திட்டத்திற்கு ரூபாய் 20 கோடியே, 68 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது. நிதியாதாரத்தைப் பொறுத்து இந்தத் திட்டம் இந்த நிதியாண்டிலே செயல்படுத்துவதற்குப் பரிசீலிக்கப்படும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-40

**திருமதி வி. சிவகாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேட்டதைக் கொடுக்கும் கர்ணனின் உள்ளம் கொண்ட இதயதெய்வம் (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய தமிழகத்தின் முதல்வர் அவர்களுடைய ஆட்சியிலே, மதுரை மீனாட்சியின் உருவெடுத்து எனது முன்னால் காட்சியளிக்கும் தாயே (மேசையைத் தட்டும் ஒலி) தங்களுடைய ஆட்சியிலே இந்த நிதியாண்டில்— என்னுடைய தொகுதி மக்கள் தண்ணீருக்கு மிகவும் அலைகிறார்கள். இந்த நிலையைப் போக்க அமைச்சர் அவர்கள் இந்த நிதியாண்டிலேயே நல்லதொரு தீர்வை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தற்போது பாலாறு, பொரந்தலாறு

[2002 ஏப்ரல் 24

அணையில் தண்ணீர் நிறைய இருக்கிறது. அதில், ஒரு நாள் தண்ணீர் விட்டால் அமராவதியைத் தொட்டுவிடும். அந்த அதிகாரியிடம் அதிகமாகப் பேசியும்கூட அமைச்சரவையில் உத்தரவிட வேண்டுமென்று சொல்லிவிட்டார். அதற்கு ஓர் ஆணையிட வேண்டுமென்றும் கேட்டு அன்னையை வணங்கி, இந்த நிதியாண்டிலேயே இதை நிறைவேற்றித் தருவார்களா என்பதை தங்கள் மூலமாக அறிய விரும்புறேன்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 222, திரு. ஜி. பழனிசாமி, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**222—**

**வீட்டுமனைப் பட்டா**

***1458—திரு. ஜி. பழனிசாமி:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதி, வடக்கு பொன்னிரை கிராமத்தில் ஆதிதிராவிடர் குடும்பங்கள் பல ஆண்டுகாலமாக வாழ்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதி, வடக்கு பொன்னிரை கிராமத்தில் பல ஆண்டுகளாக வாழும் ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு ஒப்படை கோருபவர்களின் தகுதியின் அடிப்படையிலும், ஒப்படை கோரும் நிலத்தின் தகுதியின் அடிப்படையிலும் வீட்டுமனைப் பட்டா மாவட்ட ஆட்சியரால் வழங்கப்பட்டு வருகிறது.



2002 ஏப்ரல் 24]

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓரேயிடத்திலே, ஒரே சர்வே நம்பரிலே குடியிருப்பவர்களுக்கு, அனைவரும் சேர்ந்து குடியிருப்பு மனைப்பட்டா கேட்டால், மாவட்ட ஆட்சியர் மூலமாக அல்லது வருவாய்த் துறை மூலமாக சிலருக்குப் பட்டாவை வழங்கிவிட்டு, மீதமுள்ளவர்களுக்கு பட்டா வழங்க முடியாது என்று மறுக்கப்படுகிறது. ஆகையால், அனைவருக்கும் அந்த ஆண்டிலே, குடியிருப்பவர்கள் அனைவருக்கும் பட்டா வழங்கப்படுமா? அப்படித்தான் அந்த பொன்னிரையிலே சிலருக்கு பட்டா வழங்கிவிட்டு, சிலருக்கு பட்டா வழங்காமல், இன்றையதினத்திலே இருந்து கொண்டிருக்கிறார்கள். அந்த இடத்திலே 45 குடும்பங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. 19 பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. மீதிப் பட்டாக்களை வழங்குவதற்கு உரிய நடவடிக்கையை அரசு எடுக்குமா என தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கான ஆய்வுகள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. உடனடியாக அதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் இடத்திலே குடியிருப்பவர்களுக்கு, பாதிப் பேருக்கு பட்டா வழங்கிவிட்டு, பாதிப் பேருக்கு வழங்காமல் அரசாங்கம் இரண்டு முறையிலே அந்தப் பணிகளை மேற்கொள்வது, எந்த அளவுக்கு அந்தத் திட்டங்களை துரிதமாக நடத்துவதற்கு அந்தத் துறை செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதைத் தங்கள் மூலமாக தெரிவிக்க விரும்புகிறேன். அதோடு மட்டுமல்ல, இதுபோன்று, ஏழையெளிய ஆதிதிராவிட மக்கள், கிராமப்புறத்திலே வாழ்ந்து கொண்டிருக்கக்கூடியவர்களை, தமிழகம் முழுவதும் இருக்கக்கூடியவர்களை ஒரு சர்வே செய்து, அதற்குரிய ஒரு சிறப்புத் திட்டத்தின் மூலமாக பட்டாவை, ஓராண்டுக்கு இத்தனை பட்டா வழங்கப்படும் என்ற வகையில் திட்டங்களை அரசு உருவாக்குமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001-2002 ஆம் ஆண்டுக்கான குறியீடு 60,000. மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலே சாதனை படைத்து, 1 இலட்சத்து 12 ஆயிரத்து 341 பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[2002 ஏப்ரல் 24

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 223, திரு. நா. சந்திரமோகன், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்.

**223—**

**குடியிருப்பு**

***3659—திரு. நா. சந்திரமோகன்:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதியில் அரசு ஊழியர்கள் அதிகம் வசிப்பதால், வீட்டுவசதி வாரியம் மூலம் குடியிருப்பு கட்டிக் கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர், என் தாயை வணங்குகிறேன். நாகை மாவட்டம், சீர்காழி தொகுதியில் அனைத்து அரசு அலுவலகங்களும் சீர்காழி நகரத்தில்தான் அமைந்துள்ளன. தாலுகா தலைமையிடமாக இருப்பதால், அனைத்து அலுவலகங்களிலும் சுமார் ஆயிரம் அரசு ஊழியர்கள் பணியாற்றி வருகின்றார்கள். பெரும்பான்மையானவர்கள் வெளியூர்களிலிருந்து புகைவண்டி மூலமும், பேருந்துகள் மூலமுமாக வந்து பணிபுரிகின்றனர். இவர்களுக்கு சீர்காழியில் குடியிருக்க வீடு கிடைக்காத சூழ்நிலை உள்ளது. சீர்காழி நகரில் குடியிருக்க வீடு கிடைத்தாலும், அதற்கு முன்பணமாக ரூ.10,000-லிருந்து ரூ.50,000 வரை கேட்கிறார்கள். மேலும், அரசு ஊழியர்கள் வாங்கும் சம்பளத்தில் பாதிப் பணம் வீட்டு வாடகையாகப் போய்விடுகின்றது. அரசு ஊழியர்களுக்கு குடியிருப்பு கட்ட சீர்காழி நகரில் போதிய இடவசதியும் உள்ளது. எனவே, அரசு அலுவலர்களின் நீண்ட நாளைய கோரிக்கையினை நிறைவேற்றித்தரும் வகையில், அடுத்த நிதியாண்டிலாவது அரசு ஊழியர்களுக்குக்



2002 ஏப்ரல் 24]

குடியிருப்புகள் கட்டித்தர அரசு முன்வருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-45

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி ஒரு தாலுகா தலைமையிடம் என்பதால் அரசு அலுவலர்களுக்கு தமிழ்நாடு அரசு அலுவலர்கள் வாடகைக் குடியிருப்புத் திட்டத்தினை தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் மூலம் செயல்படுத்த இயலாது. மேலும், தற்போதுள்ள நிதிநிலைமையினைக் கருத்தில்கொண்டால் அரசு அலுவலர்களின் வாடகைக் குடியிருப்பு கட்டுவதற்குச் சாதகமான சூழ்நிலை இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 224, திரு. கோ. இரவிராஜ், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

**224—**

**கால்நடை மருந்தகம்**

***10508—திரு. கோ. இரவிராஜ்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், கடம்பத்தூர் ஒன்றியம், உளுந்தை கிராமத்தில் புதிய கால்நடை மருந்தகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) எழாது.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருத்தணி தொகுதியிலே, கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட உளுந்தை கிராமத்தைச் சுற்றி கிட்டத்தட்ட 50 கிராமங்களுக்கு மேலாக, விவசாயப் பெருங்குடி மக்கள் கால்நடைகளைப்

[2002 ஏப்ரல் 24

பராமரித்து வருகிறார்கள். அங்கே அரசு சார்பிலே உரிய மருந்தகம் இல்லை. எனவே, அப்பகுதி மக்களுக்குப் பயன்படுகின்ற வகையிலே கால்நடை மருத்துவமனை அமைக்கப்பட வேண்டுமென கோரிக்கை வைத்து, அதனை அமைப்பாரா என்று தங்கள் வாயிலாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டம், உளுந்தை கிராமம், கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தின்கீழ் வருகிறது. இக்கிராமத்திலே கால்நடை கிளை நிலையமும், இக்கிராமத்திலிருந்து 5 கிலோமீட்டர் தூரத்தில் வயலூரில் ஒரு பார்வைக் கிளை நிலையமும் செயல்பட்டு வருகிறது. இக்கிராமம் மற்றும் இதனைச் சுற்றியுள்ள கிராமத்தில் சுமார் 1,200 கால்நடைகளே உள்ளன. மேற்படி கிராமம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களிலுள்ள கால்நடைகளின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்து இருப்பதாலும், உளுந்தை கிராமத்தில் தற்போது ஒரு கால்நடை கிளை நிலையம் இயங்கி வருவதாலும் மற்றும் அருகிலுள்ள கிராமங்களுக்கு கடம்பத்தூர், பேரம்பாக்கம் மற்றும் மப்பேடு கால்நடை மருந்தகங்களின் மூலமாக சிகிச்சைப் பெறக்கூடிய வாய்ப்புகள் உள்ளதாலும் திருவள்ளூர் மாவட்டம், கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியம் உளுந்தை கிராமத்திற்கு புதிய கால்நடை மருந்தகம் தொடங்கக்கூடிய சாத்தியக்கூறுகள் இல்லையென்பதை அவையின்மூலம் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

**திரு. எஸ்.ஏ.எம். உசேன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உசேன், உங்களுக்கு உளுந்தை கிராமம் எங்கேயிருக்கிறது என்றாவது தெரியுமா? சொல்லுங்கள்.

**திரு. எஸ்.ஏ.எம். உசேன்:** என்னிடம் உள்ள வினாத்தாளில் வினா எண்கள் 223, 224 மற்றும் 225 ஆகிய வினாக்கள் பதிவுபெறவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுடைய வினாத்தாளிலா?

**திரு. எஸ்.ஏ.எம். உசேன்:** வெறும் தாளாக இருக்கிறது. இப்படிப்பட்ட தவறுகள் நடக்காமல் இனிமேல் அதைப் பரிசீலித்து வைப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது, கால்நடைப் பராமரிப்புத் துறையின்கீழ் வராது. என்னுடைய துறையின்கீழ்தான் வரும்.



2002 ஏப்ரல் 24]

வினா எண் 225, திரு. பெ. பழனியப்பன். மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

**225—**

**விடுதிக் கட்டடம்**

***11092—திரு. பெ. பழனியப்பன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், இராமியனஹள்ளி அரசு மேல்நிலைப் பள்ளியில் புதிதாக மாணவர் விடுதி கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே. சுதர்சனம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

எதையும் தாங்கும் இதயம் கொண்ட எங்கள் கழகக் காவல் தெய்வம், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி விடை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், இராமியனஹள்ளி பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதிக்குச் சொந்தக் கட்டடம் கட்ட விடுதிக்கு அருகில் தேவையான அரசு புறம்போக்கு நிலம் அல்லது தானமாக வழங்கும் நிலம் கிடைக்கும்போது அரசின் நிதி நிலைக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பெ. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் வணங்குகின்ற இதயதெய்வம், தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய திசை நோக்கி என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த நிதியாண்டில் எனது தொகுதியில் மட்டும் தமிழகத்தில் அதிகப்படியான 6 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தித் தந்த மாண்புமிகு இதயதெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி

[2002 ஏப்ரல் 24

அம்மா அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், கடந்த நிதியாண்டில் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவிகளுக்காக வழங்கப்படுகிற மாதாந்திர உணவுக்கான நிதியை ரூபாய் 225-லிருந்து ரூ.300-ஆக உயர்த்தி தந்த நம்முடைய தமிழக முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு மட்டுமல்லாமல் இராமியனஹள்ளி மேல்நிலைப் பள்ளி என்பது என்னுடைய தொகுதிக்குட்பட்டதாகும். இந்தப் பள்ளியிலே படிக்கின்ற மாணவர்களின் விடுதி தற்போது வாடகைக் கட்டடத்திலே இயங்கி வருகிறது. அந்த வாடகைக் கட்டடம் தற்போது சுகாதாரம் மற்றும் நல்ல காற்றோட்டம் உள்ள சூழ்நிலையில் அங்கே இல்லை. போதுமான கட்டட வசதிகள் அங்கே இல்லை. எனவே, அந்த மாணவர்களுடைய நலன் கருதி இந்த நிதியாண்டிலே அதற்கு, விடுதிக் கட்டடம் கட்டுவதற்கு நம்முடைய அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விடுதிகளுக்கு அரசு சொந்தக் கட்டடங்கள் கட்டும் செயற்குறிப்புகள் கீழ்க்கண்ட அடிப்படையில் பரிசீலிக்கப்பட்டு ஒவ்வோர் ஆண்டும் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகின்றது.

தேர்வு செய்யப்படும் இடத்தில் முழுவதாக விடுதி இயங்க வேண்டும். கட்டட உரிமையாளர்களால் காலி செய்யுமாறு வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளவர்களாக இருக்க வேண்டும். கட்டட உரிமையாளர்களால் காலி செய்யுமாறு வற்புறுத்தப்பட்டவர்கள், விடுதி கட்டத் தேவையான நிலங்கள் உள்ளனவா, அப்படி வசதிகள் இல்லாத பழுதடைந்த நிலையிலுள்ள விடுதிகள் மற்றும் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் சமூகப் பிரதிநிதிகள் ஆகியோர்களின் கோரிக்கைக்கு ஏற்ப, அந்த அடிப்படையில் பரிசீலிக்கப்பட்டு, ஒவ்வோர் ஆண்டும் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகின்றது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பு.பகல் 10-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 226, திரு. ப. நீலகண்டன், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.



2002 ஏப்ரல் 24]

**226—**

### பால் பவுடர் தொழிற்சாலை

***7969—திரு. ப. நீலகண்டன்:**

*மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*வேலூர் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தில் பால் பவுடர் தொழிற்சாலை அமைக்க அரசு பரிசீலனை செய்யுமா?*

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேலூர் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தில் பால் பவுடர் தொழிற்சாலை அமைக்க தற்போது வாய்ப்பில்லை.

**திரு. ப. நீலகண்டன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதயதெய்வம் என்னுடைய குடும்பத்தினுடைய கண்கண்ட தெய்வம், அம்மா அவர்களுடைய பொற்பாதங்களைத் தொட்டு வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் 10 ஆயிரம் மகளிர் பயன்பெறும் வகையிலே 145 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் தொடங்க 6.5 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்து இத்திட்டத்தின்கீழ் வேலூர் மாவட்ட மகளிர் பயன்பெறும் வகையில் அறிவிப்பு செய்து, பெண்கள் வாழ்வு வளம்பெற வாய்ப்பு அளித்திட்ட எங்கள் இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்பாதங்களைத் தொட்டு நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டம், மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சராக இருக்கின்ற அமைச்சருடைய மாவட்டமான திருவண்ணாமலை மாவட்டம் இணைந்து மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் செயல்பட்டு வருகின்றது. சென்னையிலுள்ள இணையம் ஒரு பால் அளவை சென்னைக்கு அனுப்பி, மீதமுள்ள பாலை மாவட்டத்திலுள்ள நகரங்களில் உள்ளூர் விற்பனைச் செய்து வருகிறது. மீதமுள்ள பாலை தினந்தோறும் கிருஷ்ணகிரி, சேலம், ஈரோடு மாவட்டங்களிலுள்ள பால் பவுடர் தொழிற்சாலைக்கு அனுப்பி பாலை பவுடர் ஆக்குவது வழக்கமாக உள்ளது. இதனால் போக்குவரத்துச் செலவு மற்றும் பாலை பவுடர் ஆக்குவதற்கான கூடுதல் செலவை மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையம் ஏற்றுக்கொள்கிறது. இதனை

தவிர்ப்பதற்கு வேலூரில் பால் பவுடர் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தில் தற்போது தினமொன்றுக்கு 2.60 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. இதில் 2.20 இலட்சம் லிட்டர் பால், சென்னைப் பெருநகர மக்களின் பால் தேவையை பூர்த்தி செய்ய சென்னையிலுள்ள இணையத்திற்கு தற்போது அனுப்பப்பட்டு வருகிறது. மேலும், வேலூர் ஒன்றியம் சென்னைக்கு அருகில் அமைந்திருப்பதால், வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் கொள்முதல் செய்யப்படுகின்ற 2.60 இலட்சம் லிட்டர் பாலில் உள்ளூர் விற்பனைக்காக 40,000 லிட்டர் நீங்கலாக 2.20 இலட்சம் லிட்டர் சென்னைக்கு அனுப்பப்படுகின்றது. எனவே, வேலூரில் பால் பவுடர் தொழிற்சாலை அமைக்க அவசியமில்லை ' என்று கருதப்படுகிறது. அப்படியே அமைக்கப்பட்டாலும் அது இலாபகரமாக இயங்க வாய்ப்பில்லை. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதுபோல் வேலூரில் பால் பவுடர் தொழிற்சாலை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 227, திருமதி செ. சுந்தராம்பாள், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் .

**227—**

**மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ்**

***7539—திருமதி செ. சுந்தராம்பாள்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1985-ல் மூடிவிட்ட மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் நெசவாலையை மீண்டுப் திறக்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் தொழிற்சாலையை மீண்டும் திறக்க இயலாது என்பதைத் தங்களின் வாயிலாக தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திருமதி செ. சுந்தராம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகத்தினிலே பிறந்து, ஜகத்தினை ஆளும் முகராசி கொண்ட மகராசியே, அன்னை சந்தியா ஈன்றெடுத்த மனிதர்குல மாணிக்கமே, தங்களின் பொற்பாதங்களைத் தொட்டு வணங்கிக் கேட்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இயலாது என்று கூறியுள்ளார்கள். மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் என்ற ஆலை மூடப்பட்டநிலையில் 2,568 தொழிலாளர் குடும்பங்கள் இன்று வறுமையில் வாடிக்கொண்டிருக்கின்றன. அவர்கள் தங்களின் குழந்தைகளைப் படிக்க வைக்க முடியாமலும், வயது வந்த பெண்களுக்குத் திருமணம் செய்ய முடியாமலும் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்று தமிழக மக்களின் தாயாக விளங்கிக்கொண்டிருக்கிற மாண்புமிகு அம்மா அவர்கள் அனுமதி பெற்று இந்த ஆண்டு நிதி ஒதுக்கி, இந்தத் தொழிற்சாலையை திறக்க ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1937 ஆம் ஆண்டு முதல் மேட்டூர் பியர்ட்செல் லிமிடெட் என்ற பெயரில் இயங்கி வந்த மேட்டூர் மில் நிறுவனம் 1982-ம் ஆண்டு மார்ச் மாதம் முதல் மற்றொரு நிர்வாகத்தின் அடிப்படையிலே செயல்பட தொடங்கியது. ஆலை நிர்வாகம் மாறியதிலிருந்து ஆலை நட்டத்தில் செயல்படத் தொடங்கியது. 1983 ஆம் ஆண்டிலிருந்து 1985 ஆம் ஆண்டிற்குள் சுமார் ரூ. 485.60 இலட்சம் நட்டம் ஏற்பட்டது.

முற்பகல் 10-55

மேற்படி ஆலையில் மாநில தொழிலாளர் ஈட்டுறுதி வருங்கால வைப்பு நிதி போன்ற சட்டபூர்வமான நிலுவைகளை ஆலை நிர்வாகம் செலுத்த இயலவில்லை. வங்கிகளிடமிருந்து நிர்வாகம் பெற்ற கடன் தொகைக்களுக்கான வட்டியைச் செலுத்தாததன் காரணமாக வங்கிகள் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தன. இதன் விளைவாக ஆலை 1985 ஆம் ஆண்டு மூடப்பட்டது. 11-7-1990 முதல் ஆலையைச் சுத்தப்படுத்தும் பணி தொழிலாளர்களுக்குச் சுழல் முறையில் (Rotation Basis) மேற்கொள்ளப்பட்டு தினக்கூலியாக ரூ.30 வீதம் வழங்கப்பட்டு, ஆலையைச் சுத்தப்படுத்தும் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். 4-8-1990 மார்ச் மாதம் ஆலை ஆரம்பிக்கப்பட்டது. இருப்பினும் நீதிமன்ற வழக்குகள் மற்றும் நடைமுறை மூலதனம் இல்லாத காரணத்தால் ஆலை செயல்பட

முடியவில்லை. பின்னர் உயர் நீதிமன்ற கம்பெனி பெட்டிஷன் எண் 125/1988-ல் 2-7-1993ஆம் தேதியிட்ட தீர்ப்பின்படி மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் ஆலையைத் கலைக்க உத்தரவிடப்பட்டது. ஆலை, சென்னை உயர் நீதிமன்றத்தின் சட்ட முறையான கலைத்தல் அலுவலர் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டது. மேலும் மத்திய அரசு கலைக்கப்பட்ட/மூடப்பட்ட ஆலைத் தொழிலாளர்களுக்கு துணிநூல் புனரமைப்பு நிதியம் ஒன்றை ஏற்படுத்தி அதன் மூலம் மூடப்பட்ட ஆலைத் தொழிலாளர்களுக்கு நிவாரண நிதியை அளித்து வருகிறது. மேற்கண்ட புனரமைப்பு நிதியிலிருந்து மாநில அரசின் பரிந்துரையின்பேரில் 2,306 மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு ரூ.3,41,76,247 நிவாரணத் தொகையாக ஒட்டுமொத்தமாகப் பட்டுவாடா செய்யப்பட்டுவிட்டது. எனவே, இத்தகைய சூழ்நிலையில் மீண்டும் மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் ஆலையைத் திறந்து ஓட்ட நடவடிக்கை எடுக்க வழிவகை இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி செ. சுந்தராம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் நிரந்தர முதல்வர், மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 1991 முதல் 1996 வரை தமிழக முதல்வராக இருந்த நேரத்தில் இந்த ஆலையில் பணி புரிந்த 2568 தொழிலாளர்களுக்குத் தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு கருணைத் தொகையாக ரூ.400 வீதம் கொடுத்து வந்தார்கள். ஆனால், கடந்த ஆட்சியாளர்கள் இந்தத் தொகையை நிறுத்திவிட்டார்கள். சதிகாரர்கள் பின்னிய வலையை அறுத்தெறிந்து இன்று தமிழக முதல்வராக மீண்டும் பதவியேற்றிருக்கிற மாண்புமிகு அம்மா அவர்கள் இந்தத் தொகையை மீண்டும் அளிப்பதற்கு ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இன்று தமிழகத்தின் நிதிநிலைமை பற்றி இங்கே இருக்கும் அனைவருக்கும் தெரியும். அது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் தெரியும். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கைமீது இந்த அரசு பரிசீலித்து தக்க நடவடிக்கை எடுக்க முயற்சிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 228, திருமதி எஸ். ராஜம்மாள், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.





**228—**

### மீன்பிடித் துறைமுகத்தை நவினப்படுத்துதல்

***7528—திருமதி எஸ். ராஜம்மாள் :**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி மீன்பிடித் துறைமுகத்தில் சுகாதார முறையில் மீன்களைக் கையாள, துறைமுகத்தை நவீனப்படுத்தும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) மேலும், மீன்பிடித் துறைமுகத்தில் தொழில் செய்யும் மீனவர்களுக்கு குடிதண்ணீர் வசதி செய்துகொடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மீன்பிடித் துறைமுகத்தில் மீன்களைச் சுகாதாரமான முறையில் கையாளும் பொருட்டு அத்துறைமுகத்தில் உள்ள 2 மீன் ஏலக்கூடங்கள் கடல்பொருள் ஏற்றுமதி ஆணையத்தின் ஆலோசனையுடன் 1999 ஆம் ஆண்டு புதுப்பிக்கப்பட்டு, இந்நாள் வரையில் பொதுப் பஞ்சாயத்தினரால் சுகாதாரமான முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. குடிதண்ணீர் மட்டும், குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பெற்று சின்டெக்ஸ் டாங்க் மூலம் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி எஸ். ராஜம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதயதெய்வம் அம்மா அவர்களை வணங்கி என் கேள்வியைத் தொடங்குகின்றேன். தமிழ்நாட்டில் 1,000 முதல் 1,500 கோடி ரூபாய்க்கு மீன் ஏற்றுமதி மூலம் அன்னியச் செலாவணி ஈட்டப்படுகிறது. அந்தத் தொகையில் பெரும்பாலான தொகை தூத்துக்குடி மீன்பிடித் துறைமுகத்தில் பிடிக்கப்படுகின்ற மீன்கள் மூலமாகவே ஈட்டப்படுகிறது. தூத்துக்குடி துறைமுகத்தில் சுமார் 400 முதல் 600 விசைப்படகுகள் மூலம் மீனவர்கள் தொழில் செய்கிறார்கள். நீண்டகாலமாக இந்த விசைப்படகுகள் தங்கும் தளத்தில் மணல் சேர்ந்து மேடாகி இருக்கிறது. இதை ஆழப்படுத்தி அந்த விசைப்படகுகள் தங்கி தொழில் செய்ய அரசு ஏதாவது திட்டம் வகுத்துள்ளதா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன். மேலும் இந்த விசைப் படகுகளில் தொழில் செய்யும் தொழிலாளர்கள் குடிநீருக்காக

[2002 ஏப்ரல் 24

மிகவும் கஷ்டப்படுகின்றனர். கடந்த ஆட்சிக் காலத்தில் அடிக்கடி கோரிக்கைகள் வைத்தும் அவர்களுக்குக் குடிநீர் வசதி செய்து தரப்பட வில்லை. அவர்கள் சொல்லும் அந்தத் தண்ணீர் குடிப்பதற்கு ஆகாத தண்ணீர். அவர்களுக்கு சரியான குடிநீர் வசதி செய்துதரப்படவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த மீனவர்களுக்கு தூத்துக்குடி நகராட்சி மூலம் குடிநீர் வசதி செய்து தரக் கேட்டுக்கொள்கிறேன். அதற்கான செலவை எனது சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டால் அதைத் தரத் தயாராக இருக்கிறேன். இந்த அரசு ஆவன செய்ய முன்வருமா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் *11-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு, வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *20-4-2002* அன்று நான் தூத்துக்குடி மீன்பிடித் துறைமுகத்தைப் பார்வையிட்டேன். அப்போது அங்குள்ள மீனவர்கள், இத்துறைமுகத்தை ஆழப்படுத்த வேண்டுமென்று என்னிடம் முறையிட்டார்கள். அப்போது நான் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் ஆலோசனை கேட்டு, அதன்படி இதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றனவா என்பதை ஆராய்ந்து, மீன்பிடித் துறைமுக திட்ட கண்காணிப்புப் பொறியாளரைக் கலந்த பின்னரே, இதுபற்றி முடிவெடுக்க இயலும் என்று தெரிவித்தேன். மேலும், பணி மேற்கொண்டால், இயந்திரப் படகுகளை நிறுத்த தனி இடம் ஒதுக்கப்பட வேண்டுமென்றும் கூறினார்கள். குடிதண்ணீர் வசதிக்கு நகராட்சியிலே இருந்து தண்ணீர் கொடுத்த பின்னரே, இதைச் செய்ய முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *229*, திரு. சு. சிவராஜ், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

**229—**

**சுற்றுலா மையம்**

***2101—திரு. சு. சிவராஜ்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2002 ஏப்ரல் 24]

*(அ) ரிஷிவந்தியம் தொகுதி, திருக்கோவிலூரைச் சுற்றுலா மையமாக அறிவிக்கும் திட்டம், அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ரிஷிவந்தியம் சட்டமன்றத் தொகுதி, திருக்கோவிலூரைச் சுற்றுலா மையமாக ஆக்கும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம்பெற்றிருந்தால், அவ்வுரை, உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

### (ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள்

**திரு. சி. ஞானசேகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தெலுங்கு-கங்கை திட்டத்தைப் பற்றி நான் ஏற்கெனவே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள், என் அறைக்கு வாருங்கள். அது என் ஆய்வில் இருக்கிறது. (குறுக்கீடு) திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி.

***திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம் குறித்து உங்களிடம் கொடுத்திருக்கிறேன். அதுசம்பந்தமாக...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேற்று நடந்த சம்பவம்: அது என்னுடைய ஆய்விலே இருக்கிறது; மிக விரைவில் எடுத்துக்கொள்வது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

[2002 ஏப்ரல் 24

**(ஆ) புத்துயிர் பயிற்சி பெற்ற பள்ளி ஆசிரியர்கள் மாறுதல் செய்யப்பட்டிருப்பது**

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்திலே, ஏற்கெனவே ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளிலே படித்த, மாணவர்கள் குறித்து, தற்போது அரசு ஒரு நல்ல நடவடிக்கை எடுத்திருக்கிறது. அப்படிப் பாதிக்கப்பட்டவர்கள் பல்வேறு போராட்டத்திற்கு இடையிலே நேர்மையாக இப்போது, Counselling நடத்தி, அவர்களெல்லாம் ஆசிரியர் பயிற்சி பெறுவதற்கு, கல்வித் துறையிலே ஒரு நல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. உண்மையிலேயே, வரவேற்க வேண்டியது. இச்சூழ்நிலையில், சமீபத்திலே, இவ்வாறு புத்துயிர் பயிற்சி பெற்றிருக்கிற பள்ளி ஆசிரியர்கள் பலபேரை, தனியாரிடத்திலே, சுயநிதிக்கல்வி என்ற பெயரிலே, 600 பேருக்கு மேற்பட்டவர்களை மாறுதல் செய்து, அவர்களை தங்களுடைய பள்ளியிலே அனுமதிக்க முடியாது என்று...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை எழுதிக் கொடுங்கள். கல்வி அமைச்சரிடத்திலே முழுமையான பதிலைப் பெற்று, பிறகு நான் சொல்லச் சொல்கிறேன். *(குறுக்கீடு)*

**திரு. ஜி. பழனிசாமி:** உத்தரவாதம் இல்லாமல் இருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எழுதிக் கொடுங்கள். இதுபற்றி, துறையிலே நான் விளக்கம் கேட்டு, பிறகு சொல்லச் சொல்கிறேன்.

**திரு. ஜி. பழனிசாமி:** நான் ஏற்கெனவே கொடுத்து இருக்கிறேன். இப்போது அமைச்சருடைய பதிலை எதிர்பார்க்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி. அதைப் பிறகு எடுத்துக் கொள்ளலாம்.

## 3. சிறப்புக் கவன ஈர்ப்பு

### சைதாப்பேட்டை, வாணியம்பாடி தொகுதிகள் இடைத்தேர்தல் அறிவிப்புக்குப் பின் அதிகாரிகள் மாற்றம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சைதாப்பேட்டை, வாணியம்பாடி தொகுதிகளுக்கு, இடைத் தேர்தல் அறிவித்த பின்பு, அதிகாரிகள் மாற்றம் செய்யப்பட்டுள்ளது குறித்து, ஒத்திவைப்புத் தீர்மானமாக,



2002 ஏப்ரல் 24] [பேரவைத் தலைவர்]

டாக்டர் க. பொன்முடி, திரு. இ. புகழேந்தி, திரு. எ.வ. வேலு, திரு. சி. ஞானசேகரன், திரு. ஜி.கே. மணி ஆகியோரும், கவன ஈர்ப்பு அறிவிப்பாக திரு. ப. அரசன் மற்றும் சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்பாக திரு. ஐ. கணேசன் ஆகியோரும் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்பாக எடுத்துகொள்ள அனுமதி அளிக்கப்படுகிறது. சுருக்கமாகப் பேசுமாறு அழைக்கிறேன். திரு. இ. புகழேந்தி.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சைதாப்பேட்டை, வாணியம்பாடி ஆகிய தொகுதிகளுக்கான தேர்தல் அறிவிப்பு வந்ததற்குப் பிறகு, நம்முடைய சைதாப்பேட்டை தொகுதியில் ஒன்பதாவது மண்டலத்திற்குட்பட்ட அதிகாரிகளாக இருக்கக் கூடியவர்களை, J.E. போன்றவர்களை, மாறுதல் செய்வதற்கான உத்தரவுகள் குறித்து, என்னுடைய கவன ஈர்ப்பு அறிவிப்பில் நான் சொல்லியிருந்தேன். அதில், அன்றைக்கு, 16 ஆம் தேதி அன்று, உத்தரவு போடப்பட்டதாக 24 பேருக்கு, சென்னையிலே, மாநகராட்சியிலே ஓர் உத்தரவு தயாரிக்கப்படுகிறது. ஆனால், அந்த 16 ஆம் தேதி, 24 பேரை மொத்தமாகச் சொல்லிவிட்டு, 12 பேர், சைதாப்பேட்டையிலே, ஒன்பதாவது மண்டலத்திலே பணியாற்றக்கூடியவர்கள்; மீதமுள்ள 12 பேர், சென்னை மாநகரத்தில் பல்வேறு மண்டல பகுதிகளிலே இருப்பவர்கள். இதிலே இருக்கின்ற நிலை என்னவென்றால், இந்த 12 பேர், சைதாப்பேட்டை மண்டலத்திலே பணியாற்றக்கூடிய அந்த 12 பேரை அப்படியே எடுத்துவிட்டு, பல்வேறு மண்டலங்களிலே பணியாற்றிக் கொண்டிருக்கின்ற 12 பேரை இந்த இடத்திற்கு மாற்றுவதற்கான உத்தரவு தயாரிக்கப்பட்டிருக்கிறது. எப்போதுமே ஓர் உத்தரவு போடுகிறபோது, கார்ப்பரேஷனில், இப்படி ஒட்டுமொத்தமாக 24 பேருக்கு உத்தரவு என்றால், ஒரே உத்தரவாக அது அளிக்கப்படுவது வழக்கம். ஆனால், இந்த முறை தனித் தனியாக தனிப்பட்ட நபர்களாக treat செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் உத்தரவு காப்பி அனுப்பப்பட்டிருக்கிறது. அது 18 ஆம் தேதி மேயர் அலுவலகத்திற்கு வந்து சேருகிறது.

*முற்பகல் 11-05*

எப்போதுமே ஓர் உத்தரவு போடுகிறார்கள் என்றால், அன்று மாலை அல்லது மறுநாள் காலை அது அங்கே வந்து இருக்கக்கூடும். ஆனால் 18 ஆம் தேதிதான் மேயர் அலுவலகத்திற்கே வருகிறது. இவர்கள், குறிப்பாக நான் சொல்ல விரும்புவது, அரசாங்கத்தினுடைய விதிமுறைகள், மாறுதல் குறித்த சட்ட விதிமுறைகள், தேர்தல் குறித்த சட்ட விதிமுறைகள் இவற்றை

[திரு. இ. புகழேந்தி] [2002 ஏப்ரல் 24

அப்படியே பின்பற்ற வேண்டும் என்பதுதான் எங்களுடைய முதல் கோரிக்கையாகும்; இதிலே விதி மீறப்பட்டு இருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பாகச் சொல்வதற்குக் காரணம், 18 ஆம் தேதி மாலை சைதாப்பேட்டையிலே 9-வது மண்டலத்திற்குட்பட்ட கலைஞர் நகர் பகுதியில் தீ விபத்து ஏற்படுகிறது. அந்தத் தீ விபத்து ஏற்பட்ட இடத்தை மாண்புமிகு அமைச்சர்கள்கூட போய் பார்க்கிறார்கள். அங்கே பணியாற்றிக் கொண்டிருக்கின்ற அலுவலர், மாறுதலுக்கு உள்ளானவர், பணியாற்றிக் கொண்டிருப்பவர் பார்வையிட்டார்; கார்ப்பரேஷன் என்னென்ன செய்து இருக்கிறது; மக்களுக்கு எப்படிப்பட்ட நிவாரணங்கள் அங்கே வழங்கப்பட்டு இருக்கின்றன என்பதையெல்லாம் அந்த அதிகாரி தன்னுடைய பொறுப்பு நிலை கருதி ஆணையருக்கு அனுப்புகிறார். ஆணையர் பொறுப்பில் இருப்பவர், ஏற்கெனவே உத்தரவு போடப்பட்டு இருந்ததாக இன்றைக்குச் சொல்லப்பட்டு இருக்கின்ற அந்த அதிகாரியின் ரிப்போர்ட்டை பெற்றுக்கொண்டு, அவரும் கையெழுத்துப் போட்டு, இங்கே அரசாங்கத்திற்கு, M.A.W.S. Secretaryக்கு அனுப்பி இருக்கிறார். ஆக 18 ஆம் தேதி பணி புரிந்து கொண்டிருக்கிறார். ஆனால் உத்தரவு அதற்குப் பிறகு அவர்களுக்கு போய்ச் சேருகிறது என்றால், 16 ஆம் தேதி எப்படி இருக்க முடியும்? 16 ஆம் தேதியே உத்தரவு போடப்பட்டு இருந்தால், ஆணையர் பொறுப்பிலே இருப்பவர் எப்படி இவர் கொடுத்த தகவலை receive செய்துகொள்ள முடியும்? ஒன்று.

இரண்டாவது, 16 ஆம் தேதி போடப்பட்ட உத்தரவு, உடனே அவர்களுக்கு அளிக்கப்பட்டு relieve செய்து இருக்க வேண்டும். தேர்தல் கமிஷன் அறிவிப்பு, நோட்டிஃபிகேஷன் வந்ததற்குப் பிறகு எந்த அதிகாரியையும் relieve செய்யக்கூட முடியாது; விதிமுறைகளின்படி relieve செய்யக்கூடாது. ஆக, சென்னையில் சைதாப்பேட்டை தொகுதிக்கு உட்பட்ட இடங்களில் இப்படி என்றால், வாணியம்பாடி பகுதியிலே B.D.O.-க்கள்-அந்த வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சங்கம்கூட அதைக் கண்டித்து இருக்கிறது. அவர்கள் 18 ஆம் தேதி வரை Cheque போடுவதிலிருந்து, அந்த நிர்வாகத்தை நடத்துவதிலிருந்து, பல்வேறு பணிகளுக்கு, அரசுப் பணிகளுக்கு கையொப்பமிட்டு இருக்கிறார்கள்; கையொப்பமிட்டு பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு திடீரென முன்தேதியிட்ட ஓர் உத்தரவு போய், நீங்கள் எல்லாம் மாறுதல் செய்யப்பட்டு இருக்கிறீர்கள் என்று போகின்றபொழுது, அவர்களுக்கு ஏற்படுகின்ற சிக்கல் ஒருபுறம்; அந்தச் சிக்கலை அந்தச் சங்கத்தை சேர்ந்தவர்களே பத்திரிகைகளின் மூலமாக பெரிதாகக் கண்டித்து



2002 ஏப்ரல் 24] [திரு. இ. புகழேந்தி]

இருக்கிறார்கள்; அரசிடமும் சொல்லி இருக்கிறார்கள். அவர்கள் சிக்கல் ஒருபுறம் இருந்தாலும், தேர்தல் விதிமுறைகள் ஏன் அப்படி மீறப்படுகின்றன? அந்த விதிமுறைகள் மீறலின் காரணமாக, ஒரு தேர்தல் வருகிறது என்றால், ஆளும் கட்சியும் நிற்கப் போகிறது; நாங்களும் நிற்கப் போகிறோம்; மற்ற எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தவர்களும் அதிலே நிற்கப் போகிறார்கள்; ஆக, தேர்தலை தேர்தலாக நடத்த வேண்டும் என்பதற்குத்தான் தேர்தல் ஆணையம். அந்தத் தேர்தல் ஆணையத்திலே வைத்துக் கொண்டிருக்கின்ற விதிமுறைகளைப் பின்பற்றியாக வேண்டும். அவற்றை மீறுவதற்கான நிலைகளை ஆதாரத்தோடு, புள்ளிவிவரத்தோடு இப்போது நான் இங்கே எடுத்துச் சொல்லி இருக்கிறேன். ஆகவே, அந்த விதிமுறைகளுக்குட்பட்டு, ஏற்கெனவே விதிமுறைகள் மீறப்பட்டு வாணியம் பாடியிலேகூட ஒருமுறை தேர்தல் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது; தேர்தல் தலைமை அதிகாரி, டில்லியிலிருந்து வந்த மரியாதைக்குரிய லிங்டோ அவர்கள் இந்தப் பிரச்சினை குறித்து மாநில தேர்தல் ஆணையத்தின் விசாரணைக்கு அனுப்பினார். சாரங்கி அவர்களிடம் இன்று காலையிலேகூட நான் விசாரித்தேன்; அதை மத்திய அரசுக்கு அனுப்பி இருக்கிறேன் என்று சொல்லி இருக்கிறார். அது ஒருபுறம் விசாரணை நடைபெறுகிறது.

இந்தத் தெளிவான கருத்துகள் இருக்கின்ற காரணத்தினால் இந்த மாறுதல் உத்தரவு என்பது வேண்டுமென்றே திட்டமிட்டு செய்யப்பட்டதாக கருதுவதற்கு இடம் இருக்கிறது, ஐயம் இருக்கிறது: தேர்தலை முறையாக நடத்துவதற்கு முடியாமல் இப்படிச் செய்கிறார்களோ என்ற எண்ணத்தை மாநில அரசின்மீது மக்கள் நம்புவதற்கு ஒரு வாய்ப்பு இருக்கிறது. எதிர்க்கட்சிகள் என்ற முறையில் எப்போதுமே தேர்தல் விதிமுறையோடு தேர்தல் நடத்த வேண்டும் என்கின்ற அந்த அவாவின் காரணமாக, இது முறையில்லாமல் நடக்கிறது என்பதை இங்கே சுட்டிக்காட்டி, இப்படியே தொடர்ந்து ஒவ்வொரு தேர்தலிலும் தேர்தல் விதிமுறைகள் மீறுவது என்பது ஏற்புடையது அல்ல; இது சிறந்ததும் அல்ல; இந்த வழியைப் பின்பற்றுகின்ற இந்த அரசு ஜனநாயக விரோத அரசாக மாறிக் கொண்டிருக்கிறது என்பதை இங்கே சுட்டிக்காட்டுகிறேன்.

முற்பகல் 11-10

அந்த மாறுதல் உத்தரவுகள் எந்தக் காரணத்தை முன்னிட்டும் தேர்தல் விதிமுறைகளை மீறாத அளவிற்கு மீண்டும் அவை இரத்து செய்யப்பட்டு ஆங்காங்கு அந்தந்தப் பணிகள் எப்போதும்போல நடைபெற்று ஜனநாயக

முறைப்படி தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதை எங்களுடைய கருத்தாக இந்த அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து இந்தத் தேர்தலை தேர்தலாக நடத்துங்கள். ** என்று உங்களுக்கு சொல்லிக்கொண்டு கவன ஈர்ப்பை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். நான் பார்த்துக்கொள்கிறேன். உட்காருங்கள். புகழேந்தி பேசிய கடைசி வாக்கியம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. அதிகாரிகள் மாறுதலோடு நில்லுங்கள். இந்தமாதிரி எல்லை மீறி போவதால்தான் பிரச்சினையே வருகிறது. திரு. ஞானசேகரன். (குறுக்கீடு) புகழேந்தி சொன்ன கடைசி வாக்கியம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) பன்னீர்செல்வம், உட்கார்ந்து கொண்டு பேசுவது விபரீதத்திலே கொண்டுபோய் விடும். பேசாமல் இருங்கள். திரு. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாணியம்பாடி, சென்னை சைதை, அச்சரப்பாக்கம் ஆகிய 3 தொகுதிகளிலும் இடைத் தேர்தல் அறிவிக்கப்பட்ட நிலையில் வாணியம்பாடி தொகுதிக்கு உட்பட்ட ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியத்தினுடைய இரண்டு B.D.O.-க்கள் அதேபோல மாதனூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த இரண்டு B.D.O.-க்கள் இப்போது மாற்றப்பட்டிருக்கிறார்கள். அதேபோல சென்னையிலே 11 பொறியாளர்கள் மாற்றப்பட்டிருக்கிறார்கள். தேர்தல் என்று அறிவிக்கப்பட்ட பின்னர் அலுவலர்களை மாற்றுவது என்பது ஜனநாயகத்திற்கு நாம் விடக்கூடிய ஓர் எச்சரிக்கையாக மாறிவிடும்.

எப்போதுமே தேர்தல் என்று வந்தபிறகு தேர்தல் விதிமுறைகளை அரசு முழுமையாகக் கடைபிடிக்க வேண்டும் என்றுதான் நாம் எதிர்பார்க்கிறோம். முன்தேதியிட்ட சில உத்தரவுகளைப் போட்டு இப்படி தேர்தல் விதிமுறைகளை மீறக்கூடிய ஒரு சூழல் வரும் என்று சொன்னால், அது ஜனநாயகப் படுகொலைக்கு நிச்சயமாக வழிவகுத்து விடும் என்ற காரணத்தாலே, நான் மாண்புமிகு பேரவைத் தலைவருடைய கவனத்திற்கு கொண்டு வருவது எல்லாம், இப்போது போடப்பட்டிருக்கக்கூடிய அந்த மாறுதல் உத்தரவுகளை எல்லாம் இரத்து செய்ய வேண்டும் என்கிற என்னுடைய கருத்தை வலியுறுத்தி, தேர்தல் என்று அறிவிக்கப்பட்ட பிறகு இப்படியெல்லாம் மாறுதல் வரக்கூடிய விஷயங்களையெல்லாம்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





முழுமையாக இந்த அவையிலே விவாதித்து பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண வேண்டும் என்பதற்காக நான் தங்களை முழுமையாக இந்த அவையினுடைய நிகழ்ச்சிகளை எல்லாம் ஒத்திவைத்துவிட்டு, இந்தப் பிரச்சினையை முழுமையாக விவாதிப்பதற்கு நீங்கள் இடம் அளிக்க வேண்டும் என்று நான் கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது ஒத்திவைப்புத் தீர்மானம் அல்ல.

***திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நிகழ்ச்சிகளை ஒத்திவைத்து விவாதிப்பதுதான் ஒத்திவைப்புத் தீர்மானம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது ஒத்திவைப்புத் தீர்மானமே அல்ல. சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானம்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** ஒத்திவைப்புத் தீர்மானம் என்று சொன்னீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. ஒத்திவைப்புத் தீர்மானமாகக் கொடுத்திருக்கிறார்கள். இதைச் சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானமாக எடுத்துக்கொள்கிறேன். ஒத்திவைப்புத் தீர்மானம் கடந்த ஆட்சிக் காலத்திலேயே ஒத்திவைக்கப்பட்டு விட்டது. அடுத்து, திரு. அரசன். (குறுக்கீடு) இல்லை, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது சென்னை சைதாப்பேட்டை, வாணியம்பாடி, அச்சரப்பாக்கம் ஆகிய 3 தொகுதிகளிலும் இடைத் தேர்தல் நடத்துவதாக தேர்தல் ஆணையம் தேதியினை அறிவித்து, தேர்தலுக்கான ஆயத்தப் பணிகளை எல்லாம் தேர்தல் ஆணையம் செய்து கொண்டிருக்கிறது. இப்படி தேர்தல் ஆணையத்தினுடைய பணி தொடங்கிய நிலையிலே, இந்தத் தொகுதிகளுக்குட்பட்ட அதிகாரிகளை மாறுதல் செய்வது என்பது தேர்தல் ஆணைய விதிமுறைகளுக்கு முரணான, ஜனநாயகத்திற்கு முரண்பாடான செய்தி என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதிலே குறிப்பாக சைதாப்பேட்டை தொகுதியிலே உதவிப் பொறியாளர், இளநிலைப் பொறியாளர், உதவி நிர்வாகப் பொறியாளர் என்று 11 பேரும், வாணியம்பாடி தொகுதியிலே அந்தத் தொகுதியைச் சார்ந்த ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட திட்ட ஆணையாளர், அங்கே நிர்வாகப் பொறுப்பிலே இருக்கக்கூடிய ஆணையாளர் இருவரும் அதைப்போலவே

மாதனூர் ஊராட்சி ஒன்றியத்தினுடைய இரண்டு ஆணையாளர்களும் மாறுதல் செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, இப்படி இந்தத் திட்டமிட்ட மாறுதல் என்பது தேர்தலை மனதிலே வைத்து ஏதோ உள்நோக்கம் கொண்டு இந்த மாறுதல் செய்யப்பட்டதாகவே கருதப்படுகிறது. ஆகவே, எது எப்படியிருந்தாலும்கூட, தேர்தல் முறையாக, ஜனநாயக ரீதியிலே நடைபெற வேண்டும் என்ற அந்த நோக்கத்தின் அடிப்படையிலே, இப்படி மாறுதல் செய்யப்பட்ட அந்த அதிகாரிகளின் உத்தரவை இரத்து செய்து, மீண்டும் அவர்கள் பழைய இடங்களிலே பணியாற்றுவதற்குண்டான வழிவகைகளை, அந்த உத்தரவுகளை அரசு பிறப்பிக்க வேண்டும் என்ற அந்த வேண்டுகோளை இந்தநேரத்திலே வைக்க விரும்புகிறேன். அதுமாத்திரமல்லாமல் இப்படி அதிகாரிகள் மாறுதல் என்ற செய்தி பத்திரிகை முழுவதும் வந்தவுடனே பொது மக்களுக்கும், எல்லோருக்கும் ஓர் அச்சத்தை உண்டாக்குகிறது. ஆகவே தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட பிறகு, ஜனநாயகத்திற்குப் புறம்பாக ஒரு செய்தி நடந்து விடுமோ என்ற அச்சம் எல்லோருக்கும் வந்து இருப்பதன் காரணமாக (குறுக்கீடுகள்) இல்லை, சொல்கிறேன்.

முற்பகல் 11-15

பேரவைத் தலைவர் அவர்களே, யாருடைய மனதையும் நோகிற மாதிரி பேசவில்லை. என்னுடைய கருத்தைத் தெளிவாகச் சொல்கிறேன். ரொம்ப அடக்கமாகச் சொல்கிறேன். அதிலேயும்கூட இப்படிப் பேசுவது என்பது சரியாக இருக்காது. இந்த மாமன்றத்திலே பேரறிஞர் அண்ணா அவர்கள், பெரும் தலைவர் காமராஜர் அவர்கள், புரட்சித் தலைவர் அவர்கள் எல்லாம் பணியாற்றியவர்கள். சொல்லக்கூடிய கருத்தை ஜனநாயக ரீதியிலே, அடக்கமாகச் சொல்லுகின்ற நேரத்திலேகூட இப்படி அமர்ந்து கொண்டு வார்த்தைகளுக்கு முரண்பாடாகப் பேசுவது என்பது எந்த வகையிலேயும் சரியாக இருக்காது. அவை மரபை மீறுவது ஆகும்.

எங்களைப் பொறுத்தவரையில், அதுவும் குறிப்பாக பாட்டாளி மக்கள் கட்சி, சட்டமன்றத்திலே, அடக்கமாக எல்லோரையும் மதித்து நடக்கக் கூடிய ஓர் இயக்கமாக நடந்துகொள்ள வேண்டுமென்ற சூழ்நிலையில் பணியாற்றினாலும்கூட, சொல்லக்கூடிய கருத்துக்கு, இப்படி மறுப்பு தெரிவிப்பது என்பது சரியாக இருக்காது. உங்களுடைய கருத்தைச் சொல்லுங்கள், நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். ஆகவே, அந்த வகையிலே இந்தத் தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட பிறகு மாறுதல் என்பது ஜனநாயகத்துக்கு விரோதமானது. இந்த மாறுதல் உத்தரவை திரும்பப்



பெறவேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் கருத்துகளைச் சொல்லி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அரசன்.

***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, சைதாப்பேட்டை, வாணியம்பாடி தொகுதிகள் ஒரு சரித்திரப் புகழ் வாய்ந்த தொகுதிகளாக இருக்கின்றன. ஏற்கெனவே தேர்தல் அறிவிக்கப்பட்டு அந்தத் தொகுதிகளிலே வாக்காளர்கள் சரியாகச் சேர்க்கப்படவில்லை, கள்ள வாக்காளர்கள் நிறைய இருக்கிறார்கள் என்று சொல்லி, அது தேர்தல் கமிஷன் வரை விசாரணைக்குச் சென்று தேர்தல் ஒத்தி வைக்கப்பட்ட தொகுதிகளாகும், வாணியம்பாடியும், சைதாப்பேட்டையும். அப்படி ஒத்திவைக்கப்பட்ட அந்தத் தொகுதிகளிலே ஒரு காரியம் நடைபெறுகிறது என்று சொன்னால், அது சந்தேகத்திற்கு அப்பாற்பட்டதாக இருக்க வேண்டும். அதிகாரிகளை மாற்றுவது என்பது அரசுக்கு இருக்கிற உரிமை. அதிலே எந்தவிதமான மாற்றுக் கருத்தும் இல்லை. ஆனால், பொதுவாக அதிகாரிகளை கோடை விடுமுறைக் காலத்திலேதான் மாற்றுவார்கள். இல்லை, தவறு செய்கிறார்கள் என்று சொன்னால் இடையிலேயே மாற்றுவதிலும் தவறு இல்லை. (குறுக்கீடுகள்) கோடை விடுமுறைக்கு இன்னும் நாள் இருக்கிறது. ஆகவே, இப்படி மாற்றப்பட்டு இருக்கிற இந்தச் சூழ்நிலை ஒரு தவறான எண்ணத்தை மக்கள் மத்தியிலே ஏற்படுத்தி இருக்கிறது.

நேற்றைக்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்திய மின் துறை அமைச்சரிடம் உரையாடியதை எடுத்துச் சொல்லி, ஒப்பந்தம் போட்டுக்கொள்ளலாம் என்று மத்திய மின் துறை அமைச்சர் சொன்னார். நான் அவர்களிடத்திலே சொன்னேன். இடைத் தேர்தல் அறிவிக்கப்பட்டு இருக்கிறது. அதற்குப் பின்னாலே இந்த ஒப்பந்தத்தைப் போட்டுக் கொள்ளலாம் என்று நான் அவர்களிடத்திலே சொல்லி இருக்கிறேன் என்று அவர்கள் சொன்னார்கள். இப்படி முறையான அறிவிப்பை, நேற்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் செய்து இருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, சைதாப்பேட்டை தொகுதியில் 30,000 வாக்காளர்கள் நீக்கப்பட்டு இருக்கிறார்கள். ஏற்கெனவே இருந்த வாக்காளர்களுக்கு எல்லாம் உங்களுடைய குடும்ப அட்டைகளை எடுத்துக் கொண்டு வாருங்கள் என்று தபால் மூலம் அனுப்பி ... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதிகாரிகள் மாற்றத்தைப் பற்றிப் பேசுங்கள். (குறுக்கீடு) அதிகாரிகள் மாறுதல் சம்பந்தமாகத்தான்.

**திரு. ப. அரசன்:** அந்தக் குடும்ப அட்டைதாரர்கள் வராத காரணத்தினாலும், வாக்காளர்கள் நீக்கப்பட்டு இருக்கிறார்கள். இப்படி சந்தேகத்திற்குரிய இரண்டு தொகுதிகளில், அதிகாரிகள் மாற்றப்பட்டது என்பது ஒரு நல்ல செயல் அல்ல. இது ஜனநாயகத்திற்கு உகந்தது அல்ல என்கிற என்னுடைய கருத்தைச் சொல்லி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் 3 சட்டமன்றத் தொகுதிகளுக்கு இடைத் தேர்தல் அறிவிக்கப்பட்ட நிலையில், வேலூர் மாவட்டத்தில் சில வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மாற்றம் செய்யப்பட்டது குறித்தும், சென்னை மாநகராட்சியில் உதவிப் பொறியாளர்கள் உள்பட சில பொறியாளர்கள் மாற்றம் செய்யப்பட்டது குறித்தும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் சிலர் குறை கூறி, பிரச்சினை எழுப்பி இருக்கிறார்கள். இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரை தமிழக அரசு மிகத் தெளிவாக இருக்கிறது. இதில் தமிழக அரசு எந்தத் தகவலையும் மறைக்க வேண்டிய அவசியம் கிடையாது. ஆண்டுதோறும், வழக்கமாக நடைபெறுகின்ற மாற்றங்களின்போது 3 தொகுதிகளுக்கான இடைத் தேர்தல்கள் அறிவிப்பு வந்து விட்டது. ஆகவே, ஏதோ, இடைத் தேர்தலை முன்னிட்டு இந்த மாறுதல்கள் செய்யப்பட்டதாகச் சிலர் குறை கூறியிருப்பது தவறாகும். முதலில் இந்த மாறுதலுக்கும், தமிழக அரசுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. இதில் ஒளிவு மறைவு எதுவும் கிடையாது. இந்த மாறுதல்களினால் ஏற்படும் விமர்சனங்களிலிருந்து தமிழக அரசு தப்பித்துக்கொள்ள விரும்பவில்லை.

*முற்பகல் 11-20*

இந்த நிமிடம்வரை இதைப்பற்றி தமிழக அரசு நடுநிலையாகத்தான் இருந்து வருகிறது. இந்தப் பிரச்சினை குறித்து எதிர்க்கட்சியினர் சிலர் செய்த புகாரின் அடிப்படையில் தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியபடி தமிழ்நாட்டில் உள்ள தலைமைத் தேர்தல் அதிகாரி இதுபற்றி விசாரணை ஒன்றை நடத்திக் கொண்டிருக்கிறார். ஆகவே, இந்தப் பிரச்சினையைப்பற்றி நான் விளக்கம் ஏதும் அளித்தால் தலைமைத் தேர்தல் அதிகாரியின் விசாரணையில் தலையிடுவதுபோல் அமையும் என்ற காரணத்தினால், இந்த பதில் போதும் என்று நினைக்கின்றேன். ஆனால், ஒன்றை மட்டும் நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். இந்த மாறுதல்களில் தமிழக அரசுக்கு



எந்த உள்நோக்கமும் இல்லை. தமிழக அரசின் தலையீடும் இல்லவே இல்லை என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். *(குறுக்கீடு)*

**திரு. இ. புகழேந்தி:** ஒரு சிறிய clarification

*(திரு. பரிதி இளம்வழுதி, திரு. சி. ஞானசேகரன் ஆகியோர் எழுந்து நின்றனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Clarification எல்லாம் கிடையாது. சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் அமைச்சர் பதில் சொன்னதற்குப் பிறகு clarification எல்லாம் கிடையாது. உட்காருங்கள். திரு. ஞானசேகரன், உட்காருங்கள்.

## 4. கவன ஈர்ப்பு

### ஓச்சேரி முதல் நாட்றாம்பள்ளி வரை தேசிய நெடுஞ்சாலை விஸ்தரிக்கப்பட்டு வருவதால் ஏற்பட்டுள்ள நிலை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 55-ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. கே. பாண்டுரங்கன், திரு. சி. ஞானசேகரன் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். திரு. கே. பாண்டுரங்கன்.

**திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தர்மத்தின் சங்கொலி 'முழங்கிடுவோம், தமிழ்த் தாயின் மலரடி வணங்கிடுவோம்' என்ற கவிதையின் வைர வரிகளுக்கு ஏற்ப, தர்மத்தின் நாதமாக இன்று வாழ்ந்து வருகின்ற தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களது புனித நாமத்தை முழங்கி, தமிழ் வடிவாக விளங்கி வருகின்ற அவர்தம் திருவடி மலரடிகளை வணங்கி, "வேலூர் மாவட்டம், ஓச்சேரி முதல் நாட்றாம்பள்ளி வரையுள்ள தேசிய நெடுஞ்சாலை தற்போது விஸ்தரிக்கப்பட்டு வருவதால் ஏற்பட்டுள்ள நிலை" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களுடைய கனிவான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

[2002 ஏப்ரல் 24

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

**அறிக்கை**

தேசிய நெடுஞ்சாலை 4-ல் கி.மீ. 93/2-ல் ஓச்சேரி அமைந்துள்ளது. தேசிய நெடுஞ்சாலை 46-ல் கி.மீ. 36/2-ல் நாட்றாம்பள்ளி அமைந்துள்ளது.

தேசிய நெடுஞ்சாலை 4-ல் (காஞ்சிபுரம்-வாலாஜா பிரிவு) கி.மீ. 70/2-106/4-ல் நான்கு வழிப்பாதையாக மாற்றும் திட்ட வேலை ரூ.121.57 கோடி மதிப்பில் திருவாளர்கள் லார்சன் அன்ட் டியூப்ரோ லிமிடெட், சென்னை நிறுவனத்திடம் தேசிய நெடுஞ்சாலை ஆணைக் குழுமத்தினால் (NHAI) ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவ்வேலை, 10/2001-ல் தொடங்கப்பட்டு, 31-12-2003-ல் முடிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மேலும், தேசிய நெடுஞ்சாலை 46-ல் (கிருஷ்ணகிரி-வாணியம்பாடி பிரிவு) கி.மீ.0/0-49/5-ல் நான்கு வழிப்பாதை அமைக்கும் திட்டம் ரூ.163.50 கோடி மதிப்பில், திருவாளர்கள் கே.என்.ஆர். படேல் லிமிடெட், புனே நிறுவனத்திடம் தேசிய நெடுஞ்சாலை ஆணை குழுமத்தினால் ஒப்படைக்கப்பட்டு, இவ்வேலை 11/2001-ல் தொடங்கப்பட்டு, 31-2-2002-ல் முடிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டப் பணிகள் மைய அரசின் தங்க நாற்கர (Golden Quadrilateral Project of Government of India) திட்டத்தின் ஒரு பகுதியாக நிறைவேற்றப் படுவதாகவும் தேசிய நெடுஞ்சாலை-4 மற்றும் 46-ல் நான்கு வழிச்சாலை அமைக்கும் பணிகள் எவ்வித பிரச்சினையும் இன்றி நடைபெறுவதாக தேசிய நெடுஞ்சாலை ஆணைக் குழுமம் தெரிவித்துள்ளது.

தற்போது இருவழிப் பாதையாக இருக்கும் தேசிய நெடுஞ்சாலை 4 மற்றும் 46-ஐ போக்குவரத்து வசதிக்காக, நான்கு வழிப்பாதையாக மாற்றி சாலைகளை மேம்பாடு செய்யும் திட்டம் தேசிய நெடுஞ்சாலை ஆணைக் குழுமத்தினால் நிறைவேற்றப்படுகிறது. இதற்காக தற்போதுள்ள 35 மீட்டர் அகலமான நிலம் போதாது. எனவே 50 மீட்டர் வரை சாலையை அகலப்படுத்தும் பணிக்காக நிலம் கையகப்படுத்தப்படுகிறது.





இதில் சாலையின் உள்கட்டமைப்புப் பகுதிக்குள் வரும் கட்டடங்கள் மட்டுமே தள அதிகாரிகளால் மதிப்பீடு செய்யப்பட்டு கையகப்படுத்தப்படும். இவற்றிற்கு 1988 ஆம் ஆண்டு தேசிய நெடுஞ்சாலை சட்டத்தின்படி உரிய இழப்பீட்டுத் தொகை வழங்கப்படும். இத்திட்டங்களினால் சாலை விபத்துகள் பெருமளவில் தடுக்கப்படும். மக்களுக்கு இத்திட்டங்களினால் ஏற்படும் மொத்த நன்மையைக் கருத்தில் கொண்டு பார்க்கும்போது இந்தக் கையகப்படுத்துதல் தவிர்க்க இயலாததாகும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. பாண்டுரங்கன்.

**திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களாலே அளிக்கப்பட்ட விவர அறிக்கையை ஆழ்ந்து படித்துப் பார்த்தேன். அந்த அடிப்படையிலே ஒன்றை மட்டும் நான் தெளிவாக, உறுதியாக இந்த மாமன்றத்தினுடைய மேலான கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தியத் துணைக் கண்டத்திலேயே தமிழகத்தை முதன்மையான மாநிலமாக ஆக்குவோம் என்று சூளுரை ஏற்று அமர்ந்திருக்கின்ற மாண்புமிகு அம்மா அவர்களுடைய பெரு முயற்சிக்கு நான்கு வழிப்பாதை ஓர் இன்றியமையாத பாதை என்பதை நாம் உணர்ந்திருக்கின்றோம். இருவழிப் பாதையாக இருக்கின்ற ஓச்சேரி முதல் நாட்றாம்பள்ளி வரை இருக்கின்ற சுமார் 130 கிலோ மீட்டர் தூரமுள்ள அந்தப் பாதையை, அந்தச் சாலையை மேம்பாடு செய்கின்றபோது, நான்கு வழிப் பாதையாக மாற்றுகின்றபோது, தொழில் வளர்ச்சியும், வேளாண் வளர்ச்சியும், அத்துணைக்கும் மேலாக அந்தப் பகுதியும் மேம்பாடு அடையும் என்பதில் எள்ளளவும் கருத்து வேறுபாடு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பாண்டுரங்கன், ஒரு கேள்வியாகக் கேளுங்கள்.

**திரு. கே. பாண்டுரங்கன்:** விளக்கமாகச் சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விளக்கமாகச் சொல்ல முடியாது.

[2002 ஏப்ரல் 24

**திரு. கே. பாண்டுரங்கன்:** விளக்கமாகச் சொல்ல வேண்டும். எந்த அளவுக்கு அதிலே ஆழ்ந்த உண்மை இருக்கிறது என்பதை விளக்குவது என்னுடைய கடமை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு கேள்வி கேளுங்கள். அமைச்சரிடம் ஒரு கேள்வியைத்தான் கேட்கலாம்.

**திரு. கே. பாண்டுரங்கன்:** ஆக, அந்த அடிப்படையிலே சாலை மேம்பாடு அடைகின்றபோது, இங்கே அளிக்கப்பட்டிருக்கின்ற அந்த விவர அறிக்கையிலே என்ன நோக்கத்திற்காக இதை மாமன்றத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கின்றோமோ அந்த நோக்கம், அந்த விவர அறிக்கையில் தெரிவிக்கப்படவில்லை என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தச் சாலை நான்கு வழிப்பாதையாக மேம்படுத்தப்படுகின்றபோது, அந்த நான்கு வழிப் பாதையிலே இருக்கின்ற ஆழ்துளைக் கிணறுகள் மட்டுமல்லாமல், ஒரு கிராமத்திற்கும் இன்னொரு கிராமத்திற்கும் தண்ணீர் கொண்டு செல்லப்படுகின்ற குடிநீர்க் குழாய்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. பெருமளவுக்கு ஆழ்துளைக் கிணறுகள், குடிநீர்க் குழாய் இணைப்புகள் பாதிக்கப்பட்டுள்ள காரணத்தாலே, கோடைக்காலமாக இருக்கிற காரணத்தாலே பெருமளவு குடிநீர்த் தட்டுப்பாடு அங்கே நிலவி வருகிறது என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தியத் திருநாடு சுதந்திரம் அடைந்ததற்குப் பிறகும்கூட......

*முற்பகல் 11-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பாண்டுரங்கன், அமைச்சரிடம் கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. கே. பாண்டுரங்கன்:** சுருக்கமாகச் சொல்லி விடுகிறேன். சாலையோரங்களில் இருக்கிற பல நூற்றுக்கணக்கான குடிசைவாழ் மக்கள் தற்போது வீடுகளின்றி தவிக்கின்றார்கள். அதேபோன்று சாலையோரங்களில் இருக்கிற பள்ளிவாசல், கோயில்கள், தேவாலயங்கள் எல்லாம் பெருமளவு பாதிக்கப்பட்டிருக்கிற காரணத்தாலே, சம்பந்தப்பட்டவர்களை அழைத்து நட்ட ஈடு வழங்கி, மாற்று இடத்தைத் தருவதற்கு அரசு முயற்சிகளை மேற்கொள்ளுமா? டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு இதைச் செய்யும் என்ற அடிப்படையிலே மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு அமைச்சருடைய கனிவான கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.



2002 ஏப்ரல் 24]

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்க நாற்கரம் Golden Quadrilateral Project மற்றும் வடக்கு தெற்குப் பகுதிகளை இணைக்கும் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டிலுள்ள கீழ்க்காணும் தேசிய நெடுஞ்சாலைகளை 4 மற்றும் 6 வழிப்பாதைகளாக அகலப்படுத்தும் பணி இந்திய தேசிய நெடுஞ்சாலைக் குழுமத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் வினா மட்டும்தான் கேட்டிருந்தார். நோக்கம் என்னவென்று அதில் அவர் குறிப்பிடவில்லை. இருந்தாலும், இந்த மாதிரி பணிகளை எடுக்கின்றபோது அங்கே சாலைகள் அகலப்படுத்துகின்றபோது, அதிலே பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கப்படுகிறதா என்பதனை ஆய்வுசெய்து முடித்தவுடன் இழப்பீட்டுத் தொகை வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்தேன். இதிலே இழப்பீட்டுத் தொகை நிச்சயமாக கிடைக்கும் என்பது சட்டம்- நிச்சயமாகக் கிடைக்கப் போகிறது. அது வேறு. ஆனால் அங்கு இருக்கக்கூடிய பிரச்சினையே, ஓச்சேரி, சத்துவாச்சாரி, வேலூர், மாதனூர், ஆம்பூர் போன்ற பகுதிகளில் நிறைய கட்டடங்கள் இருக்கின்றன. இப்பொழுது மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகமே அதிலே கொஞ்சம் ஓரளவுக்குப் போகிறது. அதேபோல பெரிய பெரிய கட்டடங்கள் போகின்றன. அதுபோன்று சர்ச்சும் போகிறது, மாஸ்க்கும் போகிறது, கோயிலும் போகிறது, பள்ளியும் போகிறது, பெரிய பெரிய கட்டடங்கள், கல்யாண மண்டபங்கள் எல்லாம் போகின்றன. நான் ஏற்கெனவே சொன்னேன். வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்குப் பின்னாலே Master-plan-லே ஒரு Bye pass road-க்கு ஏற்கெனவே இடம் தேர்வு செய்யப்பட்டு, அந்த ரோடு இன்னும் form செய்யாமல் இருக்கிறது. அங்கே Bye-pass road வரவேண்டுமென்பதுதான் எங்களுடைய கோரிக்கை. அதேபோல ஆம்பூர் நகரத்திலேகூட பல கோடி ரூபாய் சொத்துக்கள் அங்கே இழப்பு ஏற்படப்போகிறது. Bye-pass road இந்த அரசு போடலாம். ஏற்கெனவே இந்த Golden Quadrilateral-ஐ Project-ஐ எடுத்திருக்கக்கூடிய N.H. Authority- அங்கிருக்கக்கூடிய Project Officer போனால், அவர்களுக்கும் நம்முடைய தமிழக அரசுக்கும் சம்பந்தம் இருப்பதாகவே தெரியவில்லை. அவர்கள்பாட்டுக்கு வருகிறார்கள். ஒரு இடத்தை மார்க் செய்கிறார்கள், இது இடிக்கப்படும் என்று ஒரு பெரிய

[திரு. சி. ஞானசேகரன்] [2002 ஏப்ரல் 24

பள்ளியைப் போய் இடிக்கப்படும் என்கிறார்கள். இதற்கு bye-pass road-ஐப் போடவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இல்லையென்று சொன்னால், ஏற்கெனவே 130 அடி அகலத்திற்கு ரோடு இருக்கிறது. அந்த ரோட்டிலேயே நிச்சயமாக அந்த 4 வழிப்பாதை, முடிந்த அளவுக்கு நகரப் பகுதிகளில் மட்டும் நீங்கள் இருக்கக்கூடிய பகுதிகளை மட்டும் அப்படியே வைத்துக்கொண்டுகூட ரோட்டை அமைத்துக்கொள்ளலாம் என்பதுதான் எங்களுடைய வாதம். அதைப்போல ஆம்பூர், வேலூர் போன்ற இடங்களில் நிறைய போராட்டங்களெல்லாம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதற்காக மாவட்ட ஆட்சித் தலைவரின் அலுவலகத்திற்கு முன்பு National Highways இடமே இருக்கிறது. கொஞ்சம் alignment-ஐ மாற்றினால் போதும். நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாகக் கொண்டு வருவதெல்லாம், அந்த alignment-ஐக்கூட மாற்றமாட்டேன் என்கிறார்கள். அங்கிருக்கக்கூடிய Project officer, project manager, இதைக் கண்மூடித்தனமாக இதைக் கொஞ்சம்கூட, சொல்வதைக் காதில் கேளாது அவர்கள் இருக்கிற காரணத்தாலே அங்கிருக்கக்கூடிய மக்கள் மத்தியிலே இப்போது பெரிய கொந்தளிப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களும், அதைப்போல—Highways Secretary அவர்களும் போய் நேரடியாகச் சென்று, அங்கே Project officer-ஆக இருக்கக்கூடிய ** ஒருவர் இருக்கிறார். இவர்கள் நம்முடைய தமிழக அரசை கொஞ்சம்கூட கேட்காமல், அவர்களாகவே ஒரு alignment, ஏற்கெனவே ஒரு கம்பெனி செய்துவிட்டது. அதைத்தான் நாங்கள் செய்வோம் என்று சொல்லியிருக்கிற காரணத்தாலே, மக்களுடைய உணர்வு அங்கே முழுக்க முழுக்கப் புறக்கணிக்கப்படுகிறது. ஆகவே, நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புவதெல்லாம், கொஞ்சம் alignment-ஐ மாற்றி, இருக்கக்கூடிய இடத்தை வைத்துக்கொண்டே நீங்கள் 130 அடி ரோட்டிலேயே ரோடை அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன் குறிப்பிட்ட அதிகாரிகள் பெயர் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சாலை தேசிய நெடுஞ்சாலை விதிகளின்கீழ் வருகிற ஒரு சாலையாகும். இந்த விதியினை மத்திய அரசுதான் தன்னுடைய

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2002 ஏப்ரல் 24] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டிருக்கின்றது. தமிழ்நாடு அரசிற்கு இதில் எந்தவிதமான தொடர்பும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். மேலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வெகுவாக அந்தப் பகுதியில் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அவருடைய கருத்தை மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூலம் தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையத்திற்கும், மத்திய அரசிற்கும் இதில் இருக்கின்ற இடர்ப்பாடுகளைக் களைய வேண்டுமென்று நாம் சொல்லி, நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*முற்பகல் 11-30*

## 5. அறிக்கைகள் அளித்தல்

### பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள்.

***திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 2001-2002 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் ஐம்பத்து ஆறு முதல் அறுபத்து இரண்டாவது வரையிலான ஏழு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 6. மானியக் கோரிக்கைகள், 2002-2003, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 21 - உள் துறை - காவல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002-2003 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும் மானியக் கோரிக்கை எண் 21 உள் துறை - காவல், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"உள் துறை - காவல் மானியக் கோரிக்கை எண் 21-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.11,70,32,19,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.1,67,69,15,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் மொழிதல், வெட்டுத் தீர்மானம் எண் 5272, திரு. ஆர். சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஒட்டன்சத்திரத்தில் போக்குவரத்துக் காவல் நிலையம் ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை - காவல் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,70,32,19,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,67,69,15,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்"

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 789, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வேலூர் சத்துவாச்சாரி பகுதியில் மாவட்ட ஆட்சியர், மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் அலுவலகங்கள், நீதிமன்றங்கள் என்று பல அரசு அலுவலகங்கள் வந்துவிட்ட நிலையில், போக்குவரத்து நெருக்கடியைச் சமாளிக்க போக்குவரத்து காவல் நிலையம் (Traffic Police Station) அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை - காவல் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 11,70,32,19,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,67,69,15,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4919, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"உள் துறை - காவல் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,70,32,19,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,67,69,15,000/-ல் ரூ.100/- குறைக்கவேண்டும்"

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண். 6892, திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'குமரி மாவட்டம், சாமியார் மடத்தில் புறக்காவல் நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை - காவல் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,70,32,19,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,67,69,15,000/-ல் ரூ.100/- குறைக்கவேண்டும்"

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3817, திரு. என். நன்மாறன்.

***திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை - காவல் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,70,32,19,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,67,69,15,000/-ல் ரூ.100/- குறைக்கவேண்டும்"

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7903, திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருவள்ளூர் தொகுதி, வெள்ளியூரில் புறக்காவல் நிலையம் ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை - காவல் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,70,32,19,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,67,69,15,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4587, திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை - காவல் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,70,32,19,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,67,69,15,000/-ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3919, திரு. எச்.எம். ராஜு.

***திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை - காவல் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,70,32,19,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,67,69,15,000/-ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4123, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை - காவல் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,70,32,19,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,67,69,15,000/-ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1339, திரு. தி. வேல் முருகன்.



**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை - காவல் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,70,32,19,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,67,69,15,000/-ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8028, திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி தொகுதி, பேரம்பாக்கத்திலுள்ள புறக்காவல் நிலையத்தை முழுநேர காவல் நிலையமாக மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை - காவல் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,70,32,19,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,67,69,15,000/-ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4267, திரு. கே. ஆறுமுகம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1955, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை - காவல் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,70,32,19,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,67,69,15,000/-ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2147, திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5002, திரு. மே.ப. காமராஜ்.

[2002 ஏப்ரல் 24

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சேலம் மாவட்டம், மேச்சேரி காவல் நிலையத்திற்கு அதிக அளவு காவலர்களை நியமிக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை - காவல் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,70,32,19,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,67,69,15,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7255, திரு. க. முருகவேல் ராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6842, திரு. கி. பாரிமோகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5446, திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை - காவல் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,70,32,19,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,67,69,15,000/-ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 832, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை - காவல் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,70,32,19,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,67,69,15,000/-ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."



2002 ஏப்ரல் 24]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7185; திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி.

***திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொலை கொள்ளை, கற்பழிப்பு, கள்ளச்சாராய விற்பனை போன்ற சட்ட விரோத நிகழ்வுகளைத் தடுக்க கடுமையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை - காவல் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,70,32,19,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,67,69,15,000/-ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1882, திரு. ரா. ஈஸ்வரன்

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை - காவல் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,70,32,19,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,67,69,15,000/-ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7000, திரு. க. பாரமலை.

***திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம், வேம்பத்தூரில் புதிய காவல் நிலையம் ஆரம்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறே:

"உள் துறை - காவல் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,70,32,19,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,67,69,15,000/-ல் ரூ. 100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1015, திரு. ப. ரங்கநாதன்.

***திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை - காவல் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,70,32,19,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,67,69,15,000/-ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6981, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை - காவல் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,70,32,19,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,67,69,15,000/-ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7019, டாக்டர் தே. குமாரதாஸ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5926, திரு. வி.கே. லட்சுமணன்.

***திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'காவல் துறையில் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள அலுவலர்கட்கும், "Protocol and warrant of precedence" அரசு ஆணையின் நகலை அனுப்பி வைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை - காவல் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,70,32,19,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ1,67,69,15,000/-ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1425, திரு. மு. அப்பாவு.



**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் இருந்து வழக்குகள் காரணமாக சென்னைக்கு வரும் காவலர்களுக்கு தங்குவதற்கு இடவசதி செய்து கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை - காவல் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,70,32,19,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,67,69,15,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண். 7789, திரு. ஜெக. வீரபாண்டியன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6057, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை - காவல் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,70,32,19,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,67,69,15,000/-ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத்தீர்மானம் எண் 2696, திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருவண்ணாமலை நகர காவல் நிலையத்தை வடக்கு, தெற்கு என்று இரு காவல் நிலையங்களாக இயங்கச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை - காவல் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,70,32,19,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,67,69,15,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்.

முற்பகல் 11-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5146, திரு. டி.பி.எம். மைதீன்கான்.

**திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பாளையங்கோட்டை தொகுதி, குன்னத்தூரில் புறக்காவல் நிலையம் ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை - காவல் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,70,32,19,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,67,69,15,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5538, திரு. கே.என். சேகரன்.

**திரு. கே.என். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருவெறும்பூரில் உள்ள காவல் நிலையத்திற்குப் போதிய காவலர்களைப் பணியமர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை - காவல் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,70,32,19,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,67,69,15,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2359, திரு. எம். ராம்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4652, திருமதி காசாம்பு பூமாலை, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5693, திரு. எஸ். நடராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6009, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கன்னியாகுமரி, களியக்காவிளை காவல் நிலையத்திற்குப் புதிய காவல் நிலையக் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை - காவல் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,70,32,19,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,67,69,15,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8189, திரு. ஏ.எஸ். கண்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3854, திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'உசிலம்பட்டி தொகுதி, விக்கிரமங்கலத்தில், வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் காவல் நிலையத்திற்குப் போதிய இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளதால் புதிதாகக் காவல் நிலையம் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை - காவல் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,70,32,19,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,67,69,15,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5239, திரு. ப. அரசன்.

***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை - காவல் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,70,32,19,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,67,69,15,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 373, திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நீலகிரி மாவட்டம், கோத்தகிரி தாலுகா, கட்டபெட்டு கிராமத்தில் புதிய காவல் நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை - காவல் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,70,32,19,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,67,69,15,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6140, திரு. டி.கே. இராஜா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7110, திரு. எச். ராஜா.

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை - காவல் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,70,32,19,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,67,69,15,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2424, திரு. பி.எஸ். உலகரட்சகன்.

**திரு. பி.எஸ். உலகரட்சகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு தொகுதியில் பாஸ்போர்ட் வழங்குவதற்குப் போதுமான வசதிகள் செய்து தர வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை - காவல் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,70,32,19,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,67,69,15,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7137, திரு. மு.பெ. சாமிநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6694, திரு. சோ. இராசேந்திரன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கோவில்பட்டி, புதுக்கிராமம் பகுதியில் புறக்காவல் நிலையம் ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"உள் துறை - காவல் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,70,32,19,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,67,69,15,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5252, டாக்டர் பி. வள்ளல் பெருமான்.

**டாக்டர் பி. வள்ளல் பெருமான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் சட்டமன்றத் தொகுதியில் புதிதாக துணைக் கண்காணிப்பாளர் பதவி ஏற்படுத்தி அலுவலகம் திறக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை - காவல் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,70,32,19,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,67,69,15,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5257, திரு. துரை. கி. சரவணன்.

**திரு. துரை. கி. சரவணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சிதம்பரம் நகர காவல் நிலையத்தில் காவலர்கள் எண்ணிக்கையை உயர்த்திட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை - காவல் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,70,32,19,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,67,69,15,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7195, திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சென்னை காவல் நிலையங்களில் உள்ளது போல் புறநகர்ப் பகுதி காவல் நிலையங்களிலும் காவலர்களின் எண்ணிக்கையை உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை - காவல் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,70,32,19,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,67,69,15,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3776, திரு. அ. அசோகன்.

**திரு. அ. அசோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருவாரூர் மாவட்டத்தில் காவல் துறை கண்காணிப்பாளர் அலுவலகம் கட்ட இடம் ஒதுக்கீடு செய்தும் கட்டடம் கட்டப்படாமல் இருப்பது குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை - காவல் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,70,32,19,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,67,69,15,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4134, திரு. இ. புகழேந்தி.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கடலூர் மாவட்டக் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவது குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை - காவல் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,70,32,19,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,67,69,15,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

### (ஆ) கோரிக்கை எண் 22—உள் துறை தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 22, உள் துறை - தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.



***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"உள் துறை - தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் மானியக் கோரிக்கை எண் 22-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.58,88,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.5,29,27,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5266, திரு. ஆர். சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை - தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,88,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,29,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 665, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வேலூர் மாவட்டத்தில், தீயணைக்கும் வண்டிகள் குறைவாக உள்ளதைச் சரிசெய்ய மேலும் 10 தீயணைக்கும் வண்டிகள் வேலூர் மாவட்டத்திற்கு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை - தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,88,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,29,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4929 திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை - தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,88,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,29,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3823, திரு. என். நன்மாறன்.

***திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை - தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,88,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,29,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7900, திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை - தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,88,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,29,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4583, திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை - தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,88,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,29,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3920 திரு. எச்.எம். ராஜு.



***திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை - தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,88,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,29,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4525, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை - தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,88,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,29,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1353, திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை - தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,88,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,29,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8035, திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருவள்ளூர் மாவட்டம், திருத்தணியில் புதிய தீயணைப்பு நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை - தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,88,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,29,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4166, திரு. கே. ஆறுமுகம் இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1956, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை - தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,88,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,29,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 917, திரு. எ.வ. வேலு.

***திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தண்டராம்பட்டில் உள்ள தீயணைப்பு நிலையத்திற்குக் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை - தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,88,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,29,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5010, திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சேலம் மாவட்டம், மேச்சேரியில் ஒரு தீயணைப்பு நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை - தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,88,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,29,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7265, திரு. க. முருகவேல் ராஜன். இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6764, திரு. கி. பாரிமோகன், இருக்கையில் இல்லை.



வெட்டுத் தீர்மானம் எண் 6744, திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை - தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,88,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,29,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2841, திரு. ரா. ஈஸ்வரன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழகத்தில் அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலும் ஒரு தீயணைப்பு நிலையம் ஏற்படுத்துவதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை - தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,88,47,000/- மற்றும் மூலதனச் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,29,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1016, திரு. ப. ரங்கநாதன்.

***திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை - தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,88,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,29,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6980, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை - தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,88,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,29,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7016, டாக்டர் தே. குமாரதாஸ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1481, திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நெல்லை மாவட்டம், ராதாபுரத்தில் தீயணைப்பு நிலையம் ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை - தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,88,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,29,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7788, திரு. ஜெக. வீரபாண்டியன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6050, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை - தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,88,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,29,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2719, திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருவண்ணாமலை தொகுதி, கீழ்ப்பென்னாத்தூர் தீயணைப்பு நிலையத்திற்குக் கட்டட வசதி செய்துதர வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.



"உள் துறை - தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,88,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,29,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5539, திரு. கே.என். சேகரன்.

**திரு. கே.என். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருச்சி மாவட்டம், திருவெறும்பூர் ஒன்றியம் நாவல்பட்டு-அண்ணா நகரில் இயங்கிவரும் தீயணைப்பு நிலையத்தினை மையப் பகுதியான திருவெறும்பூருக்கு மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை - தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,88,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,29,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2378, திரு. எம். ராம்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4634, திருமதி காசாம்பு பூமாலை, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6198, திரு. எஸ். நடராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6008, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கன்னியாகுமரி மாவட்டம், களியல் வருவாய் கிராமம், களியலை மையமாகக்கொண்டு, தீயணைப்பு நிலையம் ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை - தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,88,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,29,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

[2002 ஏப்ரல் 24

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3852, திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'உசிலம்பட்டியில் புதிய தீயணைப்பு நிலையக் கட்டடம் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை - தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,88,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,29,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5236, திரு. ப. அரசன்.

***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை - தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,88,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,29,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 372, திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நீலகிரி மாவட்டம், குன்னூர் பஸ் நிலையத்தை மேலும் விரிவாக்கம் செய்ய பஸ் நிலையத்திற்குள் உள்ள தீயணைப்பு நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை - தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,88,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,29,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



2002 ஏப்ரல் 24]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6141, திரு. டி.கே. இராஜா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7132, திரு. மு.பெ. சாமிநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7196, திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சென்னை புறநகர்ப் பகுதியான தாம்பரம் தொகுதி, பள்ளிக்கரணையில் தீயணைப்பு நிலையம் ஆரம்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை - தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,88,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,29,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3775, திரு. அ. அசோகன்.

**திரு. அ. அசோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருவாரூர் தொகுதி, நாகை மாவட்டம், கீழ்வேளூரில் தீயணைப்பு நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை - தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,88,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,29,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 833, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை - தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,88,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,29,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2677, திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்.

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி தீயணைப்பு நிலையத்திற்கு கட்டட வசதி செய்துதர வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை - தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,88,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,29,27,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

*முற்பகல் 11-40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள் துறை - காவல் மற்றும் உள் துறை - தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் ஆகிய மானியக் கோரிக்கைகள் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்குப் பதில் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

@ 147 முதல் 269 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் I மற்றும் II ஆக அச்சிடப்பெற்றுள்ளன.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். நிறைய உறுப்பினர்கள் பேச வேண்டியதிருக்கிறது. ஆளுக்கு 10 மணித்துளிகள் எடுத்துக்கொள்ளுங்கள். முதலிலே, திரு. ஜெ. அன்பழகன்.

***திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னை இந்த அவைக்கு அனுப்பி வைத்த எங்களுடைய தானைத் தலைவர், தலைவர் கலைஞர் அவர்களுக்கும், பொதுச் செயலாளர், எதிர்க்கட்சித் தலைவர், இனமான பேராசிரியர் அவர்களுக்கும், எங்களையெல்லாம் உருவாக்கிக்கொண்டிருக்கிற வணக்கத்திற்குரிய மேயர் தளபதி அவர்களுக்கும் நான் நன்றியினைத் தெரிவித்துகொண்டு, என்னுடைய அப்பாவை வணங்கி, இந்த உரையை ஆரம்பிக்கிறேன். நான் காவல் துறை மானியத்திற்கு வருவதற்கு முன்பு....(குறுக்கீடுகள்)**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அன்பழகன் பேசியது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) ஜெ. அன்பழகன் பேசியது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. இதுபோல கண்ணியமற்ற, தரக்குறைவான, கீழ்த்தரமான வார்த்தைகளைப் பேசுகின்ற காரணத்தினால்தான் பிரச்சினையே வருகிறது. காவல் துறை மானியக் கோரிக்கையிலே பேச வேண்டியதைப் பேசுங்கள். தரக்குறைவான, கண்ணியக்குறைவான வார்த்தைகளை தயவுசெய்து பேசாதீர்கள். அவை அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். பேசியது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அன்பழகன், காவல் துறை, மானியக் கோரிக்கையின்மீது பேச வேண்டிய செய்திகளைப் பேசுவதாக இருந்தால் நீங்கள் பேசலாம். இதுபோன்ற கண்ணியக்குறைவான வார்த்தைகளைப் பேசுவதாக இருந்தால் நான் இப்போது முதல் முறையாக எச்சரிக்கிறேன். இதுபோல் பேசக்கூடாது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**திரு. ஜெ. அன்பழகன்:** கண்ணியக்குறைவாக அல்ல. நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) கொஞ்சம் அமைதியாக இருங்கள், நான் சொல்வதைக் கேளுங்கள். தவறாக இருந்தால் பேசுங்கள். (குறுக்கீடுகள்)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2002 ஏப்ரல் 24

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவர் பேசியது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்பட்டுவிட்டது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். ஆக, வேண்டுமென்றே விவகாரத்தை இழுப்பதற்கு நீங்கள் முயற்சி செய்கிறீர்கள் என்று தெரிகிறது. இது முறையல்ல. வேண்டுமென்றே அவையிலே குழப்பத்தை உண்டாக்குவது நல்ல முறையல்ல.

**திரு. ஜெ. அன்பழகன்:** தவறு, தவறு, நான் திரும்பச் சொல்கிறேன். புரிந்துகொள்ளுங்கள். என்னுடைய தந்தை, மறைந்த பழக்கடை ஜெயராமன இந்த இயக்கத்தில் 25 ஆண்டு காலத்திற்கு மேலாக உழைத்து இந்த இயக்கத்தை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அன்பழகன், உங்களுடைய தந்தையைப் பற்றி எனக்கும் தெரியும். உங்கள் தந்தையை வாழ்த்துவதைப்பற்றியோ, வணங்குவதைப்பற்றியோ எங்களுக்குக் கவலையில்லை. கண்ணியக்குறைவான, தரக்குறைவான வார்த்தைகளைப் பேசி வம்புக்கு இழுக்க முயற்சி செய்யாதீர்கள். குழப்பத்தை உண்டாக்காதீர்கள். இப்போது முதல் முறையாக உங்களை எச்சரிக்கிறேன்.

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் காவல் துறை மானியத்தில் பேசுவதற்கு முன்பாக என்னுடைய தொகுதியிலே இருக்கிற ஒரு சிலவற்றைக் கோடிட்டுக் காட்டிவிட்டு உரையை ஆரம்பிக்கிறேன். இங்கே பேசுகிற பலர் வறுமையான தொகுதி என்றெல்லாம் பல தொகுதிகளைப் பற்றிச் சொன்னார்கள். ஆனால், என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரை கொஞ்சம் வசதியான தொகுதிதான். வடபழனி ஆற்காடு சாலை 100 அடி நேரு சாலைச் சந்திப்பில் ஒரு மேம்பாலம் கட்டித் தரப்பட வேண்டும்.

*முற்பகல் 11-45*

இரங்கராஜபுரம் இரயில்வே கேட் மேம்பாலம் ஒன்றை அமைத்துத்தர வேண்டும். துரைசாமி சாலை - பனகல் பார்க் அருகில் சிறு மேம்பாலம் ஒன்றை அமைத்துத் தர வேண்டும். உஸ்மான் சாலை-கோடம்பாக்கம் சந்திப்பில் சிறு மேம்பாலம் அமைத்துத் தர வேண்டும். தியாகராய நகர் தொகுதியில் குடிநீர்த் தொட்டியை மேற்கு மாம்பலம் பகுதியில் அமைத்துத் தர வேண்டும். உஸ்மான் சாலையை ஒரு வழிச் சாலையாக மாற்றி வாகனங்கள் நிறுத்த இடம் ஒதுக்கித்தர வேண்டும் என்று நான் கோரிக்கைகளை விவரமாக, தனியாக மனுக்களிலே எழுதியிருக்கிறேன். நான் உரையாற்றி முடித்த பிறகு மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே அவற்றை அளிக்க இருக்கிறேன் என்பதையும் நான்



2002 ஏப்ரல் 24] [திரு. ஜெ. அன்பழகன்]

தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியிலே இந்தப் பிரச்சினைகள் எல்லாம் இந்து, எக்ஸ்பிரஸ் போன்ற பத்திரிகைகளிலே தொடர்ந்து தெரிவித்து வந்திருக்கிற காரணத்தினால் நான் அந்தச் செய்திகளை இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து இந்த உரையைத் தொடங்குகிறேன்.

இந்த அவைமுன் வைக்கப்பட்டிருக்கின்ற காவல் துறை மானியத்தின் மீதும், தீயணைப்புத் துறை மானியத்தின் மீதும் என்னுடைய கருத்துகளைத் தெரிவிக்க விழைகிறேன். காவல் துறை பற்றிய அறிக்கைகளில் ஒவ்வோர் ஆண்டிலும் காவல் துறையின் கடமைகள் பற்றியும், மேன்மை பற்றியும் பல்வேறு வகையிலே புகழப்பட்டிருக்கிறது. குறிப்பாக, தடம் மாறாது விழிப்புணர்வை எப்போதும் தன்னகத்தே காவல் துறை கொண்டிருக்க வேண்டுமென்ற முன்னுரையோடு ஒவ்வோர் ஆண்டும் இந்த அறிக்கை இங்கே தரப்படுகிறது. காவல் துறையைப்பற்றி இந்த மன்றத்திலே 1982 ஆம் ஆண்டு பேசிய எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள் கீழ்க்கண்டவாறு ஒரு கருத்தினைத் தெரிவித்தார்கள்: "காவல் துறையிலே பல நல்லவர்கள் இருக்கலாம். சில தீயவர்களும் இருக்கலாம். ஆனால் தீயவர்கள் எண்ணிக்கை அதிகரித்தால் நாட்டுக்கு நல்லதல்ல. சோற்றில் கல் இருந்தால் எடுத்து விடலாம். ஆனால் கற்களுக்கு மத்தியில் சோற்றைத் தேடும் நிலை ஏற்பட்டு விடக்கூடாது" என்று இந்த அவையிலே கருத்துகளைத் தெரிவித்திருக்கின்றார்கள். காவல் துறையின் குறைகளை எதிர்க்கட்சி என்ற முறையில் நான் பேச முற்பட்டாலும், எங்களுடைய தலைவர் ஆட்சிக் காலத்திலே இரண்டு போலீஸ் கமிஷன்கள் காவல் துறைக்காகப் போடப்பட்டன. அதிலே ஒன்று போலீஸ் கமிஷனராக, I.G. ஆக இருந்த முன்னாள் I.G. திரு. அருள் அவர்களின் 'ஒரு போலீஸ் டைரி' என்ற புத்தகத்தில் 'கலைஞர் அவர்கள் முதன்முதலில் கமிஷனை அமைத்து, அதனுடைய பரிந்துரைகளை ஏற்று, பல கோடி ரூபாய்களை போலீஸ் துறைக்கு ஒதுக்கீடு செய்து, காவல் துறையை நவீனப்படுத்தினார்' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே, இரண்டு முறையும் கமிஷன் அமைத்து, போலீசுக்குப் பல நன்மைகளைச் செய்தவர் எங்களுடைய தலைவர் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் காவல் துறையைப் பற்றி நாங்கள் பேசுகிற நேரத்தில் நல்ல விமர்சகர்களாக காவல் துறையைப் பற்றி தெளிவான கருத்துகளை இந்த மன்றத்திலே சொல்கிறோம். மற்றபடி காவல் துறையிலே இருக்கிற அனைவரையும் நாங்கள் எதிரிகளாகக் கருதவில்லை என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே சென்ற முறை காவல் துறை மானியத்திற்குப் பதிலளித்து உரையாற்றுகிற போது, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், விவாதம் தொடங்குவதற்கு முன்பு அனல் பறக்கும், கனல் பறக்கும், தீப்பொறி பறக்கும் என எதிர்பார்த்து வந்தேன், குறைந்தபட்சம் தூள் பறக்கும் என எண்ணி வந்தேன். ஆனால் அதுகூட நடக்கவில்லை என்று தெரிவித்தார்கள். ஆகவே, அவர்களுடைய வருத்தத்தைப் போக்குகின்ற வகையில் நான் சில கருத்துகளை இங்கே தெரிவிக்கிறேன். முன்பு பஞ்சாபில்தான் தினமும் கொலைகள் விழும். காஷ்மீரில் தினமும் கொலைகள் விழும். ஆனால், இன்று தமிழ்நாட்டில் கொலை, கொள்ளைகள் நடக்காத நாள் இல்லை. அந்தச் செய்திகள் வெளிவராத நாளேடுகள் இல்லை. தமிழகத்தில் நீங்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற 2001 மே 15 முதல் 2002 மார்ச் 26 வரை எடுக்கப்பட்ட புள்ளிவிவரங்களன்படி கொள்ளை மற்றும் வழிப்பறிச் சம்பவங்கள் 128, படுகொலைகள் 90, கற்பழிப்புச் சம்பவங்கள் 8, கடத்தல் சம்பவங்கள் 3, மோசடிச் சம்பவங்கள் 5, சாலை விபத்துகள் 163. இதில் பலியானோர் 423 பேர். சராசரியாக நான்கு நாட்களுக்கு ஒரு கொலையும், 3 நாட்களுக்கு ஒரு கொள்ளையும் இந்த ஆட்சியில் நடைபெற்று வருகின்றது.

உதாரணத்திற்குச் சில சம்பவங்களை நான் மேற்கோள் காட்ட விரும்புகிறேன். கரூர் மாவட்டம், அரசு காலனி, தி.மு.க. கிளைக் கழக இளைஞர் அணி அமைப்பாளர் கோவிந்தராஜன் உள்ளாட்சி மன்றத் தேர்தலில் கழக வேட்பாளர் சாந்தி கருணாநிதியின் வெற்றிக்குப் பாடுபட்டு வெற்றி பெற வைத்தார். தோல்வியடைந்த லீலாவதியின் கணவர் சேகர் அவரைச் சேர்ந்த 6 பேர் அவரைக் கொலை செய்தனர். பொதுமக்கள் சாலை மறியல் செய்து இவர்கள்தான் கொலையாளிகள் என்று அடையாளம் காட்டிய பின் காவல் துறை கைது செய்திருக்கிறது. அதேபோல சென்னை தரமணியில் மகாத்மா காந்தி நகரில் கபாலி தெருவில் வசித்து வருபவர் பிரதீப்குமார். இவர் இடது கம்யூனிஸ்ட் கட்சியினுடைய மார்க்சிஸ்ட் தரமணி பகுதி குழு உறுப்பினர். இவர் அன்று இரவு 8 மணியளவில் வீட்டிலிருந்து வெளிவரும்போது 10 முதல் 15 பேர் கொண்ட மர்ம கும்பல் பயங்கர ஆயுதங்களால் தலை மற்றும் இரு கைகளை வெட்டி வீழ்த்தியிருக்கிறார்கள். இரத்த வெள்ளத்திலே அங்கேயே சாய்ந்தார். அவர் ஏற்கெனவே தன் கண்களைத் தானம் செய்தவர். அவர் கொலை செய்யப்பட்டுவிட்டதால் கண்களைப் பெற்றுக்கொள்ள மருத்துவர்கள் மறுத்திருக்கிறார்கள். இதுவரை இந்தக் கொலையாளிகளைப் பிடிக்கவில்லை. அதற்கான முயற்சிகளில் ஈடுபடவில்லை.



13-3-2002 அன்று திருப்பூர் அருகேயுள்ள இடுவாய் கிராமத்தைச் சேர்ந்த ரத்தினசாமி, இவர் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த பஞ்சாயத்து தலைவராக இருக்கிறார். கடந்த 12-3-2002 அன்று இரவு திருப்பூரிலிருந்து மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பிக் கொண்டிருந்த போது இவரைச் சிலர் வழிமறித்து கத்தி, அரிவாள் போன்ற ஆயுதங்களைக் கொண்டு சரமாரியாக வெட்டிக் கொலை செய்து, கை, கால்களைக் கட்டி நைலான் கயிற்றால் அவரின் கழுத்தில் கட்டி சுருக்கு போட்டு, மரத்தில் தொங்கவிட்டுள்ளனர். இதுவரை, ஏற்கெனவே இதே இடத்தில், இதே போன்று வழிமறித்து, கத்தியால் குத்தியும், வாயில் விஷத்தையும் ஊற்றியிருக்கிறார்கள். நல்ல வேளையாக, அப்போது அவர் உயிர் பிழைத்தார். ஆனால், இன்று கொலை செய்யப்பட்டிருக்கிறார். அந்தக் கொலைக் குற்றவாளியைக் கைது செய்திருக்கிறார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-50

தியாகராய நகர் தொகுதி, 26-11-2000 அன்று வடபழனி கங்கை அம்மன் கோவில் தெருவில் சந்திரா, வயது 42, இவர் வீட்டிற்குள் மர்மக் கும்பல் ஒன்று உள்ளே புகுந்து .அவரை, மின்விசிறிக்குப் பயன்படுத்தும் ஒயரால் கழுத்தை இறுக்கிக் கொன்றனர். கொன்றது மட்டுமல்ல, அவருடைய கழுத்தில் அணிந்திருந்த 10 பவுன் சங்கிலியையும் பறித்துக் கொண்டு சென்றிருக்கிறார்கள். இச்சம்பவம் நடந்து 6 மாதம் ஆகியும் இன்றுவரை கொலைகாரர்களை போலீசார் கண்டுபிடிக்கவில்லை.

அதேபோல், தியாகராய நகர் தொகுதி, அசோக் நகர், 4-வது தெருவில் பால்பூத் அருகே ஒரு அண்டா கைப்பற்றப்பட்டது. அந்த அண்டாவைத் திறந்து பார்த்தபோது, அதில் ஒருவரைக் கண்டந்துண்டமாக வெட்டிக் கொலை செய்து போட்டு வைத்திருக்கிறார்கள். அதில் கால்கள் மட்டும் இல்லை. சில நாட்கள் கழித்து பாண்டி பஜார், சோமசுந்தரம் பூங்கா அருகில் இரண்டு கால்கள் மட்டும் கிடந்தன. காவல் துறையினர் தீவிர விசாரணைக்குப் பிறகு, அந்தக் கால்களை அண்டாவில் இருந்த பிணத்தின் கால்கள் என்று கண்டுபிடித்திருக்கிறார்கள். இந்தக் கண்டுபிடிப்பைத் தவிர இதுவரை கொலையாளிகள் யார் என்று இதுவரை கண்டுபிடிக்கவில்லை.

என்னுடைய சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வடபழனி பகுதியில், சுமதி என்பவர் கொலை செய்யப்பட்ட சம்பவத்தை இதே மன்றத்திலே நான் எடுத்து வைத்து உரையாற்றினேன். முதல்வர் அவர்களும் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று சொன்னார். அதேசமயத்தில் 8-4-2002 அன்று நம்முடைய முதல்வர் அவர்கள் இந்த

அவையில் எழுந்து சுமதி கொலையில் காவல் துறையினர் முனுசாமி என்பவரை 7-4-2002 அன்று கைது செய்ததாக அறிவித்தார். இதில் வேடிக்கை என்னவென்றால் 4-4-2002 அன்று அந்தக் கொலையாளி முனுசாமி வக்கீல் சுமதி என்பவர் மூலம் இணைக் கமிஷனர் அலுவலகத்திலே சரண் அடைந்திருக்கிறார். 7-4-2002 அன்று காலை வெளிவந்த ஜூனியர் விகடன் பத்திரிகையில் முனுசாமி சரண் அடைந்த விவரம் படத்தோடு வெளி வந்திருக்கிறது. ஆனால், முதல்வர் காவல் துறையினரை நம்பி குற்றவாளியை உடனடியாகக் கண்டுபிடித்துவிட்டார்கள் என்று பெரும் போலீஸ் பட்டாளத்தையே தலைமைச் செயலகத்திற்கு வரவழைத்து முதல்வர் பாராட்ட, அந்தப் போலீஸ்காரர்களும் கம்பீரமாக போஸ் கொடுத்துக் கொண்ட படம் பத்திரிகையிலே வெளிவந்திருக்கிறது. போலீசும் துப்பறிவதில் திறமை ஆனவர்கள்தான். ஆனால், அதேசமயம் இப்படி செய்யாத ஒரு சாதனையைச் செய்ததுபோல், சரண் அடைந்தவரை இவர்கள் கைது செய்ததுபோல் ஓர் உண்மைக்கு மாறான தோற்றத்தை ஏன் உருவாக்கியிருக்கிறார்கள் என்பதை முதல்வர் பதிலுரையில் விளக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். இந்த ஆட்சியில் கண்டுபிடிக்க முடியாத....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு நிமிடத்திலே பேச்சை முடித்துவிடுங்கள்.

**திரு. ஜெ. அன்பழகன்:** காவல்துறை மானியம் ரொம்ப அதிகம், எல்லோரும் வெட்டுத் தீர்மானம் நிறைய கொடுத்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோருக்கும் 10 மணித்துளிகள்தான். (குறுக்கீடு) எல்லோருக்கும் 10 மணித்துளிகள்தான்.

**திரு. ஜெ. அன்பழகன்:** இந்த ஆட்சியில் கண்டுபிடிக்க முடியாத கொலை, கொள்ளைகள் பட்டியல் அனுமார் வால்போல் நீண்டு கொண்டிருக்கிறது. தி.மு.க. ஆட்சியில் ரவுடிகள், கொள்ளையர்கள், செயல்பட அஞ்சி முடங்கிக் கிடந்தார்கள். அதனால் கொலைக் குற்றங்கள் பெரிய அளவில் நடைபெறவில்லை. ஆனால், இந்த ஆட்சியில் ரவுடிகள், கொள்ளையர்கள் வீர உலா வந்து கொண்டிருக்கிறார்கள். இந்த ஆட்சியில் கோவிலில் அன்னதானம் போடும் நீங்கள் முதலில் ஆண்டவனுக்குப் பாதுகாப்புக் கொடுங்கள். இந்துக் கோவில், கிறித்துவ தேவாலயங்கள், மசூதிகள் ஆகியவற்றில் உண்டியல் கொள்ளை அடிக்கும் சம்பவம்



தொடர்ந்து நடைபெற்று வருகிறது. கொள்ளை அடிப்பதில் மத நல்லிணக்கம் இந்த ஆட்சியில் நிலவி வருகிறது. இதைத் தடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பெருகிவரும் கொலை, கொள்ளையால் கோடை விடுமுறையை கழிக்கக்கூட நம்முடைய மக்கள் வெளியூர், உறவினர் வீடுகளுக்குச் செல்லத் தயாராக இல்லை. வீட்டை விட்டுச் சென்றுவிட்டால், எங்கே நம் வீட்டுப் பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுவிடுமோ என்ற அச்சம் மக்களிடையே நிலவுகிறது. அவற்றை உடைத்து கொள்ளையடிக்கும் அளவிற்குக் கொள்ளையர்கள் நிதானமாக இந்த ஆட்சியில் செயல்படுகிறார்கள்.

தமிழக அரசின் காவல்துறை ஓர் அறிவிப்பை வெளியிட்டிருக்கிறது. வெளியூர் பயணம் செய்பவர்கள் காவல் நிலையத்திற்கு வந்து சொல்லிவிட்டுத்தான் செல்ல வேண்டும் என்று அறிவித்தனர். ஆனால், நேற்று ஆவடியிலே ஒரு சம்பவம். காவல் நிலையத்திலே சொல்லிவிட்டு சென்ற ஒருவர் வீட்டிலே கொள்ளையடிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இது கேலிக்குரியதாக இல்லையா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

கொள்ளையைக் கண்டுபிடிக்கும் காவல் துறையினரின் குடியிருப்புகளிலேயே கொள்ளைச் சம்பவம் நடைபெற்றிருக்கிறது. நகை பணத்தை பறிகொடுத்துவிட்ட காவல் துறையினரின் தாய்மார்கள் கண்ணீர்விட்டு அழுவது பரிதாபமாக இருக்கிறது. இதே நிலை நீடித்தால் ** (குறுக்கீடு) ஆகவே, அரசு விழிப்போடு செயல்பட்டு, கொள்ளையர்களைப் பிடிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**திரு. ஜெ. அன்பழகன்:** காவல் துறையின் கைகளைக் கட்டிப் போட்டிருக்கிறீர்கள். ஸ்காட்லாந்து யார்டுக்கு நிகரான காவல் துறை இன்று யாருக்கோ ஏவல் துறையாக மாறியிருக்கிறது. பழி வாங்கும் நடவடிக்கைகளைச் செயல்படுத்துவதிலேயே குறியாக இருக்கும் காவல் துறை அதிகாரிகள் குற்றங்களைத் தடுக்காமல் கோட்டை விட்டு விடுகிறார்கள். உளவுத் துறை தமிழ்நாட்டிலே அடியோடு செயலிழந்துவிட்டது. (குறுக்கீடுகள்) (மணியடிக்கப்பெற்றது) இன்னும் இரண்டு மணித்துளிகளிலே முடித்துவிடுகிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, ஏற்கெனவே கொடுத்தாகிவிட்டது. இது மூன்றாவது முறை. திரு. அ. அன்வர் ராஜா.

**திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் உயிரினும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அன்வர் ராஜா, இருங்கள். (குறுக்கீடு) திரு. அன்பழகன், ஒரு மணித்துளியிலே பேசி முடியுங்கள். கடைசி வாக்கியத்தைப் பேசி முடியுங்கள். திரு. அன்வர் ராஜா உட்காருங்கள்.

**திரு. ஜெ. அன்பழகன்:** நாட்டில் இன்று பல்வேறு துறைகளை நீங்கள் தனியார்மயமாக்கி வருகிறீர்கள். பஸ்கள் தனியார்மயம்; தரிசு நிலம் தனியார்மயம். இப்படி தனியார் மயம் ஆக்கும் நீங்கள் காவல் துறையைத் திறம்பட நிர்வகிக்க முடியாத காரணத்தால் இதையும் நீங்கள் தனியார் மயமாக்கிவிடலாம். Security Bureau தனியார்மயம் ஆக்குவதைப்போல, இதை ஆக்கினால் நல்லது.

*முற்பகல் 11-55*

தமிழ்நாட்டை முதல் மாநிலமாக ஆக்குவேன் என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சபதமிட்டு ஆட்சிக் கட்டிலிலே ஏறினார்கள். ஆனால், சட்டம் ஒழுங்கு கெடுவதிலே இன்றைக்கு முதல் மாநிலமாக ஆகியிருக்கிறது. கொலை, கொள்ளை எண்ணிக்கையிலே முதல் மாநிலமாக ஆகியிருக்கிறது. மக்களுக்குத் தரப்படும் சலுகைகளைப் பறிப்பதிலே இந்த ஆட்சி முதல் இடமாக இருக்கிறது. சிங்காரச் சென்னையாக எங்களுடைய வணக்கத்திற்குரிய மேயர் ஆக்கினார். (குறுக்கீடுகள்) ஆனால், உங்களுடைய ஆட்சியில் சிங்கார கொலை நகரமாக, கொள்ளை நகரமாக மாறிவிட்டது என்பதை எடுத்து வைத்து இந்த அளவுக்கு எனக்கு நேரம் கொடுத்து உதவிய உங்களுக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அன்வர் ராஜா.

***திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் உயிரினும் மேலாக நாங்கள் நேசிக்கின்ற...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் இருங்கள். திரு. சுந்தரம் ஏதோ கேட்கிறார்.



**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது வருங்காலத்தில் ** உள்நோக்கம் கற்பிக்கும் வகையில் அந்த வார்த்தை அமைந்திருக்கிறது. ஆகவே, அது அவைக்குறிப்பில் இருக்கலாமா என்று தாங்கள் யோசித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) அன்வர் ராஜா பேசுங்கள், ** என்று சொன்னது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. அ. அன்வர் ராஜா:** எங்கள் உயிரினும் மேலாக நாங்கள் நேசிக்கின்ற..... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அன்வர் ராஜா பேசுங்கள். ஆளுங்கட்சி உறுப்பினர்கள் அமைதியாக அமருங்கள். ஆளுங்கட்சி உறுப்பினர்தான் பேசுகிறார். அமைதியாக அமருங்கள்.

**திரு. அ. அன்வர் ராஜா:** எங்கள் உயிரினும் மேலாக நாங்கள் நேசிக்கின்ற எங்கள் உள்ளங்களிலே வைத்து நாங்கள் பூஜிக்கின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை முதலில் வணங்குகிறேன். ...... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னுடைய அனுமதி இல்லாமல் யாரும் பேசக்கூடாது. திரு. அன்வர் ராஜா பேசுங்கள்.

**திரு. ஜெ. அன்பழகன் :** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னுடைய அனுமதியின்றி அவர் பேசுகின்ற பேச்சு முழுவதும் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. என்னுடைய அனுமதி இல்லாமல் யாரும் பேசக்கூடாது. திரு. அன்வர் ராஜா பேசுங்கள்.

**திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை மானியத்தின் மீது பேசுகின்ற வாய்ப்பினை எனக்கு நல்கியிருக்கின்ற மாண்புமிகு அம்மா அவர்களுக்கு (குறுக்கீடுகள்) மீண்டும் என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**திரு. ஜெ. அன்பழகன் :** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கடந்த 5 ஆண்டு காலம் நடந்த சட்ட சபையைவிட இது ஒழுங்கான சட்டசபைதான். உட்காருங்கள் (மேசையைத் தட்டும் ஒலி)

* **திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் சட்ட சபையை உங்களுக்குத் தோன்றியபடி நடத்துங்கள். அது உங்களுடைய முடிவு. அதற்காக கடந்த சட்டசபையோடு ஒப்பிட்டுப் பார்ப்பது....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, கடந்த சட்டசபையில் யாரும் பெஞ்ச் மேலே ஏறி நிற்கவில்லை. சபாநாயகர் ஒழிக என்று யாரும் பக்கத்திலே நின்று கோஷம் போடவில்லை. தரக்குறைவான வார்த்தைகளை யாரும் பேசவில்லை. அதனால்தான் சொல்லுகிறேன். அன்வர் ராஜா பேசுங்கள்.

***திரு. துரைமுருகன்:** இதைவிட அதிகமாக நடந்திருக்கிறது. அதற்காக நீங்கள் நடந்துகொள்ளாதீர்கள். இதைவிட அதிகமாக நடந்ததை எல்லாம் நீங்களும் பார்த்திருக்கிறீர்கள். நானும் பார்த்திருக்கிறேன். ஆனால், அதற்காக இப்போது ஒப்பிடத் தேவையில்லை. (குறுக்கீடுகள்)

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் திரு. அன்பழகன் அவர்கள் பேசுகின்றபோது இந்த ஆட்சியில் காவல் துறை ஏவல் துறையாக பயன்படுத்தப்படுகிறது என்று குற்றம் சாட்டினார். அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் - தி.மு.க. ஆட்சிக் காலத்தில் — கடந்த 5 ஆண்டுகளில் காவல் துறை உண்மையாகவே ஏவல் துறையாக பயன்படுத்தப்பட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) அந்தக் காவல் துறையை ஏவல் துறையாகப் பயன்படுத்தி, 1996 ஆம் ஆண்டு என்னை கைது செய்து, அந்தக் காவல் துறையை ஏவிவிட்டு என் வீட்டை, முன்னாள் முதலமைச்சரின் வீட்டைக் கொள்ளை அடிக்கச் செய்தார்களே, அந்த ஞாபகத்தில் மாண்புமிகு உறுப்பினர் பேசுகிறார் என்று நினைக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முதலமைச்சர் சென்ற முறை போலீசை ஏவிவிட்டு என்னுடைய வீட்டை — என்னை கைது செய்தார்கள், போலீசை ஏவிவிட்டு, ஏவல் துறையாக என்று

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



சொன்னார்கள். அதை நானும் திருப்பிச் சொல்லலாம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தக் காவல் துறையை ஏவிவிட்டு முன்னாள் முதலமைச்சர் கலைஞரை கைது செய்தார்கள் என்று திருப்பிச் சொல்லலாம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். அன்வர் ராஜா பேசுங்கள்.

***திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய தலைமையிலே அமைந்திருக்கிற இந்தக் காவல் துறை எவ்வளவு சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறது என்பதை ஒரே ஒரு உதாரணத்தின் மூலமாக நான் விளக்க விரும்புகிறேன். ஒரு மிகப்பெரிய பட்டியலை எனக்கு முன்னாலே பேசியவர் இங்கே படித்தார். எனக்கும் பட்டியல் படிக்கத் தெரியும். நானும் பட்டியலை வைத்திருக்கிறேன். இருந்தாலும் ஒன்றைச் சொல்கிறேன்.

நண்பகல் 12-00

கடந்த 13 ஆம் தேதி நம்முடைய கோட்டைக்கு ஒரு தகவல் வந்தது. 'நான் இமாம் அலி பேசுகிறேன். கோட்டையை குண்டு வைத்து தகர்க்கப் போகிறேன்.' என்று ஒரு டெலிஃபோன் கால் வந்தது. உடனடியாக கோட்டையின் கதவுகள் சாத்தப்பட்டன. எங்கிருந்து இந்தக் கால் வந்தது என்று ஆராயப்பட்டது. இதைப் பேசியது ஆணா, பெண்ணா என்று ஆராயப்பட்டது. பக்கத்திலே இருக்கின்ற அன்னை சத்தியா நகரில் இருக்கின்ற பொது டெலிஃபோன் பூத்திலிருந்துதான் இந்தத் தகவல் வந்திருக்கிறது என்று உடனடியாகக் கண்டறியப்பட்டது. கோட்டையிலிருந்து ரோந்துப் போலீசுக்குத் தகவல் தரப்பட்டது. ரோந்துப் போலீசை நடத்திக் கொண்டிருந்த இன்ஸ்பெக்டர் பெருமாள்சாமி அவர்கள் உடனடியாக அந்தத் தகவல் வந்த இடத்திற்கு விரைந்து, கையும் களவுமாக, கோட்டையை மிரட்டிய, டெலிஃபோன் செய்த பாபுசங்கர் என்ற வாலிபரை பத்தே நிமிடத்தில் கைது செய்த அரசாங்கம் நம்முடைய அரசாங்கம் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அவர்கள் ஒரு மிகப்பெரிய பட்டியலைப் படித்தார்கள். நான் 13ஆம் தேதியிலிருந்து படிக்கிறேன். கடந்த 13 ஆம் தேதியிலிருந்து இந்தச் சம்பவம் நடந்ததற்குப் பிறகு இராமேசுவரத்திலிருந்து இலங்கைக்குக் கடத்த முயன்ற வெடிமருந்து, விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பாடல்கள் அடங்கிய

கேசெட்டுகள், இரசாயனப் பொடி நிரப்பப்பட்ட 5 ஒயர்கள் பறிமுதல், இது 14 ஆம் தேதி.

17-4-2002 அன்று சென்னை, மஞ்சள்கொல்லையைச் சேர்ந்த இராஜேந்திரன், ஜேப்படித் திருடன் 20 சவரன் நகைகளுடன் அமைந்தகரை குற்றவியல் போலீசாரால் கைது செய்யப்பட்டான். 18-4-2002 அன்று சென்னையில் களவு போன 4 இலட்சம் மதிப்புடைய டேங்கர் லாரி மீட்பு. சென்னை அண்ணா நகர் குற்றப்பிரிவு தனிப் போலீஸ்படை, குற்றவாளிகள் மனோகரன், மூவரசன் ஆகியோரைக் கைது செய்தது. இரண்டு சக்கர வாகனத் திருடன் பெலிக்ஸ், கல்லூரி மாணவன் 3 வாகனங்கள் ரூபாய் 1.2 இலட்சம் பெறுமானமுள்ளவையோடு பிடிபட்டான். தி.மு.க. பிரமுகர் ஜெயக்குமாரின் கொலை வழக்கில் தி.மு.க. கவுன்சிலர் தனசேகரன் கைது. இதுவெல்லாம் 18ஆம் தேதி. 19ஆம் தேதி, அண்ணாநகர் முதல் தெருவைச் சேர்ந்த ராகுல் பெர்னாண்டஸ் என்ற தொழிலதிபரைக் கடத்தி 5 இலட்சம் கேட்டு மிரட்டிய கூலிப்படைக் கும்பல் 16 பேர் கைது. (குறுக்கீடுகள்)

19 ஆம் தேதி சென்னை குமரன் நகரைச் சேர்ந்த துணை நடிகை (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யாரும் அனுமதியின்றிப் பேசக் கூடாது. அமருங்கள். திரு. அன்வர் ராஜா பேசுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. அ. அன்வர் ராஜா:** சரோஜாவின் வீட்டில் 6-4-2002-ல் ஒரு இலட்சம் பெறுமானமுள்ள நகைகளைத் திருடிய 3 பேர் 19-4-2002 அன்று கைது செய்யப்பட்டு நகைகள் மீட்கப்பட்டுள்ளன. (குறுக்கீடுகள்) மும்பை தாதா சோட்டா ராஜனுடைய கூட்டாளி சஞ்சீவ் காட்டியா இவன் மீது 12 கொலை வழக்குகள் உள்ளன. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைத் தலைவருடைய அனுமதி இல்லாமல் எழுந்து பேசக் கூடாது. திரு. பரிதி இளம்வழுதி, திரு. பொன்முடி இரண்டு பேரையும் எச்சரிக்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அன்வர் ராஜா நீங்கள் பேசுங்கள்.

**திரு. அ. அன்வர் ராஜா:** ஒரு தொலைபேசிச் செய்தியை வைத்து மப்டி உடையில் சென்று, பொதுத் தொலைபேசியைக் கண்காணித்து குற்றவாளியை 19-4-2002 அன்று பகல் ஒரு மணிக்குக் காவல் துறை கைது செய்தது பாராட்டத்தக்க ஒன்றாகும். 21-4-2002-ல் (மேசையைத் தட்டும் ஒலி) கேரளாவிற்குக் கடத்திச் செல்லப்படவிருந்த 725 போதை



மருந்துக் குப்பிகள் கோவை போலீசாரின் அதிரடி சோதனையில் சிக்கின. (குறுக்கீடுகள்)

பழனியில் மாமூல் கேட்டு கடையை உடைத்த ஆட்டோ டிரைவர் கைது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எனது அனுமதி இல்லாமல் யாரும் எழுந்து பேசக்கூடாது. பரிதி இளம்வழுதி, பொன்முடி இரண்டு பேரும் உட்காருங்கள் என்று சொல்லிவிட்டேன். நீங்கள் அனுமதியில்லாமல் பேசிக்கொண்டேயிருக்கிறீர்கள். நீங்கள் அனுமதியில்லாமல் பேசக்கூடாது. (குறுக்கீடுகள்) வேறு ஏதாவது பிரச்சினை இருந்தால் உங்கள் துணைத் தலைவரிடம் சொல்லி கேட்கச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) உங்களுக்கு அவ்வளவு தரம் இல்லை. உட்காருங்கள் (குறுக்கீடுகள்)

(திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் ஒரு ஆடியோ கேசெட்டை எடுத்துக் காண்பித்து ஏதோ பேசினார்)

அனுமதி இல்லாமல் பேசுவதும், அனுமதியில்லாமல் பொருள்களைக் காட்டுவதும் அவையின் விதிப்படி குற்றம். இரண்டாவது முறையாகவும் எச்சரிக்கிறேன். (குறுக்கீடுகள்) பரிதி இளம்வழுதியை இரண்டாவது முறையாக எச்சரிக்கிறேன்.

***திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுடைய கோரிக்கை என்னவென்றால் தனசேகரன் அவர்கள் கொலை வழக்கு சம்பந்தமாகக் கைது செய்யப்பட்டார் என்று மாண்புமிகு உறுப்பினர். ஆளுங்கட்சி உறுப்பினர் பேசுகிறபோது தெரிவித்தார். அவர்கள் (குறுக்கீடு) I know it. ஆனால், அது இல்லை, அவர், பொய் வழக்கு போட்டிருக்கிறார்கள் என்று தன்னுடைய கருத்தை அவர்கள் பதிவு செய்கிறார்கள். அதற்குத் தாங்கள் (குறுக்கீடுகள்) தீர்ப்புச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

பிற்பகல் 12-00

**திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பதிமூன்றாம் தேதியிலிருந்து இன்று வரை காவல் துறையால் குற்றவாளிகள் 18 பேர் கைது செய்யப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டு, நீதிமன்றத்திற்கு முன்னாலே நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). ஆனால், ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். உறுப்பினர்கள் சொன்னார்கள். நான் அன்போடு சிலவற்றை இங்கே கவனப்படுத்த விரும்புகின்றேன்.

மிகப்பெரிய நடிகர், நமக்கெல்லாம் தெரியும், ரஜினிகாந்த் அவர்கள் தன்னுடைய வீட்டிலே படுத்து தூங்கிக் கொண்டிருந்தார். யாருடைய ஆட்சியில்? (மேசையைத் தட்டும் ஒலி) அவர் படுக்கை அறையைக் கடந்து சென்று, இன்னொரு அறையிலே சென்று 20 பவுன் நகைகளைத் திருடிக் கொண்டுபோனது யாருடைய ஆட்சியில் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அருள்கூர்ந்து மேலும் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நடிகர் லிவிங்ஸ்டன், அவருடைய வீட்டில் தாய், தந்தையோடு படுத்து உறங்கிக் கொண்டிருந்தார். 25,000 ரூபாய் பெறுமானமுள்ள சாமன்களை, அவருடைய வீட்டில் திருடியது யாருடைய ஆட்சியில்? தயவுசெய்து நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, சம்பவங்கள் என்ன நடக்கின்றன என்பதை வைத்து ஒரு ஆட்சித் திறனை கணக்கிடுவது சரியான மதிப்பீடு ஆகாது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இருந்தாலும், முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, இந்த நாட்டில் 50 ஆண்டு கால வரலாற்றில், எந்தக் காலத்திலும் நடக்காத ஒரு மோசமான கலாச்சார சீரழிவு நடைபெற்றது என்பதை ஒரு சம்பவத்தின் வாயிலாக நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இப்பொழுது விடுமுறை நடக்கின்றது. பிள்ளைகளை நாம் உல்லாசப் பயணமாக அழைத்துகொண்டு செல்கிறோம். ஒரு காரைப் பிடித்துக் கொண்டு செல்கிறோம். ஒரு வேனை அமர்த்திக் கொண்டு செல்கின்றோம். அப்படியில்லையென்றால், ஏதாவது ஒரு பிசினஸ் பண்ணுவதற்கு, ஒரு வேனை அமர்த்திக் கொண்டு செல்கின்றோம். அப்படி செல்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆனால், திரு. கருணாநிதி அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, 1986 ஆம் ஆண்டு மதுரையிலிருந்து ஒரு வேனை அமர்த்திக் கொண்டு 9 பேர் தாராபுரத்திற்குப் போனார்கள். (குறுக்கீடுகள்) 1989 ஆம் ஆண்டு (குறுக்கீடுகள்) 1986, ஆகஸ்ட் 1986 ஆம் ஆண்டு. 5-8-1986. (குறுக்கீடுகள்).

**திரு. துரைமுருகன்:** 1986 யாருடைய ஆட்சி? மாண்புமிகு முதலமைச்சருடைய ஆட்சி. (குறுக்கீடுகள்).

**திரு. அ. அன்வர் ராஜா:** நான் திரும்பப் பெறுகிறேன். நான் தேதியைச் சொல்கிறேன். 5-8-1996. 1996 ஆம் ஆண்டு மதுரையிலேயிருந்து ஒரு வேனை அமர்த்திக் கொண்டு தாராபுரத்திற்குப் போனார்கள். எதற்கு, உல்லாசப் பயணத்திற்கா? வியாபாரம் செய்யவா? இல்லை, கொள்ளையடிப்பதற்காக என்பதை மறந்துவிடக் கூடாது. கொள்ளை அடிப்பதற்காக, (மேசையைத்



தட்டும் ஒலி) கொள்ளை அடிப்பதற்காகச் சென்றவர்களை, அவர்கள் கொள்ளையடித்தபோது, தாராபுரத்திலே அவர்களை பிடித்து கட்டி வைத்து, அடித்தே கொன்று விட்டார்கள். போலீஸ் நடவடிக்கை இல்லை. அப்படி கொள்ளையடித்தால், காவல் துறையிலே ஒப்படைத்திருக்க வேண்டும், வழக்கு மன்றத்திற்கு உட்படுத்தியிருக்க வேண்டும். அப்படி ஒன்றும் நடைபெறவில்லை. அடித்தே கொன்றுவிட்டார்கள். இதுவொரு மிகப் பெரிய கலாச்சார சீர்கேடு என்று 5-8-1996 தினமணியிலே தலையங்கம் எழுதப்பட்டிருக்கிறது. அதை மட்டும் நான் படிக்கிறேன்.

"முன்பெல்லாம் ஒரு ஊரை விட்டு, இன்னொரு ஊருக்கு தொழில் நடத்தவும், வர்த்தகம் செய்யவுமே போவது வழக்கம் அல்லது விடுமுறை நாட்களில் உல்லாசப் பயணம் போவார்கள். ஆனால், இப்பொழுதோ கொள்ளை அடிப்பதற்கு வேனை அமர்த்திக் கொண்டு போவதென்றால், இது எத்தகைய கலாச்சார சீர்கேடு என்று 5-8-1996-ல் தினமணி தலையங்கத்திலே குறிப்பிடப்பட்டிருக்கின்றது. எனவே, ஒரு நிகழ்வை வைத்து ஒரு அரசை எடை போட முடியாது. எனவே, நான் (குறுக்கீடு) இப்பொழுதுதான் முதன் முதலாகப் பேசுகிறேன். எனவே, நான் அன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புவது, காவல் துறைக்கு என்று ஒரு பாரம்பரியம் இருக்கிறது. அதுவும் தமிழக காவல் துறைக்கு என்று சிறந்த பாரம்பரியம் இருக்கிறது. இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபொழுது, ஒரு சரித்திர சம்பவம் நடந்தது. 1986ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16 ஆம் தேதி, 17 ஆம் தேதி சார்க் மகாநாடு பெங்களூரிலே நடந்தது. அந்த சார்க் மகாநாட்டிலே கலந்துகொள்வதற்காக அனைத்துத் தலைவர்களும் அங்கே வந்தார்கள். பாகிஸ்தான் அதிபர் முகம்மதுகான் ஜீனோஜோ, வங்காள தேசத்தினுடைய அதிபர் யர்ஷாத், அப்படியே நம்முடைய மாலத் தீவினுடைய அதிபர் அப்துல் கையூம், நேபாள மன்னர் பிரேந்திரா, ராயல் பூட்டான் மன்னர் சிங்கே சிக்மே வான்சுக், இலங்கையினுடைய அதிபர் ஜெயவர்த்தனா, நம்முடைய பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி—இவர்கள் எல்லாம் கலந்து கொள்கிற மகாநாடு. விடுதலைப் புலிகள் தமிழகத்திலே ஆயுதம் ஏந்தி எந்தவிதத் தடையும் இன்றி சுதந்திரமாக இருந்த காலம். அந்தக் காலத்தில் ஜெயவர்த்தனா பெங்களூருக்கு வருகின்ற காரணத்தினால், விடுதலைப் புலிகளால் அவருக்கு எந்த ஆபத்தும் வந்துவிடக் கூடாது என்று இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள், தமிழக முதலமைச்சராக இருந்த டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை விடுதலைப் புலிகள் அந்தப் பக்கம் வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும். பாதுகாக்கின்றப் பொறுப்பை நீங்கள் ஏற்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்களாம்.

பிற்பகல் 12-10

The Man and the Myths என்று அன்றையதினம் இந்தக் காவல் துறை, உளவுத் துறைக்கு தலைமை தாங்கி நடத்திய மோகன்தாஸ் அவர்கள் ஒரு புத்தகத்தை எழுதி இருக்கிறார்கள். அந்தப் புத்தகத்திலே இதற்கான விளக்கங்கள் இருக்கின்றன. அவர் அதிலே, புரட்சித் தலைவர் அவர்கள் ஒப்புக் கொண்டதற்குப் பிறகு, அவர் சொல்கிறார். நான் போய் தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களைப் பார்த்தேன். இது நடக்கக் கூடிய காரியமல்ல. காவல் துறையை வைத்து நன்றாக trained warriors-ஐப் போல் இருக்கிற புலிகளிடமிருந்து ஆயுதங்களைப் பறிப்பது என்பதும் கட்டுப்படுத்துவது என்பதும் நடக்கக்கூடிய காரியமல்ல; அதை நம்மாலே செய்யமுடியாது என்று நான் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களைப் பார்த்துச் சொன்னேன். போய் விட்டு நாளை காலையிலே வாருங்கள் என்று என்னை அனுப்பி வைத்தார்கள். நான் மறுநாள் காலையிலே போனேன். ஒரு இராணுவத் தளபதியைப் போல, திட்டங்களை வகுத்துத் தந்து இப்படி, இப்படி நடந்துகொள்ளுங்கள். RAW-வுக்குத் தெரிய வேண்டாம். I.B.-க்கு தெரிய வேண்டாம். உள் துறைக்குத் தெரிய வேண்டாம். யாருக்கும் தெரிய வேண்டாம். தேர்ந்தெடுக்கப்பட்ட 30 முகாம்களில் இருக்கின்ற அந்தப் போராளிகளிடமிருந்து 1986 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 8 ஆம் தேதி காலை 5-30 மணியிலிருந்து 6-00 மணி வரை, மத்திய அரசுக்கும், மாநில அரசுக்கும், உங்கள் மீது எந்தக் கோபமும் இல்லை. ஜெயவர்த்தனா அந்த மகாநாட்டிலே கலந்துகொள்ள வருவதால் மத்திய அரசாங்கம் அவரைப் பாதுகாக்க வேண்டும் என்று கருதுகிறது. எனவே, உங்களுடைய ஆயுதங்களை உங்கள் முகாம்களில் இருக்கின்ற ஒரு அறையிலேயே போட்டு, பூட்டி வைத்து, சாவியை நீங்களே வைத்துக்கொள்ளுங்கள் என்று பேசி, அந்த ஆயுதங்களையெல்லாம் ஒரே நேரத்திலே தமிழ்நாட்டிலே 30 முகாம்களிலே பறித்து, ஒரு துளி இரத்தம் கூட சிந்தாமல் அந்த operation-ஐ Operation Tiger என்ற அந்த operation-ஐ தமிழகக் காவல் துறை சிறப்பாக செய்து முடித்த வரலாறு (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகக் காவல் துறைக்கு இருக்கிறது என்பதை நான் அன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். அவ்வளவு பாரம்பரியமிக்க காவல் துறையாக தமிழகக் காவல் துறை இருந்து இருக்கிறது. அந்த நிகழ்ச்சியை முன்னாள் I.G., F.V. Arul அவர்கள் மிக அருமையாகப் பாராட்டி இவ்வளவு பெரிய போராளிகளிடமிருந்து காவல் துறை இதைப் பெற்றிருக்கிறது என்றால், இது பாராட்டுக்குரியது என்று அவர் தெரிவித்திருக்கிறார்.



அதோடு மட்டுமல்ல, இலங்கையிலே இருந்த இந்தியத் தூதர் ஆபிரகாம் அவர்கள் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களைப் பாராட்டி, 'The Chief Minister M.G.R. has acted to prevent the conversion of Tamil Nadu into another Lebanon' என்று, தமிழ்நாடு இன்னொரு லெபனானாக மாறாமல் இருப்பதற்கு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் எடுத்த நடவடிக்கையை நான் பாராட்டுகிறேன் என்று செய்தி வெளியிட்டார்கள்.

அதற்குப்பிறகு, 1991 ஆம் ஆண்டு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் முதலமைச்சராக வந்தார்கள். 1992 டிசம்பரில் பாபர் மசூதி இடிக்கப்பட்டது. உத்தரப் பிரதேசத்திலே இடிக்கப்பட்ட பாபர் மசூதியால் உத்தரபிரதேசத்திலே கலவரம். ஏறத்தாழ இந்தியாவில் இருக்கிற எல்லா மாநிலங்களிலும் கலவரம். இந்தியாவில் இருக்கிற மாநிலங்களில் மட்டும் கலவரம் அல்ல. வங்காளதேசத்திலே அதன் பிரதிபலிப்பு. அங்கே கலவரம். பாகிஸ்தானிலே கலவரம். அரேபிய நாடுகளில் எல்லாம் அந்தக் கலவரத்தின் தாக்கம் நீடித்திருந்தது. ஆனால், நான் அன்போடு தெரிவிக்க விரும்புகிறேன். புரட்சித் தலைவி அவர்களுடைய தலைமையிலே இருந்த தமிழ்நாட்டில் ஒரு சிறு தடியடிகூட நடைபெறவில்லை (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அம்மா அவர்களுடைய ஆட்சியில் அன்றைய காவல் துறை, அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலின்பேரில் ஒரு சிறு துரும்புகூட அசையாமல் தமிழகத்தை அம்மா அவர்கள் காப்பாற்றினார்கள் என்பதை மறந்துவிடக் கூடாது.

அதற்குப்பிறகு வாருங்கள். 1996-இல் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் கருணாநிதி அவர்கள் இந்தக் காவல் துறைக்குப் பொறுப்பேற்று முதலமைச்சர் ஆனார்கள். 1997 நவம்பரில் கோவையிலே கலவரம். (குறுக்கீடு) 1998-இல் குண்டு வெடித்தது. 1997 நவம்பரில் கோவையிலே கலவரம். கோவையிலே கலவரம் நடக்கிறபோது—நான் அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். எந்தக் காவல் துறை ஒரு இராணுவமோ, துணை இராணுவமோ செய்ய முடியாத காரியத்தை புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய தலைமையிலே இருந்த ஆட்சியிலே செய்து காட்டியதோ, எந்தக் காவல் துறை அம்மா அவர்களுடைய ஆட்சியில் பாபர் மசூதி இடிக்கப்பட்டபோது, ஒரு துரும்புகூட அசையாமல் இந்தத் தமிழகத்தைப் பாதுகாத்ததோ அதே காவல் துறை, தங்களுக்கே பாதுகாப்பு வேண்டுமென்று ரோட்டுக்கு வந்து மறியல் செய்தது இந்தத் தமிழகத்தில்தான் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) அருள்கூர்ந்து நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

காவல் துறையும், காவல் துறையினருடைய மனைவி மக்களும் "எங்களைக் காப்பாற்றுங்கள்" "எங்களுக்குப் பாதுகாப்பு இல்லை" என்று போராட்டிற்கு வந்தது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான் என்பதை மறந்துவிடக்கூடாது. திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கே பாதுகாப்பு இல்லை. நாடாளுமன்ற உறுப்பினர் கோவை திரு. மு. இராமநாதன் அவர்களை இராணுவம்தான் வந்து பாதுகாத்தது. தமிழகப் போலீசாரால் பாதுகாக்க முடியவில்லை என்பதற்காக, அங்கிருந்து இராணுவத்தை அனுப்பித்தான் தமிழகத்தைப் பாதுகாக்க வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டது என்பதையும் சட்டம்-ஒழுங்கு எப்படிச் சீர்குலைந்தது என்பதையும் நான் அன்போடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இதிலே ஓர் உண்மை நமக்குத் தெரிகிறது. என்ன உண்மை என்றால், அதே காவல் துறைதான் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதும், அதே அதிகாரிகள்தான், அதே காவல் துறைதான், அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதும், அதே அதிகாரிகள்தான். அதே காவல் துறைதான்; திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் கருணாநிதி அவர்கள் இருந்தபோதும் அதே அதிகாரிகள்தான், இருந்தார்கள் அதே காவல் துறைதான். ஆனால், அம்மா அவர்கள் இருக்கிறபோது முடிந்த காரியம், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இருந்தபோது முடிந்த காரியம், கருணாநிதி இருக்கிறபோது ஏன் முடியவில்லை? ஏன் முடியவில்லை என்றால், திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கருணாநிதி இருக்கிறபோது ஏன் முடியவில்லை என்றால்.....(குறுக்கீடு) மோசமான நிர்வாகமும், திறமையின்மையுமே காரணமாகும்.

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த ஆட்சியாக இருந்தாலும், சில நேரங்களில் கலவரங்கள் ஏற்படுவதும், போலீஸ் சமாளிப்பதும் உண்டு. மாண்புமிகு அமரர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதுதான் மண்டைக்காட்டிலே மிகப்பெரிய கலவரம் ஏற்பட்டது. மாண்புமிகு இன்றைய முதலமைச்சர் அவர்களுடைய காலத்திலேதான் —சமீபத்திலேகூட, சங்கரலிங்கபுரம் என்ற கிராமத்திற்குப் போய், அந்தக் கிராமத்திலே போலீஸ் செய்த அட்டூழியங்களுக்கெல்லாம் கஷ்டப்பட்டவர்களுக்கு மருந்திட்டு உதவிசெய்துவிட்டு வந்திருக்கிறார்கள். கொடியங்குளம் என்பதும் உங்களுடைய ஆட்சியில்தான் ஏற்பட்டு



இருக்கிறது. எனவே, கட்டுமீறி சில இடங்களிலே Law and order (கூச்சல்-குழப்பம்) போகிற போதும், அவற்றை போலீஸ் நிவர்த்தி செய்யலாம். எனவே, எல்லோருடைய ஆட்சியிலும், ஏன் காங்கிரஸ் ஆண்ட காலத்தில் கூடதான் முதுகுளத்தூர் கலவரம் ஏற்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள்.

**திரு. துரைமுருகன்:** எனவே யாருடைய ஆட்சி என்பதல்ல. ஏற்பட்டிருக்கிற பிரச்சினையைப் பொறுத்துதான் இருக்கிறது. அந்தப் பிரச்சினையை யார் முதல்வராக இருந்தாலும், அதைச் சமாளித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். நம்மால் முடியாவிட்டால் இராணுவம் வருகிறது. பெரியவர் பக்தவத்சலம் இருந்தபோதுகூட, இந்தி எதிர்ப்புப் போராட்டம். அன்றைக்கு இராணுவம் வந்திருக்கிறது. எனவே, காமராஜர் அவர்கள் காலத்திலே முதுகுளத்தூர். அமரர் பக்தவத்சலம் காலத்திலே இந்தி எதிர்ப்புப் போராட்டம், எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்திலேதான் மண்டைக்காடு விவகாரம், அதேபோன்று கொடியங்குளம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன்.

**திரு. துரைமுருகன்:** அதேபோன்று இப்படி எல்லா துறைகளிலும் வரும். அதற்காக ஒரு குற்றச்சாட்டைச் சொல்லக்கூடாது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடியங்குளத்தில் நடந்த கலவரத்தையும், சங்கரலிங்கபுரத்திலே நடைபெற்ற கலவரத்தையும் 1998 ஆம் ஆண்டில் கோவையில் நடந்த குண்டு வெடிப்பு சம்பவத்தோடு ஒப்பிடுவது சரியல்ல. கோயம்புத்தூரில் 1998-ல் நடந்த அந்தத் தொடர் குண்டுவெடிப்புகள், அதனால் ஏற்பட்ட உயிரிழப்பு, பொருள் இழப்பு, பொருட்சேதம், இதுவரை வரலாற்றிலேயே இல்லாதது. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அன்வர் ராஜா அவர்கள் இங்கே பேசியதை நான் மீண்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 1992 ஆம் ஆண்டு பாபர் மசூதி இடிக்கப்பட்டபோது, இந்தியா முழுவதும் கலவரம் ஏற்பட்டது. எல்லா மாநிலங்களிலும் கலவரம் ஏற்பட்டது. அன்றையதினம் அமைதிப் பூங்காவாகத் திகழ்ந்தது தமிழ்நாடு மட்டும்தான். அதுவும் என்னுடைய ஆட்சிக்காலத்தில்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அன்றைய தமிழகக் காவல் துறையினர் அவ்வளவு அருமையாக இங்கே சட்டம்-ஒழுங்கைப்

பராமரித்தார்கள். அண்டை மாநிலங்களான ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம் எல்லாம் அப்பொழுது பாபர் மசூதி இடிப்புக்குப் பிறகு ஏற்பட்ட கலவரத்தினால், இங்கிருந்து தமிழ்நாட்டு காவல் துறை கம்பெனிகளை அனுப்பி வைக்குமாறு கோரினார்கள். அவர்களுக்கும் நான் அனுப்பி வைத்தேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). ஆனால், அதற்குமாறாக, 1998-ல் நடைபெற்றது அகில இந்திய பிரச்சினை அல்ல. இங்கே தமிழ்நாட்டிலேயே ஏற்பட்ட ஒரு கலவரம். அதைக்கூட அடக்கமுடியாத திறமையற்ற ஆட்சியாகத்தான் அன்றைய ஆட்சி விளங்கியது. (மேசையைத் தட்டும் ஒலி) அதே காவல் துறையை, திறமை வாய்ந்த காவல் துறையை வைத்துக்கொண்டு, அன்றைக்கு இந்தக் கலவரத்தை அடக்க அன்றைக்கிருந்த தி.மு.க. ஆட்சியால் முடியவில்லை என்பதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் அன்வர் ராஜா அவர்கள் சுட்டிக்காட்டினார்.

***திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1997 ஆம் ஆண்டு, நவம்பர் மாதம் ஏற்பட்ட கலவரத்தைப்பற்றி சொன்னார்கள். அன்றையதினம் அரசாங்கம் முன்பே நடவடிக்கை எடுத்திருக்குமேயானால், அந்தக் கலவரம் நடக்காமலேயே போயிருக்கும். காரணம், காவலர் செல்வராஜ் அவர்கள் கொலையில் கொலையாளிகளை கைது செய்திருந்தால், நிச்சயமாக மறுநாள் நடைபெற்ற அந்த விரும்பத்தகாத சம்பவங்கள் நடைபெற்றிருக்காது.

*பிற்பகல் 12-20*

அதுமட்டுமல்ல, 1998-லே நடைபெற்றது அநேகமாக முதலமைச்சருக்குத் தெரிந்திருக்கவேண்டும். 1998-லே குண்டுகள் வெடிக்கப் போகிறது என்று மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கத்தை எச்சரித்து இருந்தது. மத்திய அரசாங்கம் பல நாட்களுக்கு முன்பாக மாநில அரசாங்கத்திற்கு ஒரு கடிதம் எழுதியது. "கோவையிலே, திருமால் வீதியிலே இன்ன இலக்கம் உள்ள வீட்டிலே குண்டுகள் தயாரிக்கப்படுகின்றன. அந்த குண்டுகளை தொடர் குண்டு வெடிப்பாக சில குறிப்பிட்ட நாட்கள், தேதிகள் போட்டு, இந்தத் தேதிகளிலே வெடிப்பதற்கு ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள், கவனிக்கவும்" என்று சொல்லி மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கத்திற்கு கடிதம் எழுதியது. அந்தக் கடிதத்தின்மீது மாநில அரசாங்கம் எந்த நடவடிக்கையையும் எடுக்காத காரணத்தினால்தான் (மேசையைத் தட்டும்



ஒலி) பிப்ரவரி மாதத்திலே அந்த குண்டு வெடிப்புகள் நடைபெற்றன. இந்த இரண்டு சம்பவங்களிலேயும், மாநில அரசாங்கம் முறையாக நடவடிக்கை எடுத்திருக்குமேயானால் கண்டிப்பாக நிறுத்தியிருக்க முடியும். பிப்ரவரி 14 அந்த இரண்டையும் நிறுத்தியிருக்க முடியும். தடுத்திருக்க முடியும். அதற்குக் காரணம் நிச்சயமாக கடந்த காலத்திலே இருந்த அரசாங்கம்தான் என்பதிலே எந்தவிதமான கருத்து வேறுபாடும் இருக்கமுடியாது. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பே சொல்லியதைப்போல, கொடியங்குளத்தையும், கோயம்புத்தூரையும். இரண்டையும் ஒப்பிடக்கூடாது என்று மாண்புமிகு முதலமைச்சர் தெரிவிக்கிறார்கள். ஏற்பட்ட நஷ்டத்தின் அளவில் வேண்டுமானால் வித்தியாசம் இருக்கலாமே தவிர, ஆனால் திடீரென்று ஏற்படுகின்ற சம்பவங்கள், சில நேரங்களிலே சிறிய அளவிற்கு புகைந்து விடுகிறது. சில இடங்களிலே பெரிய தீயாக மாறிவிடுகிறது.

பாபர் மசூதி இடித்தபோது, இங்கே ஒன்றும் ஏற்படவில்லை என்றுகூட அவர்கள் சொன்னார்கள். பாபர் மசூதி இடித்தபோது, அதனால் முஸ்லீம் பெருமக்கள் மத்தியிலே ஏற்பட்ட வெறுப்பு அரும்பாக இருந்தது. பிறகு அது புகைந்து, ஆங்காங்கு பலவித விபத்துக்களை ஏற்படுத்தியபோதுதான் இத்தகைய நிகழ்ச்சி ஏற்பட்டது. ஏற்பட்ட பிறகும், அதே கோயம்புத்தூரில் சட்டம்-ஒழுங்கை நிலை நிறுத்தி மீண்டும் அங்கே தேர்தல் நடந்தபோதும்கூட, அமைதியை நிலைநாட்டிக்காட்டிய திறமை, தகுதி வாய்ந்த ஒரு முதல்வர்தான் கலைஞர் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அன்வர், இன்னும் ஒரு 5 மணித் துளிகளில் பேசி முடியுங்கள். 132 பேர்களுக்கு ஒருவர்தான் பேசுகிறார்.

**திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய குற்றச்சாட்டை மிக அருமையாக மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்; அதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. என்னுடைய குற்றச்சாட்டு என்னவென்றால், கடந்த கால ஆட்சியில் முதலமைச்சராக இருந்த திரு. கருணாநிதி அவர்கள் நேரடியாகவே இந்த விசாரணையில் தலையிட்டார்கள். அவர்கள் தலையீட்டின் காரணமாகத்தான் இந்தக்

காவல் துறை மோசமான துறையாக மாறியது என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. அதற்கு ஏராளமான ஆதாரங்களை நான் தரப்போகிறேன். யாராலும், நிச்சயமாக உங்களால் மறுக்க முடியாது. ஏனென்றால், அவ்வளவும் prove பண்ணப்பட்ட குற்றச்சாட்டுகள்.

நான் தெரிவிக்க விரும்புகிறேன்; மதுரையிலே மீனாட்சி அம்மன் கோவிலில் குண்டு வெடிப்புச் சம்பவம் நடந்தது. அந்தச் சம்பவம் நடக்கிறபோது, விசாரணை நடக்கிறபோது, அன்றைய முதலமைச்சர் என்ன சொன்னார்? "இந்த குண்டு வெடிப்பிற்கு யார் காரணம்? சதி எங்கிருந்து உருவானது தெரியுமா? போயஸ் கார்டனிலிருந்து உருவானது" என்று சொன்னாரா? இல்லையா? சரி, அப்படி நீங்கள் சொன்னீர்களே, எந்தக் காவல் துறை உங்களுக்கு அந்தத் தகவலைத் தந்தது? எந்த உளவுத் துறை உங்களுக்கு அந்தத் தகவலைத் தந்தது? அந்த உளவுத் துறை உங்களுக்கு அந்தத் தகவலைத் தந்திருந்தால், அது உண்மையென்று உங்களால் நிரூபிக்க முடிந்ததா? முடியவில்லையே; (மேசையைத் தட்டும் ஒலி) நன்றாக நீங்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். இப்போது சொல்கிறார்கள்; (குறுக்கீடு).

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of order....

**திரு. அ. அன்வர் ராஜா:** "உளவுத் துறை மலிவுத் துறையாக மாறிவிட்டது" என்று நேற்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் அவர்கள், அறிக்கை விட்டிருக்கிறார்களே; உளவுத் துறை உங்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் மலிவுத் துறையாக மட்டுமல்ல; மழுங்கிப் போன துறையாக இருந்தது என்பதை மறந்துவிடக் கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

*பிற்பகல் 12-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அனுமதிக்கவில்லை, உட்காருங்கள்.

**திரு. அ. அன்வர் ராஜா:** முன்னாள் தலைமைச் செயலாளர் டி.வி. வெங்கட்ராமன் அவர்கள் தாக்கப்பட்டார்கள். விடியற்காலை 4½ மணிக்கு... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Point of Order எல்லாம் கிடையாது, உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் அனுமதிக்கவில்லை, உட்காருங்கள்.



**திரு. அ. அன்வர் ராஜா:** I am not yielding. (குறுக்கீடு) I am not yielding. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Point of Order கிடையாது; உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் அனுமதிக்கவில்லை, உட்காருங்கள்.

**திரு. அ. அன்வர் ராஜா:** முன்னாள் தலைமைச் செயலாளர் டி.வி. வெங்கட்ராமன் அவர்கள் தாக்கப்பட்டார்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, Point of Order இல்லை. உட்காருங்கள்.

**திரு. அ. அன்வர் ராஜா:** காலை 4-½ மணிக்குத் தாக்கப்பட்டார்கள். காலையிலே தாக்கப்பட்டபோது ... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. (குறுக்கீடுகள்)

**திரு. அ. அன்வர் ராஜா:** காலையிலே தாக்கப்பட்டபோது அன்றைய முதலமைச்சர் அவர்கள் என்ன சொன்னார்கள்? இந்தத் தாக்குதலுக்குக் காரணம், முன்னாள் முதலமைச்சர் அம்மா அவர்கள்தான் காரணம் என்று உங்களுடைய முதலமைச்சர் சொன்னாரா, இல்லையா? (குறுக்கீடுகள்) அதோடு, சட்டமன்றத்திலேயே அன்றைய மின் துறை அமைச்சர் என்ன சொன்னார்? காலையில் தாக்குவதற்கு ஆளை அனுப்பிவிட்டு, மாலையில் நலம் விசாரிக்கப் போகிறார் என்று உங்களுடைய மின் துறை அமைச்சர் சொன்னாரா இல்லையா? (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அனுமதிக்கவில்லை, உட்காருங்கள்.

**திரு. அ. அன்வர் ராஜா:** இதெல்லாம் நிரூபிக்கப்பட்ட உண்மைகளா, இல்லையா? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** He is not yielding. (குறுக்கீடுகள்) அவர் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடு)

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில், அன்வர் ராஜாவுக்கு அல்ல, இந்த மன்றத்தில் ஓர் உறுப்பினர் ஒரு Point of Order என்று கேட்டால், அதற்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், என்ன என்று கேட்க வேண்டும்; அதுதான் முறை. தாங்கள் கேட்டுவிட்டு Point of Order இல்லையென்றால்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Point of Order இல்லை. அவர் சொல்லப்போவது Point of Order இல்லை. இப்பொழுதே நான் சொல்லிவிடுகிறேன்.

**திரு. துரைமுருகன்:** அதைக் கேட்டுவிட்டு, அது Point of Order இல்லையென்றால், சபைக் குறிப்பிலேயிருந்து எடுத்து விடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்பொழுதே சொல்கிறேன். Point of Order இல்லை.

**திரு. துரைமுருகன்:** அதைக் கேட்டுவிட்டு சரியில்லையென்றால், சபைக் குறிப்பிலேயிருந்து எடுத்துவிடுங்கள். நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால், கேட்காமலே விட்டுவிட்டால் Point of Order என்பதற்கு மரியாதை இல்லாமல் போய்விடும். என்ன என்று கேளுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன் அவர்கள், இதற்கு எல்லையே கிடையாது. அதாவது, எந்த உறுப்பினர் பேசும்போதும், யார் வேண்டுமானாலும் எழுந்து Point of Order என்று கேட்டு, குறுக்கிட்டு, குழப்பத்தை உண்டாக்கலாம். இதுவே நடைமுறையாக வந்து, அதை எல்லோரும் பின்பற்றுவதற்கு நீங்கள் அனுமதிக்கிறீர்களா? (குறுக்கீடு) எல்லோரும் பின்பற்றுவதற்கு இதை நீங்கள் அனுமதிக்கிறீர்களா? இதைத்தான் நான் கேட்கிறேன். உங்கள் தி.மு.க. உறுப்பினர்கள் பேசுகிறபோதும், ஆளுங்கட்சியின் சார்பாக ஓர் உறுப்பினர் எழுந்து Point of Order என்று கேட்டு, அவருடைய பேச்சை மடக்கலாம். அதற்கு வாய்ப்பு இருக்கிறது. இந்த நடைமுறையை நீங்கள் அனுமதிக்கிறீர்களா? நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா? ஒப்புக்கொள்கிறீர்களா?

***திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்குத் தெரியாதது அல்ல. மிக முக்கியமான பிரச்சினை பற்றி ஒருவர் பேசிக்கொண்டிருக்கிறபோது, தங்களுடைய கவனத்தை ஈர்ப்பதற்காகத்தான் Point of Order கிளப்புகிறார்கள். சில நேரங்களில் வீம்புக்குச் செய்வதும் உண்டு. இல்லையென்று சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சில நேரங்களில் அல்ல பல நேரங்களில்தான்... (சிரிப்பு)



***திரு. துரைமுருகன்:** ஆனால் பல நேரங்களில், நியாயத்திற்கு எழுப்புவதுண்டு. அது நியாயமா, வீம்பா என்பதை நீங்கள் பார்த்து, முடிவு பண்ணிக்கொள்ளலாம். இந்த ஒரு Point of Order-க்கு allow பண்ணுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள். அன்வர் ராஜா உட்காருங்கள்.

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அன்வர் ராஜா அவர்கள் பேசுகின்ற நேரத்திலே, மதுரை மீனாட்சி அம்மன் கோயில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது Point of Order கிடையாது. உட்காருங்கள். அன்வர் ராஜா, பேசுங்கள். (குறுக்கீடு) அவருடைய பேச்சில் சொல்வது Point of order இல்லை. Point of Order என்பது, அவையினுடைய நடவடிக்கைகள் சம்பந்தமாகவே கிளப்பப்படுவதுதான் Point of Order. இது Point of Order கிடையாது.

**திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்கிற குற்றச்சாட்டுகளெல்லாம் proved charges. நிரூபிக்கப்பட்ட குற்றச்சாட்டுகள்தானே தவிர, ஹேஷ்யமாக நான் எதையும் சொல்லவில்லை. நான் அன்போடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்; மதுரையிலே இருக்கின்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய மாமன்ற உறுப்பினர் லீலாவதி அவர்கள் கொலை செய்யப்பட்டார்கள். அப்படிக் கொலை செய்யப்படுகிறபோது... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடிக்கட்டும்; உங்களுக்கு வாய்ப்பு தருகிறேன்.

**திரு. அ. அன்வர் ராஜா:** அவர் கொலை செய்யப்படுகிறபோது, சாதாரணமாக ரேஷன் கார்டு சரியாக விநியோகம் செய்ய வேண்டுமென்று கேட்ட காரணத்திற்காக, அந்த அம்மையார் அங்குக் கொலை செய்யப்பட்டார். கொலை செய்யப்பட்டதிலே ஆத்திரப்பட்டு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்கள் வேண்டுமானால், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய இரண்டு கொடிக் கம்பங்களை உடைத்திருக்கலாம். அது வேறு விஷயம். கொலை செய்யப்பட்டால்,

தமிழ்நாடு அரசு காப்பகம்
2243?5
சென்னை-600 008

வேண்டும். சம்பந்தப்பட்டவர்களை நீதிமன்றத்தின் முன்னாலே நிறுத்த வேண்டும். கொடிக் கம்பம் உடைந்திருந்தால், கொடிக் கம்பம் உடைத்ததற்கு ஒரு வழக்குப் போட்டிருக்க வேண்டும். அதுதான் நியாயம். ஆனால், அன்றைய முதலமைச்சர் அவர்கள் என்ன பேசினார்கள்? இதே மன்றத்தில் "சாது மிரண்டால் காடு கொள்ளாது" என்று பேசினாரா, இல்லையா? (மேசையைத் தட்டும் ஒலி) பேசியதன் விளைவாகத்தானே அங்கு சண்டை வந்தது? (மேசையைத் தட்டும் ஒலி) மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்கள் அடித்து விரட்டப்பட்டார்களா, இல்லையா? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன், இதிலே என்ன இருக்கிறது? (குறுக்கீடுகள்) அவருடைய பேச்சிலே ஏதாவது உங்களுக்கு மாறுபாடு இருந்தது என்றால் சொல்லுங்கள்.

* **திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையிலே கவுன்சிலராக இருந்த லீலாவதி கொலை வழக்கில் தி.மு.க. காரர்கள் கைது செய்யப்பட்டு, பல ஆண்டு காலம் அவர்கள் சிறையில் இருக்கிறார்கள். சி.பி.சி.ஐ.டி. விசாரணை வேண்டுமென்று கேட்டார்கள்; அந்த கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்கள். அதையும் தந்திருக்கிறோம். இன்றைக்கு எங்களுடைய தோழர்கள் சிறையில் இருக்கிறார்கள். அவர்களுக்குத் தண்டனை வழங்கப்பட்டிருக்கிறது. எனவே, திராவிட முன்னேற்றக் கழகக்காரர்கள் செய்தார்கள் என்பதற்காக அல்ல, மாற்றுக் கட்சியாக இருந்தாலும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கேட்கிறது என்ற காரணத்திற்காக, சி.பி. சி.ஐ.டி. கொடுத்தவர், முன்னாள் முதல்வர் கலைஞர் என்பதை தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**திரு. அ. அன்வர் ராஜா:** நான் சொல்லாததை நீங்கள் சொல்ல வேண்டாம். நான் சொல்வது வேறு. என்னுடைய குற்றச்சாட்டே வேறு. முதலமைச்சர் அவர்கள், அந்த வழக்கு நடந்து கொண்டிருக்கும்போது, அதில் தலையிட்டு, "சாது மிரண்டால் காடு கொள்ளாது" என்று சொன்னதற்குப் பிறகு, ஒரு மிகப் பெரிய கலவரம் அங்கே நடந்தது; மதுரையிலே நடந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ராம் பிரபுவினுடைய பெட்ரோல் பங்க் அடித்து நொறுக்கப்பட்டது. முன்னாள் மதுரை மேயர் பாலகிருஷ்ணன் அவர்களுடைய வீடு அடித்து நொறுக்கப்பட்டது. அந்தக் கலவரத்திற்கு அன்றைய முதலமைச்சர் திரு. கருணாநிதி அவர்கள்தான் காரணமாக இருந்தார். அவர் பேச்சுத்தான் காரணமாக இருந்தது என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. (மேசையைத் தட்டும் ஒலி) இதை நீங்கள்



யாரும் தயவுசெய்து மறுக்க முடியாது. (குறுக்கீடுகள்) ஒவ்வொன்றிற்கும் மறுத்துக் கொண்டேயிருந்தால் நான் பேச முடியாது. (குறுக்கீடுகள்) நான் பேச முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவருடைய கருத்தைச் சொல்கிறார். நீங்கள் எழுந்து மறுத்துச் சொல்லுங்கள். நீங்கள் மறுப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. (குறுக்கீடுகள்) அவருடைய கருத்தை அவர் சொல்கிறார். நீங்கள் எழுந்து மறுத்துச் சொல்லுங்கள். நீங்கள் சொல்கிறீர்கள்; தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்; உள்ளே இருக்கிறார்கள் என்று சொல்கிறீர்கள். அவர் சொல்வதும் குறிப்பேட்டில் இருக்கப்போகிறது; நீங்கள் சொல்வதும் குறிப்பேட்டில் இருக்கப்போகிறது. அன்வர் ராஜா, பேசுங்கள்.

**திரு. அ. அன்வர் ராஜா:** நான் அன்போடு தெரிவித்துக் கொள்ள விரும்புவது, கலவரங்கள் நடக்கின்றன. சம்பவங்கள் நடக்கின்றன. ஆனால், சம்பவங்களின்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதைப் பொறுத்துத்தான் ஓர் அரசினுடைய.... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பரிதி இளம்வழுதி, ஒரு கருத்தைச் சொன்னார். நான், அவர் பேசி முடித்ததற்குப் பிறகு வாய்ப்புத் தருகிறேன் என்று சொல்லியிருக்கிறேன். உட்காருங்கள்.

**திரு. அ. அன்வர் ராஜா:** சம்பவங்கள் நடக்கின்றன. ஆனால், சம்பவங்கள்.... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவரைப் பேசவிடாமல் ஏன் தடுக்கிறீர்கள்? (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. ஒரு கருத்து, இரண்டு கருத்து அல்ல, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். இவ்வளவு குறுக்கீடுகள் வந்தால், அப்படித்தான் நேரத்தைக் கொடுக்க வேண்டியிருக்கும், உட்காருங்கள்.

*பிற்பகல் 12-30*

**திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சம்பவங்கள் நடக்கின்றன. சம்பவங்கள் நடப்பதில் என்ன நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதைப் பொறுத்துத்தான் ஓர் ஆட்சியினுடைய திறமை கணிக்கப்படுகிறது. நாட்டிலே கலவரங்கள் நடக்குமானால், அந்தக் கலவரங்களை அடக்குவதற்கு இராணுவத்தால்கூட சில நேரங்களிலே முடிவதில்லை. போலீசாரால் சில நேரங்களிலே கலவரங்களை அடக்க

முடிவதில்லை. நாடு விடுதலை பெற்ற பிறகு வடநாட்டில் ஒரு மிகப் பெரிய வகுப்புக் கலவரம் வந்தது. அதை இராணுவத்தால் அடக்க முடியவில்லை. போலீசாரால் அடக்க முடியவில்லை. ஆனால் அண்ணல் மகாத்மா காந்தி அவர்கள் கால்நடையாகச் சென்று, நவகாளிக்குச் சென்று, மக்களைச் சந்தித்து, பார்த்து, மக்களிடம் அமைதி வேண்டிப் பெற்று அமைதியை நிலைநாட்டினார்கள் என்பதுதான் வரலாறு.

இந்த வரலாற்றுப் பின்னணியிலேதான், தமிழகத்திலே ஜாதிக் கலவரங்கள் நடந்தால், வகுப்புக் கலவரங்கள் நடந்தால், அந்தக் கலவரங்களைக் காவல் துறையால் மட்டும் அடக்க முடியாது என்று கருதி அன்று புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஓர் அருமையான சிஸ்டத்தை உருவாக்கினார்கள். மண்டைக்காட்டிலே கலவரம்; சிங்கப்பூருக்கும் மலேசியாவுக்கும் பயணம் போக வேண்டியிருந்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், அந்தப் பயணத்தை நிறுத்திவிட்டு மண்டைக்காட்டுக்குப் போனார்கள். நேரடியாக மக்களைச் சந்தித்தார்கள். கலவரம் ஒரு கட்டுக்கோப்புக்குள்ளே வந்தது.

இராமநாதபுரத்திலே கலவரம், 1981 ஆம் ஆண்டு. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் திடீரென்று இராமநாதபுரத்திற்கு வந்தார்கள். நான் எல்லாம் அப்போது ஒன்றியச் செயலாளராக இருந்தேன். சட்டமன்ற உறுப்பினர்கூட அப்போது அங்கு இல்லை. அவர் இங்கு இருக்கிறார். அவருக்கே தெரியாது. அங்கு வந்து கலவரம் நடந்த எல்லாப் பகுதிகளுக்கும் போனார்கள். தி.மு.க.வினுடைய நாடாளுமன்ற உறுப்பினரைக்கூட அழைத்துக்கொண்டு கூட்டிக்கொண்டு போனார்கள். ஏனென்றால், இந்த நாடு அமைதியாக இருக்கவேண்டுமென்று அவர்கள் விரும்பினார்கள். வெல்லா என்ற ஒரு கிராமம். அங்கு போக முடியாது என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். மூன்று கிலோமீட்டர் தூரம் நடந்துதான் போக வேண்டுமென்று சொன்னார்கள். 'நீ வேண்டுமானால் இங்கே இரு' என்று விறுவிறு என்று நடந்தே போனார்கள். எல்லோரும் பின்னாலே ஓடினோம். அங்கு போய் மக்களைப் பார்த்து, சந்தித்துப் பேசி கலவரத்திற்கு ஒரு முற்றுப்புள்ளியை அப்போது புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் வைத்தார்கள்.

அதைப்போலவேதான் புரட்சித் தலைவி அவர்களும், எதிர்க்கட்சியாக இருந்தபோதுகூட, போடியிலும், தேவாரத்திலும் கலவரம் நடந்தபோது நேரடியாகச் சென்று (மேசையைத் தட்டும் ஒலி) தேவாரத்திற்குப் போனபோது, எங்கள் அம்மா அவர்களைப் பார்த்து நீங்கள் உள்ளே வரவேண்டாம்; நிலைமை சரியில்லை என்று காவல் துறையினர்



சொன்னார்கள். ஆனால், அதையெல்லாம் கேட்காமல் நான் மக்களைச் சந்திக்க வந்திருக்கிறேன். எதுவாக இருந்தாலும் நான் பார்த்துக் கொள்கிறேன் என்று (மேசையைத் தட்டும் ஒலி) உள்ளே சென்று அவர்களைச் சந்தித்துக் கலவரத்திற்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு வந்தார்கள்.

அதற்குப் பிறகு, 1991 ஆம் ஆண்டு, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் முதலமைச்சராக வந்து, 1995-ல் ஆசிய விளையாட்டுப் போட்டி, தெற்காசிய விளையாட்டுப் போட்டி இங்கே நடைபெற்றது. அதிலே ஃபைனல் போட்டியில் நம்முடைய டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்தான் பரிசு வழங்க வேண்டும், முதலமைச்சர் என்ற முறையில். ஆனால், நெல்லையிலே கலவரம் என்று அதை ஒதுக்கித் தள்ளிவிட்டு, நெல்லைக்குப் போனார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நெல்லைக்குப் போய், அந்தக் கலவரத்தில் பாதிக்கப்பட்டவர்களை நேரில் சந்தித்து, பார்த்து, ஆறுதல் கூறிக் கலவரத்தை அடக்கினார்கள்.

அதற்குப் பிறகு கோவையிலே கலவரம் வந்தது. இராமநாதபுரத்திலே கலவரம் வந்தது. புரட்சித் தலைவி அவர்கள் வர முடியவில்லை. ஏன் தெரியுமா? அவர்களுக்கு Court Order-Condition Bail இருந்ததால் வரமுடியாத சூழ்நிலை வந்தது. வரமுடியாத நிலை வந்ததே, சும்மா இருந்தார்களா, இல்லை. அந்தக் கொள்கையிலே பின்வாங்கவில்லை. அன்றைய மத்திய அமைச்சர் ஜனார்த்தனம் அவர்களை இராமநாதபுரத்திற்கு அனுப்பி வைத்தார்கள். நான்தான் அப்போது மாவட்டச் செயலாளர். (மேசையைத் தட்டும் ஒலி) மாவட்டச் செயலாளராக இருந்த நான் அவர்களை அழைத்துச் சென்று, பாதிக்கப்பட்ட எல்லா இடங்களையும் பார்வையிட்டு நிவாரணம் தந்தோம். அதைப் போல கோவைக்கு ஒரு குழுவை அனுப்பி வைத்தார்கள். கலவரத்தில் கொல்லப்பட்ட திரு. செல்வராஜ் அவர்களுக்கு 50 ஆயிரம் ரூபாய் நிவாரணம் வழங்க அம்மா அவர்கள் ஏற்பாடு செய்தார்கள்.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன, என்ன? சொல்லுங்கள். பாயிண்ட் ஆஃப் ஆர்டரா?

**திரு. இ. புகழேந்தி:** அவர் பேசிக்கொண்டு இருப்பதுபற்றி ஒன்றுமில்லை. எல்லோருக்குமே 10 நிமிடம் என்று இருக்கும்போது, 35-40 நிமிடங்களாகி விட்டது. அவர் பேசிக்கொண்டிருக்கிறார்.

[2002 ஏப்ரல் 24

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதாவது, சட்டமன்ற மரபுப்படி சொல்கிறேன். சட்டமன்ற மரபுப்படி, நியாயப்படி, உறுப்பினர்களுடைய எண்ணிக்கைக்குத் தகுந்தாற்போலத்தான், விகிதாச்சாரப்படிதான் நேரம் ஒதுக்கப்பட வேண்டும். அப்படித்தான் செய்வது முறை. ஆனால், மானியக் கோரிக்கைகளானாலும், வேறு எந்தப் பிரச்சினைகளானாலும் ஆளுங்கட்சியின் சார்பாக ஒருவரை மட்டும்தான் பேச அனுமதித்துக் கொண்டிருக்கிறேன். (குறுக்கீடு) இல்லை, இல்லை. ஒருவரை மட்டும்தான் பேச அனுமதித்துக் கொண்டிருக்கிறேன். 132 பேர்களைக்கொண்ட அவர்களுக்கு ஒருவர் மட்டும்தான் பேசுகின்றார். மற்ற எல்லாக் கட்சிகளுக்கும் அதேபோல வாய்ப்பை நான் கொடுத்துக் கொண்டிருக்கிறேன். ஆக, அந்த விகிதாச்சாரப்படி, எண்ணிக்கைப்படித்தான் கணக்குப் பார்த்து நேரத்தை ஒதுக்க வேண்டுமென்று நீங்கள் முடிவு செய்தால் அதை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். நீங்கள் ஒத்துக்கொள்கிறீர்களா? ஆறு, ஏழு பேர்களுக்குப் பதிலாக, ஒரே ஒருவர்தான் இப்போது பேசுகின்றார். அன்வர் இன்னும் எவ்வளவு நேரம் வேண்டும்?

**திரு. அ. அன்வர் ராஜா:** சீக்கிரம் பேசி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. அ. அன்வர் ராஜா:** அப்படிக் கலவரங்கள் வருகின்றபோது, டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நேரில் வந்தார்கள். இப்போது முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக்கொண்டதற்குப் பிறகு, ஆண்டிப்பட்டி தேர்தலிலே வெற்றி பெற்று வந்ததற்குப் பிறகுகூட முதல்முறையாக எங்கு போனார்கள்? சங்கரலிங்கபுரம்தான் போனார்கள் என்பதை மறந்துவிடக்கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி) ஏன், என்ன காரணம்? நாட்டில் அமைதி இருக்க வேண்டுமென்ற involvement அவர்களுக்கு இருக்கிறது.

*பிற்பகல் 12-35*

அந்த எண்ணம் இருக்கிறது. நல்ல எண்ணம் இருக்கிறது. அந்த எண்ணத்தின் அடிப்படையிலேதான் முதல்வர் அவர்கள் முதல் முறையாக பதவி ஏற்ற உடனேயே அங்கு சென்று மக்களிடம் நேரிடையாக சமாதானத்தைக் கேட்டுப் பெற்று நிலைநாட்டியிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆக, குற்றம் வந்தால் தடுப்பது என்பது ஒன்று. குற்றம் வராமலே தடுப்பது மற்றொன்று. ஒரு மிகப்பெரிய புரட்சியாகத்தான் நம்முடைய டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இன்று செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).



2002 ஏப்ரல் 24] [திரு. அ. அன்வர் ராஜா]

கோயில்களிலே அன்னதானம் வழங்கப்படுகிறது. இப்பொழுது வழங்கப்படுகிறது. புரட்சித் தலைவி அவர்கள், அதை அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். அதைக்கூட நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஸ்டாலின் அவர்கள் இங்கு பேசுகின்றபோது சொன்னார்; நிதிநிலை பூஜ்ஜியமாக இருக்கிறது; பூஜ்ஜியத்தை வைத்து எப்படி ராஜ்ஜியத்தை முன்னாலே கொண்டுவர முடியும் என்று சொன்னார். அவருக்கும் தமிழ் நன்றாகத் தெரியும். அவர்கள் எல்லாம் தமிழிலே வித்தகர்கள் என்று சொல்லிக் கொள்கிறார்கள். அவருக்கு ஒரே ஒரு கண்ணதாசன் பாடலை மட்டும் நான் பதிலாகச் சொல்கின்றேன். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அன்வர், பூஜ்ஜியம், ராஜ்ஜியம் இரண்டுமே தமிழ் அல்ல. (சிரிப்பு)

**திரு. அ. அன்வர் ராஜா:**

*"பூஜ்ஜியத்துக்குள்ளே ஒரு
ராஜ்ஜியத்தை ஆண்டு கொண்டு
புரியாமலே இருப்பான் ஒருவன்-அவனை
புரிந்து கொண்டால்
அவன்தான் இறைவன்"*

இதுதான் கவியரசு கண்ணதாசன் சொல்லியிருக்கிற பாடல். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, எங்கள் அம்மா அவர்கள் என்ன செய்யப்போகிறார்கள் என்று உங்களிடம் சொல்லிக்கொண்டா செய்ய முடியும்? புரட்சி என்றால் என்ன? திடீர் என்று செய்வதுதான் புரட்சி. திடீர் என்று அன்னதானத் திட்டம் என்று சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). இலட்சக்கணக்கான மக்களின் உள்ளங்கள் நிறைந்தன. உங்கள் அடி வயிற்றைக் கலக்கியது. அதுதான் புரட்சி. (மேசையைத் தட்டும் ஒலி). அன்னதானத் திட்டம் என்று சொன்னார்கள். பிறகு உங்களிடம் சொல்லிக்கொண்டு செய்தால் அதற்குப் புரட்சி என்று பெயர் அல்ல. அது நிகழ்ச்சி. 10 நாட்களுக்குப் பின்னாலே நடக்கப்போகின்ற சம்பவத்தை முன்னாலே தெரிவிப்பது "நிகழ்ச்சி". அதனால்தான் புரட்சித் தலைவியாக இருக்க முடிகிறது. நாளைக்கு என்ன சொல்வார்கள் என்று யாருக்குத் தெரியும்?

திடீர் என்று ஒரு திட்டத்தைச் சொல்வார்கள். அது ஏழைகளைப் பாதுகாக்கின்ற திட்டமாக அமையும். எனவே, பசி என்பது மிகக் கொடூரமான ஒன்று. பசியைப்பற்றி எல்லோரும் சொல்லியிருக்கிறார்கள்.

"தேனாறு பாயுது
செங்கதிரு சாயுது - ஆனாலும்
மக்கள் வயிறு காயுது"

என்று பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பசியைப் பற்றிச் சொன்னார். பாரதி பசியினுடைய உச்சத்திலே இருக்கின்றபோது பசியைப் பொறுக்கமுடியாமல் இருக்கின்றபோது என்ன சொன்னார்.

"இனியொரு விதிசெய் வோம்-அதை
எந்த நாளும் காப்போம்.
தனியொருவனுக் குணவிலை யெனில்
ஜகத்தினை அழித்திடு வோம்"

என்று பாரதி சொன்னார். (மேசையைத் தட்டும் ஒலி) அதே பாரதி கொஞ்சம் கோபம் அடங்கிய உடனே சோறு இல்லையென்று சொன்னால் ஒருவரும் கேட்கவில்லையே என்று மனம் நொந்து அப்புறம் சொன்னார்.

"வயிற்றுக்குச் சோறிட வேண்டும்-இங்கு
வாழும் மனிதருக் கெல்லாம்
பயிற்றிப் பலகல்வி தந்து இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும்."

சோறு போடாமல் ஆனா, ஆவன்னா என்றால் எவன் ஐயா கேட்பான்? ஒருவரும் கேட்கமாட்டார்கள்.

கொஞ்சம் சோறு போடுங்கள் என்று கெஞ்சிச் சொன்னார். அதையும் கேட்கவில்லை. அப்புறம் சொன்னார். அவர் நொந்து போய்விட்டார். நொந்து போய்,

"கஞ்சி குடிப்பதற்கிலார்-அதன்
காரணங்கள் இவை யென்னும் அறிவுமிலார்."

குடிப்பதற்கு கஞ்சி இல்லை. அதற்கு என்னதான் காரணம் என்று தெரியக்கூடிய அறிவும் என்னுடைய ஜனங்களுக்கு இல்லையே; இவர்களுடைய துயரை யார் துடைப்பார் என்று ஏங்கினான் பாரதி. அந்த ஏக்கத்தைப் போக்குவதற்கு, பாரதி பாடி ஒரு 40, 50 ஆண்டுகளுக்கு பிறகு, பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளுடைய வயிற்றுப் பசியையாவது போக்கவேண்டுமென்று புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் சத்துணவைக் கொண்டு வந்தார். இன்று பாமரனுடைய பசியையும் போக்க வேண்டும் என்று நம்முடைய அம்மா அவர்கள் அன்னதானத் திட்டத்தைக் கொண்டு வந்து இருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) இதைக்கூட பட்டுக்கோட்டை சொன்னார்.

"வசதியிருக்கிறவன் தர மாட்டான்,
அவனை வயிறு பசிக்கின்றவன் விடமாட்டான்"



என்று பட்டுக்கோட்டையார் சொன்னார். வசதியிருக்கின்றவன் கொடுக்க மாட்டான். ஆனால் அவனை வயிறு பசிக்கின்றவன் விடமாட்டான் என்று சொன்னார். நான் எதற்காக இதைத் தெரிவிக்க விரும்புகின்றேன் என்றால் பசி எவ்வளவு கொடுமையானது என்பது உண்மை. ஆனால் பசியினால் என்ன விளைவுகள் ஏற்படுகின்றன என்பதை நம்முடைய கவியரசர் கண்ணதாசன் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்.

"அடிவயிறு பற்றிவிட்டால்
அடுத்து நடப்பதென்ன?
கொடியபசி வந்துவிட்டால்
குமுறும் எரிமலைதான்!

பசியால் திருட்டுவரும்;
பகை வளரும்; பொய்விளையும்;
பசியால் உறவினிலும்,
படுகொலைகள் மெத்த வரும்!

பசியால் புரட்சிவரும்;
பாமரர்கள் சேர்ந்தெழுந்தால்
அசையாத மாளிகையும்
ஆடிப் பொடிபடுமாம்"!

என்று கண்ணதாசன் சொன்னார். பசியால் என்ன வரும்? பசியால் திருட்டு வரும், கொலை நடக்கும், பகை வரும், பசியால் உறவினிலேகூட கொலை வரும். ஆக கொலை, திருட்டு, கொள்ளை, பசி அவ்வளவையும் நீக்கவேண்டுமென்றால் சோறுபோட்டால் எல்லாவற்றையும் நீக்கிவிடலாம், எனவே, இந்தக் காவல் துறைக்குக் குற்றங்கள் வரக்கூடாது என்ற காரணத்திற்காக, குற்றங்களைத் தடுக்க வேண்டும் என்பதற்காக, கோயில்களிலே அன்னதானத் திட்டத்தைக் கொண்டுவந்து ஒரு மிகப் பெரிய புரட்சியை (மேசையைத் தட்டும் ஒலி) டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், இன்றைக்கு உருவாக்கியிருக்கிறார்கள். அதை நீங்கள் தயவு செய்து உணர்ந்துகொள்ள வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. திரு. பொன்முடி, உட்கார்ந்து கொண்டு பேசுவது முறையற்றது. (குறுக்கீடுகள்) சரியில்லை. ஏற்கெனவே எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கிறீர்கள். நீங்கள் இன்றைக்கு வந்து உட்கார்ந்து இருப்பதற்கே காரணம் முதலமைச்சர் அவர்களுடைய பெருந்தன்மைதான் காரணம் என்பதைத் தயவுசெய்து மறந்துவிடாதீர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். அன்வர் அவர்கள்.

பிற்பகல் 12-40

**திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட அரசாங்கத்தை, ஒரு சமூகநல அரசாங்கத்தை, ஏழைகளைக் கவனிக்கிற அரசாங்கத்தை Mini Emergency அரசாங்கம் என்று முன்னாள் முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நான் அன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். 1996 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம், என்ன காரணத்திற்காக நம்முடைய டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கைது செய்யப்பட்டார்கள்? விசாரணை என்று கைது செய்யப்பட்டார்கள். விசாரிக்க சிறைச்சாலைக்குள்ளே இருந்தார்கள். உள்ளே வைத்துவிட்டு அன்றைய முதலமைச்சர் ஓர் அறிக்கை விட்டார். என்ன அறிக்கை? வீரப்பனுக்குப் பொது மன்னிப்பு என்று ஓர் அறிக்கை விட்டார். கர்நாடகம் அதை ஆட்சேபித்தது. கர்நாடகம் ஆட்சேபித்ததற்குப் பிறகு, இந்த இரண்டு செய்திகளையும் சிறைச்சாலைக்குள் இருந்து நம்முடைய டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பார்த்து, பின்னர் ஒரு அறிக்கையை வெளியிட்டார்கள். 'அவசரப்பட்டு இப்படி ஒரு முதலமைச்சர் தெரிவித்து அவமானப்படலாமா? அண்டை மாநிலத்தின் கண்டனத்திற்குள்ளான திரு. கருணாநிதி அவர்களே, இது தமிழ்நாட்டிற்கு ஏற்பட்ட தலைகுனிவு அல்லவா?' என்று டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மிக நியாயமான ஒரு கேள்வியைக் கேட்டார்கள். அதற்கு என்ன நடவடிக்கை நீங்கள் எடுத்தீர்கள்? உடனடியாக அன்றைய முதலமைச்சர், சொல்லக்கூடாத வார்த்தை ஒன்றைச் சொன்னார். நான் அதை இந்த அவையில் சொல்லக்கூடாத ஒன்று. அதற்கு அடுத்து, என்ன செய்தார்கள் ?

Visitors not allowed. யாரும் அம்மாவைப் பார்க்கக் கூடாது என்று சொன்னீர்களா இல்லையா? நான் அன்போடு கேட்க விரும்புகிறேன். இந்த தேசத்தினுடைய விடுதலைக்காகப் போராடிய அண்ணல் காந்தியடிகள் சிறையில் இருந்திருக்கிறார். புனே எரவாடா சிறையில் இருந்தார். அங்கேயிருந்துகொண்டு நாட்டு மக்களுக்கு அறிக்கை விட்டிருக்கிறார். செய்திகள் தந்திருக்கிறார்கள். வெள்ளைக்காரன் அதைத் தடுக்கவில்லை. நேரு பெருமான் சிறையிலிருந்து தன்னுடைய மகளுக்கு Golden Letters என்று சொல்கிற அளவுக்கு தொடர்ந்து கடிதங்கள் எழுதியிருக்கிறார். வெள்ளைக்காரன் அதைத் தடுக்கவில்லை. நீங்கள் இப்போது Mini Emergency என்கிறீர்களே....(குறுக்கீடு) Emergencyயில் சிறைக்குள்ளே இருந்தார்களே, இருந்தவர்கள் எல்லாம்கூட....(குறுக்கீடு) I am not yielding.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடிக்கட்டும்.

**திரு. அ. அன்வர் ராஜா:** Emergency என்றும் Mini Emergency என்றும் வர்ணிக்கிறார்களே? Emergency-யில் யாரெல்லாம் உள்ளே இருந்தார்கள்? இன்றைக்கு இருக்கிற பிரதமர் அவர்கள் இருந்தார். அத்வானி அவர்கள்



இப்படி எல்லோரும் இருந்தார்கள். ஜே.பி. இருந்தார். அவர்கள் Emergency-யில் உள்ளே இருக்கிறபோதுகூட அறிக்கை விடுவதை அன்றைய அரசாங்கம் தடுக்கவில்லை. அறிக்கை வந்தது. எப்படி வந்தது? வேண்டாத செய்திகள் அதில் இருந்தால் அதைக் கறுப்பு மைபோட்டு அழித்துவிட்டு வந்தது.

ஆனால் எமர்ஜென்சியை விட இந்த தேசத்திற்காகப் போராடிய மகாத்மா காந்தி அவர்களுக்குக்கூட இல்லாத கொடுமையை இந்த நாட்டில் எங்கள் அம்மாவிற்குத் தந்தது உங்கள் ஆட்சியா, இல்லையா? (மேசையைத் தட்டும் ஒலி) மறந்துவிட்டீர்களா? நீங்கள் கொடுத்தீர்களா, இல்லையா? அதையும் தாங்கிக் கொண்டு, சகித்துக்கொண்டு, எதிர்த்து நின்று உங்களை வெளியே அனுப்பிவிட்டு, இந்தக் கோட்டையிலே வந்து கம்பீரமாக அம்மா அவர்கள் அமர்ந்திருக்கிறார்களா இல்லையா? (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை அருள்கூர்ந்து நீங்கள் புரிந்துகொள்ளவேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அன்வர் ராஜா, அருள்கூர்ந்து ஒரு மணித்துளிக்குள் பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. அ. அன்வர் ராஜா:** ஒரு மணித்துளிதானா? இராமநாதபுரம் பக்கம் கொஞ்சம் போகலாம் என்று நினைக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அதற்குத் தனியாகப் போங்கள்.

**திரு. அ. அன்வர் ராஜா:** சேது சமுத்திரத் திட்டம் பற்றிப் பேச வேண்டுமென்று நினைத்தேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லையில்லை. அதையெல்லாம் தனியாகப் பேசுங்கள். காவல் துறை மானியக் கோரிக்கையில் வராது. (குறுக்கீடு) அவர் பேசி முடித்தவுடன் கூப்பிடுகிறேன்.

**திரு. அ. அன்வர் ராஜா:** எனவே, என்னுடைய கோரிக்கைகளை எல்லாம் மாண்புமிகு அம்மா அவர்களிடம் கொடுக்கிறேன். நான் ஒரே ஒரு வரியில் முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு) பரவாயில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவற்றையெல்லாம் தனியாகக் கொடுத்துவிடுங்கள்.

**திரு. அ. அன்வர் ராஜா:** நம்முடைய அன்பிற்குரிய அன்னை டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் முந்தைய ஆட்சியில், என்னுடைய இராமநாதபுரம் தொகுதியில் பெருங்குளத்தில் 95 மெகா வாட் எரிவாயு சுழலி மின் திட்டம் ஒன்றைத் தந்தார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அன்வர் ராஜா, அதையெல்லாம் அம்மா அவர்களிடத்திலே கோரிக்கையாகக் கொடுத்துவிடுங்கள்.

**திரு. அ. அன்வர் ராஜா:** அது நிறைவேறிவிட்டது. அது ஒன்றைப்பற்றிச் சொல்லிவிடுகிறேன். அது இன்றைக்கு நிறைவு பெற்றிருக்கிறது. அதற்காகவும், காவிரி குடிநீர்த் திட்டத்தைத் தந்ததற்காகவும், தொகுதி மக்களின் சார்பிலே அன்பிற்குரிய அன்னை அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இலக்கியத்திலே ஒரு செய்தி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அதைத் தனியாகப் பேசுவோம்.

**திரு. அ. அன்வர் ராஜா:** ஒரே வரி. முடித்துவிடுகிறேன். ஒரு பெரிய பண்ணையார் இருந்தார். அவர் எல்லோருக்கும் உணவு படைத்துக் கொண்டிருந்தார். அந்த நாட்டில் இருந்த மன்னன் அந்தப் பண்ணையாரைப் பார்த்து-பண்ணன் என்பது அவருடைய பெயர்-அவர் உணவு படைத்து, விருந்து படைத்து வாழ்நாள் முழுவதும் தினமும் அன்னதானம் வழங்கிக் கொண்டு இருந்தவரைப் பார்த்து-நான் செய்யாத ஒரு காரியத்தை நீ செய்திருக்கிறாயே என்று சொல்லி வாழ்த்தியதாக இலக்கியத்தில் ஒரு செய்தி இருக்கிறது. "யான் வாழு(ம்) நாளும் பண்ணன் வாழிய"—என்னுடைய வாழ்நாளையும் நீ வாழ்ந்து நாட்டு மக்களுக்குச் சேவை செய்ய வேண்டுமென்று மன்னன் சொன்னதாகச் செய்தி. ஆனால் இன்று உணவு படைக்கிறவரும் வள்ளலாக இருக்கிறார். தமிழகத்திற்கும் முதலமைச்சராக இருக்கிறார். எனவேதான் நான் அன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். வாழ்நாளில் - என்னுடைய வாழ்நாளில் மீதிநாள் இருக்குமானால் அதையும் நீங்கள் எடுத்துக்கொண்டு (மேசையைத் தட்டும் ஒலி) இறைவா, எங்கள் அன்னை என்னுடைய எஞ்சிய வாழ்நாளும் வாழ்ந்து இந்தத் தமிழகத்தைச் சிறப்புடையதாக மாற்றவேண்டும் என்று இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மானியக் கோரிக்கையில், காவல் துறையை நவீனப்படுத்துவதற்கு ரூ. 244.82 கோடியில் திட்டமிடப்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன்.

*பிற்பகல் 12-45*

'மனிதத் தன்மையோடு காவல் பணியாற்றுதல்' என்பதுகுறித்த பயிற்சியை நான் வரவேற்கிறேன். சாதிக் கலவரங்கள் தொடர்பாக, மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், காவல் துறைக் கண்காணிப்பாளர்கள், காவல் துறை துணைத் தலைவர்கள் 30



பேருக்கு 18-1-2002இல் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டதை நான வரவேற்கிறேன். காவல் துறைத் தலைமை இயக்குநர் முதல் காவலர் வரையிலான காவல் துறைப் பணியாளர்களுக்குப் பாலின வேறுபாடின்றி அனைவரையும் மதிக்கும் பயிற்சி அளிக்கும் திட்டத்தினை, 1.38 கோடி ரூபாய் செலவில் தொடங்கப்பட்டுள்ளது. இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் முதன்முதலாக இது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என்பதை நான் வரவேற்கிறேன். பொது மக்கள்-காவலர் நல்லுறவினை வளர்க்க, 'காவலர் நண்பன்' என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த அமைப்பு, இராமநாதபுரம் மாவட்டத்தில் முதலிலே அமைக்கப்பட்டு, பின் பிற மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டதை நான் வரவேற்கிறேன்.

126 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் அமைத்து இருப்பதை வரவேற்கிறேன். இந்த ஆண்டு 50 தொடங்கப்பட்டிருக்கிறது. மாநிலத்திலுள்ள 1,217 வழக்கமான காவல் நிலையங்களிலும் ஒரு பெண் உதவி ஆய்வாளரையும் இரண்டு இரண்டாம் நிலைப் பெண் காவலர்களையும் நியமனம் செய்ய ஆணையிட்டுள்ளதை நான் வரவேற்கிறேன். 3,651 பணியிடங்கள் புதிதாக இதிலே கிடைக்கின்றன. இதை நான் அன்போடு வரவேற்கிறேன்.

2001-2002 ஆம் ஆண்டில் 287 வட்ட காவல் நிலையங்களில் மட்டும் ஒரு பெண் உதவி ஆய்வாளரையும், இரண்டு இரண்டாம் நிலைப் பெண் காவலர்களையும் நியமிக்க ஆணையிடப்பட்டுள்ளதை வரவேற்கிறேன். இதிலே, 861 பேர் வேலைவாய்ப்பைப் பெறுகிறார்கள். அனைத்து மாவட்டங்களிலும் 1091 என்ற பொது எண் கொண்ட 'உதவிக்கரம் தொலைபேசி' நிறுவப்பட்டுள்ளதை வரவேற்கிறேன்.

காவல் துறைப் பணியாளர்களுக்கென, மூவாயிரம் குடியிருப்புகள் கட்ட 4-2-2002 ஆம் நாள் அரசாணையை வரவேற்கிறேன். சென்னை மாநகரிலும், பிற இடங்களிலும் உள்ள பகுதி நேர துப்புரவுப் பணியாளர்களுக்கான ஊதிய உயர்வு, ரூ. 455-லிருந்து ரூ. 900ஆக உயர்த்தியுள்ளதை வரவேற்கிறேன், வரவேற்கிறேன்.

இந்தக் குறிப்பேட்டிலே இருக்கிற அனைத்து அம்சங்களையும் மனமார உளமார வரவேற்று அமைகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது, தான் எடுத்துச் சொல்ல வந்த கருத்துக்காக, மற்றவற்றை ஆதாரமாக உண்மைக்கு மாறான ஒரு

தகவலை இந்த அவைக்குத் தந்திருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிறையிலே இருக்கிறபோது அறிக்கை விட்டார்கள்; அதை அன்றைக்கு இருந்த ஆட்சி ஒத்துக்கொள்ளவில்லை; எனவே, interview நிறுத்திவிட்டது என்று சொல்லிவிட்டு, அதோடு நிறுத்தாமல், அன்றைக்கு மிசா காலத்திலே இருந்தவர்கள் எல்லாம்கூட, ஜோதிர்மாய் பாசு, வாஜ்பாயி போன்ற தலைவர்கள் எல்லாம் சிறையிலே இருந்து அறிக்கை விட்டார்கள் என்று ஒரு தவறான கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள், தன்னுடைய மகளுக்கு எழுதிய கடிதத்தை அங்கிருந்து எழுதவில்லையா என்றார். கடிதம் எழுதுவது வேறு; அதைக்கூட அவர்கள் எல்லாம், தொகுத்துத் தந்து வெளியீடு செய்தார்கள். மகளுக்குக் கடிதம் World History இல் எழுதினார். அதற்காக அல்ல...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை; என்ன சொல்ல வருகிறீர்கள்?

**திரு. துரைமுருகன்:** நான் என்ன சொல்ல வருகிறேன் என்றால், 'மிசா' காலத்தில், தலைவர்கள் உள்ளே இருந்து அறிக்கை விட்டார்கள்; அதுமாதிரிதான் எங்களுடைய தலைவியும் அறிக்கை விட்டார்கள் என்று சொல்கிறார். நான் இப்போது சொல்கிறேன்; அதை முதலமைச்சர் ஒப்புக்கொள்கிறாரா என்று அறிய விரும்புகிறேன். சிறையிலே இருப்பவர்கள் யாராக இருந்தாலும் சரி, நானாக இருந்தாலும், நீங்களாக இருந்தாலும், இன்னொருவராக இருந்தாலும், மற்றவர்களாக இருந்தாலும், சிறையிலே இருக்கிறபோது, வெளியிலே அறிக்கை விடலாம் என்பதை இந்த அரசு கொள்கை அளவிலே ஏற்றுக்கொண்டு, 'ஆமாம் இனிமேல் விடலாம்' என்று அறிவிப்பதற்கு இந்த அரசு முன்வருமா என்பதை மட்டும் அறிய விரும்புகிறேன்.

* **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்போது நடந்த உண்மையை, இப்போது விளக்க வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. அன்றைக்கு நான் சிறையில் இருந்து கொண்டு அறிக்கை வெளியிடவில்லை. என்னைக் காண பலர் வருவார்கள். அவர்களில் ஒருவர் பத்திரிகையோடு தொடர்பு உள்ளவர் அவர் என்னைப் பார்த்தபோது ஒரு கேள்வி கேட்டார். அதற்கு நான் அவரிடம் பதில் தெரிவித்தேன். அதை அவருடைய பத்திரிகையில் அவர் வெளியிட்டுவிட்டார். இதைத்தான் அறிக்கை என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்வர் ராஜா அவர்கள் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள் ஆனால், அன்றைக்கே அந்தச் செய்தி பத்திரிகையிலே வந்துவிட்டது என்பதற்காக, அதன் பிறகு, என்னை யாரும் பார்க்கக்கூடாது என்று



அன்றைய முதலமைச்சர் உத்தரவு போட்டார் என்பது உண்மைதான். அதன் பிறகு, பார்வையாளர்களே அனுமதிக்கப்படவில்லை. நான் தனிமையில்தான் வைக்கப்பட்டிருந்தேன் என்பது உண்மை.

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே கருத்து....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன கருத்து?

**திரு. பரிதி இளம்வழுதி:** பேரவைத் தலைவர் அவர்களே, எப்போது பார்த்தாலும் உங்களுடைய பார்வை என்மீது அக்கினிப் பார்வையாக இருக்கிறது....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, நீங்கள் என்ன கேள்விகள் கேட்க வேண்டுமோ கேளுங்கள். இந்தக் கிண்டலும் கேலியும் வேண்டாம். நீங்கள் என்ன தரம் என்று எனக்குத் தெரிகிறது.

**திரு. பரிதி இளம்வழுதி:** அதைத் தவிர்த்து நான் இதற்கு வந்துவிடுகிறேன். 1991-லே இருந்து 1995 வரைக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆட்சி செய்த காலத்திலே, நானும் தி.மு.க.-வின் சார்பிலே ஒற்றை உறுப்பினராக இங்கே இருந்தேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்வர் ராஜா அவர்கள், மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் அங்கே நடந்த சம்பவத்திற்கு, கலைஞர், "போயஸ் தோட்டத்து சதி" என்று சொன்னார்" என்று சொன்னார். அதற்கு என்ன ஆதாரம் என்று எனக்குத் தெரியாது. ஆனால், அவைக்குறிப்பிலே இருக்கிற ஒரு ஆதாரத்தை நான் சொல்கிறேன். அன்றைக்கு அம்மையார் ஆட்சிப் பொறுப்பிலே இருக்கிற நேரத்தில், எதிர்க்கட்சி வரிசையிலே இருந்த நான், அன்றைக்குத் தொடர்ந்து...

*பிற்பகல் 12-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, மீனாட்சியம்மன் கோயில் சம்பந்தமான விவகாரத்திற்கு விளக்கம் சொன்னீர்கள். அதோடு உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை, உட்காருங்கள். அடுத்து திரு. ஞானசேகரன். (குறுக்கீடுகள்).

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசிய பின் சரியில்லை என்றால் எடுத்துவிடுங்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மீனாட்சி அம்மன் கோயில் சம்பந்தமாக சொல்ல வேண்டும் என்றீர்கள்; சொல்லி விட்டீர்கள்; உட்காருங்கள். (குறுக்கீடு) அப்புறம் அன்றைக்கு நடந்தது, அவைக்குறிப்பில் இருப்பது, அதையெல்லாம் பேச அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) திரு. ஞானசேகரன்.

**திரு. பரிதி இளம்வழுதி:** நான் என்ன சொல்ல வருகிறேன் என்றால், (குறுக்கீடுகள்) இதற்குத்தான் அக்கினிப் பார்வை என்று. (குறுக்கீடுகள்) இதெல்லாம் நியாயமே இல்லை. (குறுக்கீடுகள்)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ... (குறுக்கீடுகள்).

**திரு. பரிதி இளம்வழுதி:** நான் என்ன சொல்ல வருகிறேன் என்று கேட்டுவிட்டு, தவறு என்றால், நீக்குங்கள்; அதுபற்றி எனக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால் பேசவே வாய்ப்பு கொடுக்கவில்லை என்றால், இது ஜனநாயகத்தின் குரல் வளையை நெரிக்கிற செயல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விளக்கம் சொல்லி விட்டார்கள். உங்கள் துணைத் தலைவர் வந்து ஒரு பிரச்சினைக்கு பதிலிலே விளக்கம் கேட்டார். விளக்கம் கேட்டு, சொல்லி முடித்துவிட்டார்கள். (குறுக்கீடுகள்) மீனாட்சி அம்மன் கோயில் சம்பந்தமாக அவர் பேசியதற்கு விளக்கம் சொன்னீர்கள். (குறுக்கீடு) சொல்லியாகிவிட்டது. முடித்தாகிவிட்டது; உட்காருங்கள்.

**திரு. பரிதி இளம்வழுதி:** Point of Order முழுமையாகச் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள்.

**திரு. பரிதி இளம்வழுதி:** Point of Order என்ன என்று சொல்கிறேன்; தவறு இருந்தால் நீக்குங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள்.

**திரு. பரிதி இளம்வழுதி:** அதாவது நான் அவைக்குறிப்பில் இல்லாததை சொல்லவில்லை.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) திரு. சி. ஞானசேகரன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் குறித்த மானியக் கோரிக்கைகளிலே பேசுகிற வாய்ப்பு நல்கிய தங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றிகளைக் காணிக்கையாக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். முதலிலே விவாதத்திற்கு உள்ளே போவதற்கு முன் காவல் துறை நண்பர்கள் சார்பாக இருக்கக்கூடிய சில கோரிக்கைகளை மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு முதலிலே சொல்லிவிட்ட பிறகு, விவாதத்திற்குள்ளே நுழைய விரும்புகிறேன்.

காவல் துறையில் பணியாற்றிக் கொண்டிருக்கிற அமைச்சுப் பணியாளர்களுக்கு, விரல் ரேகைப் பிரிவினருக்கு வழங்கப்பட்டு இருக்கிற Executive Status வேண்டுமென்று அவர்கள் பல ஆண்டு காலமாக கோரிக்கை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள்கூட அதை வழங்குவதற்காக ஓர் உறுதியைத் தந்தார்கள். ஆனால், நிதிநிலை அவர்களுக்கு இடம் கொடுக்கவில்லை. நிதிநிலை சீரானவுடன் அவர்களுக்கு Executive Status வழங்கக்கூடிய ஒரு நிலையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோல அமைச்சுப் பணியாளர்களில் compassionate ground-ல் appointment செய்யப்பட்டு இருக்கக்கூடியவர்களுக்கு இன்னும் சம்பளம் உயர்த்தப்படாமல், அவர்கள் பணிவரன்முறை செய்யப்படாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குப் பணிவரன்முறை செய்து கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் முன்பு முதல்வராக இருந்தபோது 1198 சப்-இன்ஸ்பெக்டர்களைத் தேர்வு செய்தார்கள். ஆனால் அந்தத் தேர்வு இடையிடையே நின்றுபோய், மூன்று தவணைகளில் அவர்கள் எடுக்கப்பட்டார்கள். கடைசி முறையாக எடுக்கப்பட்ட 98 பேர் இன்னும் T.S.P.-யிலே இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களோடு தேர்வு செய்யப்பட்டவர்கள் எல்லாம் Law and order-ல் வேலை செய்து கொண்டு இருக்கிற போது, இவர்கள் T.S.P.-யிலே, தமிழ்நாடு சிறப்புக் காவல் படையில் இருந்து கொண்டிருக்கிற காரணத்தினாலே, அவர்கள் தங்களை Law and order-க்கு அனுப்ப வேண்டுமென்று கோரிக்கை வைத்து இருக்கிறார்கள். அதையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பெண் சப்-இன்ஸ்பெக்டர்கள் இன்னும் நிறைய பேர் Promotion Panel-லில் வந்தும்கூட, அவர்கள் இன்ஸ்பெக்டர் ஆகாமல் பல ஆண்டுகாலம் அப்படியே இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு Promotion கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சில . பேர், சப் இன்ஸ்பெக்டர்களிலேயே சிறப்பு சப்-இன்ஸ்பெக்டர் என்று சிகப்புக் கயிறை போட்டு அவர்களை வித்தியாசப்படுத்தி, காட்டிக் கொண்டிருக்கிற ஒரு நிலையைச் சொல்லி, எங்களுக்கும் காக்கிக் கயிறை மாட்டுவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் அனுமதி தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். Risk Allowance இப்போது மாதத்திற்கு 100 ரூபாய் காவலர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. அதை அதிகப்படியாக 500 ரூபாயாக உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். Uniform வழங்கப்படவில்லை என்று சொல்கிறார்கள். அதுபோல் லீவு நாட்கள், அவர்கள் மாதத்தில் எடுக்கக்கூடிய லீவு நாட்களில் அவர்கள் பணியாற்றினால் அவர்களுக்கு சம்பளத்திற்கு இணையான ஒரு ஊதியத்தைக் கொடுக்க வேண்டும் என்று ஒரு கோரிக்கை வைத்து இருக்கிறார்கள். அதையும் செய்து கொடுக்க வேண்டும் என்று நான் மாண்புமிகு முதல்வரைக் கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய மாவட்டத்தில், சத்துவாச்சாரி என்பது, இப்போது தலைநகரமாக மாறிவிட்ட ஒரு சூழ்நிலை; அங்கே Traffic Police Station ஒன்று வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால் பல ஆண்டுகாலமாக நான் Traffic Police Station சத்துவாச்சாரிக்கு கேட்டு அது இன்னும் வராமல் இருந்துகொண்டிருக்கிறது. அதைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இப்போது விவாதத்திற்கு வருகிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் எங்களுடைய தமிழ் மாநில காங்கிரசினுடைய கோரிக்கையை ஏற்று, சொன்னவுடன் உடனடியாக, ராஜீவ் காந்தி கொலை வழக்கிலே முக்கிய குற்றவாளியாக இருந்து கொண்டிருக்கிற, Proclaimed offender ஆக இருந்து கொண்டிருக்கக்கூடிய பிரபாகரன் அவர்களை, நம்முடைய தமிழகத்தினுடைய நீதிமன்றத்தில் பெண்டிங்கில் இருந்து கொண்டிருக்கக்கூடிய N.B.W.-ஐ நிறைவேற்றுகிற முகத்தான், அவரை விசாரணைக்குக் கொண்டுவர வேண்டுமென்கிற ஒரு தீர்மானத்தை இந்த அவையின் மூலமாகக் கொண்டுவந்ததற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாக நான் நெஞ்சார்ந்த நன்றிகளை இங்கே காணிக்கையாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



பிற்பகல் 12-55

இதுகுறித்து பலபேர் இப்போது வெளியிலே பல விவாதங்களை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அவையினுடைய நேரத்தையே வீணடித்து விட்டார்கள். இந்தத் தீர்மானம் தேவையா? அமைதிப் பூங்காவாக இருந்த தமிழகத்தை விடுதலைப் புலிகள் எல்லாம் தமிழகத்திற்குள்ளே ஊடுருவி இதை வெடிகுண்டு கலாச்சாரத்திற்கு ஒரு களமாக அமைத்துக் கொடுத்து இந்தியாவினுடைய ஒரு இளைய தலைவராக இருந்த, நவீன இந்தியாவை உருவாக்கிக் கொண்டிருந்த பிரதமராக இருந்த எங்களுடைய அருமைத் தலைவர் ராஜீவ் காந்தி அவர்களை நம்முடைய தமிழ் மண்ணிலே இங்கே பலி கொடுப்பதற்குக் காரணமாக இருந்தவர்களுக்கு இன்று வக்காலத்து வாங்கிக் கொண்டிருக்கிறவர்களுக்கு நிச்சயமாக நீங்கள் ஒரு தடையைக் கொண்டு வரவேண்டும் என்று நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

T.N.L.A., T.N.R.T. போன்ற அமைப்புகள் மட்டுமல்ல, இன்னும் பல அமைப்புகள் இன்று விடுதலைப் புலிகளுக்கும் அதேபோல பிரபாகரனுக்கும் அவர்கள் வக்காலத்து வாங்கிக் கொண்டிருப்பது என்பது வேதனையான ஒரு செய்தி. அப்படிப்பட்ட அமைப்புகளுக்கு — ஏனென்றால் open-ஆக-actually they are openly supporting them-அப்படி open ஆக support செய்வது என்பது தமிழகத்தை மீண்டும் அவர்கள் அமைதிப் பூங்கா என்கிற நிலையிலிருந்து மாற்றி இதை ஒரு கலவர பூமியாக மாற்றக்கூடிய சூழலுக்கு அழைத்துச் செல்வார்களோ என்கிற அச்சம் எங்களுக்கு இருக்கிற காரணத்தாலே அப்படியெல்லாம், யார் எல்லாம் குரல் கொடுக்கிறார்களோ அவர்களை நீங்கள் தடை செய்து, அந்த அமைப்புகளை வேரோடு நீங்கள் விட்டு வைக்காமல் வேரறுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல..

* **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, T.N.L.A., T.N.R.T. போன்ற பிரிவினைவாத, தீவிரவாத அமைப்புகளை ஏற்கெனவே தமிழக அரசு, Criminal Law Amendment Act-ன்கீழ் கடந்த ஆண்டு 11-வது மாதம் தடை செய்துவிட்டது. ஆனால் அகில இந்திய அளவில் மத்திய அரசு Unlawful Activities Prevention Act-ன்கீழ் தடை செய்ய வேண்டுமென்று மீண்டும் மீண்டும் கோரிக்கை விடுத்துக்கொண்டிருக்கிறோம். மத்திய அரசு இன்னும் அந்தக் கோரிக்கையை ஏற்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. மத்திய அரசை வலியுறுத்தி மீண்டும் இதை எப்படியாவது இதுபோன்ற T.N.L.A., T.N.R.T. மட்டுமல்ல, அப்படி இல்லாதவர்கள் சிலர் பெயரை, வேறு பெயரிலே வைத்துக் கொண்டிருக்கிறவர்கள்கூட பலபேர், இன்று, வெளிப்படையாக பிரபாகரனுக்கு இங்கே வக்காலத்து வாங்குகிறார்கள். ஏதோ பிரபாகரனை நாம் கொண்டு வரவேண்டும் என்று சொல்கிற காரணத்தாலே இலங்கைத் தமிழர்களுடைய நலன் அங்கே பாதிக்கப்படுவதாக சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இலங்கைத் தமிழர்களுடைய அந்த உரிமைக்குக் குரல் கொடுக்கின்றவர்களாக இருந்தால், வாழ்வுரிமையிலே அக்கறை உள்ளவர்களாக இருந்தால், எந்தவிதமான கண்டிஷனையும் போடாமல் அல்லது வேறு வகையிலே வேண்டுமானால் ராஜீவ் காந்தியினுடைய கொலையிலே ஈடுபட்டிருக்கக்கூடிய பிரபாகரன் அவர்கள் ஆயுதத்தைக் கீழே போடுவோம் என்று சொன்னாலே இதற்கு ஒரு தீர்வு வந்துவிடும். அதையெல்லாம் விட்டுவிட்டு அதைச் சொல்வதற்கு இங்கே கொஞ்சம்கூட தைரியம் இல்லாதவர்கள் ஏதோ தமிழர்களுடைய அந்த உரிமையிலே நாமெல்லாம் தலையிட்டு விட்டோம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறவர்கள், நாம் எல்லாம் தமிழர்கள் இல்லாதது போலவும், அவர்கள்தான் பச்சைத் தமிழர்கள் போலவும் சொல்லிக் கொண்டிருப்பது நிச்சயமாக ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்று அல்ல. நாங்களும் தமிழர்கள்தான். இலங்கையிலே வாழ்கிற தமிழர்களுக்காக நிச்சயமாக நாங்களும் குரல் கொடுப்போம். ஆனால் குற்றம் செய்தவர்களை நாங்கள் விட்டு வைப்பதாக இல்லை. உப்பைத் தின்றவன் நிச்சயமாகத் தண்ணீர் குடித்தே தீரவேண்டும் (மேசையைத் தட்டும் ஒலி) என்கிற நிலையை உருவாக்க வேண்டும் என்பதுதான் எங்களுடைய நிலை என்பதை நான் இங்கே விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல வீரப்பனைப்பற்றி இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே இரண்டு, மூன்று இடங்களிலே குறிப்பிட்டிருக்கிறீர்கள். வீரப்பன் இன்னும் இந்த அரசுக்கு சவாலாகவே இருந்து கொண்டிருக்கக்கூடிய நிலை உண்மையிலே வருத்தத்தை அளிக்கக்கூடிய ஒன்று. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் போர்க்கால அடிப்படையிலே கொஞ்சம் நடவடிக்கை எடுத்து இதுவரை பிடிபடாமல் இருக்கக்கூடிய வீரப்பனைப் பிடிப்பதற்குக் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எதற்காக இதைச் சொல்கிறேன் என்றால், வீரப்பன் வெறும் வீரப்பனாக மட்டும் அங்கே இல்லை. நீங்கள் கொள்கை விளக்கக் குறிப்பிலேயே சொல்லியிருக்கிறீர்கள்,



வீரப்பனின் ஆள்பலமும் நடமாட்டமும் வெகுவாக முடக்கப்பட்டுவிட்டன என்று சொல்கிறீர்கள். ஆள் பலமும், அதேபோல ஆயுத பலமும் முடக்கப்பட்டிருக்குமேயானால் இதற்குள் வீரப்பன் நிச்சயமாகக் கைது செய்யப்பட்டிருக்க வேண்டும். இன்னும் வீரப்பனை நம்மாலே அணுகவே முடியவில்லை. அதற்காக ஓய்வுபெற்றுவிட்ட ஒரு அதிகாரியைக்கூட நாம் அவருடைய தலைமையில், நாம் இப்போது அவரை தலைவர் என்று அதிரடிப் படைக்குப் போட்டு செய்தோம். இருந்தாலும்கூட அதிலே இன்னும் பலன் கிட்டவில்லை. அதேபோல வெளி மாநிலத்திலே பணியாற்றிக் கொண்டிருக்கக்கூடிய - சென்னை கமிஷனர் - அவரை வீரப்பனைப் பிடிப்பதற்காக ஒரு assignment -க்காக கொண்டு வரப்பட்டவர், ஏனோ அங்கிருந்து அவரும் விடுவிக்கப்பட்டு இன்று சென்னை மாநகரத்தினுடைய கமிஷனராக போடப்பட்டுவிட்டார், சில நேரங்களிலே ஓய்வு பெற்றவர்களைக் கொண்டுவந்து தலைவராக போட்டுவிடுகிற காரணத்தாலே இன்று பணியிலே இருக்கிறவர்களுக்கு ஆர்வம் இல்லாமல் போய் விட்டதா என்னவென்று நமக்குப் புரியவில்லை.

*பிற்பகல் 1-00*

ஆகவே மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதை ஆய்ந்து பார்த்து உடனடியாக-அந்த வீரப்பனை சாதாரண ஒரு பெண், கர்நாடகாவிலே இருக்கக் கூடிய ஒரு பெண், டாக்டர் என்கிற போர்வையிலே போய் வீரப்பனைச் சந்திக்கிறார். ஒரு பத்திரிகையினுடைய ஆசிரியர் அங்கே போய் மிக சர்வ சாதாரணமாக வீரப்பனைப் போய் சந்திக்கிறார். அதைப்போலவே ,இங்கே சில பேர் வீரப்பனுக்கு வக்காலத்து வாங்கிக்கொண்டு இருக்கிறவர்கள் பலர் போய் நான் போகத் தயார், நான் பேசி எப்படியாவது அவரை சரண் அடைய வைக்கிறேன். நீங்கள் பொது மன்னிப்பு கொடுக்கத் தயாரா என்றெல்லாம் இன்று விவாதம் நடத்திக்கொண்டிருக்கிற சூழ்நிலையைப் பார்க்கின்றபோது அவர்களால் முடியக்கூடிய ஒன்று ஏன் Scotland Yard-க்கு இணையான நம்முடைய காவல் துறையால் முடியவில்லை என்பதுதான் என்னுடைய கேள்வி. It is a thousand dollar question still unanswered.

*** மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991 முதல் 1996ஆம் ஆண்டு வரை இருந்த என்னுடைய முந்தைய ஆட்சிக் காலத்தில்தான் வீரப்பனைப் பிடிப்பதற்காக இந்த சிறப்பு அதிரடிப் படை Special Task Force அமைக்கப்பட்டது. அப்போது அன்றைய காவல் துறை இயக்குநர் திரு. தேவாரம் தலைமையில் அந்த Special Task Force செயல்பட்டது. 150 பேர் கொண்ட ஒரு பெரிய

கூட்டத்தோடு, பல உயர் ரக ஆயுதங்களோடு இருந்த வீரப்பனின் கூட்டத்தை அவர்கள் வேட்டையாடி, 150 என்று இருந்த எண்ணிக்கையை 5 ஆகக் குறைத்தது என்னுடைய முந்தைய ஆட்சிக் காலத்தில் தான், திரு. தேவாரம் அவர்கள் தலைமையில் இயங்கிய அந்த Special Task Force செயல்பட்ட காலத்தில்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அப்போது ஆயுதங்களை எல்லாம் அன்றைய காவல் துறையினர் பறித்துவிட்டார்கள். ஆயுதங்களை இழந்து, ஆள் பலம் இழந்து, சாப்பாட்டிற்கே வழி இல்லாமல் வீரப்பன் காட்டில் அங்கும் இங்கும் அலைந்துகொண்டு இருந்தபோதுதான், இன்னும் சில நாட்களில் பிடிபட்டுவிடுவான் என்ற நிலைமை இருந்தபோதுதான், தேர்தல்கள் வந்தன. ஆட்சி மாற்றம் ஏற்பட்டது.

அதன் பின்னர் 1996 முதல் 2001 வரை இருந்த அன்றைய முதல்வர், அன்றைய ஆட்சி விரும்பி இருந்தால் வீரப்பனை பிடித்து இருக்கலாம். ஆனால் அன்றைய தினம் அதற்கான Political will இருக்கவில்லை. அன்றைய தினம், அன்றைய முதல்வர் பொறுப்பேற்றபோது, திரு. தேவாரம் அவர்கள் அவரிடம் சென்று அவரைச் சந்தித்து ஆட்சி மாற்றத்தினால் வீரப்பனை பிடிக்கின்ற பணியில் ஒரு தொய்வு ஏற்பட்டு விடக்கூடாது. என்னை நீங்கள் பணித்தால் இப்போதும் அந்தப் பணியில் நான் முழுமூச்சுடன் ஈடுபடத் தயார் என்று சொன்னபோது, அன்றைய முதல்வர், போ, போ நீ தேவை இல்லை எனக்கு, வேறு ஆட்கள் இருக்கிறார்கள் என்று சொல்லி, அவரை விரட்டி விட்டார் என்பதுதான் உண்மை. அதன் பிறகு 1996 முதல் 2001 வரை வீரப்பனைப் பிடிக்க எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அன்றைக்கு இருந்த Special Task Force முடக்கப்பட்டது. செயல்பட அனுமதிக்கப்படவில்லை என்பதுதான் உண்மை. அதனால்தான் மீண்டும் வீரப்பனுக்கு ஆள் பலமும், படை பலமும், ஆயுத பலமும் எல்லாமும் சேர்ந்தது. இங்கே மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் குறிப்பிட்டது போல் யாரெல்லாமோ அன்றைக்கு சுதந்திரமாகச் சென்று வீரப்பனைப் பார்த்தது, ஆனால் காவல் துறையால் அணுகமுடியாத வீரப்பனை பார்த்தது எல்லாம் தி.மு.க. ஆட்சிக்காலம். நீங்கள் குறிப்பிடுகின்ற அந்தப் பெண் டாக்டர், சில பத்திரிகையாளர்கள், இவர்கள், சில அரசியல் தரகர்கள் இவர்கள் எல்லாம் சுதந்திரமாகச் சென்று வீரப்பனை சென்று சந்தித்து திரும்பி வந்தது எல்லாம் அந்த ஆட்சிக் காலத்தில். ஆனால் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு மீண்டும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி ஏற்பட்ட பிறகு யாரும் அவ்வாறு சென்று வீரப்பனைச் சந்திக்க முடியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிச் சென்றவர்கள்



எல்லாம், கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதை நான் உங்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சில பேர் சொன்னார்கள். எங்களிடம் அந்தப் பொறுப்பை ஒப்படைத்தால் நாங்கள் வீரப்பனைக் கொண்டுவந்து உங்களிடம் சரணடைய வைக்கிறோம். எங்களிடம் அந்த பொறுப்பைக் கொடுங்கள். நாங்கள் சந்திக்கிறோம். சந்திப்பிற்கு ஏற்பாடு செய்கிறோம் என்று சொன்னார்கள். அப்படிப்பட்டவர்கள் இன்றைக்குச் சிறையிலே இருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே, ஏற்கெனவே இந்த அவையில் நான் முன்பு முதலமைச்சராக இருந்தபோது கூட இதைப்பற்றி எல்லாம் விளக்கமாகக் கூறி இருக்கிறேன்.

சாதாரண ஒரு சூழ்நிலையில் ஒரு குற்றவாளியைத் தேடுவது என்பது வேறு, அடர்ந்த காட்டுப் பகுதியில் ஒரு குற்றவாளியைத் தேடுவது என்பது வேறு. அடர்ந்த காட்டுப் பகுதியில் குறிப்பாக வீரப்பன் ஒளிந்து இருக்கும் அந்தக் காட்டுப் பகுதியில், 6 அடி தொலைவில் ஒரு யானை நின்றால் கூட கண்ணுக்குத் தெரியாது. அந்த அளவுக்கு அடர்ந்த காடுகள். அதனால் தான் காவல் துறைக்கு பல சிரமங்கள் இருக்கின்றன. இருந்தாலும் இப்போது வீரப்பனைப் பிடிக்கின்ற பணியில் எந்தவிதமான தொய்வும் ஏற்படவில்லை. சிறப்பு அதிரடிப் படை முடுக்கிவிடப்பட்டு இருக்கிறது.

பிற்பகல் 1-05

திரு. விஜயகுமார் அவர்களை Border Security Force-லிருந்து தமிழக காவல் பணிக்கு நாங்கள் கேட்டு அவரைப் பெற்றோம். அப்போது வீரப்பனைப் பிடிக்கின்ற Special Task Force-க்கு அவர் தலைமையேற்க வேண்டும் என்பதற்காகத்தான்- அவரைப் பெற்றோம். ஆனால், அதன் பிறகு இங்கே சென்னை, ஒரு மிக முக்கியமான நகரம்; ஒரு Metropolis, தமிழகத்தின் தலைநகரம். இங்கே இருக்கின்ற சூழ்நிலையைப் பார்த்து மிகவும் திறமையான, வலிமையான ஒரு காவல் துறை அதிகாரி இங்கே Commissioner ஆக தேவை என்பதால்தான், திரு. விஜயகுமார் அவர்களை அந்த Special Task Force-லிருந்து விடுவித்து, இந்தப் பணிக்கு இங்கே அமர்த்தினோமே தவிர, Commissioner-ஆக ஆக்கினோமே தவிர- வீரப்பனைப் பிடிக்கின்ற பணியில் எந்தவிதமான தொய்வும் ஏற்படவில்லை.

இன்றைக்கு தமிழக காவல் துறைக்கும், தமிழகத்தின் Special Task Force-க்கும், கர்நாடக அரசின் Special Task Force-க்கும் இடையே ஒரு நல்ல ஒத்துழைப்பு, ஒரு நல்ல ஒற்றுமை இருந்து வருகிறது. இணக்கமான சூழ்நிலையில் அவர்கள் ஒருவரோடு ஒருவர் ஒத்துழைத்து பணியாற்றுகின்ற

ஒரு நல்ல சூழ்நிலை உருவாகி இருக்கிறது. ஆகவே, விரைவிலேயே வீரப்பன் பிடிபட்டு விடுவான் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. இ. புகழேந்தி:** Point of Order. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் நீண்ட விளக்கத்தைத் தந்தார்கள். அவர்களுடைய முந்தைய ஆட்சிக் காலத்திலே எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், மற்றவைகளை எல்லாம் இங்கே விளக்கமாகச் சொல்லிவிட்டு, திரும்பவும், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்தபோது என்று சொன்னது எல்லாம், தேவாரம் பேசியதாகவும், கலைஞர் கூறியதாகவும் என்று அவர் சொன்னது, யார் சொன்னது, எப்படிச் சொன்னது என்று தெரியாமல், அந்த வாசகங்களை எல்லாம் இங்கே சொன்னதும், திராவிட முன்னேற்ற ... (குறுக்கீடு) நான் சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. தேவாரம் அவர்களே என்னிடத்தில் இதைத் தெரிவித்தார்.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் வீரப்பனைப் பிடிக்க வேண்டும் என்பதில் எந்தவிதமான சுணக்கமும் காட்டாமல் தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதுதான் உண்மையே தவிர, மீதம் எல்லாம், யாரோ சொன்னது, போனது என்ற கருத்தே தவிர, அது உண்மையல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புள்ளிவிவரங்களோடு மாண்புமிகு உறுப்பினர் பேசவேண்டும். 1993 ஆம் ஆண்டு Special Task Force-ஐ நான் முதல்வராக இருந்தபோது அமைத்த பிறகு, அவர்கள் 28 முறை காட்டிற்குள் வீரப்பன் கூட்டத்தோடு நேருக்கு நேர் combat-இல் ஈடுபட்டிருக்கிறார்கள். நேருக்கு நேர் மோதல் நடந்திருக்கிறது. துப்பாக்கிச் சூடு எல்லாம் நடந்திருக்கிறது. ஆனால், 1996 முதல் 2001 வரை தி.மு.க. ஆட்சிக் காலத்தில், திரு. கருணாநிதி முதல்வராக இருந்தபோது காவல் துறைக்கு அவர் பொறுப்பேற்றிருந்தபோது, ஒருமுறையாவது தமிழகத்தின் Special Task Force வீரப்பன் கூட்டத்தினருடன் மோதலில் ஈடுபட்டதா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.



**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வரவர்கள் முன்பு பொறுப்பிலே இருந்த நேரத்திலேதான் அதிகாரிகளை எல்லாம் கடத்திச் சென்று, வன அதிகாரிகளைக் கடத்திச் சென்று, மாவட்ட ஆட்சித் தலைவர்......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலமைச்சர் சொல்வது ஒரு புள்ளி விவரம். புகழேந்தி, முதலமைச்சர் சொல்வது ஒரு புள்ளி விவரம். அந்தப் புள்ளி விவரங்களுக்கு ஏதாவது விளக்கம் சொல்கிறீர்களா?

**திரு. இ. புகழேந்தி:** தீவிரமான நடவடிக்கையில் அன்றைக்கு தி.மு.க. அரசு ஈடுபட்டது. அதில் எந்தவிதமான வேறு கருத்தும், மாற்று கருத்தும் இல்லை என்பதுதான் முக்கியம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். உங்களுடைய கருத்தைச் சொல்லிவிட்டீர்கள். உட்காருங்கள். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருமை நண்பர் புகழேந்தி அவர்கள் எல்லா நடவடிக்கையும் எடுத்தோம் என்று சொன்னார்கள். நன்றி. என்ன நடவடிக்கை? பொதுவாக, குற்றவாளிகள் எல்லாம் இப்போது கதாநாயகர்களாக மாறிக் கொண்டிருக்கிறார்கள். T.V.-யில் பார்த்தோம். என்றால் அவர்கள்தான், பொதுவாக, நன்றாகப் பணி செய்யக்கூடியவர்கள், ஒழுங்காக கடமையாற்றக்கூடியவர்களுக்குக் கிடைக்கக்கூடிய மரியாதை கிடைக்காவிட்டாலும்கூடப் போகிறது. இப்படிப்பட்ட சில சமூக விரோதிகள் இன்று பெரிய கதாநாயகர்களாகச் சித்தரிக்கப்படுவதை முதலிலே இந்த அரசாங்கம் எப்படியாவது தடை செய்வதற்கு ஒரு சட்டத் திருத்தத்தையாவது கொண்டு வரவேண்டுமென்றுதான் நான் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏற்கெனவே எனக்கு சட்டம் சொல்லிக் கொடுத்த பேராசிரியர் கிருஷ்ணசாமி அவர்கள் இப்போது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலேதான் இணைந்திருக்கிறார். அவர் ஒருமுறை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, அவர் காட்டிற்குள்ளே போய் வீரப்பனைச் சந்தித்துவிட்டு, எப்படியாவது ஓர் சாதனை படைக்கலாம் என்று அவர் போய் மாட்டிக்கொண்டார். பிறகு இந்த அவையிலே நான் அந்தப் பிரச்சினையை எழுப்பி, அவரை எப்படியாவது அரசாங்கம் நடவடிக்கை எடுத்து விடுதலை செய்யவேண்டுமென்று சொன்னபோது, அவர் வெளியே வந்து பின்னர் எங்களிடம் சொன்னது, கடத்தல் லிஸ்ட்டில்.. வீரப்பன் கடத்தல் லிஸ்ட்டில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இருக்கிறார்கள்; நானும் இருக்கிறேன்; மறைந்துபோன எங்களுடைய

[திரு. சி. ஞானசேகரன்] [2002 ஏப்ரல் 24

தலைவர், மக்கள் தலைவர் திரு. மூப்பனார் அவர்களும் அந்த லிஸ்டில் இருப்பதாக அவர் சொல்லி, பிறகு நான்கூட அவையிலே அந்தப் பிரச்சினையை எழுப்பினேன். இப்படியெல்லாம் சமூக விரோதச் செயல்களிலே ஈடுபடுபவர்கள், தனியாக இப்படியெல்லாம் சந்தன மரத்தைக் கடத்தி, யானைகளைக் கொன்று குவித்துக் கொண்டிருக்கின்றவர்கள், மற்றவர்களையெல்லாம் கடத்துவேன் என்று சொல்லக்கூடிய அளவுக்கு இருப்பவர்களை இந்த நாட்டிலே விட்டு வைப்பது பேராபத்திலே கொண்டுவிடும் என்கிற காரணத்தினால். மாண்புமிகு முதல்வரவர்கள் உடனடியாகக் கைது செய்வதாகக் கூறியிருக்கிறார்கள். நன்றி.

அடுத்து, சென்னையில் கொலை, கொள்ளை பற்றி இங்கே நிறையப் பேர் பேசியிருக்கிறோம். இப்போது சமீபத்திலே மும்பை ரவுடி இந்த இடத்திலே—பொதுவாக ஏற்கெனவே பல ரவுடிகள் சுட்டுக்கொல்லப்பட்டிருந்தாலும்கூட, இடைவெளி ஏற்பட்டு விட்டது. இப்பொழுது சஞ்சய்காட்டியா என்பவர் புதிதாக. சென்னையிலே இரண்டு, மூன்று நாட்களுக்கு முன்னாலே, சஞ்சய்காட்டியா என்பவர் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கிறார் என்கிற செய்தி, நிச்சயமாக ஓரளவுக்கு எங்களுக்கு நம்பிக்கையைக் கொடுக்கிறது. ஆனால் நிறைய பேர் தமிழன், தமிழன் என்று சொல்லிக் கொண்டு அதனால் தமிழர்களை விட்டுவிடுகிறார்களோ என்று தெரியவில்லை.

பிற்பகல் 1-10

தமிழர்களாக இருந்தாலும், குற்றம் செய்தவர்கள் சகோதரனாக இருந்தாலும்கூட நிச்சயமாக தண்டிக்கப்பட முடியும் என்கிற உணர்வோடு நிச்சயமாக காவல்துறை, இருக்கக்கூடிய ரவுடிகளையெல்லாம் பிடித்து - அதாவது துப்பாக்கிச்சூடு வேண்டாமென்று சொல்லக் கூடியவர்களாக இருந்தாலும்கூட, இன்று இருக்கக்கூடிய பயத்தைப் பார்க்கிறபோது, நிறைய தொடர் கொள்ளைச் சம்பவங்களை, நிறைய நடந்து கொண்டிருப்பதைப் பார்க்கிறபோது, துப்பாக்கித் தோட்டாக்கள் பேசினாலும்கூட பரவாயில்லை. உடனடியாக நடவடிக்கை எடுத்து இரும்புக் கரம் கொண்டு இப்படிப்பட்டவர்களை நீங்கள் உடனடியாக ஒன்று சுட்டுத் தள்ளுங்கள், இல்லையென்றால் பிடித்து தூக்கிலாவது போடுங்கள், விசாரணைக்கு உட்படுத்துங்கள் என்று நான் பணிவன்போடு உங்களை கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் மூன்று மணித்துளிகளில் பேசி முடியுங்கள்.



2002 ஏப்ரல் 24]

**திரு. சி. ஞானசேகரன்:** காவல் நிலைய மரணங்கள் என்று பார்க்கிறபோது இன்றுகூட செய்தித்தாளில் பெரியகுளம் பகுதியிலே ஒரு நகை வியாபாரி, முத்துகிருஷ்ணன் என்பவரை காவல் துறையின் விசாரணைக்குக் கொண்டுபோனபோது, அங்கே விசாரிக்கப்பட்டபோது, அங்கே என்ன நடந்ததோ, அவர் உடனடியாக மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்படுகிறார். அங்கே அவர் இறந்துவிட்டார். பெரிய கலவரமே நடந்து இருக்கிறது. காவல் நிலைய மரணங்கள் நிறைய நடப்பதை அரசு எப்படியாவது தடுத்து நிறுத்துவதற்கு முனையவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.. ** இப்பொழுது கைகொளத்தூர் என்ற இடத்தில், பெரம்பலூர் மாவட்டத்தில் குற்ற எண் 31/2002 என்கிற வழக்கிலே எங்களுடைய தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் பஞ்சாயத்து யூனியன் சேர்மன் திரு. இராமலிங்கம் என்பவர், ஏதோ குடும்பத்திலே ஒரு சிறு தகராறு. அந்தத் தகராறுக்குப் போய், ஒரு சிறு கீறல் காயத்தை வைத்துக்கொண்டு, small aberration கழுத்திலே, அதற்காக 307 பிரிவில் வழக்கைப் போட்டு, அவர் இப்பொழுதுதான் நிறைய நாட்கள் சிறையில் இருந்துவிட்டு வெளியே வந்திருக்கிறார். S.P. நேரடியாக field-க்குப் போய் அவரை வாயில் பேசக்கூடாத வார்த்தைகளைப் பேசி, இழுத்துச் சென்று அடித்ததாகக்கூட புகார். இவற்றையெல்லாம் அறிந்து மாண்புமிகு முதல்வர் அவர்கள், காவல் துறைக்கும், பொதுமக்களுக்கும் இருக்கக்கூடிய அந்தத் தொடர்பை சுமுகமாக வைத்துக்கொள்வதற்கு அவர்களுக்கெல்லாம் நல்ல ஆலோசனைகள் வழங்கி அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல தருமபுரி மாவட்டத்தில், எங்களுடைய வேலூரைச் சார்ந்த பழனியம்மாள் என்பவருடைய மகள், திருமணம் செய்து கொடுக்கப்பட்டு, அவர் Forester wife- அவர் 28-12-2001 ஆம் தேதி பட்டப் பகலிலே அந்த -Forester- உடைய மனைவியும், மாமியாரும் கொல்லப்படுகிறார்கள். தர்மபுரி காவல் நிலைய கிரைம் நெ.2208/2001. இன்று வரை அந்த வழக்கு கண்டுபிடிக்கப்படவில்லை.

பெசன்ட் நகரிலே ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவினுடைய அலுவலர் விசுவநாதன் அவர்கள் கொல்லப்பட்ட வழக்கில் இதுவரை குற்றவாளி கண்டுபிடிக்கப்படவில்லை.

அதேபோன்று வாணியம்பாடியில் புதிதாக ஒரு கார் வாங்கிக் கொண்டு ஒரு யுனானி டாக்டர் போன போது சில ரவுடிகள்**

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

கார் சாவியை பயமுறுத்தி பிடுங்கிக் கொண்டு போய், இந்தக் காரை ஒப்படைக்க வேண்டுமானால் எங்களுக்கு இவ்வளவு ரூபாய் கொடுக்க வேண்டுமென்று சொல்லி, வழக்கு கிரைம் நெம்பர் 274/2001 பதிவு செய்யப்பட்டு இதுவரை பிடிக்கப்படவில்லை.

வாணியம்பாடியில் இமாம் என்ற ஒருவரைத் தாக்கியதில் சாதிக்கலவரம் என்று சொல்லக் கூடிய அளவுக்கு அங்கே அச்சம் இருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்து அதையும் தீர்த்து வைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

காவல் துறை சாதிக் கலவரத்தை ஓரளவுக்கு தடுத்து நிறுத்தியதற்கு நிச்சயமாக நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த உணர்வு இப்போது வந்திருக்கிறது. ஆனால் இனியும் அந்த சாதிக் கலவரம் எதிர்காலத்தில் வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

சட்டக் கல்லூரி மாணவர் - Law College students பிரச்சினைக்கு ஏற்கெனவே கமிஷன் போட்டாயிற்று. அந்தக் கமிஷனுடைய தலைவர், ஜட்ஜ் அலி அஹமது அவர்கள் இறந்துவிட்டார்கள். மீண்டும் அந்தக் கமிஷன் re-constitute செய்யப்படவில்லை. இதைப்பற்றி ஏற்கெனவே நான் அவையிலே மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் கேட்டேன். சட்டக் கல்லூரி மாணவர்கள் ஏதோ தவறு செய்திருந்தாலும்கூட, அவர்களை மன்னித்து விட்டு-அவர்கள்மீது வழக்கு இருக்கிறது, அதனால் செய்யவில்லை என்று சொன்னார்கள். ஆகவே சட்டத் துறை அமைச்சர் அவர்களை வைத்துக்கொண்டு அதை பேசித் தீர்த்து, அவர்கள்மீது இருக்கக்கூடிய வழக்குகளை வாபஸ் பெற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நிதி நிறுவனங்களின் மோசடிகள் நிறைய பெருகி கொண்டே இருக்கின்றன. அதற்காக தனி நீதிமன்றம் போட்டு, இன்று அனுபவ் ஆர்.பி.எப்., ஆர்.பி.எஸ்., எம்.எம்.சி. போன்ற நிறுவனங்கள் நிறைய கொள்ளையடித்து இன்று மக்களை ஏமாற்றிக் கொண்டு இருக்கிறார்கள் அதற்கு ஒரு தனி சட்டத்திருத்தத்தைக் கொண்டு வந்து, அந்தச் சொத்துக்களை முதலீட்டாளர்களுக்குக் கொடுப்பதற்காக, ஒரு சட்டத்திருத்தத்தைக் கொண்டு வருவதாக அரசு கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லியிருக்கிறீர்கள். இந்த அரசை நிச்சயமாக நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். பணத்தை உடனடியாக அவர்களுக்குக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் (மணியடிக்கப்பெற்றது.)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடித்து விடுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** முடித்துவிடுகிறேன். இந்த P.E.W. அதேபோல இந்த Crime Police இவையெல்லாம் தனித்தனியாக இருப்பதனாலே சிலபேர் அந்த P.E.W.-க்கு போட்டி போட்டுக்கொண்டு போகிறார்களேயொழிய, கிரைமிலே போட்டவர்கள் ஏதோ சாபக்கேடு என்று, அவர்கள் தண்டிக்கப்பட்டதாக நினைக்கிறார்கள். இந்த P.E.W.-வையே கலைத்துவிடலாம், பேசாமல்.

அதேபோல, Crime-ஐகூட செய்யலாம். Law and Order-ஐ ஒரே யூனிட்டாக வைத்துக்கூட அவர்களுக்கு rotation basis-லே கொடுக்கலாம். சிலபேர் condemned case ஆகிவிடுகிறது. கிரைமிலே போடுகிறார்கள் என்றால், ஓ அவ்வளவுதான், நாம் ஒழிந்தோம். P.E.W.- என்றால், அவர்கள் ஏதோ பெண்ணுக்கு பையனுக்கு கல்யாணம் பண்ணிவிடலாம். அப்படி என்கிற அளவிலே கொண்டுபோய் உடனே எப்படியோ அந்த போஸ்டைக் கேட்டு வாங்கி ஓடிப்போய் விடுகிறார்கள். ஆகவே, சிலபேருக்கு ஆர்வமும் சிலபேருக்கு இந்த இடத்திலே ஆர்வம் இன்மையும் வந்துவிடக்கூடிய நிலைமை. நீங்கள் இதை ஒழிக்கவேண்டுமென்று சொன்னால், நீங்கள் எல்லாவற்றையும் ஒன்றாக merge பண்ணி ஒரே யூனிட்டாக வைத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விபச்சாரத் தடுப்புப் பிரிவு இருந்தாலும்கூட, சென்னையிலேகூட ** அதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் உடனடியாகத் தடுத்து நிறுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

Corruption. தமிழ்நாட்டை நாம் உண்மையிலேயே முதன்மை மாநிலமாக நிச்சயமாக மாற்றமுடியும். நம்மிடம் நிதியில்லை என்று நம்முடைய நிதியமைச்சர் எப்போதும் சொல்லிக் கொண்டிருந்தாலும்கூட, நிதியே இல்லாவிட்டாலும்கூட, இந்தக் காவல் துறையை வைத்துக்கொண்டே நிச்சயமாக தமிழ்நாட்டை மற்ற மாநிலங்களைவிட முதன்மை மாநிலமாக ஆக்கமுடியும். காரணம், நம்மிடம்தான் இந்த இலஞ்ச ஒழிப்புத் துறை இருக்கிறது. பொதுவாக இன்றைக்கு ஒரு காண்டிராக்ட், எங்கேயாவது ஒரு டெண்டர் விடப்போகிறார்கள் என்று சொன்னால், அந்த இடத்தில் சிண்டிகேட் வைத்துக்கொண்டிருப்பதைத்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

தடுத்து நிறுத்துவதற்கு உங்களுடைய யூனிட் உடனடியாக காவல் துறை நடவடிக்கை எடுக்க வேண்டும்—ஏனென்றால் சிலபேர் இந்த சிண்டிகேட்டை வைத்துக்கொண்டு பணத்தை excess ஆக quote பண்ணுவார்கள். ஒரு இலட்சம் ரூபாய் ரோட்டை 50 ஆயிரம் ரூபாய்க்குக்கூடச் செய்யமாட்டேன் என்கிறார்கள். மீதி 50 ஆயிரத்தை வாயில் போட்டுக் கொள்கிறார்கள். இவற்றையெல்லாம் தடுத்து நிறுத்தினீர்கள் என்று சொன்னால், நிச்சயமாக ஒரு இலட்சம் ரூபாய் ரோடு அந்த இடத்திலே போடப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடித்து விடுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** இன்னும் ஒன்றே ஒன்று. அதேபோல நிறைய துறைகளில் Commercial Taxes, R.T.O. Office என்று பல இடங்களில் ஒரு நாளைக்கு ஓராயிரம் இலஞ்ச கேஸ் போடலாம். ஆனால், நாம் Vigilance and Anti corruption வைத்திருக்கிறோம்.** வழக்கே வரமாட்டேன் என்கிறது. ஆகவே, காவல் துறை இந்த corruption கேஸ்களை உடனடியாக-- அவர்களுடைய சம்பளத்தைக்கூட இன்னும் 2,000 ரூபாய் ஒவ்வொருவருக்கும் ஏற்றிக்கொடுங்கள் பரவாயில்லை. எங்கேயாவது corruption யாராவது பண்ணினால், வீட்டுக்கு அவர்களை அனுப்பிவிடுவோம் என்கிற பயத்தை நிச்சயமாக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ரவுடி ராஜ்யத்திற்கே முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். கட்டைப் பஞ்சாயத்துக்காரர்களையெல்லாம் நீங்கள் ஒரு....

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் பேசுகின்றபோது, பொதுப்படையாக காவல் துறையினர் மீது பல குற்றச்சாட்டுகளை இங்கே கூறினார். அதாவது** இப்படியெல்லாம் பொதுப்படையான குற்றச்சாட்டுகளைச் சொன்னால், காவல் துறையினரின் பணி ஆர்வத்தைக் குறைப்பதாக அது அமைந்துவிடும். அவர்கள் demoralise-ஆக ஆகிவிடுவார்கள். ஆகவே, இதுபோன்ற பேச்சுக்களைத் தாங்கள் அனுமதிக்கக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி ஏதாவது குறிப்பிட்ட அதிகாரிகள் மீது, குறிப்பிட்ட புகார்கள் இருந்தால், தாங்கள் அதை என்னிடம் தெரிவிக்கலாம்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய காவல் துறையை demoralise செய்ய வேண்டுமென்ற நோக்கம் என்னுடைய நோக்கம் அல்ல. நான் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரவேண்டுமென்றுதான் சொன்னேன். *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொதுவாக ஒரு குற்றச்சாட்டு சொல்லும்போது எல்லோரையும் பாதிக்கிறது. குறிப்பிட்ட ஏதாவது தகவல்கள் இருந்தால் அதைக் கொடுக்கலாம்.

**திரு. சி. ஞானசேகரன்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒட்டுமொத்தமாகச் சொல்லப்பட்ட அந்தக் குற்றச்சாட்டு அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிறைய எங்கள் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அவற்றையெல்லாம் இயன்றவரையில் நேரடியாக முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கே நிச்சயமாக நாங்கள் கொண்டு வருவோம் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** இந்த போலீசுக்கும் கிரிமினலுக்கும் தொடர்பு ஏதாவது இருக்கிறதா இல்லையா என்பதை அறிய ஒரு கமிஷனையாவது வைக்க வேண்டும். நம்முடைய முதல்வர் அவர்கள் கமிஷனைப் போட்டால்கூட நிச்சயமாக இந்தக் குற்றங்களைத் தடுக்கமுடியும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். வேலூரில் இருக்கக்கூடிய ஜெயிலில் நிறைய குற்றவாளிகள் சேர்ந்து விட்டார்கள். அவற்றையெல்லாம் கொண்டுபோக எஸ்கார்ட் கொண்டு போவதற்காக, வேலூரில் இருக்கக்கூடிய போலீஸ் அத்தனைபேரும் எஸ்கார்ட்டுக்கு போய்விடுகிறார்கள். ஆகவே, shortage of men எப்போதும் எங்கள் மாவட்டத்தில் இருந்துகொண்டிருக்கிற காரணத்தினாலே அங்கே A.R. Battalion ஒன்றை வைக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)* இதோடு இந்த வாய்ப்புத் தந்தமைக்கு நன்றி சொல்லி அமைகிறேன். நன்றி.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேலூரோடுதான் எப்போதுமே முடிப்பீர்கள். திருமதி டி. யசோதா

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு கொடுக்கப்பட்டிருக்கிற நேரம் மிகக் குறைவாக இருந்தாலும், என்னுடைய கருத்துகளை நான் உங்கள் முன்னே சமர்ப்பிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழ்நாடு காவல் துறையினுடைய கோரிக்கை எண் 21 மற்றும் தீயணைப்புத் துறை ஆகியவற்றின்மீது நான் சார்ந்திருக்கின்ற இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் என்னுடைய கருத்துகளை உங்கள்முன் சமர்ப்பிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1-20

*உடலுக்கு உயிர் காவல்,*
*கடலுக்குக் கரை காவல்,*
*கண்ணுக்கு இமை காவல்,*
*தமிழக மக்களுக்குக் காவல் துறை காவல்.*

நான் இங்கே இந்தத் துறையினுடைய புத்தகத்தை, கொள்கை விளக்க குறிப்பை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்றைக்கு எல்லோருமே கவிதை பாட ஆரம்பித்துவிட்டார்கள் (சிரிப்பு) அன்வர் ராஜாவிலே தொடங்கி எல்லோருமே கவிதைமயமாகவே பேசிக்கொண்டு இருக்கிறார்கள் என்று சொல்கிறேன்.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை கொள்கை விளக்கக் குறிப்புகளைப் பார்க்கின்றபோது உண்மையிலேயே எனக்கு முன்னாலே பேசிய முன்னாள் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களும், நம்முடைய மாண்புமிகு சகோதரர் ஞானசேகரன் அவர்களும் பாராட்டினார்கள். ஆனால் நான் பாராட்டினாலே அது பல பேருக்கு மிகவும் வருத்தத்தைக் கொடுக்கின்றது. அதுதான் நான் சொல்கிறேன். இப்போது ஒரு சாதாரண சம்பவம். அம்மா வெளியே போகிறார்கள். 1-30 மணிக்கு, அங்கே கூட்டத்தைப் பார்க்கிறீர்கள் தேர்த் திருவிழா மாதிரி நிற்கின்றது. நான் போகும்போதே கேட்டுக்கொண்டு போவேன் இன்றைக்கு எவ்வளவு பேர்? 3 ஆயிரம் பேர். இன்றைக்கு எவ்வளவு பேர்? 2 ஆயிரம் பேர். அவர்கள் அத்தனை பேரும் ஒரு நம்பிக்கையோடு அங்கே கூட்டமாக நின்று தங்களுடைய பிரச்சினைகளை நேருக்கு நேராகக் கொடுக்கிறார்கள். அவர்கள் வாங்குகிறார்கள். அந்தமாதிரி மற்ற முதல் மந்திரிகளுக்கு வந்தால்கூட



நான் பாராட்டுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், அப்படி இல்லை என்கின்ற நிலைமை வருகிறபோது, நான் தவறாகச் சொல்வதாகக்கூட நீங்கள் நினைக்கக் கூடாது. ஒரு ஐந்து மாதம் அவர்கள் பதவியில் இல்லை. அப்போது வெறிச்சோடிக் கிடந்தது complete-ஆக அந்த இடம் எல்லாம். உண்மையிலேயே அப்போது மக்கள் வரவில்லை. இப்போது வருகின்றவர்கள் என்ன நினைக்கின்றார்கள். என்றால், நடக்கிறதோ, நடக்கவில்லையோ, கொடுத்துவிட்டோம். நமது காரியம் நிறைவேறி விட்டது என்ற நம்பிக்கையோடு (மேசையைத் தட்டும் ஒலி) போகிற அந்த மக்கள் சக்தி உங்கள் பக்கத்திலே இருக்கிறது என்பதை நான் உண்மையிலேயே பாராட்டுவதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இங்கே நீங்கள் நிறைய திட்டங்களைக் கொடுத்திருக்கிறீர்கள். வீட்டுவசதி. வீட்டுவசதி காவல் துறையைச் சார்ந்தவர்களுக்கு நிச்சயமாக கிராமப்புறங்களிலே கிடைக்கும். நகரத்திலே கிடைப்பது சிரமமாக இருக்கும். காமராஜருடைய ஆட்சிக் காலத்திலே 80 சதவிகிதம் அவர்களுக்கு வீட்டு வசதி கொடுக்கப்பட்டது. வீட்டுவசதி தனித் தனியாக இருந்தால் காவலர்கள் குடும்பத்திற்குப் பாதுகாப்பாக இருக்காது. நீதிமன்றத்திற்குச் சாட்சி சொல்ல வருபவர்களுக்குக்கூட உயிருக்குப் பாதுகாப்பு இல்லை. காவல் நிலையத்தில் புகார் தருபவர்கள் சரியாக நடத்தப்படவில்லை என்று குற்றச்சாட்டுகளை தங்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகின்றேன்.

பணியிடைப் பயிற்சி Inveservice training - நடத்தப்படவேண்டும். மாவட்டத்திற்கு ஒரு பயிற்சி மையம் காவலர்களுக்கும், துணை ஆய்வாளர்களுக்கும், ஆய்வாளர்களுக்கும், பெண் காவலர்களுக்கும் தேவை.

மகளிர் காவல் நிலையம் நீங்கள் உருவாக்கியதற்குப் பிறகு பாகிஸ்தான், பங்களாதேஷ் கூட நம்மைப் பார்த்து ஆரம்பித்திருக்கிறார்கள் என்பதை நாம் பெருமையாக எண்ண வேண்டி இருக்கின்றது. பெண்கள் மௌனமாகத் துன்பங்களை அனுபவிப்பவர்கள். அதனால் பெண் காவலர்களுக்கு மனோதத்துவம், சமூகவியல் பயிற்சி தேவை என்பதை இந்தநேரத்திலே நான் கூறிக்கொள்கிறேன். Investigation பயிற்சியும் தேவை. Exchange programme, பெரிய அதிகாரிகளை வெளிநாடுகளுக்கு அங்குள்ள காவல் துறையின் அணுகுமுறையையும், செயல்பாடுகளையும் அறிய அனுப்புவதைப்போல், காவலர்கள், துணை ஆய்வாளர்கள், ஆய்வாளர்களையும் அனுப்ப வேண்டும். சமுதாயத்தில் இருப்பவர்களோடு இணைந்து போலீஸ் இருக்க வேண்டும். காவல் நிலையங்கள் சொந்தக் கட்டடத்திலே இயங்குவதற்கு நாம் மிகப்பெரிய முயற்சி எடுக்க வேண்டும்.

வாடகைக் கட்டடங்களிலே இருப்பது சிறப்பாக இருக்காது. மாவட்டக் காவல் துறை அலுவலகத்திலுள்ள அமைச்சுப் பணியாளர்கள், களப் பணியாளர்கள் இருவருக்குமே கணினிப் பயிற்சி கொடுக்கப்பட வேண்டும்.

இன்றைக்கு குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்று சொன்னால் கேபிள் டி.வி. அந்தக் கேபிள் டி.வி., Post office-ல் அனுமதி கொடுக்கிறார்கள். யாருக்கு வேண்டுமானாலும் கொடுக்கிறார்கள். அப்படிக் கொடுக்கின்றபோது அவர்களுக்குள்ளேயே ஒரு எல்லை வகுத்துக்கொண்டு வாங்குவதற்கு இல்லாமல், அதிலேயே ஒரு பிரச்சினை வந்து law and order problem வரக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது.

*பிற்பகல் 1-25*

இதுதவிர காவல் துறையினருக்கே குவார்ட்டர்ஸ் இருக்கிறது. அந்த குவார்ட்டர்ஸ்க்கு காவல் துறையிலே இருக்கின்ற அதிகாரிகள் அதற்கு ஒரு பெர்மிஷன் கொடுக்கிறார்கள். அதே மாதிரி ஒரு நிலைமை போனால், குடிசை மாற்று வாரிய வீடுகளுக்கு குடிசை மாற்று வாரியத்தினுடைய சேர்மனும், வீட்டுவசதி வாரியத்திற்கு, வீட்டுவசதி வாரிய அமைச்சரும், தனியார் அப்பார்ட்மெண்ட்டுக்கு அந்த உரிமையாளர்களே அனுமதி கொடுக்கின்ற ஒரு நிலைமை வந்தால் அது முறைப்படுத்துவதாக இருக்க முடியாது. அதை நாம் முறைப்படுத்தியாக வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த அரசு விடுதலைப் புலிகள் சம்பந்தமாக எடுத்துள்ள முன்கட்ட நடவடிக்கைகள் உண்மையிலே பாராட்டுக்குரியவை. நேற்றைக்கு முன்தினம்கூட எங்கள் தலைவர் வாழப்பாடியார் தலைமையில் உண்ணாவிரதம் இருந்தபோது, தமிழக முதல்வர் அவர்களுக்கு நாங்கள் நன்றி தெரிவித்து அங்கே ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறோம் என்பதைக்கூட இந்த நேரத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, பெரிய தாதாவுக்கு தீர்மானம் போட்டுவிட்டோம். சின்னதாதா சந்தனக் கடத்தல் வீரப்பனையும் கைது செய்து, நீங்கள் இந்த நாட்டு மக்கள் முன்பாகக் கொண்டு வந்து நிறுத்துவீர்கள் என்று சொன்னால், நிச்சயமாக உங்களுக்கு பாராட்டு தெரிவிப்பதற்கு நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம் என்பதை இந்த நேரத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.



தொழிலாளர்கள் அமைதியின்மை. நான் சாதாரணமாகச் சொல்கிறேன். முன்னாள் போக்குவரத்துத் துறை அமைச்சருக்குக்கூட தெரியும். நான், இந்தத் தொழிலாளர்களுடைய போராட்டங்கள் நடைபெற்ற நேரத்திலே பல தொழிற்சங்கத் தலைவர்களை நானே போய் சந்தித்து அவர்களையெல்லாம் அன்றைய போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்தவரிடத்திலே கொண்டு போய் நிறுத்தி, அந்தப் போராட்டம் ஓரளவுக்கு சுமுகமான ஒரு முடிவுக்கு வருவதற்குரிய பணிகளை செய்திருக்கிறேன். ஆனால், அவர்களுடைய கோரிக்கைகள் மிக சாதாரணமான கோரிக்கைகளாக இருந்தாலும்கூட, அதை இந்த அரசாங்கம் கருணையுடன் பரிசீலிக்க வேண்டும் என்பதை இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி கிளைச் சிறையிலே ரீட்டா மேரி, கற்பழிக்கப்பட்டது, தொடர்பாக தவறு செய்தவர்களைக் கைது செய்து காவலில் வைத்தது- எனக்கு முன்னாலே காலையிலேகூட சொன்னார் நம்முடைய அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள். ஒரு தவறு செய்தால், அதைத் தெரிந்து செய்தால், அவன் தேவன் என்றாலும் விடமாட்டேன்' என்று. அதைப் போலத்தான் நம்முடைய புரட்சித் தலைவி தமிழகத்தின் முதல்வர் அம்மா அவர்கள்- சிறைச்சாலையிலே யாரோ கற்பழித்த காரியத்தை, கேவலமான காரியத்தைச் செய்தவர்கள் யாராக இருந்தாலும், அரசுப் பணியாளர்களாக இருந்தால்கூட - அவர்களைக் கைது செய்து காவலிலே வைத்ததை, தாய்க்குலத்தின் சார்பாக நான் உங்களுக்குப் பாராட்டு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதே நேரத்திலே, உங்களுடைய கருணைக்கு ஈடாக எதையும் சொல்ல முடியவில்லை என்றாலும்கூட, 5 இலட்சம் ரூபாய் அந்த ரீட்டா மேரிக்கு கொடுத்ததோடு மட்டுமல்லாமல், வீடு ஒதுக்கீடு செய்து இருக்கின்றீர்கள். உங்களுக்கு இங்கேயிருக்கின்ற சட்டமன்றத்திலே இருக்கின்ற பெண் சட்டமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேர்களும் உங்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) மகளிர் காவல் நிலையம் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யசோதா, ஆண் சட்டமன்ற உறுப்பினர்களை ஏன் விட்டுவிட்டீர்கள் ?

**திருமதி டி. யசோதா:** எனக்கு கொடுத்திருக்கின்ற நேரம் குறைவு. கொஞ்சம் எனக்கு டைம் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யசோதா, பெண் சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பாக முதலமைச்சருக்கு பாராட்டு தெரிவித்தீர்களே, ஆண் சட்டமன்ற உறுப்பினர்களை ஏன் விட்டுவிட்டீர்கள்? பேரவைத் தலைவரையும் ஏன் கை கழுவிவிட்டீர்கள்?

**திருமதி டி. யசோதா:** தவறு செய்கிறவர்கள் யாருங்க? (சிரிப்பு) மகளிர் காவல் நிலையம், 2001-2002-ல் 50-காவல் நிலையங்களை கொடுத்திருக்கின்றீர்கள். என் தொகுதிக்குகூட ஒன்று கொடுத்திருக்கின்றீர்கள். நன்றி. 2002-2003-ல் 40 காவல் நிலையங்களை அமைக்க இருக்கின்றீர்கள். 2003-2004-ல் 36. காவல் துறையில் நிரப்பப்படாத பணிகள் 13,999 என்று கணக்கு கொடுத்திருக்கிறீர்கள். அமைச்சுப் பணியில் நிரப்பப்படாத பணிகள் 392. ஆகவே, இவற்றை உடனடியாக நிரப்பினால் இன்னும் நிறைய, அதிகமான வேலை செய்கிற காவல் துறைக்கு ஒரு உதவியாக இருக்கும் என்பதைத்தான் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

போன முறைகூட நான் பேசினேன். காஞ்சிபுரத்தில் ஒரு V.A.O. வீட்டில் 40 சவரன் நகை, 7½ இலட்சம் ரூபாய் பணத்தை திருடிவிட்டார்கள் வீடு வாங்குவதற்கு என்று வைத்திருந்ததை. எங்கள் பழைய மந்திரிக்குத் தெரியும். நகை திரும்பி வந்துவிட்டது, பணம் இன்றைக்கும் கிடைக்கவில்லை. 4½ இலட்சம் வசூலாகியிருக்கிறது. அதைக்கூட கொடுக்கமாட்டேன் என்கிறார்கள். அதனால், தயவுசெய்து, காஞ்சிபுரம் S.P. அவர்களுக்கு தயவுசெய்து இது குறித்து—பணம்கூட வசூலாகி வைத்திருக்கிறார்கள், கொடுக்கமாட்டேன் என்கிறார்கள். இதை தயவுசெய்து அம்மா அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

1994-95-ல் உங்கள் ஆட்சி இருந்தபோது S.I. தேர்வு நடைபெற்றிருக்கின்றது. அந்த S.I. தேர்வு நடைபெற்றபோது கிட்டத்தட்ட....

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. திருமதி டி. யசோதா அவர்கள் இரண்டு மணித் துளிகளில் பேசி முடித்துவிடுங்கள்.



**திருமதி டி. யசோதா:** பாதிக்கப்பட்ட S.I. களுக்குப் பரிகாரம் கிடைக்குமா என்று இன்றைய தினமலரில்கூட வந்திருக்கிறது. கடந்த 1994-95-ஆம் ஆண்டில் 1,198 பேர் சப்-இன்ஸ்பெக்டர்களாகத் தேர்வு செய்யப்பட்டனர். இவர்களிலும் 1996 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 500 பேர் நேரடியாக காவல் நிலையங்களில் S.I-களாக நியமிக்கப்பட்டனர். மீதமுள்ள 698 பேரில், 600 பேருக்கு 1997 ஆம் ஆண்டு ஜூன் மாதம் உத்தரவு வழங்கப்பட்டது. மீதமுள்ள 98 பேருக்கு 3 ஆண்டுகள் கழித்து கடந்த 2000 ஆம் ஆண்டு மே மாதம், 22 ஆம் தேதியில் தமிழ்நாடு சிறப்புக் காவல் படையில் பணியிடம் கிடைத்தது. தாலுகா காவல் நிலையத்திற்கு எனத் தேர்வுபெற்றும், ஓர் ஆண்டு சட்டப்பயிற்சி பெற்று முடிந்தும், அவர்களை வேண்டுமென்றே காவல் நிலையங்களுக்கு நியமிக்காமல் செய்து விட்டது கடந்த அரசு. இந்த நிலையில் கடந்த 1999 ஆம் ஆண்டு 880 பேர் சப்-இன்ஸ்பெக்டர் பதவிக்குத் தேர்வு செய்யப்பட்டு, அவர்களை நேரடியாகவே காவல் நிலையங்களுக்கு அனுப்பியுள்ளனர். ஏற்கெனவே இருந்தவர்களைவிட ஐந்து ஆண்டுகள் ஜூனியரான அவர்கள் நேரடியாக காவல் நிலையங்களில் அமர்ந்திருப்பது, அவர்களைவிட எந்தத் தகுதியிலும் சீனியாரிட்டியிலும் குறைவில்லாதவர்களை இதுபோன்ற ஒரு நிலையிலே சென்ற அரசு நடத்தியிருப்பதை தயவுசெய்து அம்மா அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன்.

அதேபோல காவல் துறையில் பணிபுரியும் அலுவலக உதவியாளர்கள், இளநிலை உதவியாளர்களாக பதவி உயர்வு பெற்று தேவையான கல்வித் தகுதியும் பிற தகுதிகளும் பெற்றிருந்தாலும், கடந்த 20 ஆண்டு காலமாக பதவி உயர்வின்றி விரக்தியில் உள்ள பணியாளர்களின் துன்பம் போக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தது, காவல் துறையினருக்கு 1998-99 ஆம் ஆண்டு Shoe தைத்து கொடுப்பதற்காக 57,000 ஒன்று, 27,000 ஒன்று என்று கிட்டத்தட்ட 84,000 Shoes ஆர்டர் கொடுத்திருக்கிறார்கள். Shoes யார் செய்வது என்றால், காதித் துறையில் செய்கிறார்கள். காதி எப்படியென்றால் அந்த Shoes தைக்கிற நபர்களிடத்தில் கொடுத்து, தமிழ்நாடு முழுவதும் பரவலாக தைக்கப்படுகிறது. ஆனால் அதை குறிப்பாக அம்பத்தூரில் இருக்கிற ஜோஸ்பாய் என்பவருக்குக் கொடுத்து 84,000 Shoes அவர் ஒருவருக்கே ஆர்டர் கொடுத்த காரணத்தினாலேயே, அவர் பெங்களூரிலே 130 ரூபாய்க்கு அந்த Shoes வாங்கி 400-க்கு போலீஸ் துறைக்கு விற்று, 95 இலட்சம் ரூபாயை பங்கு போட்டுக்கொண்டுவிட்ட கதையை நீங்கள்.

அம்மையார் அவர்கள் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*31-03-1999* அன்று 58 வயது முடிந்த சீனிவாசன் பட்டு கண்காணிப்பாளராக இருக்கிறார். 12 கோடி ரூபாய் குறளகத்தில் கொள்ளை நடந்திருக்கிறது. 2 ½ கோடிக்குத்தான் வழக்கு நிலுவையில் உள்ளது. தோண்டினால் 12 கோடி ஊழல் புதையல் போல் கிடைக்கும் என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். சீனிவாசன் பணி நீக்கம் செய்யப்பட்டபோது Suspense Note-டில் யார் யாருக்கு கொடுக்கப்பட்டது என்று குறிப்பிட்டிருக்கின்றார். அன்றைக்கு ஆண்டவர்கள் இடத்திலே கொடுத்திருக்கின்றார். ஆவணங்கள் அழிக்கப்படாமல் அரசு நடவடிக்கை எடுத்தால் மக்கள் பணம் காப்பாற்றப்படும் (மேசையைத் தட்டும் ஒலி). ஊழல் குற்றவாளிகளை மக்களுக்கு நீங்கள் அடையாளம் காட்ட முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல, Y.M.C.A. அந்த Y.M.C.A. என்பதை அம்மையார் அவர்கள், இதை மிகவும் ஆழ்ந்து கவனிக்க வேண்டுமென்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். அரசாங்கத்திலே கிட்டத்தட்ட 64 ஏக்கர் நிலத்தை இங்கே கொடுத்திருக்கின்றார்கள். அந்த 64 ஏக்கர் நிலமும் மாணவர்களுக்கு விளையாட்டுப் பயிற்சி கொடுப்பதற்காக அவர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படி கொடுக்கப்பட்டிருக்கின்ற அந்த நிலத்தை அந்தத் தலைமைப் பொறுப்பிலே இருக்கின்றவர்கள் எடுத்துக்கொண்டு, அதை எல்லோருக்கும்--22-04-1999 அன்று 'நமது எம்.ஜி.ஆர்.' பத்திரிகையில் வந்திருக்கிறது. நந்தனம் Y.M.C.A. கல்லூரி நிலம் 65 ஏக்கர் ஆக்கிரமிப்பு. நான் பத்திரிகையில் வந்ததை சொல்கிறேன். நீங்கள் தவறாக நினைக்கக் கூடாது.** பத்திரிகையில் வந்திருப்பதைத்தான் நான் சொல்கிறேன். அரசு நிலத்தைத் தாரை வார்க்கும் திருவிளையாடல் Y.M.C.A.....

*பிற்பகல் 1-35*

*** திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலே, யசோதா அவர்கள் பேசுகிறபோது, அவர் குற்றச்சாட்டைச் சொன்னது இரண்டாவது இருக்கட்டும். நான் பத்திரிகையிலே வந்ததைத்தான் சொல்கிறேன். ** என்று சொன்னார். அது தேவையில்லை. அதைத் தாங்கள் அனுமதிக்கக்கூடாது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



இரண்டாவது, பத்திரிகையிலே வந்த செய்திகளையெல்லாம் எடுத்து, தொகுத்து படிப்பது என்றால், அப்படி நானும் படிக்க முடியும். நீங்களும் என்மீது படிக்க முடியும். அப்படி உங்களுடைய ஆட்சியின் மீதும் படிக்க முடியும். இந்தப் பத்திரிகைகளைப் படிப்பதற்கு முன்னால் மாண்புமிகு பேரவைத் தலைவருக்குக் காட்டிவிட்டு, உங்களிடத்திலே அனுமதி பெற்றிருக்க வேண்டும். தாங்களும் அதைப் பார்த்து, இதைப் படிக்கலாம் என்று நீங்கள் அனுமதி அளித்திருக்கிறீர்களா? இதை நான் தங்களிடமிருந்து தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி யசோதா, அதை என்னிடத்திலே காட்டிவிட்டு இன்னொரு நாள் பேசுங்கள்.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலையிலே நான் எடுத்துக்கொண்டு வந்தேன். நீங்கள் busy-ஆக இருந்தீர்கள். பேப்பரிலே ஏற்கெனவே வந்தது என்றுதான் சொன்னேனே தவிர, அவர்களுக்கும் இதற்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது என்று ஆராயத்தான் சொல்கிறேன் நான். அதாவது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி யசோதா, அந்தப் பெயர்கள் நீக்கப்படுகின்றன.

**திருமதி டி. யசோதா:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திருமதி டி. யசோதா:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது நீக்கப்படுகிறது.

**திருமதி டி. யசோதா:** ஒரு பெயர்கூட சொல்ல முடியவில்லை என்றால் அப்புறம் என்ன சட்டமன்ற உறுப்பினர்கள்? அவர்களுடைய பெயரைச் சொன்னால் மட்டும் அவர்களுக்குக் கோபம் வருகிறது. மற்றவர்களுடைய பெயர்களை ரொம்பச் சாதாரணமாகச் சொல்லக்கூடிய நிலைமை இருக்கிறது.

Y.M.C.A. கல்லூரியில் நிருவாகச் சீர்கேடுகள் என்று அரசு நிலத்தைத் தாரை வார்க்கும் திருவிளையாடல், என்னிடம் வந்திருக்கிற கடிதத்திலே, நான் குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், 65 ஏக்கர் மவுண்ட் ரோடிலே இருக்கிற அந்த இடம், மிகப் பெரிய விளம்பரங்கள்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அங்கே இருக்கின்றன. கோடிக்கணக்கான ரூபாய்கள். அங்கே விளையாட்டு-Sports College தான் நடத்த வேண்டும் என்று சொல்கிறார்கள். ஆனால், உள்ளே இருக்கிற தேக்கு மரத்தையெல்லாம் வெட்டி பல கோடி ரூபாய்க்குப் பெறுமானமுள்ளதை வெட்டி விற்றிருக்கிறார்கள். அது அரசுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறதா அந்தப் பணம் யாரிடத்திலே எங்கே போனது என்ற விவரம் தெரியவில்லை.

அதுமட்டுமல்ல, அந்தSports College-க்குள்ளே Swimming pool கட்டியிருக்கிறார்கள். அந்த Swimming pool வாடகைக்கு விடப்பட்டிருக்கிறது. யாரிடத்திலே அந்தப் பணம் போய் சேர்கிறது என்பதைப்பற்றியும் நீங்கள் பார்த்தாக வேண்டும்.

அதேபோல் சினிமா ஷூட்டிங் எடுப்பதற்கு அங்கே பர்மிஷன் கொடுக்கிறார்கள். அதன் மூலமாக வருகின்ற வருமானம் அந்த வருமானம் யாருக்கு எங்கேபோய்ச் செல்கிறது என்பதை நீங்கள் பார்த்தாக வேண்டும்.

அதேபோல் ஒரு டாக்டர்—அவருடைய உறவினர்களுக்கு என்று சொல்கிறார்கள். அவர் பெரிய டாக்டர்—அவர் பெயரைச் சொல்ல வேண்டாம். அவருடைய வீட்டுச் சொந்தக்கார அம்மாவிற்குக்கூட 5 ஏக்கர் நிலம் கொடுத்திருக்கிறார்கள். அரசாங்கமே இவர்களுக்குக் கொடுத்திருக்கிறது.

*** திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை Y.M.C.A.-விலே சில இடம் தாரை வார்க்கப்பட்டிருக்கிறது என்று சகோதரி யசோதா அவர்கள் குறிப்பிட்டார்கள். நான் இங்கே ஒரு முக்கியமான பிரச்சினையை முதல் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அதே Y.M.C.A.-க்கு அருகிலே கோல்ஃப் கிளப் இருக்கிறது. நீண்டகாலமாக அதை, சென்னையிலே இருக்கிற காஸ்மோபாலிடன் கிளப்தான் நடத்திக்கொண்டு வருகிறது. அரசு நிலத்தை ஏற்கெனவே 30 ஆண்டுக்காலத்திற்கு நீண்டகாலக் குத்தகைக்கு காஸ்மோபாலிடன் கிளப் எடுத்திருக்கிறது. இரண்டாவது முறை மீண்டும் அதே குத்தகை நீட்டிக்கப்பட்டு, 60 ஆண்டுகளுக்கு, 60 ஆண்டு காலத்திற்கு மேலாக காஸ்மோபாலிடன் கிளப்தான் அந்த கோல்ஃப் கிளப்பை நடத்தி வருகிறது. காஸ்மோபாலிடன் கிளப்பிலே உள்ள அத்தனை உறுப்பினர்களும் அதிலே உறுப்பினர்கள். கோல்ஃப் கிளப்பிலே தனியாக உறுப்பினர்களாகவும் இருக்கலாம். இப்போது அந்தக் குத்தகைக் காலம், கெடு முடிந்து, 10 ஆண்டுகளாக மீண்டும் அதை நீட்டிக்க வேண்டும் என்று காஸ்மோபாலிடன் கிளப் கேட்டுக்கொண்டு



வந்தது. அந்த காஸ்மோபாலிடன் கிளப்பை அச்சுறுத்தி, மிரட்டி திடீரென்று ஒரு கோல்ஃப் கிளப் முளைத்திருக்கிறது. கோல்ஃப் விளையாட்டு என்றால் என்ன என்றே தெரியாத பேர்கள் எல்லாம் கோல்ஃப் கிளப்பினுடைய தலைவர்களாக, செயலாளர்களாகப் பதிவு செய்து கொண்டு, அந்த கோல்ஃப் கிளப்புக்கு அந்த இடத்தைத் தாரை வார்த்துக் கொடுத்துவிடவேண்டும் என்று கேட்கிறார்கள். திடீரென்று கோல்ஃப் கிளப்பும், காஸ்மோபாலிடன் கிளப்பும் ஒப்பந்தம் செய்துகொள்கிறது. ஒப்பந்தம் செய்துகொண்டு, இன்றைய தினம் அந்த இடத்தை முழுவதுமாக அந்தப் புதிய கோல்ஃப் கிளப்புக்கு ஒப்படைத்து விடுகிறார்கள். அதற்கும், காஸ்மோபாலிடன் கிளப்பிற்கும், நேரடியாகத் தொடர்பு கிடையாது. (குறுக்கீடு) சொல்கிறேன். சொல்கிறேன், உங்கள் ஆட்சியில் என்று நான் சொல்ல வரவில்லை. இது கடந்த ஆட்சிக் காலத்திலே நடைபெற்றது. நடைபெற்று, இன்றைய தினம் காஸ்மோபாலிடன் கிளப் அந்த இடத்தையும் இழந்து விட்டது. அதற்குப் பதிலாக அங்கே ஏற்கெனவே இருக்கிற ஒரு கட்டடத்தைக் கொஞ்சம் புதுப்பித்துக் கொடுத்திருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல. இந்த காஸ்மோபாலிடன் கிளப் அவர்களுக்குச் சந்தா செலுத்துவதுபோல் மாதாமாதம் செலுத்திக் கொண்டிருக்கிறது. காஸ்மோபாலிடன் கிளப் உறுப்பினர் எல்லாம் அச்சுறுத்தப்படுகிறார்கள். இந்தப் பிரச்சினையை எழுப்பக்கூடாது என்று சொல்கிறார்கள். இதற்கெல்லாம் எங்கேயிருந்து பணம் வந்தது என்று சொன்னால், அன்றைய தினம் நிதியமைச்சர் அவர்கள் சொன்னார்கள், முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள், இந்தப் பணம் அந்தச் சிமெண்ட்டிலே வந்த கறுப்புப் பணம்தான் விளையாடிக் கொண்டு இருக்கிறது. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) எனவே, இப்படி ஒரு நல்ல சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்த சகோதரி யசோதா அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு, இதை முழுவதுமாக விசாரிக்க வேண்டும். விசாரிக்க வேண்டும் என்பது மட்டுமல்ல. மீண்டும் அந்த நிலம் காஸ்மோபாலிடன் கிளப்புக்கே கொடுக்கப்பட வேண்டும். அதில் யாராவது தவறு செய்திருந்தால், அந்த கிளப் உறுப்பினர்களாகவே இருந்தாலும்கூட நீங்கள் நடவடிக்கை எடுப்பதற்கு நான் நிச்சயமாக குறுக்கே நிற்க மாட்டேன். அது காஸ்மோபாலிடன் கிளப்பைச் சேர்ந்த இடம். நானும் அந்தச் சங்கத்திலே ஓர் உறுப்பினர் என்கிற முறையிலேயும், சட்டமன்ற உறுப்பினர் என்கிற முறையிலேயும் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். நீங்கள் நிச்சயமாக நடவடிக்கை எடுப்பீர்கள் என்று நம்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 1-40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித்துளிகளில் உரையை முடித்துவிடுங்கள்.

**திருமதி டி. யசோதா**: என்ன சார், நேரமே இல்லை. 10 நிமிடங்கள் கூட ஆகவில்லை சார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, 20 நிமிடங்களுக்கு மேல் ஆகிவிட்டது. பேசுங்கள். இரண்டு மணித்துளிகள் பேசுங்கள்.

**திருமதி டி. யசோதா:** அவர் வேறு குறுக்கிட்டார் சார். முக்கியமானது. நமக்கு வருமானம் வருவதைச் சொல்லுகின்றேன். தனியார் மெட்ரிகுலேஷன் ஆங்கில மீடியம் பள்ளி ஒன்று நடத்துகிறார்கள். வருமானம் அதற்கு 80 இலட்சமாம். அதேமாதிரி புளி, மாங்காய் விற்ற பணம், கடைகள் வாடகைக்கு விடுவது--இது அல்லாமல் அங்கே வேலை செய்கின்ற ஆசிரியர்களுக்கு வெளி நாட்டிலிருந்து சம்பளம் வருகிறது. இங்கே அரசாங்கமும் சம்பளம் கொடுக்கிறது; வெளி நாட்டிலிருந்தும் சம்பளம் வருகிறது. இது அரசுக்குத் தெரியுமா என்பதையும் உங்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகின்றேன். ஆகவே, அந்த Y.M.C.A. இருப்பது, அது உண்மையிலே ஒரு மைனாரிட்டி அமைப்பு இல்லை. அதனால் நீங்கள் அதை கவனிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் கோயம்புத்தூர் சட்டமன்ற உறுப்பினர் சகோதரி மகேஸ்வரி அவர்கள் சென்ற ஆட்சியிலே நடந்திருக்கின்ற தவறுகளை அம்மா அவர்களுக்கு சுட்டிக்காட்டச் சொல்லியிருக்கிறார்கள். தமிழ்நாடு சிறப்புக் காவல் படை Tamil Nadu Special Police மற்றும் ஆயுதப் படை Arned Reserve ஆகியவற்றில் பணிபுரியும் பெண் காவலர்கள் வங்கி பாதுகாப்புப் பெட்டகங்களுக்கு காவலுக்கு அமர்த்தப்படும்போது அவர்கள் வீட்டுக்குச் சென்றுவர 3 மணி நேரம் மட்டுமே இடைவேளை அனுமதிக்கப்படுகிறது. இதனால் அவர்கள் குடும்பத்தையும், குழந்தைகளையும் கவனிக்க இயலாத நிலையில் உள்ளனர். ஆகவே, இப்பெண் காவலர்களை தாலுகா மகளிர் காவல் நிலையங்களுக்கு பணிமாற்றம் செய்ய வேண்டும்.

கோவை, காவல் துறை ஆணையர் ராதாகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் அல்-உம்மா தீவிரவாதிகளைக் கைது செய்து அமைதியை நிலைநாட்டிய மாநகர சிறப்புப் பிரிவைச் சேர்ந்த காவல் துறை அதிகாரிகளுக்கும், காவலர்களுக்கும் சிறப்புப் பதவி உயர்வும், பதக்கமும்



அளிக்கவேண்டுமென, காவல் துறை ஆணையருக்கும் சில சட்டமன்ற உறுப்பினர்கள் பரிந்துரை செய்துள்ளனர். இதனை இவ்வரசு பரிசீலனை செய்ய வேண்டும்.

அதேபோல, தலைவர் ராஜீவ் காந்தி அவர்கள் உயிர் நீத்தபோது, அவரோடு சேர்ந்து காவல் துறையைச் சேர்ந்த பல அதிகாரிகளும், காவலர்களும் உயிர் விட்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் ஸ்ரீபெரும்புதூரிலே ஒரு நினைவுச் சின்னம் அமைக்க வேண்டுமென்று நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

உதவி ஆய்வாளர்கள் பதவி உயர்வு தாமதம் குறித்து தலைமையகம் அறிவிப்பு. Adhoc Rules-G.O.Ms.No.1730, Home (Police-III) Department, dated 28-11-1997, பெண் தலைமைக் காவலர்களுக்கு பதவி உயர்வு 4 ஆண்டுகள் என்பதை 8 ஆண்டுகள் என்று மேற்படி அரசாணையைக் காட்டி காலம் கடத்தி பழி வாங்கியுள்ளார்கள். ஆனால், ஆண் தலைமைக் காவலர்களுக்கு இது பொருந்தாது என்றும், முறையே அவர்களுக்கு 4 ஆண்டுகள் முடிந்ததும் உதவி ஆய்வாளர் பதவி உயர்வுக்கு அவர்களைத் தேர்வு செய்து அனுப்பி நடைமுறைப்படுத்தியுள்ளார்கள். அதேபோல புதிய பெண் உதவி ஆய்வாளர்களைத் தேர்வு செய்தால் முறைப்படி எங்களுக்கு— எங்களுக்கு என்றால் பெண்களுக்கு--30 சதவிகிதம் கொடுக்கப்படுவதை கொடுக்காமல் நிறுத்தி வைத்திருக்கிறார்கள். இதனால் இவர்களை 1996 முதல் நிரந்தரப்படுத்த வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி யசோதா, உரையை முடித்துவிடுங்கள்.

**திருமதி டி. யசோதா:** இதோ முடித்து விடுகிறேன். 600 பேர்களுக்குப் பின்தங்கிப் போக வேண்டிய சூழ்நிலையில் எல்லா வகைகளிலும் பாதிப்புக்கு ஆளாகியிருக்கிறார்கள். அம்மா அவர்கள், இந்த பெண்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற--அந்த அரசாணையை திரும்பப் பெற்று 8 ஆண்டுகள் என்று இருப்பதை ஆணுக்குப் பெண் சரிநிகர் சமம் என்கின்ற நிலையில் நாம் இங்கே போட்டி போட்டுக் கொண்டு வருகின்றோம். எல்லா வகையிலும் எங்களுடைய சகோதரிகள் பேசுகின்ற பேச்சுகளைப் பார்க்கின்றபோது, ஆண்களுக்கு நிகரான கருத்துகளை எடுத்து வைப்பதிலும் நாங்கள் சிறப்புக்குரியவர்களாக இருக்கும்போது இந்தப் பெண் காவலர்களுக்கும், நீங்கள், அம்மா அவர்கள், நிச்சயமாக உதவி செய்வார்கள், உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தீயணைப்புத் துறையிலே I.P.S. அதிகாரிகளை டைரக்டர்களாக நியமனம் செய்து வருகிறார்கள். மற்ற துறைகளைப்போல தீயணைப்புத் துறையிலுள்ள அதிகாரிகளை நியமனம் செய்தால், தீயணைப்புத் துறை நிர்வாகம் சிறப்பாகச் செயல்படும் என்று கூறி, என்னுடைய தொகுதியில், நிச்சயம் நிறைய பிரச்சினைகள் இருந்தாலும்கூட ஒன்றை மட்டும் கூறி விடைபெறலாம் என்று நினைக்கின்றேன்.

மணிமங்கலம் காவல் நிலையம். அந்த மணிமங்கலம் காவல் நிலையத்திற்கு நிறைய கிராமங்கள் இருக்கின்றன. தாம்பரத்துக்குப் பக்கத்தில் சோமங்கலம், மணிமங்கலம் இருக்கின்றன. இந்த இரண்டு பகுதிகளிலும் இருக்கின்ற குற்றவாளிகள் தவறு செய்துவிட்டு நேராக எங்கள் பகுதிக்கு வந்துவிடுகிறார்கள். ஆகவே, மணிமங்கலம் காவல் நிலையத்திற்கு அதிகமான காவலர்களையும், ஜீப் இல்லாத அந்த சோமங்கலம், மணிமங்கலம் காவல் நிலையங்களுக்கு ஜீப்பும் ஒதுக்கீடு செய்து தருமாறு கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகின்றேன். நன்றி வணக்கம்.

*பிற்பகல் 1-45.*

## 7. அரசினர் தீர்மானம்

### விதி 32-ஐத் தளர்த்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் 5 உறுப்பினர்கள் பேச வேண்டியதிருக்கிறது. ஆகவே, நாளைக்கு கேள்வி நேரத்தை ஒத்திவைத்துவிட்டு விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளலாமா என்று தலைவர்களைக் கேட்கிறேன். சரி, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் 'வினாக்கள்-விடைகள் நேரம்' என்று உள்ள சட்டமன்றப்பேரவை விதி 32-ஐ 25-04-2002 ஆம் தேதியன்று தளர்த்தி, அந்நேரம் அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போம் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

*25-04-2002* அன்று வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை *(25-04-2002)* காலை *10-00* மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் *1-46* மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும் ஆணைகளும்

*145. 1939*ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி விதிகளில் சில திருத்தங்கள் செய்தது குறித்து வணிக வரிகள் துறையின் *1-11-2001*ஆம் நாளிட்ட *100*-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (*1939*ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *10/1939*) *16(4)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)

*146.* தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் *2000-2001*ஆம் ஆண்டிற்கான தணிக்கை அறிக்கை மற்றும் கணக்குகள். (*1959*ஆம் ஆண்டு தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *18/1959*) *24(3)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*154.* பொதுக் கணக்குக் குழுவின் ஐம்பத்து ஆறாவது அறிக்கை. *(2001-2002)*

*155.* பொதுக் கணக்குக் குழுவின் ஐம்பத்து ஏழாவது அறிக்கை. *(2001-2002)*

[2002 ஏப்ரல் 24

156. பொதுக் கணக்குக் குழுவின் ஐம்பத்து எட்டாவது அறிக்கை. (2001-2002)

157. பொதுக் கணக்குக் குழுவின் ஐம்பத்து ஒன்பதாவது அறிக்கை. (2001-2002)

158. பொதுக் கணக்குக் குழுவின் அறுபதாவது அறிக்கை. (2001-2002)

159. பொதுக் கணக்குக் குழுவின் அறுபத்து ஒன்றாவது அறிக்கை. (2001-2002)

160. பொதுக் கணக்குக் குழுவின் அறுபத்து இரண்டாவது அறிக்கை. (2001-2002)

161. மானியக் கோரிக்கை எண் 21-தமிழ்நாடு காவல் துறையின் 2002-2003 ஆம் ஆண்டுக்கான கொள்கை விளக்கக் குறிப்பு. (தமிழ், ஆங்கிலம்)

162. மானியக் கோரிக்கை எண் 21-2002-2003 ஆம் ஆண்டுக்கான உள் துறை-காவல் பற்றிய விரிவான மானியக் கோரிக்கை.

163. மானியக் கோரிக்கை எண் 22-தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2002-2003. (தமிழ், ஆங்கிலம்)

164. மானியக் கோரிக்கை எண் 22-2002-2003 ஆம் ஆண்டுக்கான உள்துறை-தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் பற்றிய விரிவான மானியக் கோரிக்கை.



# இணைப்பு-I

*(76-ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## கோரிக்கை எண் 21 — தமிழ்நாடு காவல் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு 2002-2003

**முகவுரை**

மாநிலத்தை சட்டம்-ஒழுங்குப் பிரச்சினைகளின்றி வைத்திருப்பதும்,
ற்றங்களைத் தடுப்பதும், புலனாய்வு செய்வதும், பாதுகாப்பு அளிப்பதும்
வல் துறையின் தலையாய கடமைகளாகும். பொது அமைதி
ாமரிக்கப்படவில்லையெனில் பொருளாதார நிலைப்பாட்டினையும்,
மக நீதியையும் நிலைநாட்ட இயலாது. சட்டம்-ஒழுங்கு பராமரிப்புப்
ணியில் தமிழ்நாடு காவல் துறை நாட்டிலேயே மிகச் சிறந்த இடத்தை
கிக்கிறது.

அதிகரித்துவரும் நகரமயமாக்கம், தொழில் தகராறுகள், மாணவர்
மைதியின்மை, சமூக, பொருளாதார, அரசியல் திட்டங்கள் மற்றும்
வீன ஆயுதங்களைக்கொண்டும், புதிய உத்திகளை கையாண்டும்
ழைக்கப்படும் நூதனமான குற்றங்கள் போன்றவற்றால் ஏற்படும்
ன்முகப்பட்ட பிரச்சினைகளை எதிர்கொள்ளும் வகையில் முறையான
ட்டமிட்ட பயிற்சி அளிப்பதன் மூலம் தமிழ்நாடு காவல் துறையின்
சயல்பாடுகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. அதே சமயத்தில்
னிதநேயத்தோடு காவல் பணியாற்றவும் இத்துறை
ளக்கப்படுத்தப்பட்டுள்ளது. காவல் துறையை நவீனப்படுத்துவதன்
லமாகவும் நவீனமான தொழில்நுட்பத்தைப் புகுத்துவதன் மூலமாகவும்
மிழ்நாடு காவல் துறையின் தரத்தை மேம்படுத்த பல்வேறு
டவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

2. சட்டம் ஒழுங்கைப் பராமரித்தல், குற்றங்களைக் கண்டுபிடித்தல்
ஆகியவற்றோடு சமுதாயப் பிரச்சனைகள் என்று கருதப்படும்
களிருக்கெதிரான குற்றங்களைத் தடுத்தல், போதை மருந்துகள் மற்றும்
திமயக்கும் பொருட்கள் கடத்தலைத் தடுத்தல், குடிமுறைக் காப்பு,
தடிஉரிமைக் காப்பு, வீடியோ திருட்டினைத் தடுத்தல், பொது
விநியோகத்திற்கான பொருட்களை வேறுவகையில் கையாளுதலைத்
தடுத்தல், பொருளாதாரக் குற்றங்கள், சிலை திருட்டுகள், இளம்சிறார்

[2002 ஏப்ரல் 24

குற்றங்கள் ஆகியவற்றைத் தடுத்தல், இனக் கலவர குற்றங்களைத் தடுத்தல், வாகனப் போக்குவரத்தை முறைப்படுத்தல், சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகள் ஆகிய பணிகளையும் தமிழ்நாடு காவல் துறை ஆற்றி வருகிறது.

## 2. நிருவாக அமைப்பு

### 2.1. உயர்நிலை நிருவாகம்

தமிழ்நாடு காவல் துறையின் ஒட்டுமொத்த நிருவாகம் காவல் துறைத் தலைமை இயக்குநரது பொறுப்பில் உள்ளது. காவல் துறைத் தலைமை இயக்குநர் அலுவலகத்தில் அவருக்கு உதவியாக கூடுதல் காவல் துறை இயக்குநர் (சட்டம்-ஒழுங்கு), காவல் துறைத் தலைவர் (நிருவாகம்), காவல் துறைத் தலைவர் (தலைமையிடம்), காவல் துறைத் தலைவர் (சட்டம்-ஒழுங்கு), காவல் துறைத் துணைத் தலைவர் (நிருவாகம்), காவல் துறை உதவித் தலைவர் (நிருவாகம்), காவல் துறை உதவித் தலைவர் (தலைமையிடம்) ஆகியோர் உள்ளனர். மாநிலத்தில் நடைபெறும் குற்றங்களைக் கண்டுபிடித்துத் தடுத்தல், சட்டம்-ஒழுங்கு பராமரிப்பு ஆகிய பணிகளில் சென்னையில் கூடுதல் காவல் துறை இயக்குநர் (சட்டம்-ஒழுங்கு), காவல் துறைத் தலைவர் (சட்டம்-ஒழுங்கு) ஆகியோரும், மதுரையில் செயல்பட்டு வரும் தென்மண்டல காவல் துறைத் தலைவர் (சட்டம்-ஒழுங்கு) அவர்களும் காவல் துறைத் தலைமை இயக்குநருக்குத் துணையாக உள்ளனர்.

2. காவல் துறைத் தலைவர் (தலைமையிடம்) காவல் துறைத் தலைவர் (நிருவாகம்) ஆகியோர் காவல் துறைப் பணியாளர்களின் பணியமைப்புப் பணிகளை கவனித்து வருவதுடன் காவல்படை செயல்படுவதற்கான தேவைகளைத் திட்டமிடுதலையும் அவற்றை நிறைவேற்றுதலையும் செய்து வருகின்றனர். காவல் துறைத் தலைவர் (தலைமையிடம்) தமது வழக்கமான பணிகளை கவனித்து வருவதுடன், பெண்களுக்கெதிரான குற்றங்கள் தொடர்பான பிரச்சினைகள், மகளிர் காவல் நிலையங்களை மேற்பார்வை செய்தல், உதவிக்கரம், பெண் காவலர்களை மற்ற இடங்களில் பணியமர்த்தல், பெண் காவலர் தொடர்பான கொள்கை முடிவுகள் ஆகியவற்றையும் கவனித்து வருகிறார்.

3. காவல் துறைத் தலைவர் (தொழில்நுட்பப் பணிகள்) பொறுப்பில் காவல் துறை வானொலிப் பிரிவு, கணினிப் பிரிவு, விரல்ரேகை பதிவுக்கூடம் ஆகியவை உள்ளன. மாநில குற்றப் பதிவுருக்கள் கூடத்தின்



2002 ஏப்ரல் 24]

இயக்குநராக உள்ள காவல் துறைத் துணைத் தலைவர் இவருக்கு உதவியாக உள்ளார். காவல் துறை இயக்குநர் (பயிற்சி) பயிற்சிப் பிரிவின் தலைவராக உள்ளார். மதுரையைத் தலைமையிடமாகக் கொண்ட காவல் துறைத் தலைவர் (பயிற்சி) இவருக்கு உதவியாக உள்ளார். சென்னையிலுள்ள தமிழ்நாடு காவலர் கழகமும் இவரது பொறுப்பிலுள்ளது.

4. கூடுதல் காவல் துறை இயக்குநர் நிலையிலுள்ள தலைவர்-மேலாண்மை இயக்குநர் தலைமையில் தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகம் இயங்கி வருகிறது.

5. குற்றம், குற்றப் புலனாய்வுப் பிரிவு ஆகியவை இரண்டு கூடுதல் காவல் துறை இயக்குநர்களின் ஒட்டுமொத்தப் பொறுப்பில் உள்ளன. பல மாவட்டங்களில் அல்லது மாநில எல்லைக்கு அப்பால் நடைபெறும் குற்றப் புலனாய்வுப் பணியை இவர்கள் கண்காணித்து வருகின்றனர்.

6. மாநிலத்தில் மதுவிலக்கினை செயல்படுத்தும் பணி கூடுதல் காவல் துறை இயக்குநர் (மதுவிலக்கு) அவர்களது பொறுப்பாகும். குடிமைப் பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறையானது காவல் துறைத் தலைவர் நிலையிலுள்ள ஓர் அலுவலரின் பொறுப்பிலுள்ளது.

7. பொருளாதாரக் குற்றங்கள் தடுப்புப் பிரிவு-1 மற்றும் 2, கூடுதல் காவல் துறை இயக்குநர் ஒருவரின் தலைமையின்கீழ் இயங்கி வருகின்றன. சிலை திருட்டு, வணிகக் குற்றங்கள் புலனாய்வுப் பிரிவு ஆகியவற்றைக் கொண்ட பொருளாதாரக் குற்றங்கள் தடுப்புப் பிரிவு-1 காவல் துறைத் தலைவர் ஒருவரின் கட்டுப்பாட்டில் உள்ளது. நிதி நிறுவனங்களின் செயல்பாட்டை கவனித்து வரும் பொருளாதாரக் குற்றங்கள் தடுப்புப் பிரிவு-2 மற்றொரு காவல் துறைத் தலைவரின் கட்டுப்பாட்டில் உள்ளது.

8. நுண்ணறிவுப் பிரிவானது கூடுதல் காவல் துறை இயக்குநர் தலைமையின்கீழ் இயங்கி வருகிறது. இவருக்கு உதவியாக காவல் துறைத் தலைவர் ஒருவர் உள்ளார்.

9. கடலோரக் காவல்படைக்குக் கூடுதல் காவல் துறை இயக்குநர் ஒருவர் தலைவராக உள்ளார். இவர் மாநிலத்தில் உள்ள கடற்கரை நெடுகிலும் பாதுகாப்புப் பணியைச் செயல்படுத்தி வருகிறார். இவருக்கு உதவியாக காவல் துறைத் தலைவர் ஒருவர் உள்ளார்.

10. மனித உரிமைகள் மற்றும் சமூக நீதிப் புலனாய்வுப் பிரிவு (குடியுரிமைப் பாதுகாப்பு) ஒரு கூடுதல் காவல் துறை இயக்குநரின்

தலைமையின்கீழ் இயங்கி வருகிறது. காவல் துறைத் தலைவர் ஒருவர் இவருக்கு உதவியாக உள்ளார்.

11. சிறப்புக் காவல்படைப் பிரிவுகள் பதினொன்றும், ஆவடியிலுள்ள படை வகுப்பு மையமும் காவல் துறைத் தலைவரின் (ஆயுதப்படை) கட்டுப்பாட்டில் உள்ளன. அதேபோன்று, இருப்புப் பாதை காவல்படை, காவல் துறைத் தலைவர் ஒருவரின் கட்டுப்பாட்டில் உள்ளது.

12. காவல் துறை உதவி ஆய்வாளர் வரை உள்ள காவல் துறைப் பணிகளுக்கான ஆட்களைத் தேர்வு செய்வதற்குப் பொறுப்பாக உள்ள தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் காவல் துறை இயக்குநர் ஒருவரைத் தலைவராகக் கொண்டுள்ளது. இவ்வாரியத்தில் கூடுதல் காவல் துறை இயக்குநர் ஒருவர் உறுப்பினராகவும், காவல் துறைத் தலைவர் ஒருவர் உறுப்பினர் செயலராகவும் உள்ளனர்.

13. கூடுதல் காவல் துறை இயக்குநர் ஒருவரின் கட்டுப்பாட்டில் ஊர்க்காவல் படையும், குடிமுறைப் பாதுகாப்புப் பிரிவும் உள்ளன. காவல் துறைத் தலைவர் (குடிமுறைப் பாதுகாப்பு) இவருக்கு உதவிபுரிந்து வருகிறார்.

14. காவல் துறையில் அனுமதிக்கப்பட்ட இந்தியக் காவல்பணியைச் சேர்ந்த அலுவலர்களின் எண்ணிக்கை 214 ஆக உள்ளபோதிலும், 2001ஆம் ஆண்டு புதிதாக நியமிக்கப்பட்ட 4 அலுவலர்களையும் சேர்த்து 01-01-2002 அன்று உள்ளபடி இந்தியக் காவல் பணியைச் சேர்ந்த 176 அலுவலர்கள் பணியில் உள்ளனர். 2001ஆம் ஆண்டு இந்தியக் காவல் பணியைச் சேர்ந்த 10 அலுவலர்கள் பணிஓய்வு பெற்றுள்ளனர்.

15. மாவட்டங்களில் உள்ள ஆயுதப்படையின் 223 அணிகளும் (Platoons) தமிழ்நாடு சிறப்புக் காவல்படையின் 11 படை அணிகளும் சட்டம்-ஒழுங்கைப் பராமரிப்பதில் உள்ளூர் காவல் துறைக்கு உதவி புரிந்து வருகின்றன. மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை என்ற சுழற்சி முறையில், தமிழ்நாடு சிறப்புக் காவல் படையைச் சேர்ந்த படை அணி ஒன்று புதுதில்லியிலுள்ள திகார் சிறை வளாகத்தில் காவல்பணி ஆற்றி வருகிறது.

16. காவல் துறையைச் சேர்ந்த களப்பணியாளர்கள், அமைச்சுப் பணியாளர்கள், தொலைத்தொடர்புப் பணியாளர்கள், சுருக்கெழுத்துக் கூடப் பணியாளர்கள், விரல்ரேகைப் பதிவுக் கூடப் பணியாளர்கள் ஆகியோர் பற்றிய அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை விவரங்கள் இணைப்புகளில் தரப்பட்டுள்ளன.



## 2.2 காவல் படையிலுள்ள சிறப்புப் பிரிவுகள்

### 1. தமிழ்நாடு அதிரடிப் படை மற்றும் அதிரடிப் படைப் பள்ளி

முந்தைய சிறப்புப் பாதுகாப்புக் குழுவினை மறு சீரமைப்பு செய்ததைத் தொடர்ந்து தமிழ்நாடு அதிரடிப் படையும் தமிழ்நாடு அதிரடிப் படைப் பள்ளியும் ஏற்படுத்தப்பட்டன. இப்படைக்குப் பொறுப்பாக உள்ள காவல் கண்காணிப்பாளரையும் சேர்த்து இப்படையில் மொத்தம் 282 காவல் பணியாளர்கள் உள்ளனர். காவல் துறைத் தலைவர் (செயலாக்கம்) அவர்களது கட்டுப்பாட்டில் இப்படை உள்ளது. பாஷாவை நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்லுதல், சிறப்பு அதிரடிப் படைப் பணி, வண்டலூர் பாதுகாப்புப் பணி, பொது மற்றும் உள்ளாட்சித் தேர்தல்கள் பணி போன்ற 109 சந்தர்ப்பங்களில் தமிழ்நாடு அதிரடிப் படையினர் பணி பரவலாக்கல் முறையில் கடமையாற்றியுள்ளனர். இப்படையினர், 2001ஆம் ஆண்டு நடைபெற்ற மாநில காவல் துறை விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று 11 தங்கம், 14 வெள்ளி, 8 வெண்கலப் பதக்கங்களைக் கூட்டாகவும், துப்பாக்கி சுடுதல், புகைப்படமெடுத்தல், நாசவேலைத் தடுப்பு, தடகளம் ஆகிய போட்டிகளில் ஒட்டுமொத்த இரண்டாம் இடத்திற்கான கேடயத்தையும் பெற்றுள்ளனர். 18-12-2001 முதல் 22-12-2001 வரை டேராடூனில் நடைபெற்ற அனைத்திந்திய காவல் துறை விளையாட்டுப் போட்டிகளில் துப்பாக்கி சுடும் போட்டியில் தங்கப் பதக்கத்தினை வென்றுள்ளனர். 2001ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மலேசியாவில் நடைபெற்ற 15வது தடகளப் போட்டிகளில் இப்பிரிவைச் சேர்ந்த ஒரு உதவி ஆய்வாளர் கலந்துகொண்டு மூன்றுநிலை நீளத் தாண்டுதல் போட்டியில் இரண்டாவது பரிசினை வென்றுள்ளார்.

பயங்கரவாத, தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளில் தேடும் பணியில் ஈடுபடும் காவல் துறையினரின் தொழில்முறைத் தரத்தினை மேம்படுத்தும் பொருட்டு வீராபுரத்திலுள்ள தற்காலிகக் காவலர் பயிற்சிக் கல்லூரியில், மாநகரத்திலும் மாவட்டங்களிலும் உள்ள ஆயுதப்படையினருக்கும், தமிழ்நாடு சிறப்புக் காவல்படைப் பிரிவினருக்கும் 06-07-2001-லிருந்து தமிழ்நாடு அதிரடிப் படைப் பள்ளியினரால் 'பயங்கரவாத எதிர்ப்பு' எனும் பொருள் பற்றி ஏழுவார கால சிறப்புப் பயிற்சி ஒன்று அளிக்கப்பட்டு வருகிறது. 2002ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் தமிழ்நாடு காவல்படையைச் சேர்ந்த மொத்தம் 2,750 காவலர்களுக்கு இப்பயிற்சி அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. 2001ஆம் ஆண்டில் 653 காவலர்களுக்கு பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. இதுதவிர, ஏனைய 459 காவலர்களுக்கும் கீழ்க்கண்டவாறு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது:—

[2002 ஏப்ரல் 24

| வ.எண் | பயிற்சியின் பெயர். | 2001ஆம் ஆண்டில் பயிற்சி அளிக்கப் பட்டவர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| 1. | பயங்கரவாத எதிர்ப்பு அதிரடிப் படைப் பயிற்சி | 653 |
| 2. | அதிரடிப் படைப் பயிற்சி | 61 |
| 3. | சிறப்பு அதிரடிப் படைப் பயிற்சி | 80 |
| 4. | வெடிகுண்டுகளை கண்டுபிடித்து செயலிழக்கச் செய்யும் பயிற்சி | 233 |
| 5. | ஆயுதமின்றி போரிடும் பயிற்சி | 39 |
| 6. | மிக முக்கிய நபர் பாதுகாப்புப் பயிற்சி | 46 |
| | மொத்தம் | 1,112 |

பிற மாநிலங்களைச் சேர்ந்த 11 காவல் துறைப் பணியாளர்களுக்கு வெடிகுண்டுகளைக் கண்டுபிடித்து அவற்றை செயலிழக்கச் செய்யும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மத்திய கலால் துறை, சுங்கத் துறை, இருப்புப் பாதை காவல்படை, இந்திய ரிசர்வ் வங்கி, பொதுத் துறை வங்கிகள் போன்ற பல்வேறு நிறுவனங்களைச் சார்ந்தோருக்கும் வெடிபொருட்களைக் கண்டறிதல், ஆயுதங்களைக் கையாளுதல் ஆகியவற்றில் கடந்த 2001 ஆம் ஆண்டு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. பிற மாநிலங்களிலுள்ள நிறுவனங்களில், கராத்தே, மலையேறுதல், ஆயுதங்கள் மற்றும் உத்திகள் பயிற்சி, வெடிகுண்டு, வெடிப் பொருட்கள் பயிற்சி போன்றவற்றில் இம்மாநில காவல் துறையைச் சேர்ந்த சில காவல் துறைப் பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

**2. வெடிகுண்டுகளைக் கண்டுபிடித்து அவற்றை செயலிழக்கச் செய்யும் பிரிவு**

வெடிகுண்டுகளைக் கண்டுபிடித்து அவற்றை செயலிழக்க வைக்கும் பிரிவானது, நாட்டிலேயே ஒரு முன்னோடி அமைப்பாக கடந்த 1991 ஆம் ஆண்டு இம்மாநிலத்தில் தொடங்கப்பட்டது. விரைவாகக் கண்டுபிடித்து, வெடிகுண்டுகளை செயலிழக்கச் செய்வதன்மூலம், வெடிகுண்டு இடரினை நீக்கிட இப்பிரிவு கடும்பணி செய்து வருகிறது. ஆறு காவல் துறை ஆய்வாளர்கள் உள்ளிட்ட மொத்தம் 24 பேர் இப்பிரிவில்



2002 ஏப்ரல் 24]

பணியமர்த்தப்பட்டுள்ளனர். விமான நிலையம், பூந்தமல்லியிலுள்ள கிளை சிறைச்சாலை, தலைமைச் செயலகம் மற்றும் பிற முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் நாசவேலைத் தடுப்புச் சோதனைகளை இப்பிரிவு மேற்கொள்கிறது. பின்னர் பொய்யெனத் தெரிய வந்தாலும் வெடிகுண்டு வைக்கப்பட்டிருப்பதாக வரும் அழைப்புகளை ஏற்று அவ்விடங்களுக்குச் சென்று சோதனை செய்வதோடு வெடிகுண்டுகளை பறிமுதல் செய்ய வரும் அழைப்புகளையும் ஏற்று அப்பணியையும் இப்பிரிவு செய்து வருகிறது. 2001ஆம் ஆண்டு இப்பிரிவு ஆற்றிய பல்வேறு பணிகள் கீழே தரப்பட்டுள்ளன.

| வ. எண். | பணியின் தன்மை. | எண்ணிக்கை. |
|---|---|---|
| 1. | வெடிகுண்டுகளை செயலிழக்க வைக்கும் பணி | 28 |
| 2. | குண்டு வெடித்தபின் ஆற்றும் பணி | 2 |
| 3. | மிக முக்கிய/மிகமிக முக்கிய நபர் பாதுகாப்புப் பணி | 552 |
| 4. | சிறப்பு அதிரடிப் படை உள்ளிட்ட பிற பணிகள் | 153 |
| 5. | வெடிகுண்டு வதந்திகள் | 3 |
| | மொத்தம் | 738 |

**3. அதிவிரைவுப் படை**

மாநிலத்தில் ஏற்படும் இனக் கலவரங்களையும், கலகங்களையும் கட்டுப்படுத்தும்பொருட்டு அதிவிரைவுப் படை ஏற்படுத்தப்பட்டது. ஒரு துணைத் தளவாய், இரு உதவி தளவாய்கள் உட்பட மொத்தம் 275 பேர் இப்பிரிவில் உள்ளனர். தமிழ்நாடு சிறப்புக் காவல் படைப் பிரிவுகளிலிருந்து பெறப்பட்ட காவலர்களைக் கொண்டு 20-06-1997 அன்று கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஒரு குழுமம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு சிறப்புக் காவல்படைப் பிரிவுகளிலிருந்து பெறப்பட்ட 161 அலுவலர்கள், ஆண், பெண் காவலர்களைக் கொண்டு வீராபுரம், வேலூர், கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி ஆகிய இடங்களில் ஐந்து குழுமங்கள் பின்னர் அமைக்கப்பட்டன. 19-07-2000 ஆம் நாளிட்ட உள்(காவல்-3) துறையின்

[2002 ஏப்ரல் 24

அரசாணை நிலை எண் 756-இன்படி அதிவிரைவுப் படைக்கு 400 காவல் பணியாளர்களை நியமிக்க ஏற்பு அளிக்கப்பட்டுள்ளது. கலவரக் கட்டுப்பாடு, தீயணைப்பு, மீட்புப் பணிகள், முதலுதவி, மனித உரிமை பற்றிய விழிப்புணர்வு ஆகியவற்றில் இப்படைப் பிரிவினர் தீவிரப் பயிற்சி பெற்றுள்ளனர். 2001ஆம் ஆண்டு ஆந்திர மாநிலத்தில் நடந்த உள்ளாட்சித் தேர்தல்களின்போது பாதுகாப்புப் பணிக்கென அதிவிரைவுப் படையினர் அனுப்பப்பட்டனர். இப்படைப் பிரிவு காவல் துறைத் தலைவர் (ஆயுதப்படை) அவர்களின் கட்டுப்பாட்டில் உள்ளது. 2001ஆம் ஆண்டு தமிழ்நாட்டிலும், ஆந்திரத்திலும் உள்ள பல்வேறு மாவட்டங்களுக்கு 146 சந்தர்ப்பங்களில் இப்பிரிவின் குழுமங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

**4. கோயில் பாதுகாப்புப் படை**

இப்படைப் பிரிவில் 1,000 இரண்டாம் நிலைக் காவலர்களும் 3,000 முன்னாள் இராணுவத்தினரும் உள்ளனர். கோயில்களுக்கும், அவற்றின் உடைமைகளுக்கும் இப்பிரிவு நேரடிப் பாதுகாப்பு அளிக்கிறது. இப்படைப் பிரிவிலுள்ள முன்னாள் இராணுவத்தினருக்கு இதுவரை ரூ.1,435 ஆக இருந்த தொகுப்பூதியம் மாதமொன்றுக்கு ரூ.1,500 ஆக 13-11-2001-லிருந்து உயர்த்தப்பட்டுள்ளது.

**5. கோயில் பாதுகாப்புத் தன்னார்வலர் திட்டம்**

திருட்டு போன்ற சம்பவங்களைத் தடுக்கவேண்டி கோயில் பாதுகாப்புப் படையினரால் காக்கப்படாத முக்கியமான கோயில்களுக்கு பாதுகாப்பு அளிக்க கோயில் பாதுகாப்புத் தன்னார்வலர் திட்டம் அண்மையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் பயன்பெற 854 கோயில்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. மேற்சொன்ன கோயில்களில் இரவுக் காவல் பணியாற்ற 'காவல் துறை நண்பர்கள்' போன்று இப்பிரிவினை காவல் கண்காணிப்பாளர்கள் அமைக்க வேண்டும். இதுவரை 219 கோயில்கள் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ளன.

**6. பெண் காவலர்**

தமிழ்நாடு காவல் துறைக்கு பெண் காவலர்கள் வெற்றிகரமாக உதவி வருகின்றனர். சிறுமிகளை மீட்கவும், காணாமல் போன பெண்கள் மற்றும் குழந்தைகளைக் கண்டுபிடிக்கவும், விபச்சாரத் தடைச் சட்டத்தின்படி சோதனைகளை நடத்தும் ஆண் காவலர்களுக்கு உதவி செய்யவும், பெண்கள் அதிக அளவில் கூடும் இடங்களில் பாதுகாப்புப் பணிகளை



2002 ஏப்ரல் 24]

கவனிக்கவும் 1973ஆம் ஆண்டு மகளிர் காவல் பிரிவு தோற்றுவிக்கப்பட்டது. 01-01-2002-ல் உள்ளவாறு பெண் அலுவலர்களையும் சேர்த்து மொத்தம் 7,377 பேர் இப்பிரிவில் உள்ளனர்.

**7. அனைத்து மகளிர் காவல் நிலையங்களை ஏற்படுத்துதல்**

இன்னல்களுக்கு ஆளாகும் பெண்களுக்கு உடனடித் தீர்வு அளிக்க வேண்டி, 1992 ஆம் ஆண்டு சென்னை மாநகரில் அனைத்து மகளிர் காவல் நிலையம் ஒன்றினை அரசு அமைத்தது. மகளிருக்கான உரிமைகளை உறுதி செய்வதில், தமிழ்நாடு காவல் துறையின் வரலாற்றில் இந்நிகழ்வு குறிப்பிடத்தக்கதாகும்.

அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் பெண்களிடையே பிரபலமடைந்ததால் 1995 ஆம் ஆண்டு இவற்றின் எண்ணிக்கை 58 ஆக உயர்ந்தது. உட்கோட்டத்திற்கு ஒன்று என்பதை உறுதி செய்யும் வகையில் கூடுதலாக 126 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் படிப்படியாக அமைப்போம் என 2001 ஆம் ஆண்டு அரசு அறிவித்தது.

முதற்கட்டமாக, 2001-2002 ஆம் ஆண்டில் உதவிக்கரம் தொலைபேசி வசதியுடன் 50 அனைத்து மகளிர் காவல் நிலையங்களை அமைக்க ஆணையிடப்பட்டுள்ளது. இத்துடன் மாநிலத்திலுள்ள 1,217 காவல் நிலையங்களிலும் ஒரு பெண் உதவி ஆய்வாளர் மற்றும் இரண்டு இரண்டாம் நிலை பெண் காவலர்களையும் நியமனம் செய்ய ஆணையிடப்பட்டுள்ளது. முதற்கட்டமாக 2001-2002 ஆம் ஆண்டில் பெண்களால் அளிக்கப்படும் புகார்களை கவனிக்க 287 காவல் நிலையங்களில் ஒரு பெண் உதவி ஆய்வாளரும், இரண்டு இரண்டாம் நிலைப் பெண் காவலர்களும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

**8. இரயில்வே பாதுகாப்புப் படை**

காவல் துறைத் தலைவர் ஒருவரின்கீழ் செயல்பட்டு வரும் இப்படையில், 1,563 பேர் பணியாற்றுகின்றனர். இப்படை 5,525 கிலோமீட்டர் நீளமுள்ள இருப்புப்பாதையை 31 காவல் நிலையங்கள், 26 புறக்காவல் நிலையங்களைக் கொண்டு காவல் பணி செய்கிறது. காவல் துறையை நவீனமயமாக்கும் திட்டத்தின்கீழ் இப்படைக்கு 5 நோயாளர் ஊர்திகளும், இரண்டு மகிந்திரா ஈப்புகளும் வழங்கப்பட்டுள்ளன. தற்போது மொத்தம் 84 வாகனங்கள் இப்படையின் வசம் உள்ளன. முந்தைய ஆண்டில் இப்படையினரால் 280 சொத்து சம்பந்தப்பட்ட வழக்குகள்

பதிவு செய்யப்பட்டன. ஆனால், 2001ஆம் ஆண்டில் 180 வழக்குகள் மட்டுமே பதியப்பட்டுள்ளன. இப்படை பாபர் மசூதி இடிப்பு நினைவு நாளன்று எந்தவித அசம்பாவிதமும் நிகழாமல் பார்த்துக் கொண்டது. 2001 ஆம் ஆண்டு மே மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தல்களின்போது மைய அரசின் துணை இராணுவப் படைகளின் 109 குழுமங்கள் தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களுக்கும் செல்ல இப்படை உதவி செய்துள்ளது. சென்னை, மாம்பலம் இரயில்வே நிலைய கணினி முன்பதிவு மையத்தில் 03-03-2001 அன்று இரவு ரூ.9 இலட்சம் கொள்ளையடிக்கப்பட்ட பரப்பரப்பான வழக்கில் குற்றவாளிகளை இப்பிரிவு துரிதமாகக் கண்டுபிடித்துள்ளது. 02-07-2001 மற்றும் 07-12-2001 ஆகிய தினங்களில் எதிர்க்கட்சிகளால் அறிவிக்கப்பட்ட பொதுவேலை நிறுத்தமும், 23-11-2001 அன்று தொழிற் சங்கங்களால் அறிவிக்கப்பட்ட பொதுவேலை நிறுத்தமும் இரயில்வே வளாகங்களின் இயக்கத்தில் எவ்விதப் பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை. 30,550 கள்ளச் சாராய உறைகள், 6,592 இந்தியத் தயாரிப்பு அந்நிய மதுபானக் குப்பிகள், 13 கிலோ கிராம் கஞ்சா, 93 கிராம் ஹெராயின், 160 கிலோ கிராம் சந்தனக் கட்டைகள், பொது விநியோகத்திற்கான 8,600 கிலோகிராம் அரிசி ஆகியவை கைப்பற்றப்பட்டுள்ளன. வீட்டைவிட்டு ஓடிவந்த 90 சிறுமியர்கள் மீட்கப்பட்டு சிலர் அவர்களின் பெற்றோர்களிடமும் மற்றவர் அரசு நடத்தும் இல்லங்களிலும் சேர்க்கப்பட்டுள்ளனர். 67 பை திருடர்களும், 37 சங்கிலித் திருடர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். மிக முக்கிய/மிகமிக முக்கிய நபர்கள் இரயில் பயணம் செய்தபோது அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

### 9. கடலோரக் காவல்படை

தமிழ்நாட்டிலிருந்து கடல் வழியாக எரிபொருள், மருந்துகள், போதைப் பொருட்கள், ஆயுதங்களுக்குத் தேவையான வெடிபொருட்கள் மற்றும் அத்தியாவசியப் பண்டங்களை இலங்கைக்கு கடத்துவதைத் தடுக்கவும், தீவிரவாதிகள் கடல்வழியாக தமிழ்நாட்டுக்குள் ஊடுருவுவதைத் தடுக்கவும், மீனவர்கள், தீவிரவாதிகள் மற்றும் கடத்தல்காரர்களுக்கு இடையே நிகழும் மோதல்களைத் தடுக்கவும் 27-06-1994ஆம் நாளிட்ட உள் (காவல்-4) துறையின் அரசாணை நிலை எண் 718-இன்படி தமிழ்நாடு கடலோரக் காவல்படை அமைக்கப்பட்டது. காவல் துறைத் துணைத் தலைவர் ஒருவருடன் இப்படை 27-06-1994இலிருந்து செயல்படத் தொடங்கியது. பின்னர் 30-06-1995ஆம் நாளிட்ட உள்(காவல்-15) துறையின் அரசாணை நிலை எண் 984-இன்படி இப்பதவி காவல் துறைத் தலைவர் நிலைக்கு



உயர்த்தப்பட்டது. மீண்டும் 22-08-1999ஆம் நாளிட்ட உள்(காவல்-1) துறையின் அரசாணை நிலை எண் 1038-இன்படி இப்பிரிவின் தலைமைப் பதவியானது கூடுதல் காவல் துறை இயக்குநர் நிலைக்கு உயர்த்தப்பட்டதுடன் அதற்கான புதிய பணியிடம் ஒன்றும் உருவாக்கப்பட்டது. தற்சமயம் இப்படையில் ஒரு காவல் கண்காணிப்பாளர், இரண்டு கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள், நான்கு காவல் துணைக் கண்காணிப்பாளர்கள், பதினோரு காவல் ஆய்வாளர்கள், பத்து காவல் உதவி ஆய்வாளர்கள் உள்ளனர். இவர்களைத் தவிர, 60 கடலோரச் சோதனைச் சாவடிகளில் வேலை செய்யவும், தமிழ்நாட்டின் 1,000 கிலோமீட்டர் கடற்கரையில் சைக்கிளில் ரோந்துப் பணி செய்யவும், தமிழ்நாடு சிறப்புக் காவல் படையிலிருந்து பெறப்பட்ட 24 காவல் உதவி ஆய்வாளர்கள், 120 தலைமைக் காவலர்கள் மற்றும் 900 காவலர்கள் இப்படையில் உள்ளனர். நாகப்பட்டினம், புதுக்கோட்டை, இராமநாதபுரம், வேதாரண்யம், தூத்துக்குடி ஆகியவற்றை தலைமையிடங்களாகக் கொண்டு தமிழகத்தின் கடலோரப் பகுதி ஐந்து மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. கடற்கரையின் நுண்ணறிவுப் பணிகள் தொடர்பான தொலைத் தொடர்புக்காக 157 கம்பியில்லா தொடர்பு சாதனங்களும், 175 வாக்கி டாக்கிகளும், 10 ரிப்பீட்டர் நிலையங்களும், 7 தொலைபேசிகளும், 5 இரவிலும் பார்க்கும் வசதி கொண்ட பைனாகுலர்களும், 60 பகல் நேர பைனாகுலர்களும் இப்படைக்கு வழங்கப்பட்டுள்ளன.

கடலோரக் காவல்படையின் விழிப்பான சோதனைகள் மூலமும் ரோந்துப் பணிகள் மூலமும் இலங்கைப் போராளிகளாலும் அவர்களின் ஆதரவாளர்களாலும், கடல்வழியாக நடத்தப்படும் கடத்தல்கள் வெற்றிகரமாக தடுக்கப்பட்டுள்ளன. கடற்கரை கிராமங்களில் வசிப்போர் இலங்கைப் போராளிகளுடன் சேர்ந்து கடத்தல்களில் ஈடுபடக்கூடாது என எச்சரிக்கப்பட்டுள்ளனர். மேலும், மருந்துகள், டீசல், மண்ணெண்ணெய் ஆகியவை கடத்தப்படும் சாத்தியக்கூறுகள் பற்றிய விழிப்புணர்வும் அவர்களுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

### 10. மதுவிலக்கு அமல் பிரிவு

கள்ளச் சாராயத்தை ஒழிக்கவும், கள்ளச் சாராயம் வைத்திருப்பதைத் தடுக்கவும், அதனை பிற மாநிலங்களிலிருந்து தமிழ்நாட்டிற்குக் கடத்துவதைத் தடுப்பதற்காகவும் மேற்கொள்ளப்பட்ட உறுதியான நிலைப்பாட்டின் அடிப்படையில் மதுவிலக்கு அமல் பிரிவு மீண்டும் ஏற்படுத்தப்பட்டது. இப்பிரிவு அண்மையில் வலுப்படுத்தப்பட்டுள்ளது.

13-06-2001-இலிருந்து இப்பிரிவு கூடுதல் காவல் துறை இயக்குநர் ஒருவரது தலைமையின்கீழ் இயங்கி வருகிறது. இவருக்கு உதவி செய்ய தலைமையிடத்திலும், சென்னை, சேலம், மதுரை மாநகரங்களிலும் 4 காவல் கண்காணிப்பாளர்கள் உள்ளனர். மாநிலம் முழுவதும் 94 மதுவிலக்கு அமல் பிரிவுகள் உள்ளன. இவை காவல் நிலையங்களாகக் கருதப்பட்டு, ஒவ்வொரு பிரிவும் ஒரு காவல் ஆய்வாளரின்கீழ் செயல்பட்டு வருகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும், ஒரு கூடுதல் காவல் கண்காணிப்பாளர் மற்றும் அவருக்கு உதவியாக ஒரு காவல் துணைக் கண்காணிப்பாளர் (மாநகரங்கள் உட்பட அனைத்து மாவட்டங்களில் மொத்தம் 37 கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள் மற்றும் 37 காவல் துணைக் கண்காணிப்பாளர்கள்) ஆகியோர் முறையே அந்தந்த மாவட்டக் காவல் கண்காணிப்பாளர்/மாநகர காவல் ஆணையரின்கீழ் செயல்பட்டு வருகின்றனர். ஆயத்தீர்வையைத் தவிர்க்கும்பொருட்டு, பாண்டிச்சேரி, கர்நாடகம் ஆகிய மாநிலங்களிலிருந்து தமிழ்நாட்டிற்குள் கள்ளத்தனமாகக் கொண்டு வரப்படும் இரண்டாம்தர/உயிர்பறிக்கும் இந்தியத் தயாரிப்பு அந்நிய மதுபானங்கள், பீர் ஆகியவற்றைத் தடுக்கும்பொருட்டு 21 சோதனைச் சாவடிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. எல்லையோர மாவட்டங்களில், காவல் ரோந்துப்படையினரும் உள்ளூர் காவல் துறையினரும் இப்பிரிவிற்குத் துணையாகப் பணியாற்றுகின்றனர்.

2001 ஆம் ஆண்டில் கள்ளச் சாராயம் காய்ச்சுதல் உள்ளிட்ட 3,41,584 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு, 2,37,580 ஆண்களும், 68,524 பெண்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். 59.32 இலட்சம் லிட்டர் கள்ளச் சாராயம், 1.59 கோடி லிட்டர் சாராய ஊறல், 4.64 இலட்சம் கள்ளச் சாராய உறைகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. பல்வேறு வகையான மோட்டார் மற்றும் பிற வாகனங்கள் மொத்தம் 4639 கைப்பற்றப்பட்டன. இவற்றில் 1160 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. கள்ளச் சாராயத் தொழில் தடுப்புச் சட்டம் போதை மருந்துக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தடை, 1982ஆம் ஆண்டு குடிசை ஆக்கிரமிப்பு தடைச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 14/1982) ஆகிய சட்டங்களின்கீழ் 837 ஆண்களும், 299 பெண்களும் கைது செய்யப்பட்டனர். இவர்களிடமிருந்து அபராதத் தொகையாக ரூ.3.54 கோடியும், நீதிமன்ற அபராதம் மூலமாக ரூ.6.65 கோடியும் 2001ஆம் ஆண்டு வசூலிக்கப்பட்டுள்ளது.

கடந்த பத்தாண்டுகளில் மெத்தனால் அருந்துவதால் ஏற்படும் துயரச்சம்பவங்கள் அடுத்தடுத்து நிகழ்ந்துள்ளன. 100 நபர்களை பலிகொண்டும், 279 பேரை மருத்துவமனைகளில் சேர்க்கச் செய்த





இத்தகைய மூன்று நிகழ்வுகள் கடந்த 2001ஆம் ஆண்டில் ஏற்பட்டன. கள்ளச் சாராயம், மெத்தனால் ஆகியவற்றின் கொடுமைகள் குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தும் வகையில் மாவட்டங்கள்தோறும் பிரச்சாரப் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**11. நாய்ப்படை**

வெடிபொருட்கள், போதைப் பொருட்களை கண்டறிவதில் பயிற்சி அளிக்கப்பட்ட 15 நாய்களைக் கொண்ட நாய்ப்படை ஒன்று, ஒரு ஆய்வாளர் உள்ளிட்ட 25 காவல் துறைப் பணியாளர்களைக்கொண்டு 1992ஆம் ஆண்டு முதல் சென்னையில் இயங்கி வருகிறது. தமிழ்நாட்டிலும், பிற மாநிலங்களிலும் காவல் துறையில் உள்ள நாய்களையும், நாய்க் குட்டிகளையும் கையாள்பவர்களுக்கான ஒன்பது மாத கால அடிப்படைப் பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டு வருகிறது. பல்வேறு வெடி பொருட்களையும், போதைப் பொருட்களையும் முகர்வதன்மூலம் கண்டறியும் அடிப்படைப் பயிற்சியும் புத்தாக்கப் பயிற்சியும் அளிக்கப்படுகின்றன. 2001ஆம் ஆண்டில் நாய்ப்படை 1934 பணிகளைச் செய்துள்ளது.

பல்வேறு மாவட்டங்களில் உள்ள நாய்ப்படையில் மொத்தம் 107 நாய்கள் உள்ளன. காவல் துறை நவீனமயமாக்கும் திட்டத்தின்கீழ் மூன்று கட்டங்களில் இன்னும் 103 புதிய நாய்க்குட்டிகளை வாங்கி இப்படையில் சேர்க்குமாறு அரசு ஆணையிட்டுள்ளது. முதற்கட்டமாக 41 நாய்க்குட்டிகள் வாங்கப்பட்டு அவற்றிற்கு 9 மாத கால அடிப்படைப் பயிற்சி அளித்தபிறகு அவை 22 மாவட்டங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

**12. குதிரைப்படை**

சென்னை மாநகரின் ரோந்துப் பணிக்காக 15 குதிரைகளைக்கொண்ட குதிரைப்படை 28-7-1926 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் துறையில் ஆரம்பிக்கப்பட்டது. சென்னையிலுள்ள புதுப்பேட்டை இப்படையின் தலைமையிடமாகும். இப்படையில் தற்போது ஒரு உதவி ஆய்வாளரும் 41 குதிரைகளும் உள்ளனர். இவற்றில் 5 குதிரைகள் சென்னை நகரின் முக்கியமான காவல் நிலையங்களுக்கு அளிக்கப்பட்டுள்ளன. இப்படைக்கான குதிரைகள் உத்திரப்பிரதேச மாநில ஷரான்பூரிலுள்ள இராணுவப் பணிமனையிலிருந்து வழக்கமாக வாங்கப்படுகின்றன. சமீபகாலங்களில் சென்னை குதிரைப் பந்தய சங்கமும் குதிரைகளை வழங்கி வருகிறது. ஒரு குதிரையின் பராமரிப்புச் செலவுக்கென அதிகபட்சம் நாளொன்று ரூ.150 ஒதுக்கப்படுகிறது. இப்படையில் ஒரு

[2002 ஏப்ரல் 24

ஆயுதப்படை ஆய்வாளரையும் சேர்த்து 84 காவல் துறைப் பணியாளர்கள் உள்ளனர். பேரணிகள் நடக்கும்போது கூட்டத்தைக் கட்டுப்படுத்துவதும், பண்டிகைக் காலங்களில் கூடும் கூட்டத்தைக் கட்டுப்படுத்துவதும் குதிரைப் படையின் முக்கிய பணியாகும்.

**13. விபச்சாரத் தடுப்புப் பிரிவு**

சென்னை மாநகரில் ஒரு காவல் துறை உதவி ஆணையர், ஒரு காவல் ஆய்வாளர், இரண்டு உதவி ஆய்வாளர்கள், மூன்று தலைமைக் காவலர்கள், ஒன்பது முதல்நிலைக் காவலர்கள், இரண்டு இரண்டாம் நிலைக் காவலர்கள், ஒரு பெண் தலைமைக் காவலர் மற்றும் ஆறு பெண் காவலர்களைக் கொண்டு விபச்சாரத் தடுப்புப் பிரிவு இயங்கி வருகிறது. இப்பிரிவிற்கு, காவல்நிலையத் தகுதி வழங்கப்பட்டுள்ளது. 1956ஆம் ஆண்டு விபச்சாரத் தொழில் தடுப்புச் சட்டத்தின் பிரிவுகளை தீவிரமாக நடைமுறைப்படுத்துவதும், விபச்சாரத் தொழில் பெருகுவதைத் தடுக்கும் வகையில், பெண்களை இத்தொழிலில் ஈடுபடுத்துதல் மற்றும் வாங்குதல் ஆகியவற்றிற்கு காரணமானவர்களையும், விபசார விடுதிகளை நடத்தும் அமைப்பாளர்களை அடையாளம் காண்பதும், இத்தகைய சமூக அநீதிகளைக் களைவதும் விபச்சாரத் தடுப்புப் பிரிவின் முக்கிய குறிக்கோள்களாகும். சென்னை மாநகரில் காவல் உதவி ஆணையர் பதவி நிலைக்குக் குறையாத அலுவலரும் மற்ற இடங்களில் காவல் துணைக் கண்காணிப்பாளர் பதவி நிலைக்குக் குறையாத அலுவலரும் மேற்சொன்ன சட்டத்தின்படி நடைபெறும் குற்றங்களைக் கையாளுகிறார்கள்.

**14. இளங்குற்றவாளிகளை சீர்திருத்த உதவிபுரியும் காவல் பிரிவு**

இப்பிரிவு, 1960ஆம் ஆண்டு முதல் சென்னை நகரில் இயங்கி வருகிறது. இந்தியத் தண்டனைச் சட்டம், 1937ஆம் ஆண்டு மதுவிலக்கு அமல் சட்டம் 1956ஆம் ஆண்டு விபச்சாரத் தடுப்புச் சட்டம் ஆகியவற்றின்கீழ் குற்றம் சாட்டப்பட முடியாத 16 வயதிற்குட்பட்ட ஆதரவற்ற சிறார்களையும் வீட்டைவிட்டு ஓடிவந்துவிட்ட சிறார்களையும் கவனிக்கும் பணியை இப்பிரிவு மேற்கொள்கிறது.

இத்தகைய சிறார்களை உள்ளூர் காவல் துறை பிடித்து, தகுந்த ஆதாரம் காட்டும்பட்சத்தில், அவர்களது பெற்றோர்களிடமோ அல்லது உள்ளூர் பாதுகாவலரிடமோ ஒப்படைக்கிறது. ஆதரவற்ற சிறார்களை சமூக விரோதிகளிடமிருந்து காக்கும்பொருட்டு குடிசைப் பகுதிகளிலும், இரயில் நிலையங்களிலும், திரை அரங்குகளிலும், விழாக்கள் நடக்கும் இடங்களிலும்



2002 ஏப்ரல் 24]

இப்பிரிவு ரோந்து செல்கிறது. இக்காவல் பிரிவுகள் கோயம்புத்தூர், சேலம், மதுரை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி ஆகிய மாநகரங்களிலும், சேலம், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களிலும் ஒரு ஆய்வாளர், ஒரு உதவி ஆய்வாளர் மற்றும் ஆறு காவலர்களைக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

**15. காவல் சுருக்கெழுத்துக் கூடம்**

காவல் சுருக்கெழுத்துக் கூடத்தின் தலைமையிடம் சென்னை ஆகும். இதன் கிளைகள் அனைத்து மாவட்டங்களிலும் உள்ளன. பொதுக் கூட்டங்களில் பேசப்படும் ஆட்சேபகரமான பேச்சுக்களை இப்பிரிவு குறிப்பெடுக்கிறது. இப்பிரிவில் ஒரு தலைமை நிருபர், 36 முதுநிலை நிருபர்கள், 56 இளநிலை நிருபர்கள் உள்ளனர். 2001 ஆம் ஆண்டில் வரப்பெற்ற 10,378 பொதுக் கூட்டங்களுக்கான வேண்டுகோள்களில் 9,708 பொதுக் கூட்டங்களுக்கான வேண்டுகோள்களை ஏற்று குறிப்பெடுத்துள்ளனர். 2001 ஆம் ஆண்டில் 1,323 இதரப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன. மொத்தம் 50 பகர்ப்புகள் (Transcriptions) எடுக்கப்பட்டுள்ளன.

**16. ஊர்க்காவல் படை**

ஊர்க்காவல் படையானது ஒரு தன்னார்வ அமைப்பாகும். போக்குவரத்துக் கட்டுப்பாடு, இரவு நேர ரோந்துப் பணி, கோயில் விழா பாதுகாப்புப் பணி, இயற்கைச் சீற்றம் நிகழும் காலங்களில் எடுக்கப்படும் மீட்புப் பணிகள் மற்றும் தேர்தல் பணி ஆகியவற்றில் காவல் துறைக்கு இப்பிரிவு உதவிபுரிந்து வருகிறது. குடியரசு நாள் கொண்டாட்டங்களில் இப்படை பங்கு பெறுகிறது. 550 பெண்களையும் சேர்த்து இப்படையிலுள்ளோரின் மொத்த எண்ணிக்கை 10,566 ஆகும். இப்படையினருக்கு வாட்டர்மேன்ஷிப், முதலுதவி, மீட்புப் பணி ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்படுகிறது. நாக்பூரில் நடத்தப்படும் குடிமுறைக் காப்புப் பயிற்சியிலும் இப்படையினரில் சிலர் பயிற்சி பெற்றுள்ளனர். குடியரசுத் தலைவரின் ஊர்க்காவல் படைப் பதக்கம், குடிமுறைக் காப்புப் பதக்கங்களும் இப்படையில் உள்ள சிறந்தவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளன.

**17. மனித உரிமைகள் மற்றும் சமூக நீதிப் பிரிவு**

குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம் மற்றும் தாழ்த்தப்பட்டோர், மலைவாழ் பழங்குடியினருக்கு எதிராக இழைக்கப்படும் வன்கொடுமைத்

[2002 ஏப்ரல் 24

தடுப்புச் சட்டம் ஆகியவற்றைச் செயல்படுத்துவது இப்பிரிவின் கடமையாகும். தாழ்த்தப்பட்டோருக்கும், பழங்குடியினருக்கும் எதிராக இழைக்கப்படும் குற்றங்கள் மற்றும் வன்கொடுமைகளைத் தடுப்பதும், பாதிக்கப்பட்ட அப்பிரிவினருக்கு நிவாரணமும் மறுவாழ்வும் அளிப்பதும் இப்பிரிவின் முக்கிய குறிக்கோள்களாகும்.

சென்னையைத் தலைமையிடமாகக் கொண்ட இப்பிரிவில் உள்ளோரின் மொத்த எண்ணிக்கை 266 ஆகும். கூடுதல் காவல் துறை இயக்குநர் ஒருவரும் அவருக்கு உதவிபுரிய காவல் துறைத் தலைவர் ஒருவரும் தலைமையிடத்தில் உள்ளனர். சென்னை, விழுப்புரம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களுக்கு, மாவட்டத்திற்கு ஒரு காவல் துணைக் கண்காணிப்பாளர் பதவி அளிக்கப்பட்டுள்ளது. மாவட்டங்களில் 29 காவல் ஆய்வாளர்களும், மாநகரங்களில் 5 காவல் ஆய்வாளர்களும் மொத்தம் 34 காவல் துறை ஆய்வாளர்கள் (கு.உ.பா.) உள்ளனர்.

மேற்சொன்ன இரு சட்டங்களின்படி தொடுக்கப்பட்ட வழக்குகள் பற்றிய விவரம் கீழே உள்ள அட்டவணைகளில் தரப்பட்டுள்ளது:

**குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம்**

| ஆண்டு | புகார் செய்யப்பட்ட வழக்குகள் | தண்டனை வழங்கப் பட்டவை | விடுவிக்கப் பட்டவை | விசாரணை நிலுவையில் உள்ளவை | புலனாய்வில் உள்ளவை | முறையிடப் பட்டவை |
|---|---|---|---|---|---|---|
| 1999 | 32 | .. | 17 | 12 | .. | 3 |
| 2000 | 38 | .. | 9 | 20 | .. | 9 |
| 2001 | 11 | .. | .. | 3 | .. | 8 |

**தாழ்த்தப்பட்டோர்/பழங்குடியினர் வன்கொடுமை தடுப்புச் சட்டம்**

| ஆண்டு | புகார் செய்யப்பட்ட வழக்குகள் | தண்டனை வழங்கப் பட்டவை | விடுவிக்கப் பட்டவை | விசாரணை நிலுவையில் உள்ளவை | புலனாய்வில் உள்ளவை | முறையிடப் பட்டவை |
|---|---|---|---|---|---|---|
| 1999 | 1,011 | 24 | 247 | 366 | 2 | 372 |
| 2000 | 996 | 6 | 196 | 491 | 6 | 297 |
| 2001 | 828 | 2 | 5 | 364 | 144 | 313 |



2002 ஏப்ரல் 24]

2001 ஆம் ஆண்டு 191 கிராமங்கள் வன்கொடுமை நிகழ்விடங்களாகக் கண்டறியப்பட்டன. அவற்றில் 140 கிராமங்கள் மிகவும் பதற்றம் நிறைந்த கிராமங்களாக உள்ளன. அத்தகைய கிராமங்களில் நிலத்தகராறு, பண்டிகைகளைக் கொண்டாடுதல், சாதிகளிடையேயான உறவுமுறை, கூலி வழங்குதல் போன்ற இனங்களைக் குறித்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்துடன் அடிப்படை வசதிகளான குடிநீர், இடுகாடு, இணைப்புச் சாலைகள், தொகுப்பு வீடுகள் ஆகிய விவரங்களும் சேகரிக்கப்பட்டு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்புச்) சட்ட விதி 12(4)-ன்படி பாதிக்கப்பட்டோருக்கு நிவாரண உதவித்தொகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. 1999 ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டு வரை பயனடைந்தோர் மற்றும் பாதிக்கப்பட்டோருக்கு, அளிக்கப்பட்ட நிவாரண உதவித்தொகை பற்றிய விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

| ஆண்டு | நிவாரணம் வழங்க ஒப்பளிக்கப் பட்டவை | பயனடைந்தோர் எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை (ரூ. கோடியில்) |
|---|---|---|---|
| 1999 | 615 | 978 | 1.25 |
| 2000 | 652 | 1297 | 1.85 |
| 2001 | 563 | 930 | 1.40 |

## 18. கொள்ளைத் தடுப்புப் பிரிவு

30-5-1995 ஆம் நாளிட்ட உள் (காவல்-12) துறையின் அரசாணை நிலை எண் 805-ன்படி காவல் துறைத் துணைத் தலைவர் ஒருவரின் தலைமையில் கொள்ளைத் தடுப்புப் பிரிவு தொடங்கப்பட்டது. பின்னர், இக்காவல் துறைத் துணைத் தலைவர் பதவியானது 4-6-1996 ஆம் நாளிட்ட உள் (காவல்-1) துறையின் அரசாணை நிலை எண் 795-ன்படி 31-5-1996 அன்று காவல் துறைத் தலைவர் பதவி நிலைக்கு உயர்த்தப்பட்டு பின்னர் காவல் துறைத் தலைவர் (சட்டம், ஒழுங்கு), தெற்கு மண்டலம் என 9-6-1997 அன்று மாற்றப்பட்டது. தற்சமயம் கூடுதல் காவல் துறை இயக்குநர் (குற்றம்) அவர்களது ஒட்டுமொத்தக் கட்டுபாட்டில் இப்பிரிவு இயங்கி வருகிறது. 31-12-2001 அன்று ஒரு காவல் கண்காணிப்பாளரையும் சேர்த்து இப்பிரிவில் தற்போது 26 பேர் பணியாற்றுகின்றனர். மாநில அளவிலான எல்லையைக் கொண்டுள்ள இப்பிரிவு, கொள்ளை, கூட்டுக்கொள்ளை,

[2002 ஏப்ரல் 24

ஆதாயத்திற்காக நடத்தப்படும் கொலைகள் ஆகியவற்றைப் பற்றிய தகவல்களைச் சேகரிக்கிறது. காவல் துறைத் தலைமை இயக்குநர், அரசு மற்றும் . உயர்நீதிமன்றம் ஆகியவற்றின் உத்தரவின்பேரில் இப்பிரிவிற்கு மாற்றம் செய்யப்படும் வழக்குகளின் புலன்விசாரணைப் பணியையும் இப்பிரிவு மேற்கொள்கிறது.

கடந்த மூன்றாண்டுகளில் நடைபெற்ற கூட்டுக்கொள்ளை, கொள்ளை, ஆதாயத்திற்கான கொலை பற்றிய விவரம் பின்வருமாறு:

| | 1999 | | 2000 | | 2001 | |
|---|---|---|---|---|---|---|
| குற்ற நிகழ்வுகள் | புகார் செய்யப் பட்டவை | கண்டு பிடிக்கப் பட்டவை | புகார் செய்யப் பட்டவை | கண்டு பிடிக்கப் பட்டவை | புகார் செய்யப் பட்டவை | கண்டு பிடிக்கப் பட்டவை |
| கூட்டுக் கொள்ளை | 168 | 107 | 158 | 105 | 154 | 66 |
| கொள்ளை | 610 | 416 | 656 | 458 | 671 | 363 |
| ஆதாயக் கொலை | 77 | 59 | 94 | 73 | 78 | 46 |

## 19. வீடியோ, திருட்டு தடுப்புப் பிரிவு

17-2-1995 ஆம் நாளிட்ட உள் (சினிமா-2) துறையின் அரசாணை (3டி) எண் 16-ன்படி இப்பிரிவு, தோற்றுவிக்கப்பட்டது. இப்பிரிவு கூடுதல் காவல் துறை இயக்குநர் (குற்றம்) அவர்கள் தலைமையில் செயலாற்றி வருகிறது. பதிப்புரிமைச் சட்டம், 2000 ஆம் ஆண்டு தகவல் தொழில் நுட்பச் சட்டம் மீறப்படுவதை இப்பிரிவு கண்காணித்து தடுக்கிறது. வீடியோ திருட்டுக் குற்றங்களைத் தடுக்க இப்பிரிவு தீவிரமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. காவல் கண்காணிப்பாளர் ஒருவரது தலைமையின்கீழ் செயல்படும் இப்பிரிவில் மொத்தம் 26 பேர் பணியாற்றுகின்றனர். மாநிலத்தில் நடைபெறும் குற்றங்களைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்கும்பொருட்டு இப்பிரிவு 6 அலகுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

2001 ஆம் ஆண்டில் 514 வழக்குகள் பதியப்பட்டுள்ளன. ரூ.2.69 கோடி மதிப்புள்ள சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. திருட்டு வீடியோவை ஒளிபரப்பு செய்ததற்காக கேபிள் டிவி. நடத்துநர்கள்மீது 37 வழக்குகள் பதியப்பட்டு நீதிமன்ற விசாரணையில் உள்ளன.



2002 ஏப்ரல் 24]

## 20. பொருளாதாரக் குற்றங்கள் தடுப்புப் பிரிவு-II (நிதி நிறுவனங்கள்)

1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு முதலீட்டாளர் (நிதி நிறுவனங்கள்) நலன் பாதுகாக்கும் சட்டத்தை இயற்றியதன்மூலம் இத்துறையில் நாட்டிலேயே தமிழ்நாடு முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது. முதலீட்டாளர்கள் கஷ்டப்பட்டு தாங்கள் சம்பாதித்த பணத்தை வங்கிசாரப் பணிகளில் ஈடுபட்டுள்ள நிதி நிறுவனங்களில் முதலீடு செய்யும்போது அந்நிதி நிறுவனங்கள் முதலீட்டாளர்களுக்கு உரிய காலத்தில் பணம் திருப்பித் தராது தவறிழைப்பதைத் தடுப்பதும், அவ்வாறு தவறிழைக்கும் நிறுவனங்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்து முதலீட்டாளர்களின் பணத்தைத் திருப்பித் தருவதும் இச்சட்டத்தின் நோக்கங்களாகும். இச்சட்டத்தின்படி பதிவு செய்யப்படும் வழக்குகளை விரைந்து முடிப்பதற்கென சென்னையில் தனி நீதிமன்றம் நிறுவப்பட்டுள்ளது.

சென்னை உயர் நீதிமன்றத்தின் உத்தரவிற்கிணங்க வங்கிசாராநிதி நிறுவனங்கள், பதிவு பெறாத நிதி நிறுவனங்கள் ஆகியவற்றிற்கெதிராகப் பதிவு செய்யப்படும் குற்றங்களைப் புலனாய்வு செய்யவேண்டி 24-12-1999 ஆம் நாளிட்ட உள் (நீதிமன்றங்கள் 2ஏ) துறையின் அரசாணை நிலை எண் 1697-ன்படி பொருளாதாரக் குற்றங்கள் தடுப்புப் பிரிவு-II (நிதி நிறுவனங்கள்) தோற்றுவிக்கப்பட்டது. இப்பிரிவு, 1-1-2000 முதல் இயங்கி வருகிறது. இப்பிரிவு சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு கூடுதல் காவல் துறை இயக்குநர் ஒருவரின் தலைமையில், ஒரு காவல் துறைத் தலைவர், ஒரு கூடுதல் காவல் கண்காணிப்பாளர் ஆகியோரைக் கொண்டு இயங்கி வருகிறது. இவர்களுடன் 4 காவல் துணைக் கண்காணிப்பாளர்களும், 8 ஆய்வாளர்களும், 16 உதவி ஆய்வாளர்களும், 32 தலைமைக் காவலர்களும், 64 காவலர்களும் இப்பிரிவில் சென்னையில் பணியாற்றுகின்றனர்.

அனைத்து மாவட்டங்களிலும், பிற பிரிவுகளிலிருந்து பெறப்பட்ட ஒரு காவல் துணைக் கண்காணிப்பாளர், 2 ஆய்வாளர்கள், 4 உதவி ஆய்வாளர்கள், 8 தலைமைக் காவலர்கள், 16 காவலர்களைக் கொண்ட பிரிவுகள் இயங்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. தகுதிவாய்ந்த பட்டயக் கணக்கர், தொழில்முறைக் கணினியாளர்கள், சட்ட வல்லுநர்கள் இப்பிரிவிற்கு உதவி வருகின்றனர். வங்கிசாரா நிதி நிறுவனங்களின் வழக்குகளைப் புலனாய்வு செய்வதற்கு இப்பிரிவின் சில அலுவலர்கள், இந்திய ரிசர்வ் வங்கி, காசியாபாத்திலுள்ள மைய புலனாய்வு நிறுவனம், ஐதராபாத்திலுள்ள தேசிய காவலர் பயிற்சிக் கழகம் ஆகியவற்றில் பயிற்சி பெற்றுள்ளனர்.

**31-3-2002 அன்று உள்ள நிலவரப்படி நிலுவையுள்ள வழக்குகள் விவரம்**

| | |
|---|---|
| (அ) புலனாய்வில் உள்ளவை | 267 |
| (ஆ) நீதிமன்ற விசாரணையில் உள்ளவை | 144 |
| (இ) முதலீட்டாளர்களின் பணம் முழுமையும் திருப்பியளிக்கப்பட்டதால் நடவடிக்கை கைவிடப்பட்டவை | 90 |
| (ஈ) தண்டனையில் முடிந்தவை | 12 |
| (உ) மாவட்டக் குற்றக் கூடத்திற்கும் தலைமை இடத்திற்கும் மாற்றப்பட்டவை | 16 |
| மொத்தம் | 529 |

பொருளாதாரக் குற்றங்கள் தடுப்புப் பிரிவு-II-ன் புலனாய்வின்படி, நிதி நிறுவனங்களினால் பாதிக்கப்பட்ட முதலீட்டாளர்கள் 11,43,119 பேர் ஆவர். இதில் சம்பந்தப்பட்ட தொகை ரூ.1897.12 கோடியாகும்.

இப்பிரிவு எடுத்த நடவடிக்கைகளின் தொடர்பாக 5,37,664 முதலீட்டாளர்களுக்கு ரூ.389.09 கோடியை தவறிழைத்த நிதி நிறுவனங்கள் திருப்பித் தந்துள்ளன. ஜப்தி செய்ய வேண்டி தோராயமாக ரூ.1523.72 கோடி மதிப்புள்ள சொத்துக்கள் கண்டறியப்பட்டுள்ளன. 89 வழக்குகளில் ஜப்தி நடவடிக்கை மேற்கொள்ள அரசு அனுமதி வழங்கியுள்ளது. 12 வழக்குகள் தண்டனையில் முடிவுற்றன. இவற்றில் 4 வழக்குகளில் அதிகபட்சத் தண்டனையான 10 ஆண்டு கடுங்காவல் சிறைத் தண்டனையும், ஒரு இலட்சம் ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

**முக்கியமான வழக்குகள்:**

(1) 1.2 இலட்சம் முதலீட்டாளர்களுக்குத் திருப்பித் தரவேண்டிய ரூ.266 கோடியைத் தராமல் அனுபவ் குரூப் கம்பெனிகள் ஏமாற்றியுள்ளன.

(2) ஆர்.பி.எப். லிமிடெட் என்ற நிதி நிறுவனமானது ரூ.454 கோடி முதலீடு செய்த 1.92 இலட்சம் முதலீட்டாளர்களை ஏமாற்றியுள்ளது. ஜப்தி செய்யவேண்டி இந்நிறுவனத்திற்குச் சொந்தமான ரூ.567.08 கோடி மதிப்புள்ள அசையாச் சொத்துக்கள் கண்டறியப்பட்டுள்ளன. முதலீட்டில் 15 விழுக்காடான ரூ.83.60 கோடி, முதலீட்டாளர்களுக்குத் திருப்பியளிக்கப்பட்டுள்ளது.



(3) ஆர்.பி.எஸ். பெனிபிட் பண்ட் லிமிடெட் என்ற நிதி நிறுவனமானது 16,000 முதலீட்டாளர்களுக்கு ரூ.42.74 கோடி திருப்பித் தராமல் ஏமாற்றியுள்ளது. ரூ.12.50 கோடியைத் திருப்பி வழங்க வேண்டும் என்ற முதலீட்டாளர்களின் கோரிக்கையை ஏற்குமாறு சென்னை உயர் நீதிமன்றம் ஆணையிட்டுள்ளது.

(4) எம்.எம்.சி. நிதி நிறுவனம், பொதுமக்கள் முதலீடு செய்த ரூ.171 கோடியை அபகரித்துக் கொண்டது. இவ்வழக்கில் குற்றவாளிகள் நீதிமன்றக் காவலில் உள்ளனர். பொருளாதாரக் குற்றங்கள் தடுப்புப் பிரிவு-II எடுத்த நடவடிக்கைகளின் விளைவாக முதலீட்டில் 36 விழுக்காடான ரூ.60 கோடி, சென்னை உயர் நீதிமன்ற ஆணைக்கிணங்க முதலீட்டாளர்களுக்குத் திருப்பித் தரப்பட்டுள்ளது. அந்நீதிமன்றத்தின் ஆணைக்கிணங்க முதலீட்டின் 6 விழுக்காட்டுத் தொகை முதலீட்டாளர்களுக்கு மேலும் திருப்பித் தரப்பட உள்ளது.

**21. சிலைத் திருட்டு தடுப்புப் பிரிவு**

7-10-1983 ஆம் நாளிட்ட உள் (காவல்-4) துறையின் அரசாணை நிலை எண் 2098-ன்படி சிலைத் திருட்டு தடுப்புப் பிரிவு 2-12-1983 முதல் தனியாக இயங்கி வருகிறது. ஐந்து இலட்சம் ரூபாய்களுக்கும் அதிகமான மதிப்புள்ள புராதன சிலைத் திருட்டு வழக்குகளைப் புலனாய்வு செய்வது இப்பிரிவின் முக்கியக் கடமையாகும். அவ்வப்போது காவல் துறைத் தலைமை இயக்குநரால் அனுப்பப்படும் சிலைத் திருட்டு வழக்குகளில் புலனாய்வு மேற்கொள்வதும் மாவட்ட காவல் துறையினர் புலனாய்வு செய்யும் முக்கியமான சிலைத் திருட்டு வழக்குகளை ஒருங்கிணைப்பதும் அத்துடன் புராதன பொருள் வியாபாரிகளின் சந்தேகத்திற்கிடமான நடவடிக்கைகள் பற்றிய தகவல்களைச் சேகரிப்பதும் இப்பிரிவின் பணிகளாகும். மாநிலம் முழுவதும் உள்ள காவல் நிலையங்களில் பதியப்படும் சிலைத் திருட்டு வழக்குகளைக் கண்காணிப்பதும் இப்பிரிவின் வேலையாகும். சிலைகள் தொடர்புடைய குற்றங்களுக்கான புலன்களையும் பயனுள்ள அறிவுரைகளையும் மாவட்ட காவல் துறைக்கு இப்பிரிவு அளித்து வருகிறது.

[2002 ஏப்ரல் 24

ஒரு காவல் கண்காணிப்பாளர் உள்ளிட்ட 30 பணியாளர்களைக் கொண்ட இப்பிரிவு, கூடுதல் காவல் துறை இயக்குநர், பொருளாதாரக் குற்றங்கள் தடுப்புப் பிரிவு அவர்களது கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது. 2001 ஆம் ஆண்டு 14 வழக்குகளுக்குட்பட்ட 30 உலோகச் சிலைகளையும், 4 கற்சிலைகளையும், 3 திருவாட்சிகளையும், ஒரு வண்ண ஓவியத்தையும், 15 கோயில் தேர் சிற்பங்களையும் மீட்டுள்ளது. பதியப்பட்ட 297 வழக்குகளில், 137 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. திருவான்மியூர் காவல் நிலையத்தில் பதியப்பட்ட வழக்கில் ரூ.6 இலட்சம் மதிப்புள்ள 70 கிலோ கிராம் வெள்ளியைக் கண்டுபிடிப்பதில் இப்பிரிவு பெரும்பணி ஆற்றி உள்ளது.

## 22. வணிகக் குற்றங்கள் குற்றப் புலனாய்வுப் பிரிவு (பொருளாதாரக் குற்றங்கள் தடுப்புப் பிரிவு-I)

கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் கட்டுப்பாட்டில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களில் நடைபெறும் நிதி முறைகேடுகளைப் புலனாய்வு செய்ய வேண்டி 20-1-1971 ஆம் நாளிட்ட உள் துறையின் அரசாணை நிலை எண் 170-ன்படி இப்பிரிவு தோற்றுவிக்கப்பட்டது.

12 துறைகளின் கட்டுப்பாட்டில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களில் நடைபெற்ற நிதி முறைகேடுகளையும் இப்பிரிவு புலனாய்வு செய்துள்ளது. அத்துறைகள் பின்வருமாறு:

கைத்தறி மற்றும் துணிநூல் துறை இயக்குநர், சர்க்கரைத் துறை இயக்குநர், காதி கிராம கைவினைப் பொருட்களின் முதன்மை அலுவலர், வீட்டுவசதித் துறை பதிவாளர், மீன்வளத் துறை இயக்குநர், தொழில் (ம) வணிகவியல் துறை இயக்குநர், கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநர், பால் உற்பத்தி (ம) பால்பண்ணை மேம்பாட்டு ஆணையர், எண்ணெய் வித்துக்கள் துறை இயக்குநர், வேளாண் பொறியியல் துறை இயக்குநர், பட்டுவளர்ச்சி இயக்குநர், வேளாண் துறை இயக்குநர், சமூக நலத் துறை இயக்குநர்.

கூட்டுறவுச் சங்கங்களில் ஒரு இலட்சம் ரூபாய்க்கு அதிகமாகக் கையாடல் செய்யப்பட்டது தொடர்பான வழக்குகளை இப்பிரிவு புலனாய்வு செய்கிறது. ரூ.50,000-க்குமேல் ரூ.1,00,000-க்குட்பட்ட வழக்குகளை மாவட்டக் குற்றக் கூடமும் ரூ.50,000-க்கும் குறைவான வழக்குகளை உள்ளூர் காவல் துறையும் புலனாய்வு செய்கின்றன.



2002 ஏப்ரல் 24]

காவல் கண்காணிப்பாளர் ஒருவரின் தலைமையின்கீழ் மொத்தம் 170 காவல் பணியாளர்கள் இப்பிரிவில் உள்ளனர். 6 மாவட்டங்களுக்கு ஒன்று வீதம் மொத்தம் 5 உட்கோட்டங்களாக இப்பிரிவு பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு உட்கோட்டமும், காவல் துணைக் கண்காணிப்பாளர் ஒருவரின் மேற்பார்வையில் இயங்குகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் இவருக்கு காவல் ஆய்வாளர் ஒருவர் உதவி புரிகிறார். தலைமையிடத்தில் ஒரு காவல் ஆய்வாளர் உள்ளார். சந்தேகத்திற்குரிய விரல் ரேகைகளைச் சரிபார்க்கவேண்டி மாவட்டந்தோறும் ஒரு காவல் துணைக் கண்காணிப்பாளர் (விரல்ரேகை), 3 ஆய்வாளர்கள் (விரல்ரேகை), ஒரு தட்டச்சர் ஆகியோரைக் கொண்ட விரல்ரேகைக் கூடம் உள்ளது.

2001-2002 ஆம் ஆண்டில் இப்பிரிவு ஆற்றியுள்ள பணிகள் பின்வருமாறு:—

| ஆண்டு | ஆண்டு ஆரம்பத்தில் | | பதிவு செய்யப்பட்டவை | குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டவை | தண்டனையில் முடிந்தவை | விடுதலையில் முடிந்தவை | மறு விசாரணை | மொத்தம் முடிவு செய்யப்பட்டவை | ஆண்டு முடிவில் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | புலனாய்வில் உள்ளவை | நீதிமன்றத்தில் உள்ளவை | | | | | | | புலனாய்வில் உள்ளவை | நீதிமன்றத்தில் உள்ளவை |
| 2001-2002 நிதியாண்டில் 31-1-2002 முடிய | 117 | 970 | 163 | 134 | 89 | 18 | 11 | 118 | 137 | 989 |

## 23. போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு

போதைப் பொருட்கள் மற்றும் மனமயக்கம் தரும் பொருட்கள் ஆகியவற்றின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தி நெறிப்படுத்துவதற்காக மைய அரசு 1985 ஆம் ஆண்டு போதைப் பொருட்கள், மனமயக்கம் தரும் பொருட்கள் சட்டத்தை (மைய அரசின் சட்டம் 61/1985) இயற்றியது. இச்சட்டம் 14-11-1985 முதல் நடைமுறைக்கு வந்தது. சிலவகைக் குற்றங்களுக்கு கடும் சிறைத் தண்டனையும் மேலும் மரண தண்டனையும் வழங்கிட இச்சட்டம் வகை செய்கிறது. போதைப் பொருட்கள், மனமயக்கம் தரும் பொருட்களைக் கள்ளத்தனமாக எடுத்துச் செல்வதைத் தடுக்கும்

பொருட்டு மைய அரசு 1988 ஆம் ஆண்டு போதைப் பொருட்கள், மனமயக்கம் தரும் பொருட்களைக் கள்ளத்தனமாகக் கடத்துதல் தடுப்புச் சட்டத்தை (மைய அரசின் சட்டம் 46/1988) இயற்றியது. இச்சட்டம் 1-7-1988 முதல் செயல்பாட்டிற்கு வந்துள்ளது. இச்சட்டத்தின்படி போதைப் பொருட்கள்-மனமயக்கம் தரும் பொருட்களைக் கள்ளத்தனமாக எடுத்துச் செல்வோரை ஓராண்டுக்குக் குறையாமலும் ஈராண்டுகளுக்கு மிகாமலும் சிறையிலடைக்க மாநில அரசுகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. மாவட்ட காவல் துறையினர், இருப்புப்பாதை காவல் துறையினர், போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு, குற்றப்புலனாய்வுப் பிரிவினர், போதைப் பொருள் கட்டுப்பாட்டுக் கூடம் ஆகியோரும், மைய அரசைச் சேர்ந்த சுங்கத்தீர்வை ஆட்சியர்கள், வருவாய் நுண்ணறிவு இயக்க அதிகாரிகள் ஆகியோரும் இச்சட்டத்தைச் செயல்படுத்துவதற்குப் பொறுப்பானவர்கள் ஆவர்.

சென்னை, கோயம்புத்தூர், திண்டுக்கல், மதுரை, நாகப்பட்டினம், இராமநாதபுரம், சேலம், தேனி, திருச்சிராப்பள்ளி, தூத்துக்குடி, வேலூர் மற்றும் விழுப்புரம் ஆகிய 12 இடங்களில் இப்பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு பிரிவும் ஒரு ஆய்வாளரின்கீழ் 2 முதல் 4 மாவட்டங்கள் வரை கவனிக்கிறது. இப்பிரிவிலுள்ளோரின் மொத்த எண்ணிக்கை 118 ஆகும். கூடுதல் காவல் துறை இயக்குநர் (குற்றம்) கட்டுப்பாட்டில் இப்பிரிவு இயங்குகிறது. இவருக்கு உதவியாக காவல் துறைத் தலைவர் ஒருவர் பணிபுரிகிறார். தற்சமயம் காவல் கண்காணிப்பாளர் ஒருவர் இப்பிரிவின் தலைவராக இருக்கிறார். இவரது கட்டுப்பாட்டில் 120 காவல் பணியாளர்கள் உள்ளனர்.

2001 ஆம் ஆண்டில் இப்பிரிவு கண்டுபிடித்த வழக்குகள் 1313 ஆகும். 1269 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர் மற்றும் 1381 வழக்குகள் தண்டனையில் முடிந்துள்ளன.

போதைப் பொருட்கள், மனமயக்கம் தரும் பொருட்களை உபயோகிப்பதாலும், அவற்றைக் கள்ளத்தனமாக வைத்திருப்பதாலும் ஏற்படும் தீமைகள் குறித்தும் அவற்றிற்கு எதிரான காவல் துறை நடவடிக்கைகள் குறித்தும், பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக 26-6-2001 அன்று சர்வதேச போதைப் பொருள் எதிர்ப்பு தினம் கொண்டாடப்பட்டது.



மைய அரசின் ஆணைக்கிணங்க, மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை ஆணையாளரைத் தலைவராகவும், காவல் துறைத் துணைத் தலைவர் (குற்றம்), உதவி இயக்குநர், தடயஅறிவியல் துறை ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்டு மாவட்ட அளவில் போதை பொருட்களை அழிக்கும் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

8-12-2001 அன்று பறிமுதல் செய்யப்பட்ட 5896 கிலோ கிராம் 695 கிராம் 300 மில்லி கிராம் அளவிலான கஞ்சா, முத்திரை வைக்கப்பட்ட 18 கஞ்சாப் பொட்டலங்கள், 8 கிராம் ஹெராயின் ஆகியவை சென்னையிலுள்ள ஒரு தனியார் தொழிற்சாலையில் அழிக்கப்பட்டன.

## 24. சிறப்பு அதிரடிப் படை

சிறப்பு அதிரடிப்படை 1995 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது

பொருட்கள் கடத்துவதைக் தடுத்தல், ஆயுதமேந்திய தீவிரவாதிகளை ஒடுக்குதல், தீவிரவாத நடவடிக்கைகளைத் தடுத்தல், விமானக் கடத்தலைத் தடுக்கும் நடவடிக்கை எடுத்தல், பிணைத் தொகைக்காக மிக முக்கிய நபர்களைக் கடத்தும் நிகழ்வுகளைத் தடுத்தல் முதலியவை இப்பிரிவின் பணிகளாகும். காட்டில் ஒளிந்து வாழும் சந்தன மரக் கடத்தல் வீரப்பனைப் பிடிக்கும் பணி இப்பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு விருப்பப்பட்டுவரும் திறமைவாய்ந்த துடிப்பான காவலர்களைச் சேர்த்துக்கொண்டு இப்படை புதுப்பொலிவுடன் வீரப்பனைப் பிடிக்கும் பணியினை 16-6-2001 அன்று மீண்டும் தொடங்கியுள்ளது. கூடுதல் காவல் துறை இயக்குநர் ஒருவரின் ஒட்டுமொத்தக் கட்டுப்பாட்டில் இப்படை இயங்குகிறது. 1-1-2002 அன்றுள்ள நிலவரப்படி அலுவலர்களையும் சேர்த்து மொத்தம் 229 காவல் பணியாளர்கள் இப்படையில் உள்ளனர். இப்படையை வழி நடத்தவேண்டி திரு. தேவாரம் அவர்களை ஒப்பந்த அடிப்படையில் இப்படையின் தலைவராக அரசு நியமித்துள்ளது. எல்லைப் பாதுகாப்புப் படையும் மாநிலக் காவல் படையும் கூட்டாகப் பணியாற்றி வந்தன. எனினும், 4-10-2001 முதல் எல்லைப் பாதுகாப்புப் படை திருப்பி அழைக்கப்பட்டது. வீரப்பனின் ஆள்பலமும் நடமாட்டமும் வெகுவாக முடக்கப்பட்டு விட்டன.

## 25. காவல் துறை கணினிப் பிரிவு

தமிழ்நாடு காவல் துறையின் தொழில் நுட்பப் பிரிவு காவல் துறைத் தலைவர் ஒருவரின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது. மாநில குற்றப்

[2002 ஏப்ரல் 24

பதிவுருக்கள் கூடத்தின் இயக்குநராக உள்ள காவல் துறைத் துணைத் தலைவர் இவருக்கு உதவி செய்து வருகிறார். மைய அரசின், காவல் துறையை நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ் 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு காவல் துறை கணினிப் பிரிவு ஏற்படுத்தப்பட்டது. குற்றத்தகவல் முறை, மென்பொருள் ஆக்கம், கணினிப் பயிற்சி அளித்தல் ஆகியவற்றில் இப்பிரிவு ஈடுபட்டுள்ளது. மேலும், புலனாய்வு அதிகாரிகளுக்கு வடிவு ஆக்கல் முறை, குற்றக் கண்டுபிடிப்பில் தலாஷ் மென்பொருள் போன்ற கருவிகளை உபயோகிப்பதற்கான உதவிகளைச் செய்து வருகிறது. 1994 ஆம் ஆண்டிலிருந்து மாநில குற்றப் பதிவுருக்கள் கூடமாகவும் இப்பிரிவு செயல்பட்டு வருகிறது.

**சாதனைகள்:**

1. வடிவமைக்கப்பட்ட படிவங்களில் குற்றத் தகவல்களைச் சேகரித்து கணினிப்படுத்தும்பொருட்டு தேசிய குற்றப் பதிவுருக்கள் கூடம் (குற்றத் தகவல் முறை) மாநகரங்களுக்கும் மாவட்டங்களுக்கும் மென் பொருட்களை வழங்கியுள்ளது.
2. 2001 ஆம் ஆண்டு காவல் துறை கணினி பிரிவினால் தமிழ்நாடு பற்றிய இணையதளம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு சிறப்புக் காவல் படை உள்ள இடத்தை மாநில வரைபடத்தில் கண்டறியும் வகையில் தமிழ்நாடு சிறப்புக் காவல் படை பணியிடம் அறியும் மென்பொருள் ஒன்றினையும் இப்பிரிவு தயாரித்துள்ளது.
3. 2001 ஆம் ஆண்டு வடிவாக்கல் மென்பொருள் கொண்டு 38 வழக்குகளில் ஈடுபட்டதாகச் சந்தேகப்படும் 47 நபர்களின் வடிவங்கள் உருவாக்கப்பட்டன. இதனால் 5 வழக்குகளில் தொடர்புடைய குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.
4. 2001 ஆம் ஆண்டில் மாவட்டம் மற்றும் சரக அலுவலகங்கள் ஒவ்வொன்றிலிருந்தும் கணினி இயக்கும் இரண்டு நபர்களுக்கு விண்டோஸ் அடிப்படையிலான வடிவாக்கல் முறையில் பயிற்சி அளிக்கப்பட்டது. தேசிய குற்றப் பதிவுருக்கள் கூடத்திலிருந்து பெறப்பட்ட மென்பொருள் தகடுகளும் அவர்களுக்குத் தரப்பட்டன. மேலும், மாவட்டங்களில் பணியாற்றும் கணினி இயக்கும் பத்து நபர்களுக்கு குற்றப் பதிவுருக்கள் தகவல் முறையில் 2001-ல் இப்பிரிவினால் பயிற்சி அளிக்கப்பட்டது.



2002 ஏப்ரல் 24]

## 26. குடிமைப்பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுப் பிரிவு

குடிமைப்பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுப் பிரிவானது உணவுப்பொருள் கடத்தல் தடுக்கும் குற்றப் புலனாய்வுப் பிரிவு என அழைக்கப்படும். அத்தியாவசியப் பொருட்கள் சட்டத்தையும் மத்திய மாநில அரசுகளின் பல்வேறு கட்டுப்பாட்டு ஆணைகளைச் செயல்படுத்தவும், இப்பிரிவு 1964 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. ஒரு காவல் துறைத் தலைவர், இரண்டு காவல் கண்காணிப்பாளர்கள் உட்பட 262 காவல் பணியாளர்களைக் கொண்ட இப்பிரிவு காவல் துறை இயக்குநர் ஒருவரின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது. இதில், 16 அலகுகளும் ஐந்து பறக்கும் படைகளும் உள்ளன.

**இப்பிரிவின் கடமைகளாவன:**

(1) நெல், அரிசி உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களைப் பதுக்குதலையும் மற்றும் கடத்தலையும் தடுத்தல்.

(2) உணவுப் பொருட்கள், பெட்ரோலியப் பொருட்கள், சிமெண்ட் ஆகியவற்றில் கலப்படம் செய்வதைக் கண்டுபிடித்து வழக்குத் தொடுத்தல்.

(3) பொது விநியோகத்திற்கான பொருட்களை சட்டத்திற்குப் புறம்பாக வேறு வழியில் உபயோகிப்பதைத் தடுத்தல்.

2001 ஆம் ஆண்டில் வாகனங்களையும் சேர்த்து பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களின் மதிப்பு ரூ.16.05 கோடி ஆகும். 1781 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். 31-12-2001 வரையில் ரூ.2.83 கோடி மதிப்புள்ள அத்தியாவசியப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. 1980 ஆம் ஆண்டு கள்ளச் சந்தைத் தடுப்பு மற்றும் அத்தியாவசியப் பண்டங்கள் விநியோக பராமரிப்புச் சட்டத்தின்படி 37 நபர்களுக்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

## 27. விரல்ரேகைப் பதிவுக் கூடம்

22-8-1895 இல் தொடங்கப்பட்ட தமிழ்நாடு விரல்ரேகைப் பதிவுக் கூடம் நாட்டிலேயே பழமைவாய்ந்த ஒன்றாகும். இப்பிரிவு குற்றவாளிகளை அடையாளம் காணவும், குற்றங்களைக் கண்டறியவும் உதவி புரிகிறது. இப்பிரிவு பொதுமக்களாலும், அரசின் பல்வேறு துறைகளாலும், நீதித் துறையினராலும் அனுப்பப்படும் விரல்ரேகை மாதிரிகளை ஆராய்ந்து அடையாளம் காட்டும் பணியைச் செய்து வருகிறது.

[2002 ஏப்ரல் 24

மாவட்டத் தலைநகரங்களிலும், காவல் ஆணையரகங்களிலும் இப்பிரிவு, தனி விரல்ரேகைப் பதிவுக்கூடம் என அழைக்கப்படுகிறது. மாநிலத்தில் மொத்தம் 33 தனி விரல்ரேகைப் பதிவுக்கூடங்கள் உள்ளன. இவை தவிர, சென்னையிலுள்ள விழிப்புப் பணி மற்றும் ஊழல் தடுப்பு இயக்குநரகத்திலும் வணிகக் குற்றங்கள் குற்றப் புலனாய்வுப் பிரிவிலும் இப்பிரிவின் தனிக்கூடங்கள் இயங்கி வருகின்றன. இவை அனைத்தும் காவல் துறைத் தலைவர் (தொழில் நுட்பப் பணிகள்) அவர்களது கட்டுப்பாட்டில் உள்ளன. 1997 ஆம் ஆண்டு முதல் விரல்ரேகைப் பணியாளர்கள் காவல் துறையின் களப் பணியாளர்களாகக் கருதப்படுகின்றனர். இப்பிரிவில் ஒரு காவல் கண்காணிப்பாளரும் 15 கூடுதல் காவல் கண்காணிப்பாளர்களும் உட்பட மொத்தம் 289 பணியாளர்கள் உள்ளனர். "விரல் ரேகை ஆய்வு மற்றும் குற்றங்களைக் கண்டுபிடிக்கும் கருவி" (FACTS) என அழைக்கப்படும் தானியங்கி விரல்ரேகை அடையாளம் காணும் கருவி சென்னை விரல்ரேகைப் பதிவுக் கூடத்தில் நிறுவப்பட்டுள்ளது. இது ஐந்து இலட்சம் விரல்களை வைத்திருக்கும் தொள்திறன் கொண்டதாகும். இக்கருவிகள் தகவல் மையத்தில் தற்போது 1.55 இலட்சம் விரல் ரேகைகள் சேகரித்து வைக்கப்பட்டுள்ளன. இம்முறையினால் குற்றவாளிகளை விரைவில் அடையாளம் காண முடிகிறது.

31-10-2001 அன்றுள்ள நிலவரப்படி 2,17,284 விரல் ரேகைகள் இக்கருவியின் தகவல் மையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. 9703 வாய்ப்புள்ள கைரேகைகளை இக்கருவியின்மூலம் ஒப்பிட்டுப் பார்த்ததில் 222 வழக்குகளில் குற்றவாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதுதவிர, 80 விரல் ரேகைகள் வழக்கமான ஒப்பீட்டு முறைமூலம் அடையாளம் காணப்பட்டன. சற்றேழறத்தாழ ரூ.75 இலட்சம் மதிப்புள்ள காணாமல் போன சொத்துக்கள் இதன்மூலம் கண்டறியப்பட்டுள்ளன.

## 28. காவல் பயிற்சிக் கல்லூரி

1896 ஆம் ஆண்டு வேலூரில் நிறுவப்பட்ட காவல் பயிற்சிக் கல்லூரி 1976 ஆம் ஆண்டு முதல் சென்னை அசோக் நகருக்கு மாற்றப்பட்டது. சென்னையிலுள்ள காவல் துறை இயக்குநர் (பயிற்சி) அவர்கள் காவல் துறைப் பயிற்சி நிர்வாகத்திற்குத் தலைவராவார். ஒரு காவல் துறைத் தலைவர், ஒரு காவல் துறைத் துணைத் தலைவர், காவல் பயிற்சிக் கல்லூரி முதல்வர் ஆகியோர் இவருக்கு உதவி புரிகின்றனர். இக்கல்லூரி தவிர பின்வரும் பயிற்சி நிறுவனங்களும் உள்ளன:—



2002 ஏப்ரல் 24]

(அ) வேலூர் மற்றும் கோயம்புத்தூரில் உள்ள காவலர் பயிற்சிப் பள்ளிகள்.

(ஆ) சரக தலைமையிடங்களான சென்னை, புனித தோமையர் மலை, வேலூர், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி ஆகிய இடங்களில் உள்ள பணியிடைப் பயிற்சி மையங்கள்.

பல்வேறு நீண்டகால, குறுகிய கால பயிற்சிகளையும் காவல் பயிற்சிக் கல்லூரி நடத்தி வருகிறது. இரண்டாம் நிலைக் காவலர்களுக்கு காவலர் பயிற்சிப் பள்ளிகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

நேரடி நியமனம் மூலம் பணியமர்த்தப்பட்ட காவல் துணைக் கண்காணிப்பாளர்களுக்கு, சட்டம், காவல் நிலை ஆணைகள், புலனாய்வு, தடய அறிவியல் மருத்துவம் மற்றும் அறிவியல், உடற்பயிற்சி, துப்பாக்கி சுடுதல் ஆகியவற்றில் ஓராண்டு காலப் பயிற்சி அளிக்கப்படுகிறது. உதவி காவல் கண்காணிப்பாளர்களுக்கு 6 வார காலப் பயிற்சி அளிக்கப்படுகிறது. உதவி ஆய்வாளர்களுக்கு சட்டம், இந்திய அரசியலமைப்புச் சட்டம், குற்றவியல், புலனாய்வு, காவல் துறை நிருவாகம், கராத்தே, நீச்சல், யோகா போன்றவற்றில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இவை தவிர தகுந்த கால கட்டங்களில் பதவி உயர்வுக்கு முன் சிறப்புப் பயிற்சிகளும், சில சிறப்பு புத்தாக்கப் பயிற்சிகளும் அளிக்கப்பட்டு வருகின்றன.

## 29. நுண்ணறிவுப் பிரிவு

தனிப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை, கியூ பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை, பாதுகாப்புப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை, சிறப்புப் பிரிவு ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு நுண்ணறிவுப் பிரிவு கூடுதல் காவல் துறை இயக்குநர் ஒருவரின் தலைமைப் பொறுப்பில் செயல்படுகிறது. இனப்பதற்றம், சாதிப்பதற்றம், சட்டம்-ஒழுங்குப் பிரச்சினைகள், மிக முக்கியமானோர் பாதுகாப்பு, தீவிரவாதிகள், இலங்கைத் தமிழ் போராளிகள், மத அடிப்படைவாதிகள் தொடர்பான நுண்ணறிதல் பணிகளை இப்பிரிவு செய்து வருகிறது.

## 30. தனிப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை

இப்பிரிவானது மாநிலத்தில் நிலவி வரும் சட்டம்-ஒழுங்கு பிரச்சினைகளைத் தொடர்ந்து கண்காணித்து வருவதுடன், பிரச்சினை எழும் சாத்தியக்கூறு உள்ள இடங்கள் குறித்து சம்பந்தப்பட்ட

[2002 ஏப்ரல் 24

அலுவலர்களுக்குத் தெரிவித்து அவர்களை எச்சரிக்கைப்படுத்துகிறது. சாதிப்பதற்றம், இனப்பதற்றம், சட்டம்-ஒழுங்குப் பிரச்சினைகள் தொடர்பான நுண்ணறிவை சேகரித்தலும் அதனை மற்ற பிரிவுகளுடன் பகிர்ந்துகொள்ளுதலும் இப்பிரிவின் பணியாகும். மாவட்டங்கள்தோறும் இப்பணியைக் கவனிக்க ஒரு ஆய்வாளர் உள்ளார்.

**31. பாதுகாப்புப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை**

தமிழ்நாட்டிற்கு, வருகைதரும் மிக முக்கியமானோர், மிகமிக முக்கியமானோர், அயல்நாட்டுத் தலைவர்கள், பாதுகாப்பிலுள்ள பிரமுகர்கள் ஆகியோரின் பாதுகாப்பு இப்பிரிவின் பொறுப்பாகும். 2001 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிற்கு வருகைபுரிந்த மிக முக்கியமானோர், மிக மிக முக்கியமானோர்கள் 1585 நபர்களுக்கு இப்பிரிவு பாதுகாப்பு அளித்துள்ளது. தமிழ்நாடு சிறப்புக் காவல்படையிலிருந்து பெறப்பட்டவர்களைக் கொண்டு அமைக்கப்பட்ட அதிரடிப்படை ஒன்றும் இப்பிரிவில் உள்ளது. இந்த அதிரடிப்படையிலுள்ளோர், உச்சநிலை அச்சுறுத்தலுக்குட்பட்ட நபர்களுக்கு பாதுகாப்பளிக்கும்பொருட்டு, பாதுகாப்பு அளிப்பதிலும், நுண்ணறிதலிலும் பயிற்சி பெற்றவர்களாவர்.

**32. கியூ பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை**

இடது சாரித் தீவிரவாதிகள், இலங்கைப் போராளிகள் உள்ளிட்ட இதர போராளிகள் ஆகியோரது நடவடிக்கைகள் இப்பிரிவினால் நுணுக்கமாகக் கண்காணிக்கப்படுகின்றன. மாவட்டந்தோறும் ஓர் ஆய்வாளரின்கீழ் இயங்கும் இப்பிரிவு இடது சாரித் தீவிரவாதிகள், இலங்கைப் போராளிகள் ஆகியோர் மீதான வழக்குகளில் புலனாய்வுப் பணியைச் செய்து வருகிறது. அவர்களைப் பற்றிய நுண்ணறிவினை உள்ளூர் காவல் துறையினருடன் பகிர்ந்துகொள்கிறது.

**33. சிறப்புப் பிரிவு**

இப்பிரிவானது தனிப் பிரிவு புலனாய்வுத் துறையில் ஒரு தனி அமைப்பாக 1998 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. மத அடிப்படைவாதிகள் தொடர்பான பிரச்சினைகளை இப்பிரிவு கவனிக்கிறது. இப்பிரிவு சென்னை, வேலூர், திருநெல்வேலி, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை ஆகிய மாவட்டங்களில் மாவட்டத்திற்கு ஓரலகு வீதம் இயங்கி வருகிறது. இவ்வோரலகிலும் காவல் துணைக் கண்காணிப்பாளர் ஒருவரது தலைமையில் 3 ஆய்வாளர்கள் உள்ளனர்.



2002 ஏப்ரல் 24]

மத அடிப்படைவாதிகள் குறித்தும், விநாயகர் சதுர்த்தி, பாபர் மசூதி இடிப்பு நினைவுநாள், மிக மிக முக்கியமானோர் வருகை போன்ற சமயங்களில் இடையூறுகள் நிகழக்கூடும் சாத்தியக்கூறுகள் பற்றி இப்பிரிவு நுண்ணறிகிறது.

**34. தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம்**

29-11-1991 ஆம் நாளிட்ட உள் (பணி-எப்) துறையின் அரசாணை நிலை எண் 1806-ன்படி இவ்வாரியம் 1991 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் செயல்பட்டு வருகிறது. இவ்வாரியம் சீருடைப் பணியாளர் தேர்வுமுறைகளைக் கூர்ந்தாய்வு செய்வதுடன், விருப்பு வெறுப்பின்றியும் புகார்களுக்கு இடமளிக்காமலும் ஆட்களைத் தேர்வுசெய்வதை உறுதி செய்கிறது. காவல் துறை இயக்குநர் நிலையிலுள்ள ஒரு தலைவர், கூடுதல் காவல் துறை இயக்குநர் நிலையில் ஒரு உறுப்பினர் மற்றும் காவல் துறைத் தலைவர் நிலையிலுள்ள உறுப்பினர்-செயலர் ஆகியோரைக் கொண்டு இவ்வாரியம் அமைந்துள்ளது.

காவல் துறைக்கான உதவி ஆய்வாளர் மற்றும் இரண்டாம் நிலைக் காவலர், தீயணைப்பு மீட்புப் பணிகள் துறைக்கான தீயணைப்பாளர், சிறைத் துறைக்கான இரண்டாம் நிலைக் காவலர்கள் [ஆண் (மற்றும்) பெண்] ஆகிய பதவிகளுக்குத் தகுந்த நபர்களைத் தெரிந்தெடுத்துத் தருவது இவ்வாரியத்தின் பொறுப்பாகும்.

**35. தமிழ்நாடு சிறப்புக் காவல் படை அணிகள்**

சட்டம்-ஒழுங்கைப் பராமரிக்கவும், சாதி, மதக் கலவரங்களைச் சமாளிக்கவும், தீவிரவாதத்தைக் கட்டுப்படுத்தவும் உள்ளூர் காவல் துறையினருக்கு உதவி செய்யவும் தமிழ்நாடு சிறப்புக் காவல் படையின் அலுவலர்களும், பணியாளர்களும் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் நிறுத்தப்பட்டுள்ளனர். மேலும், இப்படையினர் கடலோரக் காவல் படையிலும் மிக முக்கியமானோர், மிக மிக முக்கியமானோர் வருகையின்போது பாதுகாப்புப் பணியிலும், இலங்கை அகதிகளுக்கான சிறப்பு முகாம்களிலும், ஈரோடு மாவட்டம் பண்ணாரியிலுள்ள வீரப்பனைத் தேடும் பணியில் ஈடுபட்டுள்ள சிறப்பு அதிரடிப்படையினருக்கு உதவி செய்யும் பணியிலும் ஈடுபடுகின்றனர். இப்படையில் 11 அணிகள், ஆவடியில் ஒரு படைப் பயிற்சி மையம், ஒரு காவல் துறை போக்குவரத்துப் பணிமனை பயிற்சிப் பள்ளி, திருச்சியில் ஒரு சரக காவல் துறை போக்குவரத்துப் பணிமனை ஆகியவை உள்ளன.

தமிழ்நாடு சிறப்புக் காவல் படையின் ஓர் அணியானது 1980 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் முதல் புதுதில்லியில் செயல்பட்டு வருகிறது. இப்பணி, மூன்றாண்டுகளுக்கு ஓர் அணி என்ற சுழற்சி முறையில் மாற்றப்படுகிறது. தற்போது இப்படையில் எட்டாவது அணி நாட்டின் மிகப் பெரிய சிறையான புதுதில்லியிலுள்ள "திகார் சிறைச் சாலை" காவல் பணிப் பொறுப்பினை மேற்கொண்டுள்ளது.

### 3. காவல் துறையை நவீனப்படுத்துதல்

காவல் துறையை நவீனப்படுத்துதலில், காவல் துறைப் பணியாளர்களின் திறமைகளை உயர்த்துவதும் உள் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதும் மிக முக்கியமானவையாகும். இக்குறிக்கோளை எட்டும் வகையில் கட்டடங்கள், வீட்டு வசதி, போக்குவரத்து, ஆயுதங்கள், தொலைத் தொடர்புக் கருவிகள், பயிற்சி, கணினி மயமாக்கல், கருவிகள், தடய அறிவியல் துறை மற்றும் விரல்ரேகைக் கூடம் ஆகியவற்றுக்கான உள்கட்டமைப்பு மேம்படுத்துதல் போன்றவற்றிற்கான திட்டங்களைச் செயல்படுத்துவதற்கென காவல் துறை நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ் மத்திய, மாநில அரசுகள் நிதி ஒதுக்குகின்றன.

மைய அரசின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் காவல் துறையை நவீனப்படுத்தும் திட்டங்களுக்கு மைய அரசு அளிக்கும் நிதிக்கு சமமான நிதியினை மாநில அரசும் அளிக்கிறது. மேலும், மாநில அரசு தனியாக மாநில நிதியிலிருந்து முழு நிதி ஒதுக்கீடு அடிப்படையிலும் காவல் துறையை நவீனப்படுத்தும் திட்டங்களுக்கு உதவி அளித்து வருகிறது. 2001 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் காவல் துறையை நவீனப்படுத்தும் திருத்தப்பட்ட திட்டத்திற்கு மைய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. ஐந்து ஆண்டு காலத்தில் செயல்படுத்தும் வகையில் தயாரிக்கப்பட்டு மைய அரசிற்கு 2000 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் அனுப்பப்பட்ட திட்டங்களுக்கென 2000-2001 ஆம் ஆண்டு மாநில அரசின் 50 விழுக்காடு நிதியும் சேர்த்து மொத்தம் ரூ.153 கோடிக்கு மைய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. உலகத்தில் சிறந்த காவல் துறைக்கு இணையாக ஒப்பிடும் வகையில் காவல் துறையின் உயர்ந்த தொழில்முறை சிறப்புடன் சட்டத்தைச் செயல்படுத்தும் சிறந்த அமைப்பாகவும் மாற்ற முன்னுரிமை அளிக்கப்படும் என 25-5-2001 ஆம் ஆண்டு மேதகு ஆளுநர் உரையில் அறிவிக்கப்பட்டுள்ளது. 2001 ஆம் ஆண்டு ஜூன் மாதம் நான் நடத்திய உள்துறைப் பணிகள் பற்றிய ஆய்வின்போது, மத்திய அரசு உதவியுடன் காவல் துறையை நவீனப்படுத்தும் பல திட்டங்கள் அதன் உதவிகோரி





அனுப்புவதற்கு பரிசீலிக்கப்பட்டன. அதன்படி 2001-2002 ஆம் ஆண்டில் மாநில அரசின் பங்கினையும் சேர்த்து ரூ.209.68 கோடி ஒதுக்கீட்டிற்கான முன்மொழிவுகள் மைய அரசுக்கு அனுப்பப்பட்டன. ஆனால் ஏற்கெனவே அனுப்பப்பட்ட ஆண்டு ஒதுக்கீடு ரூ.136 கோடி அடிப்படையிலான தொடர் திட்டங்களுக்கு ஏற்ப இம்முன்மொழிவினைத் திருத்தி அனுப்புமாறு மைய அரசு கேட்டுக்கொண்டது. இதன்படி 22-10-2001, 10-11-2001 ஆகிய நாட்களில் மைய அரசுக்கு அனுப்பப்பட்ட கடிதங்களின் வாயிலாக ரூ.272.24 கோடிக்கான திருத்திய திட்ட மதிப்பீடு மைய அரசுக்கு அனுப்பப்பட்டு இரண்டாண்டுகளில் திட்டங்களைச் செயல்படுத்த கொள்கையளவில் ஒப்புதலளிக்குமாறு மைய அரசிடம் கோரப்பட்டது. மேலும் ஒவ்வோராண்டும் செலவழிக்கப்பட வேண்டிய நிதிக்கு வரம்பு நிர்ணயிக்கப்பட்டு, செலவினத்திற்கேற்றவாறு நிதியை விடுவிக்கவும் வகை செய்ய வேண்டும் எனவும் மைய அரசு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. 18-12-2001 ஆம் நாளிட்ட கடிதத்தின்படி ரூ.244.82 கோடி மதிப்புள்ள திட்டங்களுக்கு மைய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. அதற்கிணங்க திட்டங்களுக்கு இவ்வரசு 8-2-2002 ஆம் நாளிட்ட உள் (நவீனம்) துறையின் அரசாணை நிலை எண் 107-ல் ஆணைகள் வெளியிட்டுள்ளது. இதன்படி பல்வேறு இனங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி விவரம் பின்வருமாறு:—

(ரூபாய் கோடியில்)

| | |
|---|---|
| கட்டடங்கள் | 34.42 |
| வீட்டுவசதி | 108.07 |
| போக்குவரத்து | 44.89 |
| ஆயுதங்கள் | 3.75 |
| தகவல் தொடர்பு | 13.86 |
| பயிற்சி | 19.32 |
| தடய அறிவியல் ஆய்வகத்திற்கான உள் கட்டமைப்பு | 3.96 |
| கருவிகள் | 13.50 |
| கணினிகள் | 3.05 |
| மொத்தம் | **244.82** |

2001-2002 ஆம் ஆண்டு கழிவு செய்யப்பட்ட வாகனங்களுக்குப் பதிலாக 9 லாரிகள், 3 பேருந்துகள், 6 சிற்றுந்துகள், 18 வேன்கள், 7 ஜீப்புகள்,

2 சீருந்துகள், 13 மோட்டார் சைக்கிள்கள் ஆகியவை ரூ.2.22 கோடி செலவில் வாங்கி வழங்கப்பட்டுள்ளன. ரூ.1.64 கோடியில் புதிய வாகனங்கள் வாங்கப்பட்டு, பொருளாதாரக் குற்றத் தடுப்புப் பிரிவிற்கு 10 மோட்டார் சைக்கிள்களும், தனிப்பிரிவு புலனாய்வுத் துறைக்கும், கியூ பிரிவிற்கும் 12 மோட்டார் சைக்கிள்களும், காவல் தொலைத் தொடர்புப் பிரிவிற்கு 10 மோட்டார் சைக்கிள்களும், திருவாரூர் மாவட்டத்திற்கு குற்றப் பணிகளுக்கென காக்கி வண்ணம் கொண்ட 10 ஈப்புகளும், 4 ஈப்புகளும், ஒரு சீருந்தும், 2 மோட்டார் சைக்கிள்களும், சிறப்பு புலனாய்வுக் குழுவிற்கு 2 ஈப்புகளும், குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறைக்கு 5 ஈப்புகளும், இருப்புப்பாதை காவல் பிரிவிற்கு 3 ஈப்புகளும், கைதிகளை அழைத்துச் செல்லும் பணிக்கென 7 வாகனங்களும், ஆயுதப்படைக்கு 5 மேற்கூரையுள்ள லாரிகளும், அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் ஒவ்வொன்றிற்கும் ஓர் ஈப்பும் வழங்கப்பட்டுள்ளன.

கலவரக் கட்டுப்பாட்டிற்கென ரூ.55.99 இலட்சம் செலவில் 1,270 த்லைக் கவசங்களும், உடற் கவசங்களும், கைத்தடிகளும், 898 கேடயங்களும் வாங்கப்பட்டுள்ளன. பாதுகாப்புப் பிரிவிற்கு பயிற்சியளிக்கத் தேவையான 50 இருக்கைகளும், ஒரு ஸிலைடு புரொஜக்டரும், ஒரு மேல்நிலை புரொஜக்டரும், மானிட்டருடன் கூடிய விவிடி இயக்கியும் ரூ.1.96 இலட்சம் செலவில் வாங்கப்பட்டுள்ளன. ஸிலைடு புரொஜக்டர் ஒன்றும், மேல்நிலை புரொஜக்டர் ஒன்றும் வானொலி சமிக்ஞை பயிற்சிப் பள்ளிக்கு வழங்கப்பட்டுள்ளன.

குற்றப் பிரிவு, குற்றப் புலனாய்வுப் பிரிவில், குற்றவாளிகளை விசாரிக்கும் அறையின் உபயோகத்திற்கென ரூ.19.71 இலட்சம் செலவில் புலனாய்வு சாதனங்களும் கருவிகளும் வழங்கப்பட்டுள்ளன. ரூ.12.67 இலட்சம் செலவில் ஆறு ஆணையரகங்களுக்கும், புதிதாகத் தொடங்கப்பட்ட ஆறு மாவட்டங்களுக்கும் 12 காமிராக்கள் வழங்கப்பட்டுள்ளன. ரூ.17.30 இலட்சம் செலவில் மாநிலத் தலைமையகத்திற்கும், மாவட்டங்களுக்கும், சிறப்புப் பிரிவுகளுக்கும் கணினிகளும் அதன் தொடர்பு சாதனங்களும் வழங்கப்பட்டுள்ளன. போக்குவரத்துக் காவல் பிரிவின் உபயோகத்திற்கு ரூ.4.23 இலட்சம் செலவில் 300 மினுங்கும் ஜாக்கெட்டுகளும், நிறுத்தப் பலகைகளும், இடுப்புப் பட்டைகளும், கையுறைகளும், 125 மினுங்கும் வழிகாட்டுப் பலகைகளும் வழங்கப்பட்டுள்ளன. இருப்புப்பாதை காவல் பிரிவிற்கு கையில் எடுத்துச் செல்லும் 134 உலோகக் கண்டுபிடிப்பான்கள் வழங்கப்பட்டுள்ளன. தடய அறிவியல் துறைக்கு ரூ.53 இலட்சம் செலவில்



உபகரணங்கள் வாங்கப்பட்டுள்ளன. பலவீனமான பகுதிகளில் உள்ள வான்செய்தி தகவல் சாதனங்கள் படிப்படியாக மேம்படுத்தப்படும்.

காவல் நிலையங்களுக்கு மோட்டார் சைக்கிள்கள், கணினிகள், பார்வையாளர் அறை, அலமாரியுடன் கூடிய பதிவுருக்கள் அறை, கைதி அறை, பொதுத் தொடர்பு சாதனங்கள், பிளாஸ்டிக் நாற்காலிகள், ஒளிபாய்ச்சும் விளக்குகள், தீயணைப்பான்கள் ஆகியவை இவ்வாண்டு வழங்கப்படும். உபயோகப்படுத்த முடியாத நிலையிலுள்ள வாகனங்களுக்குப் பதிலாக புதிய வாகனங்கள் வழங்கும் திட்டத்தின்படி இரண்டாம் கட்டமாக 27 லாரிகள், 11 பேருந்துகள், 28 சிற்றுந்துகள், 157 வேன்கள், 59 ஈப்புகள், 8 காக்கி வண்ண ஈப்புகள், 78 மோட்டார் சைக்கிள்கள் விரைவில் வழங்கப்பட உள்ளன.

தமிழ்நாடு சிறப்புக் காவல்படைக்கு 24 மேற்கூரையுடன் கூடிய லாரிகளும், ஒரு திறந்த அமைப்புடன் கூடிய லாரியும், குற்றப் பணிகளுக்கு 55 ஈப்புகளும், சிறப்புப் பிரிவுகளுக்கு 68 மோட்டார் சைக்கிள்களும், காவல் தொலைத் தொடர்புப் பிரிவிற்கு 11 ஈப்புகளும் விரைவில் வழங்கப்பட உள்ளன. போக்குவரத்துக் காவல் பிரிவிற்கு 40 போக்குவரத்து சமிக்ஞை சாதனங்கள் வழங்கப்பட உள்ளன. மாவட்டங்களுக்கும், அதன் உட்கோட்டங்களுக்கும் ரூ.72 இலட்சம் செலவில் கணினிகள் வழங்கப்பட உள்ளன.

## 4. சட்டம்-ஒழுங்கு

காவல் துறை மேற்கொண்ட முன்னெச்சரிக்கைகளின் விளைவாகவும், நெறிமுறைப்படுத்தும் நடவடிக்கைகளின் விளைவாகவும், பெரிய அளவிலான சாதி, இனக் கலவரங்களின்றி மாநிலத்தில் அமைதி நிலவி வருகிறது. அரசியல் கட்சிகளால் நடத்தப்பட்ட போராட்டங்களும், மறியல்களும்கூட காவல் துறையின் விழிப்புணர்வு காரணமாக அமைதியாகவே நடந்தன. எனவே, அச்சம்பவங்களின்போது இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படவில்லை.

### 1. இனப் பிரச்சினை நிலவரம்

பல்வேறு மத நம்பிக்கை கொண்டவர்களுக்கிடையே அங்கொன்றும் இங்கொன்றுமாக நடந்த நிகழ்ச்சிகளைத் தவிர மாநிலத்தில் பொதுவாக அமைதி நிலவி வருகிறது. நடந்த நிகழ்ச்சிகள்கூட, இன உட்பூசல்கள், முன் விரோதம் காரணமாக நிகழ்ந்தவையே ஆகும். 2001 ஆம் ஆண்டில்

இரண்டு சிறிய சம்பவங்கள் மட்டுமே நடந்தன. விநாயகர் சதுர்த்தி, தீபாவளி, ரம்சான் ஆகிய பண்டிகைகளும், கோவை குண்டு வெடிப்பு நினைவுநாள். பாபர் மசூதி இடிப்பு நினைவு நாள் ஆகியவையும் அமைதியாகவே நடந்தன. 2001 ஆம் ஆண்டில் இனக் கலவரங்களினால் ஒரு மரணம் மட்டும் நிகழ்ந்துள்ளது.

| ஆண்டு | இனக்கலவரங்களில் இறந்தோர் விவரம் |
|---|---|
| 1996 | 17 |
| 1997 | 45 |
| 1998 | 2 |
| 1999 | 2 |
| 2000 | 1 |
| 2001 | 1 |

**2. சாதிப் பிரச்சினை நிலவரம்**

2001 ஆம் ஆண்டு நடைபெற்ற 21 சாதிக் கலவர நிகழ்ச்சிகளில் 13 காவல் துறை பணியாளர்களையும் உள்ளிட்ட 92 பேர் காயமுற்றனர். ஒரு முதல்நிலைக் காவலரையும் சேர்த்து 21 பேர் உயிரிழந்தனர். பெரும்பாலும் சாதிக் கலவரங்களுக்கு நிலத் தகராறுகள், ஆதிதிராவிடர்களுக்கெதிரான வன்கொடுமைகள், தலித் பெண்களை கேலி செய்தல், மதசம்பந்தமான உள்ளூர் திருவிழாக்களில் ஆதிதிராவிட மக்களைக் கலந்துகொள்ளவிடாமல் தடுத்தல், சாதித் தலைவரின் சிலையை சாதி விரோதக் குழுக்கள் சேதப்படுத்துவது, அவமானப்படுத்துவது, சாதிச்சங்கங்களாக இருந்து பின்னர் அரசியல் கட்சியாக மாறிய கட்சிகளால் தேர்தல்களின்போது செய்யப்படும் ஒருதலைச்சார்பு செயல்களால் ஏற்படும் பகைமை ஆகியவை காரணமாக கலவரங்கள் கிராமப்புறங்களிலே பெரும்பாலும் நடக்கின்றன. பதற்றம் நிலவும் பகுதிகளில் அமைதிக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு பிரச்சினைகள் தீர்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சாதிக் கலவரங்களால் நிகழ்ந்த மரணங்கள் கீழே தரப்பட்டுள்ளன:—



| ஆண்டு | இறந்தவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| 1996 | 50 |
| 1997 | 93 |
| 1998 | 30 |
| 1999 | 22 |
| 2000 | 18 |
| 2001 | 21 |

2001 ஆம் ஆண்டில் சாதிக் கலவரங்களின்போது காயமுற்றோர், இறந்தோர் விவரம் கீழே தரப்பட்டுள்ளது:—

| சம்பவங்களின் எண்ணிக்கை | பொதுமக்கள் எண்ணிக்கை | | காவல் பணியாளர் எண்ணிக்கை | |
|---|---|---|---|---|
| | இறந்தவரின் எண்ணிக்கை | காய-முற்றோர் | இறந்தவரின் எண்ணிக்கை | காய-முற்றோர் |
| 21 | 20 | 79 | 1 | 13 |

**3. தமிழர் விடுதலைப்படை மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள்**

பெரம்பலூர், கடலூர் மாவட்டங்களில் இயங்கிவரும் தமிழர் விடுதலைப் படை, காவல் நிலையங்களின்மீது வெடிகுண்டுத் தாக்குதல்கள், கொள்ளைகள் ஆகியவற்றை நடத்தியுள்ளது. இப்படையின் பெரும்பாலான உறுப்பினர்களை காவல் துறை கைது செய்திருப்பதால் இவ்வமைப்பு பெரிதும் சிதைந்து விட்டது. கன்னட திரைப்பட நடிகர் டாக்டர் இராஜ்குமாரைக் கடத்திய இவ்வமைப்பின் முக்கியத் தலைவனான மாறன் (எ) செங்குட்டுவன் (எ) மணிமாறன் (எ) முல்லங்குடி செங்குட்டுவன் (எ) முல்லை வளவன் (எ) மருது என்பவனைக் காவல் துறை கைது செய்துள்ளது. டாக்டர் இராஜ்குமார் கடத்தலில் தொடர்புடைய இவ்வமைப்பின் மற்ற உறுப்பினர்களான தேவராசு மகன் ஏழுமலை (எ) ஆண்டரில், இராமசாமி மகன் செல்வம் (எ) இராசு, இனியன் (எ) கோவிந்தராசன், செழியன் (எ) அமிர்தலிங்கம் ஆகியோரும் கைது செய்யப்பட்டுள்ளனர். வெள்ளித் திருப்பூர் காவல் நிலையத்திலிருந்து

வீரப்பன் கும்பலால் கொள்ளையடித்துச் செல்லப்பட்ட 3 கைத்துப்பாக்கிகளும், ஒற்றைக் குழல் துப்பாக்கி ஒன்றும் தமிழ்நாடு காவல் துறையினரால் மீட்கப்பட்டுள்ளன.

1967 ஆம் ஆண்டு சட்ட விரோத நடவடிக்கைகள் (தடுப்புச்) சட்டத்தின்படி தமிழீழ விடுதலைப் புலிகள் மீது விதிக்கப்பட்டுள்ள தடையானது வரும் 13-5-2002 இல் முடிகிறது. இத்தடையை மேலும் 2 ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்பட வேண்டுமென பாரதப் பிரதமருக்கு நான் கடிதம் எழுதியுள்ளேன். இலங்கையிலிருந்து வரும் அகதிகள் சோதனை செய்யப்பட்டு அவர்களால் விடுதலைப் புலிகள் இயக்கத் தொடர்புடையவர்கள் மட்டும் சிறப்பு முகாம்களில் வைக்கப்படுகின்றனர். 2001 ஆம் ஆண்டில் விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் தொடர்புடைய 28 பேரையும் சேர்த்து மொத்தம் 63 இலங்கைத் தமிழர்கள் மூன்று சிறப்பு முகாம்களில் வைக்கப்பட்டுள்ளனர். கடற்புலிகள் பிரிவிலிருந்து பின்னர் கரும் புலியாக சேர்த்துக்கொள்ளப்பட்ட சந்திரன் (எ) கிள்ளி என்ற விடுதலைப் புலி இயக்க உறுப்பினர் கியூ பிரிவினால் கண்டுபிடிக்கப்பட்டு 15-6-2001 அன்று வேலூரிலுள்ள சிறப்பு முகாமல் வைக்கப்பட்டார். சுமார் ரூ.1 இலட்சம் மதிப்புள்ள இரண்டு மின்னாக்கிகள், 7 ஹீரோ ஹோண்டா இயந்திர ஹெட் உருளைகள், 22 ஹீரோ ஹோண்டா பிரேக் ஷூக்கள் ஆகியவற்றைக் கொண்ட ஆறு மூட்டைகளை இராமேஸ்வரத்தைச் சேர்ந்த இரமேஷ் (எ) ஜெயசீலன், அபிமன்னன் மற்றும் மாடசாமி (எ) கள்ளத்தான் ஆசாரி ஆகியோர் விடுதலைப் புலிகளின் உபயோகத்திற்காக இலங்கைக்குக் கடத்த முயன்றபோது கியூ பிரிவு காவல் துறையினரால் கைது செய்யப்பட்டு மேற்சொன்ன பொருட்களும் பறிமுதல் செய்யப்பட்டன.

## 4. தொழிலாளர் அமைதியின்மை

கடந்த ஆண்டைப் போலவே இந்த ஆண்டும் போனசும், கருணைத் தொகையும் வழங்க வேண்டும் என்று கேட்டு 9-11-2001 முதல் 25-11-2001 வரை தமிழ்நாடு குடிமைப் பொருள் வாணிபக் கழகத்தின் ஊழியர்களும், பல்வேறு போக்குவரத்து தொழிற்சங்கங்களைச் சேர்ந்த தொழிலாளர்களும் நடத்திய மறியல் போராட்டமும், அவர்களுக்கு ஆதரவாக 23-11-2001 அன்று மத்திய தொழிற் சங்கங்கள் நடத்திய பொதுவேலை நிறுத்தமும், பேருந்து மீது கல்லெறி நடந்த ஓரிரு சம்பவங்களைத் தவிர மற்றபடி அமைதியாகவே நடந்தன. இதனால் பொது அமைதி சற்றும் பாதிக்கப்படவில்லை. அச்சமயத்தில். பொதுமக்களின் அன்றாட வாழ்க்கைக்கு இடையூறு



ஏதுமின்றி பேருந்துகளை ஓட்ட சாத்தியமான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டன.

## 5. மாணவர் அமைதியின்மை

7-12-2001 அன்று சென்னையிலுள்ள டாக்டர் அம்பேத்கர் சட்டக் கல்லூரி மாணவர் விடுதியிலிருந்தவர்கள்மீது காவல் துறையினர் தாக்குதல் நடத்தியதைக் கண்டித்தும், மாணவர்கள்மீது பதியப்பட்ட வழக்குகளைத் திரும்பப் பெறக் கோரியும், 10-12-2001 அன்று மாநிலம் முழுவதும் வகுப்புகளைப் புறக்கணித்தல், பேரணிகள், ஆர்ப்பாட்டங்கள், உண்ணாவிரதம், வாகனங்கள்மீது கல்லெறிதல் ஆகிய பல்வேறு சம்பவங்களும் நடந்தன. காவல் துறையினர் எடுத்த முன்னெச்சரிக்கை தடுப்பு நடவடிக்கைகளின் விளைவாக இச்சம்பவங்களின்போது அமைதி காக்கப்பட்டது.

## 6. காவல் நிலைய மரணங்கள்

2001 ஆம் ஆண்டில் 6 காவல் நிலைய மரணங்கள் நிகழ்ந்துள்ளன. காவல் நிலைய மரணங்கள் குறித்து மூன்று மாதங்களுக்கு ஒருமுறை அரசு ஆய்வு செய்து வருகிறது.

## 7. காவல் துறை துப்பாக்கிச் சூடு

வன்முறையில் ஈடுபடும் கூட்டத்தைக் கலைக்க எல்லா நெறிமுறைகளையும் பின்பற்றிய பிறகு வேறு வழியில்லாதபோது மட்டுமே காவலர் துப்பாக்கிச்சூடு செய்ய நேரிடுகிறது. பொது அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டவேண்டி 2001 ஆம் ஆண்டு காவலர் 32 சந்தர்ப்பங்களில் துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளனர். இவற்றில் 18 சந்தர்ப்பங்களில், கலகக் கும்பலைக் கட்டுப்படுத்தவும், 14 சந்தர்ப்பங்களில் குற்றவாளிகளுக்கு எதிராகவும் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது. இச்சம்பவங்களில் பொதுமக்களில் 13 நபர்கள் கொல்லப்பட்டனர்; 29 நபர்கள் காயமுற்றனர்; 178 காவல் துறை பணியாளர்கள் காயமுற்றனர்.

1996 முதல் 2001 வரை நடந்த சம்பவங்களின் புள்ளி விவரம் கீழே தரப்பட்டுள்ளது:—

| விவரம் | 1996 | 1997 | 1998 | 1999 | 2000 | 2001 | 2002 |
|---|---|---|---|---|---|---|---|
| துப்பாக்கிச்சூடு நடந்த சம்பவங்களின் எண்ணிக்கை | 24 | 63 | 48 | 35 | 24 | 32 | 4 |
| கலவரக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் | 17 | 50 | 22 | 24 | 10 | 18 | 2 |
| கொள்ளைத் தடுப்பு சம்பவங்கள் | .. | .. | 2 | .. | .. | .. | .. |
| பிற குற்றவாளிகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தியபோது | 7 | 13 | 24 | 11 | 14 | 14 | 2 |
| மொத்தம் இறந்தவர்கள் | 15 | 28 | 10 | 19 | 9 | 13 | 1 |
| காவலர்கள் | .. | .. | .. | 2 | .. | .. | .. |
| பொதுமக்கள் | 15 | 28 | 10 | 17 | 9 | 13 | 1 |
| காயமடைந்தவர்கள் மொத்தம் | 116 | 307 | 116 | 165 | 66 | 207 | .. |
| காவலர்கள் | 97 | 245 | 68 | 154 | 58 | 178 | .. |
| பொதுமக்கள் | 19 | 62 | 48 | 11 | 8 | 29 | .. |

## 8. உள்ளாட்சித் தேர்தல்கள்

6 மாநகராட்சிகளுக்கும், 102 நகராட்சிகளுக்கும், 609 பேரூராட்சிகளுக்கும், சிற்றூராட்சிகளுக்கும், 16-10-2001, 18-10-2001 ஆகிய நாட்களில் இரண்டு கட்டங்களாக உள்ளாட்சித் தேர்தல்கள் நடைபெற்றன. 21-10-2001 அன்று வாக்குகள் எண்ணப்பட்டன. 78,884 வாக்குச் சாவடிகளில் 4.77 கோடி வாக்காளர்கள் வாக்களிக்க வேண்டியிருந்தது. இம்மாநில அரசு முன்கூட்டியே இராணுவப்படையை அனுப்பக் கேட்டுக் கொண்டிருந்தபோதிலும், மைய அரசு அனுப்பவில்லை. எனவே, அண்டை மாநிலங்களான ஆந்திரப்பிரதேசத்திலிருந்து 5 குழுமங்கள், கேரளாவிலிருந்து 2 குழுமங்கள் காவல்படையினரால் பெறப்பட்டனர். இத்தேர்தல்களின்போது காவல் துறையினர் அல்லாத பிறபணியாளர்களை



வாக்குச் சாவடிகளுக்கும், சுற்றுக் காவல்பிரிவுகளுக்கும் அனுப்பவேண்டிய அவசியம் இருந்தது. மேற்சொன்ன இடர்பாடுகளையும் கடந்து ஓரிரு சம்பவங்களைத் தவிர தேர்தல்கள் அமைதியாக நடந்தேறின. இத்தேர்தல்களின்போது காவல் துறையினர் மிகச்சிறந்த முறையில் செயலாற்றியுள்ளனர்.

## 9. தேசிய பாதுகாப்புச் சட்டத்தின்படி சிறையிலடைக்கப்பட்டவர்கள்

தேசிய பாதுகாப்புச் சட்டத்தின்படி சிறையிலடைக்கப்பட்டவர்கள் விவரம் கீழே உள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளது:

| ஆண்டு | நபர்களின் எண்ணிக்கை |
|---|---|
| 1996 | 22 |
| 1997 | 105 |
| 1998 | 271 |
| 1999 | 115 |
| 2000 | 96 |
| 2001 | 20 |

## 10. சட்டம்-ஒழுங்குப் பிரச்சினைகளைத் தவிர்க்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

1. பதற்றம் ஏற்படும் சூழ்நிலை நிலவிய பகுதிகளில் அமைதிக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு தகராறுகளைத் தீர்த்துவைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வாறு செய்திருக்காவிட்டால் அப்பகுதிகளில் இனப்பிரச்சினைகள் வெடித்திருக்கும்.
2. சாதி இனப் பதற்றப் பகுதிகளாகக் கண்டறியப்பட்ட இடங்களுக்கு காவல் துறைத் துணைத் தலைவர், காவல் கண்காணிப்பாளர் பதவி நிலையிலுள்ள மூத்த அதிகாரிகள் அனுப்பப்பட்டு இன, சாதிப் பிரச்சினைகள் தொடர்பான முதல்நிலைத் தகவல்கள் சேகரிக்கப்பட்டன.
3. மக்களைத் தூண்டிவிடும் வகையில் பேசப்பட்ட பேச்சுக்களும் எழுத்துக்களும் கண்டறியப்பட்டு அவ்வாறு பேசியவர்கள், எழுதியவர்கள்மீது தக்க குற்றவியல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

[2002 ஏப்ரல் 24

4. பொது அமைதிக்குக் குந்தகம் ஏற்படும் சாத்தியக் கூறுகள் குறித்த தகவல்கள் கிடைக்கப்பெற்றவுடன் சம்பந்தப்பட்ட காவல் கண்காணிப்பாளர்களும், ஆணையர்களும் எச்சரிக்கைப் படுத்தப்பட்டதால் சட்டம்-ஒழுங்குப் பிரச்சினைகள் நிகழா வண்ணம் முன் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

5. மாதந்தோறும் சட்டம்-ஒழுங்கு ஆய்வுக் கூட்டங்கள் அரசினால் நடத்தப்படுகின்றன. சட்டம்-ஒழுங்கு தொடர்பான முக்கியப் பிரச்சினைகள் குறித்த முக்கிய முடிவுகள் இக்கூட்டங்களில் எடுக்கப்படுகின்றன. நன்முறையில் பாதுகாப்பளிப்பதே காவல் துறையின் குறிக்கோளாகும்.

## 5. குற்ற நிகழ்வுகளின் போக்கு

குற்றவாளிகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்திவைக்க, காவல் துறை பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. குற்றம் நிகழ சாத்தியமுள்ள இடங்களில் தீவிர ரோந்துகளுக்கும், சுற்றுக் காவல்களுக்கும் ஏற்பாடு செய்யப்படுகிறது. குற்றவாளிகளின் நடமாட்டத்தைத் தடுக்க சோதனைச் சாவடிகளும் அமைக்கப்பட்டுள்ளன. குற்றங்களை அறிவியல்பூர்வமாகக் கண்டுபிடிப்பதற்கும், புலனாய்வு செய்வதற்கும் விரல்ரேகைக் கூடம், தடய அறிவியல் ஆய்வகம், நாய்ப்படை, கணினிப் பிரிவு ஆகியவற்றின் பணிகளும் உபயோகப்படுத்தப்படுகின்றன.

மாநிலத்தில் சொத்து சம்பந்தமான குற்றங்களைக் கட்டுப்படுத்த எல்லாவிதமான முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

2001 ஆம் ஆண்டு நடைபெற்ற சொத்து தொடர்பான குற்றங்கள் குறித்த நிலவரம் கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளது:

| குற்றங்களின் தன்மை | பதியப்பட்டவை | கண்டுபிடிக்கப்பட்டவை |
|---|---|---|
| ஆதாயக் கொலை | 80 | 56 |
| கூட்டுக் கொள்ளை | 158 | 100 |
| வழிப்பறி | 669 | 451 |
| வீடுபுகுந்து திருடுதல் | 5,926 | 3,181 |
| களவு | 16,645 | 12,862 |
| மொத்தம் | 23,478 | 16,650 |
| கண்டுபிடிப்பின் விழுக்காடு | | 71% |



2002 ஏப்ரல் 24]

| | 2000 | 2001 |
|---|---|---|
| | (ரூ. கோடியில்) | |
| இழந்த சொத்துக்கள் | 41.9 | 42.7 |
| மீட்கப்பட்டவை | 28.8 | 26.4 |

2001 ஆம் ஆண்டில் பதியப்பட்ட 23,478 சொத்து தொடர்பான குற்ற வழக்குகளில் 16,650 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

### 1. பெண்களுக்கெதிரான குற்றங்கள்

பெண்களுக்கெதிரான குற்றங்களைத் தடுப்பது தமிழ்நாடு காவல் துறையின் குறிக்கோளாகும். இக்குற்றங்களைத் தடுக்க மாநிலமெங்கும் தீவிர நடவடிக்கைகளில் காவல் துறை ஈடுபட்டுள்ளது. 2001 ஆம் ஆண்டில் பதியப்பட்ட 4,959 வழக்குகளில், 86 விழுக்காடான 4,281 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. 1996 ஆம் ஆண்டு முதல் தொடங்கும் ஐந்தாண்டு காலத்தின் சராசரியைவிட இது 14.9 விழுக்காடு குறைவானதாகும். பெண்களுக்கெதிரான குற்றங்களைக் கவனிக்கவும் ஆபத்திலுள்ள பெண்களைக் காக்கவும் காவல் துறைத் தலைவர் பதவி நிலையிலுள்ள இந்தியக் காவல் பணியைச் சேர்ந்த மூத்த பெண் அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

2000-2001 ஆம் ஆண்டுகளில் நிகழ்ந்த பெண்களுக்கெதிரான குற்ற விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

| வ. எண் | தலைப்பு | பதியப்பட்டவை | | கண்டுபிடிக்கப்பட்டவை | |
|---|---|---|---|---|---|
| | | 2000 | 2001 | 2000 | 2001 |
| 1. | கற்பழிப்பு | 526 | 408 | 462 | 344 |
| 2. | கற்பழிப்பு முயற்சி | 23 | 54 | 19 | 40 |
| 3. | மானபங்கம் | 1931 | 1771 | 1749 | 1614 |

[2002 ஏப்ரல் 24

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4. | பணத்திற்காகக் கடத்தி செல்லுதல் | 864 | 664 | 555 | 393 |
| 5. | பெண்களைக் கேலி செய்தல் | 2738 | 1012 | 2684 | 1000 |
| 6. | வரதட்சணை மரணம் | 181 | 179 | 159 | 154 |
| 7. | வரதட்சணைக் கொடுமை | 898 | 851 | 750 | 725 |
| 8. | பெண் சிசுக் கொலை | 14 | 20 | 8 | 11 |
| | மொத்தம் | **7175** | **4959** | **6386** | **4281** |

**2. சிறப்புப் புலனாய்வுக் குழு**

இந்து. முஸ்லிம் மத அடிப்படைவாதிகள் சம்பந்தப்பட்ட வழக்குகளைப் புலனாய்வு செய்யவும், குற்ற வழக்கு தொடரவும், அவற்றை விரைந்து முடிக்கவும் வேண்டி குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறையில் சிறப்புப் புலனாய்வுக் குழு தனியாக அமைக்கப்பட்டது. இக்குழுவின் முறையான நடவடிக்கைகளால் மத அடிப்படைவாதிகளின் நடவடிக்கைகள் பெரிதும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. அல்-உம்மா, இஸ்லாமிய பாதுகாப்புப் படை, அனைத்திந்திய ஜிகாத் குழு ஆகிய மத அடிப்படைவாத இயக்கங்கள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றன. கோவை குண்டுவெடிப்பில் ஈடுபட்ட 168 நபர்கள் உட்பட, மொத்தம் 240 மத அடிப்படைவாதிகள் வெவ்வேறு சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டுள்ளனர். கோயம்புத்தூர், சென்னை, ஆந்திர மாநிலத்திலுள்ள இராஜமுந்திரி, விஜயவாடா, மகாராஷ்டிரத்திலுள்ள இராய்கர் மாவட்டம் ஆகிய இடங்களில் இக்குழு மேற்கொண்ட சோதனைகளில் ஏராளமான வெடிப்பொருட்கள், மேம்படுத்தப்பட்ட வெடிபொருட் சாதனங்கள் (IED), வெடிகுண்டு தயாரிக்கத் தேவையான பொருட்கள் கைப்பற்றப்பட்டு இதில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட்டனர். நாடெங்கிலும் இக்குழு நடத்திய புலனாய்வுகளின் போது மனித உரிமைகள் மீறப்பட்டதாக புகார் ஏதும் எழவில்லை. இக்குழு,



2002 ஏப்ரல் 24]

கோவை தொடர்குண்டு வெடிப்பு வழக்குகள் உட்பட அண்மையில் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் மற்றும் நிலுவையில் இருந்த வழக்குகள் அனைத்திலும் உரிய தீர்வு கண்டுள்ளது.

இக்குழுவில் காவல் துறைத் தலைவரையும் சேர்த்து 308 பேர் உள்ளனர். 152 காவல் துறைப் பணியாளர்கள் பணியிலுள்ளனர்.

கோவை தொடர் குண்டு வெடிப்பு தொடர்பான 44 வழக்குகள், 17 பிற வழக்குகளையும் சேர்த்து மொத்தம் 117 மத அடிப்படைவாத வழக்குகளின் புலனாய்வு, குற்ற வழக்குத் தொடர்பு ஆகிய பணிகளை இக்குழு மேற்பார்வை செய்து வருகிறது. அப்துல் நாசர் மதானி உச்ச நீதி மன்றத்தில் தொடுத்த ஜாமீன் வழக்கை இக்குழு திறம்பட எதிர்த்து வெற்றி பெற்றுள்ளது. 2001 ஆம் ஆண்டில் 13 வழக்குகளில் புலனாய்வை முடித்து குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வெடிபொருள் பறிமுதல் தொடர்பான சென்னை, எழும்பூர் இரயில்வே காவல் நிலையை குற்ற எண் 576/2001-இலும், சென்னை இரயில்வே காவல் நிலைய குற்ற எண் 3804/200-இலும் புலனாய்வு முடிக்கப்பட்டுள்ளது.

2001 ஆம் ஆண்டில் நீதிமன்றங்களில் தீர்ப்பளிக்கப்பட்ட 10 வழக்குகளில் பின்வரும் 8 வழக்குகள் தண்டனையில் முடிவுற்றுள்ளன:—

அ) உடுமலைப்பேட்டை காவல் நிலைய குற்ற எண் 961/97.

ஆ) குன்னூர் நகர காவல் நிலைய குற்ற எண் 290/95.

இ) பொள்ளாச்சி நகர கிழக்குக் காவல் நிலைய குற்ற எண் 99/97 மற்றும் ஆனைமலை காவல் நிலைய குற்ற எண் 76/97.

ஈ) கோவை நகர பி-1 கடைவீதி காவல் நிலைய குற்ற எண் 1027/89.

உ) திருப்பூர் வடக்கு காவல் நிலைய குற்ற எண் 1281/93.

ஊ) கோவை நகர பி-1 கடைவீதி காவல் நிலைய குற்ற எண் 1905/93.

எ) சி.5 கொத்தவால் சாவடி காவல் நிலைய குற்ற எண் 131/98.

ஏ) அம்மாப்பேட்டை காவல் நிலைய குற்ற எண் 74/98.

[2002 ஏப்ரல் 24

## 3. குறிப்பிடத்தக்க குற்ற வழக்குகள்

கூட்டுக் கொள்ளை - 19-08-2001 அன்று சென்னை கோடம்பாக்கத்தில் எதிரி ஆனந்த பாபு என்பவரும் மற்ற ஐந்து பேரும் புகார்தாரரின் வீடு புகுந்து கத்தி முனையில் ரூ.2.80 இலட்சம் மதிப்புள்ள தங்க நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றனர். முறையான தீவிரப் புலனாய்வின் மூலம் 24 மணி நேரத்திற்குள் எதிரிகள் கைது செய்யப்பட்டு கொள்ளையடிக்கப்பட்ட சொத்துக்களும் மீட்கப்பட்டன. செங்கல்பட்டு கிழக்கு, செங்கல்பட்டு மேற்கு, வேலூர், சேலம் மாவட்டங்களிலும் பாண்டிச்சேரியிலும் ஆந்திரப் பிரதேசத்திலும் 1981 முதல் 1984 வரை பல கூட்டுக் கொள்ளைகள், வழிப்பறிகள் வீடுபுகுந்து திருடுதல் ஆகியவை நடந்தன. துப்பு ஏதும் கிடைக்காததால் இதில் குற்றவாளிகள் யாரும் அப்போது பிடிபடவில்லை. குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை, 25 வழக்குகளில் புலனாய்வு செய்து 13 எதிரிகளைக் கைதுசெய்து களவுபோன ரூ.8 இலட்சம் மதிப்புள்ள 170 சவரன் நகைகளை மீட்டுள்ளது. இருபதாண்டுகளுக்குப் பிறகு எல்லா எதிரிகளுக்கும் 10 வருட கடுங்காவல் தண்டனையும் ஒவ்வொருவருக்கும் ரூ.2000/- அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

வழிப்பறி - 3-11-2001 அன்று புகார்தாரர் (தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கியின் மேலாளர், கம்பம்) ஏலக்காய் ஏலத்தில் கலந்து கொள்வதற்காக வண்டமேட்டிலிருந்து கம்பத்திற்கு காரில் வந்து கொண்டிருந்தபோது, கேரள மாநிலம் கோட்டயம் மாவட்டத்தைச் சேர்ந்த எதிரி ஜாய் மற்றும் 6 நபர்கள் அம்பாசிடர் காரிலும், ஜீப்பிலும் வந்து புகார்தாரரை தேனி மாவட்டம் கம்பம் மெட்டுச் சாலையில் வழிமறித்து, அவரையும் மற்றவர்களையும் கட்டிப் போட்டு, அவர்களிடமிருந்து ஒரு கோடி ரூபாயைக் கொள்ளையடித்துக் கொண்டு தப்பியோடி விட்டனர். முறையான, தீவிரமான புலனாய்வின் மூலம் 24 மணி நேரத்திற்குள் எல்லா எதிரிகளும் கைது செய்யப்பட்டு கொள்ளையடிக்கப்பட்ட பணமும் மீட்கப்பட்டது. இவ்வழக்கு தொடர்ந்து புலனாய்வு செய்யப்பட்டு வருகிறது.

வீடுபுகுந்து திருடுதல் - தென்திருப்பேரையில் உள்ள வைணவ மரபைச் சார்ந்த அருள்மிகு மகர நெடுங்குழைக் காதர் கோயிலில் 8 கிலோகிராம் எடையுள்ள தங்க நகைகளும், 21 கிலோகிராம் எடையுள்ள வெள்ளிப் பொருட்களும் 28-7-1986 அன்று களவு போயின. இவ்வழக்கில் எல்லா எதிரிகளும் கைது செய்யப்பட்டு களவுபோன ரூ.40 இலட்சம் மதிப்புள்ள பொருட்களும் மீட்கப்பட்டன. 31-8-2001 அன்று 10 எதிரிகளில் 8 பேருக்கு



2002 ஏப்ரல் 24]

7 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனையும் ரூ.16,000/- அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது. ஓர் எதிரி அப்ரூவராக மாறிவிட்டார். ஓர் எதிரி இறந்துவிட்டார்.

## 4. பெண்களுக்கெதிரான குற்றங்கள்

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி கிளைச் சிறையில் செல்வி ரீட்டா மேரி என்பவர் கற்பழிக்கப்பட்டது தொடர்பாக வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. கிடைத்த ஆதாரங்களின் அடிப்படையில் தலைமை வார்டர் லாசரும், வார்டர்கள் ஜெயபால், அன்பழகன், சேகர், இராமசாமி ஆகியோரும் 6-12-2001 அன்று கைது செய்யப்பட்டனர். ஈரோட்டைச் சேர்ந்த அண்ணாதுரை, முருகேசன், ஆத்தூரைச் சேர்ந்த ஆனந்த் ஆகிய எதிரிகள் 8-12-2001, 16-12-2001 ஆகிய நாட்களில் கைது செய்யப்பட்டனர். அனைத்து எதிரிகளும் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். பாதிப்புக்குள்ளான ரீட்டாமேரிக்கு அரசு ஐந்து இலட்சம் ரூபாய் இழப்பீடு கொடுத்ததையும், அவருக்கு வீடு ஒதுக்கியதையும் சென்னை உயர் நீதிமன்றம் வெகுவாகப் பாராட்டியுள்ளது.

## 5. கள்ள ரூபாய் நோட்டு வழக்கு

ஐந்து இலட்சம் ரூபாய் மதிப்புள்ள கள்ள ரூபாய் நோட்டுக்களையும் கண்டசா காரையும் வைத்திருந்ததற்காக 6-11-2001 அன்று எதிரி திருமாவளவன் என்பவரை, இராமநாதபுரம் கியூ பிரிவு கைது செய்தது. மேலும், அவர் வீட்டைச் சோதனை செய்தபோது ரூ.6 இலட்சத்திற்கான ரூ.100/- கள்ள ரூபாய் நோட்டுகள் சிக்கின. கள்ள ரூபாய் நோட்டு தயாரிப்புக்காக அவர் பயன்படுத்திய கணினியும் கைப்பற்றப்பட்டது. எதிரி பெரம்பலூர் மாவட்டத்தில் ஊர்க்காவல் படையின் தளவாயாகப் பணிபுரிந்து வந்துள்ளார். திருப்பூர் வடக்கு காவல்நிலையக் குற்ற எண். 896/1996-இல் இந்திய தண்டனைச் சட்டம் 489ஏ முதல் டி வரையிலான பிரிவுகளின் கீழ் பதியப்பட்ட மற்றொரு வழக்கில் எதிரி ஜபருல்லா என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் தென்காசியில் பதியப்பட்ட மற்றொரு வழக்கிலும் சம்பந்தப்பட்டுள்ளார். இவருக்கு ஓர் அச்சகம் சொந்தமாக உள்ளது.

## 6. தடய அறிவியல் துறை

தடய அறிவியல் துறை ஆசியா கண்டத்திலேயே பழமை வாய்ந்த ஒன்றாகும். இத்துறையின் முன்னோடி 1849 ஆம் ஆண்டு சென்னையில்

[2002 ஏப்ரல் 24

அமைக்கப்பட்டிருந்தது. மத்திய மாநில அரசுகளின் சட்டத்தைச் செயல்படுத்தும் பல்வேறு துறைகளுக்கு இத்துறை தடய அறிவியல் சேவையை ஆற்றி வருகிறது.

சென்னை மற்றும் அதன் புறநகர்களிலுள்ள மருத்துவமனைகளில் விஷமருந்தியதால் அனுமதிக்கப்பட்டவர்களின் உயிரைக் காப்பதற்கான மருத்துவ சேவையையும் இத்துறை அளித்து வருகிறது. இத்துறையில், நடத்தையில் சந்தேகத்திற்காளான ஏழை அபலைப் பெண்களுக்கு உதவிடும் வகையில் குழந்தையின் உண்மையான தந்தை யார் என அறிந்திடச் செய்ய மரபணுக் கூறு சோதனை மையம் ஒன்று 1985 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இந்தியாவிலுள்ள அரசைச் சார்ந்த தடய அறிவியல் நிறுவனங்களில் தமிழகத்தின் தடய அறிவியல் துறையில் மட்டும்தான் புதுமையான மரபணுச் சோதனைப் பணி அளிக்கப்படுகிறது என்பது பெருமைக்குரியதாகும்.

தற்போது சென்னையில் தடய அறிவியல் துறையின் தலைமை அலுவலகமும், மைய ஆய்வகமும் இயங்கி வரும் கட்டடத்தில் போதிய இடவசதி இல்லாததால் அக்கட்டடத்தின் பின்புறம் உள்ள இடத்தில் உலகத் தரம்வாய்ந்த ஆய்வகம் அமையும் வகையில் 60000 சதுர அடி பரப்பளவு கொண்ட கட்டடம் ஒன்று ரூ.6 கோடி செலவில் இரண்டு கட்டங்களாகக் கட்டப்பட உள்ளது. காவல் துறையை நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ் 2001-2002, 2002-2003 ஆம் ஆண்டுகளில் இக்கட்டடத்தைக் கட்டுவதற்கான ஒப்புதலும் அளிக்கப்பட்டு விட்டது.

**பதினோராவது நிதிக் குழு மானியத் திட்டங்கள்**

26-9-2001 ஆம் நாளிட்ட உள்(நவீனம்) துறையின் அரசாணை நிலை எண்.943 இன்படி பின்வருவனவற்றை 2002-2003 ஆம் ஆண்டில் நிறைவேற்ற ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது.

* ரூ.5.00 இலட்சம் செலவில் புறஊதாக் கதிர் நிறமாலை ஒளி அளவைக் கருவி ஒன்று வாங்குதல்.
* ரூ.10.00 இலட்சம் செலவில், வட்டாரத் தடய அறிவியல் ஆய்வகங்களில் ஆவணங்களை ஆய்வுசெய்ய ஏதுவாக கையில் எடுத்துச் செல்லும் நிறமாலை ஒப்புநோக்கிக் கருவிகள் வாங்குதல்.



2002 ஏப்ரல் 24]

**2001-2002, 2002-2003 ஆம் ஆண்டுகளுக்கான காவல் துறையை நவீனப்படுத்தும் திட்டங்கள் (அரசாணை நிலை எண் 107, உள்(நவீனம்) துறை, நாள் 8-2-2002)**

| கட்டடங்கள் கட்டுதல் | ரூபாய் (இலட்சத்தில்) |
|---|---|
| விழுப்புரத்திலுள்ள வட்டாரத் தடய அறிவியல் ஆய்வகத்திற்கு | 85.00 |
| இராமநாதபுரத்திலுள்ள வட்டாரத் தடய அறிவியல் ஆய்வகத்திற்கு | 86.00 |
| சென்னையிலுள்ள மைய தடய அறிவியல் ஆய்வகத்திற்கு | 600.00 |
| **ஈப்புகள் வாங்குதல்:** | |
| 9 வட்டாரத் தடய அறிவியல் ஆய்வகங்களுக்கு 9 ஈப்புகளும், சென்னையிலுள்ள மைய ஆய்வகத்திற்கு 3 ஈப்புகளும், ஆக மொத்தம் 12 ஈப்புகள். | 42.00 |
| ஆணையரகங்களிலும், புதிதாக ஏற்படுத்தப்பட்ட நாமக்கல் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் உள்ள இயங்கும் ஆய்வகங்களுக்கு 5 ஈப்புகள் வாங்க. | 17.50 |
| **கருவிகள் வாங்குதல்:** | |
| மைய ஆய்வகத்திற்கும், வட்டார ஆய்வகங்களுக்கும், இயங்கும் ஆய்வகங்களுக்கும் கருவிகள் வாங்க. | 320.00 |
| வீடியோ படக்கருவி வாங்க | 3.00 |
| மைய ஆய்வகத்தில் வண்ண நிழற்பட ஆய்வுக்கூடம் அமைக்க | 5.00 |
| கருவிகளும், தொடர்பு சாதனங்களுடன் 5 கணினிகள் வாங்க. | 3.00 |
| இயங்கும் ஆய்வகங்களுக்கு கருவிகள் வாங்க | 12.00 |

[2002 ஏப்ரல் 24

### 7. போக்குவரத்து

சட்டம்-ஒழுங்குப் பிரச்சினைகளும், குற்றங்களும் நிகழும் இடங்களுக்குச் செல்ல குறிப்பாக, பரந்த எல்லைப் பரப்பு கொண்ட காவல் நிலையங்களுக்கு வாகன வசதி அத்தியாவசிமானதாகும்.

2001-2002 ஆம் ஆண்டில் கீழே குறிப்பிட்டவாறு வாகனங்கள் அதற்கெதிராகக் குறிப்பிட்டுள்ள பிரிவுகளுக்கு அளிக்கப்படுகின்றன:

| வ. எண் | இனம் | பிரிவுகள் |
|---|---|---|
| 1. | ரூ.13.35 இலட்சம் செலவில் 20 டி.வி.எஸ். மொபெட்களும் இரண்டு ஈப்புகளும் | சிறப்பு அதிரடிப்படை |
| 2. | இரண்டு கட்டங்களாக வழங்கப்படும் 90 ஈப்புகள். | அனைத்து மகளிர் காவல் நிலையங்கள். |
| 3. | 2 சீருந்துகள், 2 ஈப்புகள், 3 வேன்கள் | தனிப்பிரிவு (பாதுகாப்பு) |
| 4. | ரூ.44.89 கோடி செலவில் கழிவு செய்யப்பட்ட வாகனங்களுக்கு பதிலாக 574 வாகனங்களும், மேலும் 1101 புதிய வாகனங்களும் | தமிழ்நாடு சிறப்புக் காவல் அணிகள், தனிப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை, சென்னையிலுள்ள காவல் தொலைத் தகவல் தொடர்புப் பிரிவு, பொருளாதாரக் குற்றங்கள் தடுப்புப் பிரிவு, வணிகக் குற்றங்கள் தடுப்புப் பிரிவு, தடய அறிவியல் துறை ஆய்வகம் மற்றும் காவல் சரகங்களுக்கு தண்ணீர் பீரங்கி வாகனம். |



2002 ஏப்ரல் 24]

1-1-2002 அன்றுள்ள நிலவரப்படி தமிழ்நாடு காவல் துறையில் உள்ள வாகனங்களின் எண்ணிக்கை.

| | | |
|---|---|---|
| 1. | கனரக வாகனங்கள்:<br>பேருந்துகள்-143<br>லாரிகள்-423 | 566 |
| 2 | மித ரக வாகனங்கள்:<br>சிற்றுந்துகள் - 261 | |
| | வேன்கள் - 917 | |
| | கைதிகளை அழைத்துச் செல்லும் வாகனங்கள் - 31 | 1209 |
| 3. | ஈப்புகள் | 2692 |
| 4. | சீருந்துகள் | 340 |
| 5. | மோட்டார் சைக்கிள்கள், மொபெட்களையும் சேர்த்து 162+2379 | 2541 |
| 6. | பிற வாகனங்கள் | 85 |
| | மொத்தம் | 7433 |

### தமிழ்நாடு காவல் போக்குவரத்துப் பணிமனைகள்

காவல் துறை ஆணையத்தின் பரிந்துரைகளை ஏற்று சென்னை மாநகர காவல் துறை, ஆவடியிலுள்ள ஆயுதப்படை பிரிவு ஆகியவற்றின் நலனுக்காக, போக்குவரத்துப் பணிமனையுடன்கூடிய பயிற்சிப் பள்ளி ஒன்றினை ஆவடியில் நிறுவ அரசு ஆணையிட்டது. 3-7-1973 ஆம் நாளிட்ட உள் துறையின் அரசாணை நிலை எண் 1794இன்படி இப்பணிமனை 7-1-1976 முதல் இயங்கத் தொடங்கியது. 23-1-1988ஆம் நாளிட்ட உள் (காவல்-13) துறையின் அரசாணை நிலை எண் 141இன்படி, திருச்சிராப்பள்ளியில் காவல் துறை வட்டாரப் போக்குவரத்துப் பணிமனை ஒன்று 10-3-1988 முதல் செயல்பட்டு வருகிறது. கனரக, இலகுரக வாகனங்களில் ஏற்படும் பழுதுகளை சரிபார்க்கத் தேவையான

இயந்திரங்கள் மற்றும் கருவிகள் இப்பணிமனைகளில் வைக்கப்பட்டுள்ளன. எந்தெந்தக் காவல் நிலையங்களின் வாகனங்கள் இப்பணிமனைகளில் பழுதுபார்க்கப்படவேண்டும் என்பதும் வரையறை செய்யப்பட்டுள்ளது. இப்பணிமனைகளில் உள்ள பணியாளர்களின் எண்ணிக்கை பின்வருமாறு:

| | |
|---|---|
| ஆவடி | - ஒரு பணி மேலாளர், ஒரு தானியங்கி பொறியாளரையும் சேர்த்து மொத்தம் 107 பேர். |
| திருச்சிராப்பள்ளி | - ஒரு தானியங்கி பொறியாளரையும் சேர்த்து மொத்தம் 31 பேர் (இப்பணியிடங்கள் அனைத்தும் தற்காலிகமானவை) |

2001 ஆம் ஆண்டு டிசம்பர் வரை, ஆவடியிலுள்ள பணிமனையில் 2114 வேலைகளும், திருச்சிராப்பள்ளியிலுள்ள பணிமனையில் 1203 வேலைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 8. ஊழியர் நலன்

### 1. உணவு மானியத் திட்டம்

காவலர் முதல் ஆய்வாளர் வரை உள்ள காவல் துறைப் பணியாளர்கள் பயனடையும் வகையில் 25-9-1980ஆம் நாளிட்ட உள்(காவல்-14) துறையின் அரசாணை நிலை எண் 2474 இல் 1-10-1980 முதல் காவல் துறையின் ஒரு நலத் திட்டமாக உணவு மானியத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. குடும்பத்திலுள்ள மொத்த நபர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து ஓரலகு முதல் 4 அலகு வரையிலான உணவுப் பொருட்கள் இத்திட்டத்தின்கீழ் காவலர்களுக்கு வழங்கப்படுகின்றன. அரிசி, கோதுமை, சர்க்கரை, ரவை, துவரம்பருப்பு, உளுத்தம்பருப்பு, பாமாயில் ஆகிய உணவுப் பொருட்கள் இத்திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டு வருகின்றன.

அரிசி, சர்க்கரை, கோதுமை, பாமாயில் ஆகியவை 50 விழுக்காடு சலுகை விலையில் வழங்கப்படுகின்றன. மண்ணெண்ணெய்க்கென தனியாக குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. குடும்ப அட்டை ஒன்றுக்கு 20 கிலோகிராம் அரிசியும் வழங்கப்பட்டு வருகிறது. 2001-2002 ஆம் ஆண்டிற்கு மானியமாக வழங்க ரூ.3.20 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

### 2. தமிழ்நாடு காவலர் நல நிதி

அரசிதழ் பதிவு பெறாத காவல் துறைப் பணியாளர்களுக்கு நிதி உதவிகளும் பிற நிவாரணங்களும் அளிக்க வேண்டி 1957 ஆம் ஆண்டு



தமிழ்நாடு காவலர் நல நிதி ஏற்படுத்தப்பட்டது. அரசிதழ் பதிவுபெறாத காவல் துறையினர் ஆண்டொன்றிற்கு ரூ.60 முதல் ரூ.300 வரை தாமாக முன்வந்து அளிக்கும் சந்தாத் தொகைகளையும் 'ஏ' மற்றும் 'பி' பிரிவைச் சார்ந்த பிற காவல் துறை அலுவலர்கள் அளிக்கும் நன்கொடைகளையும், 2001-2002 ஆம் ஆண்டிற்கு அரசு அளித்த ரூ.25 இலட்சத்தையும் கொண்டு இந்நிதி செயல்படுகிறது. கீழே குறிப்பிட்டுள்ள இனங்களுக்காக இந்நிதி பயன்படுத்தப்படுகிறது:

| | | |
|---|---|---|
| அ) இறந்துபோன காவல் துறையினரின் மனைவி அல்லது அவரைச் சார்ந்திருப்போருக்கு வழங்கப்படும் நிவாரணத் தொகை | | ரூ.10,000 |
| ஆ) சந்தாதாரரின் குடும்ப உறுப்பினர்/ சார்ந்தோருக்கு மரணம் சம்பவிக்கும்போது வழங்கப்படும் நிவாரணத் தொகை | - | ரூ.5,000 |
| இ) தமிழ்நாடு காவலர் மருத்துவ நலத்திட்டம் அல்லது மருத்துவச் செலவைத் திரும்பப் பெறும் திட்டங்களுக்குள் வராத நேர்வுகளில் நாள்பட்ட நோய்கள், மோசமான காயங்களால் பாதிக்கப்பட்ட சந்தாதாரர்களுக்கு வழங்கப்படும் நிவாரணத் தொகை. | - | ரூ.5.000 அல்லது உண்மையான செலவுத் தொகை இதில் எது குறைவோ அது வழங்கப்படும். |

'சி' மற்றும் 'டி' பிரிவைச் சார்ந்த சந்தாதாரர்கள் குழந்தைகளின் மேல்படிப்புக்கென ரூ.2000 முதல் ரூ.7500 வரையிலான கல்விக்கொடை ஒரு முறை மட்டும் வழங்கப்படும். இவ்வாண்டு காவல் துறையினரின் 3865 குழந்தைகளுக்கு ரூ.1.37 கோடி இத்திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டுள்ளது.

### 3. தமிழ்நாடு காவலர் மருத்துவ நலத்திட்டம்

பெரிய அளவிலான அறுவை சிகிச்சை அல்லது பெரிய அளவில் நோயினால் பாதிக்கப்பட்ட காவல் துறையினருக்கு உதவுவதற்காக 1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு காவலர் மருத்துவ நலத்திட்டம் தொடங்கப்பட்டது. இந்நிதிக்கு அரசின் பங்காக ஆண்டுதோறும் அளிக்கப்பட்டு வந்த ரூ.50

[2002 ஏப்ரல் 2

இலட்சம் ஒரு கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு காவல் துறையைச் சேர்ந்த களப்பணியாளர்களும், அமைச்சுப் பணியாளர்களும் மாதந்தோறும் ரூ.10/- சந்தா செலுத்துகின்றனர் காவல் துறையினர் இந்தியாவில் எடுத்துக் கொள்ளும் சிகிச்சைக்கு ஒரு இலட்சம் ரூபாயும், வெளிநாட்டில் எடுத்துக் கொள்ளும் சிகிச்சைக்கு கூடுதலாக ஒரு இலட்சம் ரூபாயும், 10 விழுக்காடு வட்டியில், மொத்தம் ரூ.2 இலட்சத்திற்கு மிகாமல் கடனாக வழங்கப்படுகிறது. தனியார் மருத்துவமனைகளில் செய்துகொள்ளும் இதய அறுவைச் சிகிச்சை, சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை, மூளை அறுவை சிகிச்சை, புற்று நோய் சிகிச்சை போன்ற உயிர்காக்கும் சிகிச்சைகளுக்கு இந்நிதியிலிருந்து கடன் அளிக்கப்படுகிறது. உடனடியாக செய்யப்பட வேண்டிய அறுவை சிகிச்சைகளுக்குத் தகுதியான தொகையில் 75 விழுக்காடு முன்பணமாக உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகின்றது.

### 4. காவல் துறை அலுவலர்களுக்கும், பணியாளர்களுக்கும் குழுக் காப்பீட்டுத் திட்டம்

இரண்டாம் நிலைக் காவலர் முதல், காவல் துறை இயக்குநர் வரையிலுள்ளவர்கள் இறந்துபோக நேரிடும்போது அவர்கள் குடும்பத்தினர் பயன்பெறும் வகையில் குழுக்காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இயற்கை மரணம், தற்கொலை தவிர்த்து பிறவகையில் மரணம் சம்பவிக்கும்போது இறந்தவர் குடும்பத்திற்கு ஒரு இலட்சம் ரூபாய் முதல் 10 இலட்சம் ரூபாய் வரை காப்பீட்டுத் தொகை இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும். 27-12-1993 ஆம் நாளிட்ட உள் (காவல்-12) துறையின் அரசாணை (நிலை) எண் 1833இன்படி இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

| பதவி | தொகை (ரூபாய் இலட்சங்களில்) |
|---|---|
| காவலர் முதல் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் வரை | 1.00 |
| காவல் கண்காணிப்பாளர் முதல் காவல் துறைத் தலைவர் வரை | 5.00 |
| கூடுதல் காவல் துறை இயக்குநர் | 7.50 |
| காவல் துறை தலைமை இயக்குநர் | 10.00 |



2002 ஏப்ரல் 24]

2001-2002 ஆம் ஆண்டில் தலா ஒரு இலட்சம் ரூபாய் வீதம் ஆறு குடும்பங்களுக்கு இத்திட்டத்தின்படி தொகை வழங்கப்பட்டுள்ளது.

இதைத்தவிர, 2001-2002 ஆம் ஆண்டில் சிறப்புப் பாதுகாப்புக் குழு, சிறப்பு அதிரடிப் படையைச் சேர்ந்த ஊனமுற்ற இரண்டு காவல் துறைப் பணியாளர்களுக்கு 4 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

### 5. தமிழ்நாடு அதிரடிப் படையில் பணியாற்றும் காவல் துறை அலுவலர்கள் மற்றும் காவலர்களுக்கான குழுக் காப்பீட்டுத் திட்டம்

தமிழ்நாடு அதிரடிப் படை பயிற்சிப் பள்ளி, அதிரடிப்படை, அதிவிரைவுப் படை, சிறப்பு அதிரடிப் படை, மையப் பிரிவு ஆகியவற்றில் பணிபுரிவோர் பணியிலிருக்கும்போது விபத்தில் இறக்க நேரிட்டால், அவர்களது நியமனதாரர் அல்லது வாரிசுகள் இத்திட்டத்தினால் காப்பீட்டுத் தொகை ரூ.10 இலட்சம் பெறுவார்கள். நிரந்தரமான ஊனம் ஏற்படும்போது ஊனத்தின் தன்மைக்கேற்ப காப்பீட்டுத் தொகை வழங்கப்படும்.

### 6. கருணைத் தொகை

காவல் படையினருக்கு உற்சாகம் ஊட்டவும், அவர்களது மனதில் நெஞ்சுரத்தையும், தன்னம்பிக்கையையும் வளர்க்கவும், வீரதீரச் செயல்களில் ஈடுபட்டுள்ளபோது காயமுறும் அல்லது இறந்துபோகும் காவலர்களுக்கு வழங்கப்பட்டு வந்த கருணைத் தொகையை 13-8-2001 ஆம் நாளிட்ட உள் துறை அரசாணை நிலை எண் 762-ல் பின்வருமாறு அரசு உயர்த்தியுள்ளது:

| | வகை | தற்போதுள்ள தொகை (ரூபாயில்) | உயர்த்தப்பட்ட தொகை (ரூபாயில்) |
|---|---|---|---|
| அ) | இறப்பு | 2 இலட்சம் | 5 இலட்சம் |
| ஆ) | நிரந்தர ஊனம் (கால், கண்பார்வை இழப்பு போன்றவை) | 50,000 | 1 இலட்சம் |
| இ) | கொடுங் காயங்கள் | 10,000 | 20,000 |
| ஈ) | சாதாரண காயங்கள் | 5,000 | 10,000 |

[2002 ஏப்ரல் 24

பணியிலிருக்கும்போது வீரதீரச் செயல்களில் ஈடுபட்டு இறக்க நேரிடும் காவல் பணியாளர் கடைசியாகப் பெற்றுவந்த சம்பளத்தை அவர் பணிஓய்வு பெறும் நாள் வரை உள்ள காலத்திற்குக் குடும்ப ஓய்வூதியமாக அவரது வாரிசுகளுக்கு வழங்கப்படும்.

குற்றப் புலனாய்வுத் துறையின் தனிப் பிரிவு படையைச் சேர்ந்த பணியாளர்களுக்கு 5-1-1993 ஆம் நாளிட்ட உள் துறையின் அரசாணை நிலை எண் 7-ன்படி பின்வரும் தொகை கருணைத் தொகையாக வழங்கப்படுகிறது:

| | | |
|---|---|---|
| அ) | காவல் துணைக் கண்காணிப்பாளர் அல்லது அதற்கும் மேல்நிலைப் பதவியிலுள்ளோர் இறக்க நேரிடும்போது | ரூ.5 இலட்சம் |
| | காவலர் முதல் ஆய்வாளர் வரை உள்ள பதவியிலுள்ளோர் இறக்க நேரிடும்போது | ரூ.3 இலட்சம் |
| ஆ) | உடலுறுப்புகள், கண்பார்வை போன்ற எல்லாவகை நிரந்தர இழப்புகளுக்கு | ரூ.2 இலட்சம் |
| இ) | அனைத்து வகை உருவச் சிதைவுகளுக்கு | ரூ.1 இலட்சம் |

மாநிலக் காவல் துறையினருக்கு உதவி செய்யும்போது இறக்க நேரிடும் மைய அரசின் துணை இராணுவப் படையினரின் குடும்பங்களுக்கு ரூ. 2 இலட்சம் கருணைத் தொகையாக வழங்கிட 31-10-2000 ஆம் நாளிட்ட உள் துறையின் அரசாணை நிலை எண் 1169-ல் ஆணையிடப்பட்டுள்ளது.

1-12-2001 அன்று உள்ள நிலவரப்படி 2001-2002 ஆம் ஆண்டில் கருணைத் தொகை வழங்கப்பட்ட விவரம் கீழே தரப்பட்டுள்ளது:

| ஆண்டு | காவல்துறை தலைமைத் தலைவர் | காவல் கண்காணிப்பாளர் | கூடுதல் கண்காணிப்பாளர்/ உதவி ஆணையர் | காவல் துணைக் கண்காணிப்பாளர் | ஆய்வாளர் | உதவி ஆய்வாளர் | தலைமைக் காவலர் | முதல்நிலைக் காவலர் | காவலர் | மொத்த இனங்கள் | காயமுற்றோர் மொத்தம் | இறந்தோர் மொத்தம் | தொகை (ரூபாயில்) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2001-02 (டிசம்பர் 2001 வரை) | 1 | 4 | 3 | 2 | 12 | 12 | 14 | 26 | 43 | 116 | 114 | 2 | 12 81000 |



2002 ஏப்ரல் 24]

**7. தொழிற் படிப்புக் கல்லூரிகளில் இடஒதுக்கீடு**

வீரதீரச் செயல்களில் ஈடுபட்டபோது இறந்துபோன காவல் துறையினரின் குழந்தைகளுக்கென மருத்துவம், பொறியியல், வேளாண்மை ஆகிய கல்லூரிகளில் ஒவ்வொரு படிப்புக்கும் மூன்று இடங்களும், சட்டக் கல்லூரியில் இரண்டு இடங்களும் ஒதுக்கப்பட்டுள்ளன.

**8. பரிசுத் திட்டம்**

ஒவ்வொரு காவல் மாவட்டத்திலும், மாநகரத்திலும் பணிபுரியும் ஆய்வாளர் வரையிலான காவல் பணியாளர்களின் குழந்தைகள் 10 ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்புகளின் தேர்வுகளில் முதல் மூன்று இடங்களில் வரும் சிறந்த குழந்தைகளுக்கு பின்வருமாறு பரிசுகள் வழங்கப்படுகின்றன:

| நிலை (ஒவ்வொரு காவல் மாவட்டத்திலும் மாநகரிலும்) | 10ஆம் வகுப்பு ரூ. | 12ஆம் வகுப்பு ரூ. |
|---|---|---|
| முதலாவது | 6000 | 7000 |
| இரண்டாவது | 4000 | 5000 |
| மூன்றாவது | 2000 | 3000 |

2001-2002 ஆம் ஆண்டில், 215 காவல் பணியாளர்களின் பிள்ளைகளுக்கு ரூபாய் 9.64 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**9. தமிழ்நாடு காவல் துறை நூற்றாண்டு நினைவுப் படிப்பு உதவித் தொகை**

காவல் துறையைச் சேர்ந்த காவல் பணியாளர்கள் மற்றும் அரசிதழ் பதிவு பெறாத அமைச்சுப் பணியாளர்களின் குழந்தைகளின் மேற்படிப்புக்கென தகுதிவாய்ந்தோருக்கு உதவி அளிக்கவேண்டி தமிழ்நாடு காவல் துறை நூற்றாண்டு படிப்பு உதவித் தொகை 1962 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. காவல் பணியாளர்கள் ஓய்வு பெற்றாலோ, காலமாகி விட்டாலோ, அந்நாளிலிருந்து ஐந்து வருடம் வரை இத்திட்டத்தின்கீழாக உதவி அவர்தம் பிள்ளைகளுக்கு வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. 2001-2002 ஆம் ஆண்டில் 3,865 மாணவர்களுக்கு தோராயமாக ரூ.1.37 கோடி இத்திட்டத்தின்படி அளிக்கப்பட்டுள்ளது.

[2002 ஏப்ரல் 24

## 10. சிறப்புப் படிப்பு உதவி நிதி

காவலர் முதல் ஆய்வாளர் வரையுள்ள பதவிகளில் உள்ள பணியாளர்களின் குழந்தைகள் இத்திட்டத்தில் உதவிபெறத் தகுதியுடையவர்களாவர். இந்நிதிக்கு சிறப்புப் பாதுகாப்புப் படையினர் மனமுவந்து ரூ.4 இலட்சம் அளித்துள்ளனர். அரசு ரூ.6 இலட்சம் அளித்துள்ளது. இத்தொகை தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதிக் கழகத்தில் வைக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து கிடைக்கப்பெறும் வட்டியைக் கொண்டு தொழிற் படிப்புக் கல்லூரியில் சேர்ந்து படிக்கும் காவல் துறையினரின் குழந்தைகளுக்கு உதவி அளிக்கப்படுகிறது. மிகச் சிறந்த மாணவருக்கு ரூ.40,000/-மும், மற்ற சிறந்த ஐந்து மாணவர்களுக்கு தலா ரூ.20,000/-மும் வழங்கப்படுகிறது. 2001-2002 ஆம் ஆண்டில் ஆறு மாணவர்கள் இத்திட்டத்தால் பயனடைந்துள்ளனர்.

## 11. பாதிக்கப்பட்டோர் உதவி நிதி

அரசு அளித்த ஒரு கோடி ரூபாயைக் கொண்டு 1995-96 ஆம் ஆண்டு பாதிக்கப்பட்டோர் உதவி நிதி என்ற புதிய நிதி தொடங்கப்பட்டது. கொலையுண்டோரது வாரிசுகள், மோசமான காயமடைந்தோர், கற்பழிப்புக்காளானோர் ஆகியவர்களுக்கு இந்நிதியிலிருந்து உதவி அளிக்கப்படுகிறது. கொலையுண்டோர் வாரிசுகளுக்கு ரூ.10,000/-மும், மோசமான காயமடைந்தோருக்கும், கற்பழிப்புக்காளானோருக்கும் ரூ.5,000/-மும் நிதி உதவி அளிக்கப்படுகிறது. மகளிருக்கும் குழந்தைகளுக்கும் இந்நிதி உதவி பெற முன்னுரிமை அளிக்கப்படுகிறது. 2001-2002 ஆம் ஆண்டிலிருந்து இந்நிதி ஒரு கோடி ரூபாயிலிருந்து ரூ.1.25 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

## 12. கருணை அடிப்படை நியமனங்கள்

பணியிலிருந்தபோது இறந்துபோன அரசுப் பணியாளர்களின் வாரிசுகளுக்குக் கருணை அடிப்படையில் பணி நியமனம் அளிக்கப்படுகிறது.

காவல் துறையின் பல்வேறு பதவிகளில் கருணை அடிப்படையில் செய்யப்பட்ட நியமனங்கள் பின்வருமாறு:



2002 ஏப்ரல் 24]

| பதவி | 1999-2000 | 2000-2001 | 2001-2002 |
|---|---|---|---|
| இளநிலை உதவியாளர்-தட்டச்சர் | 166 | 4 | - |
| சுருக்கெழுத்துத் தட்டச்சர் | - | - | 1 |
| தட்டச்சர் | - | - | 78 |
| துப்புரவாளர் | 58 | 76 | - |
| இந்தி பண்டிதர் | 1 | - | - |
| சலவைத் தொழிலாளர் | 2 | - | - |
| தண்ணீர் எடுத்து வைப்பவர் | - | 1 | 1 |
| சமையல்காரர் | - | 2 | - |
| முடிதிருத்துபவர் | - | 1 | - |
| தோட்டக்காரர் | - | 6 | - |
| மொத்தம் | 227 | 90 | 79 |

2001 ஆம் ஆண்டு ஜூன் மாதம் உள் துறைப் பணிகளைப் பற்றி நான் மேற்கொண்ட ஆய்வுக் கூட்டத்தின் விளைவாக ஏற்கெனவே கருணை அடிப்படையில் 78 தட்டச்சர்கள் மற்றும் ஒரு சுருக்கெழுத்துத் தட்டச்சர் நியமனம் செய்யப்பட்டு விட்டனர். பணியிலிருக்கும்போது இறந்துபோன காவலர்களின் வாரிசுகள் 282 நபர்களுக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர்/காவலர்களாகப் பணி நியமனம் செய்வது குறித்த கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

## 13. காவலர் மருத்துவமனைகள்

சென்னை எழும்பூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, கோயம்புத்தூர், சேலம், புனித தோமையர் மலை, கடலூர், வேலூர், விருதுநகர், தமிழ்நாடு சிறப்புக் காவல் படையணிகளுள்ள ஆவடி, மணிமுத்தாறு ஆகிய இடங்களில் 11 காவல் மருத்துவமனைகள் உள்ளன.

1-9-1991 அன்று நடைபெற்ற காவல் துறை மானியக் கோரிக்கையின்போது தமிழ்நாட்டிலுள்ள காவலர் மருத்துவமனைகளின் தரம் உயர்த்தப்படும் என்று நான் சட்டமன்றப் பேரவையில் அறிவித்ததைத்

[2002 ஏப்ரல் 24

தொடர்ந்து சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை ஆகிய நகரங்களிலுள்ள, மருத்துவத்தில் பல்வேறு துறைகளில் சிறப்பு பெற்று விளங்கும் தனியார் மருத்துவமனைகளுடன் ஓர் இணைப்பை ஏற்படுத்திக் கொள்வதன்மூலம் காவல்துறைப் பணியாளர்களுக்கு நியாயமான கட்டணத்தில் மருத்துவ வசதிகள் கிடைக்கச் செய்யும் சாத்தியக்கூறுகள் பற்றி பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றன. இதற்கான வழிமுறைகள் தற்போது ஆராயப்பட்டு வருகின்றன.

பெருநகரங்களைத் தவிர பிற இடங்களில் உள்ள மருத்துவமனைகளுக்கு தகுந்த உள்கட்டமைப்பு வசதிகள் அளிப்பதன் மூலம் படிப்படியாக 10 படுக்கை/20 படுக்கை/30 படுக்கை வசதி கொண்டவையாக உயர்த்தப்படும்.

**14. மனமகிழ்வு வசதிகள்**

காவல் துறையினரின் குடும்பங்களுக்காக தமிழ்நாடு காவல் சிறப்புப் படையணிகளின் தலைமையிடங்களில் வாரந்தோறும் திரைப்படங்கள் திரையிடப்படுகின்றன. இதுதவிர தினசரிகள், வாரப் பத்திரிகைகள் மற்றும் பிற பத்திரிகைகள் வாங்கி படிப்பறையில் வைக்கப்படுகின்றன.

**9. பணி நியமனமும் பயிற்சியும் பணி நியமனம்**

ஒரு பெண் உட்பட நேரடி நியமனம் செய்யப்பட்ட 16 காவல் துணைக் கண்காணிப்பாளர்களுக்கு 20-12-2001 முதல் ஓராண்டு கால அடிப்படைப் பயிறசி காவல் பயிற்சிக் கல்லூரியில் அளிக்கப்பட்டு வருகிறது.

1998 ஆம் ஆண்டு அறிவிப்பு செய்யப்பட்ட உதவி ஆய்வாளர் பதவிக்கான காலியிடங்களை நிரப்புவதற்காகத் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களில் முதல் தொகுதியாக 411 ஆண், 144 பெண் ஆக மொத்தம் 555 நபர்களுக்கு காவல் நிலையங்களில் செய்முறைப் பயிற்சி அளிக்கப்பட்டபின் முறையான உதவி ஆய்வாளர்களாகப் பணியமர்த்தப்பட்டுள்ளனர். இதே ஆண்டு தெரிந்தெடுக்கப்பட்ட 272 ஆண்கள், 81 பெண்கள் ஆக மொத்தம் 353 நபர்கள் இரண்டாவது தொகுதியாக 25-11-2002 முதல் முறையான உதவி ஆய்வாளர்களாகப் பணியில் சேர்க்கப்படவுள்ளனர்.

183 உதவி ஆய்வாளர் (தொழில்நுட்பம்) காலியிடங்களுக்காக அறிவிப்பு செய்யப்பட்டதில் தெரிந்தெடுக்கப்பட்ட 166 நபர்கள் மூன்று மாத காலப் பயிற்சியை முடித்தபின் 27-8-2001 முதல் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.



2002 ஏப்ரல் 24]

1997-98 ஆம் ஆண்டுக்கான இரண்டாம் நிலை பெண் காவலர்களுக்கான 1,000 காலியிடங்களுக்கு 584 நபர்கள் தெரிந்தெடுக்கப்பட்டு 27-8-2001 முதல் தமிழ்நாடு சிறப்புக் காவல் அணியில் பணியமர்த்தபபட்டுள்ளனர்.

இப்பணிக்கென தெரிந்தெடுக்கப்பட்ட 266 பெண்கள் இரண்டாவது தொகுதியாக 1-5-2002 முதல் தமிழ்நாடு சிறப்புக் காவல் அணியில் பணியமர்த்தப் படவுள்ளனர்.

1999-2000 ஆம் ஆண்டு நியமனம் செய்ய ஆணையிடப்பட்ட 4,000 இரண்டாம் நிலை காவலர் பதவிகளுக்கு இதுவரை 3,558 நபர்களுக்கு நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. மாநிலத்தில் உள்ள 14 காவலர் பயிற்சிப் பள்ளிகளில் அவர்களுக்கென 9 மாத கால பயிற்சி 1-3-2002 முதல் நடத்தப்பட்டு வருகிறது.

**பயிற்சி**

பணியாளர்களைச் சிறந்த முறையில் செயல்படச் செய்வதில் பயிற்சிக்கான முக்கியத்துவம் உணரப்பட்டுள்ளது. எனவே பயிற்சிக்கு மிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. தெரிந்தெடுக்கப்பட்ட அலுவலர்கள் பயிற்சி அளிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும் பயிற்சி அளிக்கும் பணியாளர்களுக்கு அளிக்கப்பட வேண்டிய ஊக்கங்கள், பயிற்சியாளர்களுக்கு பயிற்சி அளிக்கும் திட்டங்கள் ஆகியவை குறித்து பரிசீலிக்கப்பட்டு வருகின்றன. பயிற்சி அளிப்பதில் ஒரு தெளிவான வரையறுக்கப்பட்ட நோக்கம் முன்பிருந்த ஆட்சியில் இருந்ததில்லை. ஆனால் அத்தகைய நோக்கம் தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ளது. பயிற்சி பெறுவோரின் நிலையை உயர்த்துதல், காவல் அமைப்பின் நிலையை உயர்த்துதல், பெருவாரியான பொதுமக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுதல் ஆகியவையே அத்தகைய நோக்கங்களாகும். காஞ்சிபுரம் மாவட்டம், ஊனமாஞ்சேரியில் ரூ.51 கோடி செலவில் காவலர் பயிற்சிக் கழகம் ஒன்று அமைக்கப்படவுள்ளது. ரூ.19 கோடி செலவிலான இதற்கான முதற்கட்ட வேலைகள் 2002-2003 ஆம் ஆண்டில் தொடங்கப்படவுள்ளன. இப்பகுதியில் சிறந்த பயிற்சி மையம் என்னும் வகையில் இதனை வலுப்படுத்திட காவல் பயிற்சிக் கல்லூரி, அகாடெமி (காவலர் பயிற்சிப் பள்ளி) ஆகியவை சிறந்த முறையில் அமையும் வகையில் இந்நிறுவனங்களின் முறை மாற்றியமைக்கப்படவுள்ளது.

(இம்மாநிலத்திலுள்ள காவல் பயிற்சிக் கல்லூரி, காவலர் பயிற்சி நிறுவனங்கள் பற்றி 'காவல் துறையின் பணியமைப்பு முறை' என்ற அத்தியாயத்தில் விரிவாகச் சொல்லப்பட்டுள்ளது)

[2002 ஏப்ரல் 24

**அடிப்படை நியமனப் பயிற்சி**

* நேரடி நியமனம் பெற்ற 15 காவல் துணைக் கண்காணிப்பாளர்கள் 21-12-2001 முதல் ஓராண்டு காலப் பயிற்சி பெற்று வருகின்றனர்.
* 43 பெண்கள் உள்பட 151 உதவி ஆய்வாளர்கள் (தொழில்நுட்பம்) 27-8-2001 முதல் 26-2-2002 வரை தமது ஆறு மாத கால பயிற்சியை முடித்துள்ளனர்.
* நேரடி நியமனம் பெற்ற ஆறு உதவி ஆய்வாளர்கள் 28-5-2001 முதல் ஓராண்டு காலப் பயிற்சி பெற்று வருகின்றனர்.
* பயிற்சியில் உள்ள உதவி காவல் கண்காணிப்பாளர் (பெண்) ஒருவருக்கு 10-12-2001 முதல் ஆறு வார காலப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.
* புதிதாக நியமனம் செய்யப்பட்ட 240 பெண் காவலர்கள் 1-8-2001 முதல் ஒன்பது மாத காலப் பயிற்சியை திருச்சிராப்பள்ளியில் பெற்று வருகின்றனர்.
* வேலூரிலும், விழுப்புரத்திலும் உள்ள பயிற்சிப் பள்ளிகளில் 618 பெண் காவலர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.
* காவல் பணியில் சேர்க்கப்பட்டுள்ள 3,525 பேருக்கு 14 மையங்களில் 1-3-2002 முதல் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

புதிதாக நியமிக்கப்படுவோருக்கான அடிப்படைப் பயிற்சி அளிக்கும் முறையில் இரண்டு பெரிய மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. முதலாவதாக, பணிசார்ந்த தேவைகளை அடையும் பொருட்டு, காவலர்களது பயிற்சிக்கான கால அளவு மாற்றப்பட்டுள்ளது. 9 மாத காலம் தொடர்ந்து பயிற்சி அளித்துவந்ததை, 7 மாத காலம் நிலையப் பயிற்சியும், ஒரு மாத காலம் செய்முறைப் பயிற்சியும், உள்ளூர் காவல் படையில் பணியில் சேர்வதற்கு முன் காவலர் பயிற்சிப் பள்ளியில் ஒரு மாத காலப் பயிற்சி என பயிற்சி முறை மாற்றப்பட்டுள்ளது.

இரண்டாவதாக, அலுவலர்களுக்கும் மற்றும் காவலர்களுக்கும் அளிக்கப்படும் பயிற்சிக்கான பாடத் திட்டத்தில் பாலின வேறுபாடின்றி அனைவரையும் மதித்தல், மனித உரிமைகள், மனிதத் தன்மையோடு காவல் பணியாற்றுதல் ஆகியனவும் சேர்க்கப்பட்டுள்ளன. மேலும் உதவி ஆய்வாளர்கள், காவல் துணைக் கண்காணிப்பாளர்களுக்கான



2002 ஏப்ரல் 24]

அடிப்படைப் பயிற்சியில் விமானப் பாதுகாப்பு, கொள்ளைத் தடுப்பு மற்றும் வழிப்பறித் தடுப்பு நடவடிக்கைகள், இராணுவம் மற்றும் குடிமுறைப் பாதுகாப்பு ஆகியவற்றில் உதவி செய்தல், அடவிப் பயிற்சி, சீற்ற மேலாண்மை, சமூகப் பாதுகாப்பு, புலப் பொறியியல், அகதி முகாம்களில் பணி செய்தல், போக்குவரத்து விதிகளுக்கு எதிரான நடவடிக்கைகள், கணினிசார் குற்றங்கள், கணினித் திறமைகள், விசாரணை முறைகள் போன்ற பாடத் திட்டங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

**முன்-பதவி உயர்வுப் பயிற்சி**

2000 ஆம் ஆண்டில் 13 கூடுதல் காவல் கண்காணிப்பாளர்களுக்கும், 18 காவல் துணைக் கண்காணிப்பாளர்களுக்கும், 15 தலைமைக் காவலர்களுக்கும், 2001 ஆம் ஆண்டில் 37 கூடுதல் காவல் கண்காணிப் பாளர்களுக்கும், 4 காவல் இணைக் கண்காணிப்பாளர்களுக்கும், 25 காவல் துணைக் கண்காணிப்பாளர்களுக்கும், 30 ஆய்வாளர்களுக்கும், 20 உதவி ஆய்வாளர்களுக்கும், 21 தலைமைக் காவலர்களுக்கும் முன்பதவி உயர்வுப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. முன் பதவி உயர்வுப் பயிற்சி, புதுப்பித்துக் கொள்ளும் பயிற்சி, பணியிடைப் பயிற்சி ஆகியவற்றுக்கான பாடத் திட்டத்தில் மனித உரிமைகள், மூன்றாந்தர நடத்தை மற்றும் கெட்ட வார்த்தைகளில் திட்டுதல் ஆகியவற்றைத் தவிர்த்தல், காவல் துறைப் பாதுகாப்பில் உள்ளவர்கள் மீது வன்முறை பிரயோகத்தைத் தவிர்த்தல், சமுதாயப் பாதுகாவல் ஆகிய இனங்களின்மீது கூடுதல் ஆழ்ந்த முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளதோடு கணினி விழிப்புணர்வும் சேர்க்கப்பட்டுள்ளன.

**பணியிடைப் பயிற்சி**

1999 ஆம் ஆண்டில் 1,742, 2000 இல், 1,948, 2001 இல் 3,200, 2002 ஆம் ஆண்டின் முதல் இரண்டு மாதங்களில் 500 காவல் துறைப் பணியாளர்களுக்கு பணியிடைப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. பணியிடைப் பயிற்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதன் மூலம், 2001 ஆம் ஆண்டின் பிற்பாதியிலும், 2002 ஆண்டின் முதல் இரண்டு மாதங்களிலும் இப்பயிற்சி அளிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை பெருமளவு உயர்ந்துள்ளது.

1976 ஆம் ஆண்டு 8 பணியிடைப் பயிற்சி மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவற்றின் எண்ணிக்கை 12 ஆக விரிவுபடுத்தப்படும். இராமநாதபுரம், சேலம், தஞ்சாவூர் விழுப்புரம் ஆகிய

[2002 ஏப்ரல் 24

இடங்களில் நான்கு புதிய பயிற்சி மையங்கள் நிறுவப்படும். இப்பன்னிரண்டு மையங்களில் ஆண்டிற்கு 900 பேர் என்ற விகிதத்தில் 10,800 காவலர்களுக்கு பணியிடைப் பயிற்சி அளிக்கப்படவுள்ளது. மேற்சொன்ன விகிதத்தில் ஒவ்வொரு காவலருக்கும் ஏழு ஆண்டுகளுக்கொருமுறை கட்டாயப் பணியிடைப் பயிற்சி அளிக்கப்படும்.

**சிறப்புப் பயிற்சிகள்**

* 'புலனாய்வுத் திறமை மேம்பாடு' தேவையானதொரு கூடுதல் உள்ளீடாகக் கண்டறியப்பட்டுள்ளது. காவல் துறைப் பாதுகாப்பில் உள்ளவர்கள் மீது மூன்றாம் தர நடத்தைப் பிரயோகம் செய்வது குற்றவாளிகளை தம் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரச் செய்யும் காவலர்களின் திறமை ஆகியவற்றின்மீது இது நேரடித் தாக்கம் கொண்டதாகும்.

* காவல் துணைக் கண்காணிப்பாளர்கள், ஆய்வாளர்கள் ஆகியோருக்கு புலனாய்வுத் திறமைகளை மேம்படுத்திக் கொள்வது குறித்த நான்கு நாள் பயிற்சி ஒன்று காவல் பயிற்சிக் கல்லூரியில் நடத்தப்பட்டு வருகிறது. இதுவரை மூன்று குழுக்கள் (2600 இல் 133) இப்பயிற்சியைப் பெற்றுள்ளனர்.

* குற்றப் புலனாய்வில் குறிப்பாகப் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பாக தங்களது திறமைகளை மேம்படுத்திக் கொள்ளும் பொருட்டு, பெண் ஆய்வாளர்கள், பெண் உதவி ஆய்வாளர்கள் மற்றும் தலைமைக் காவலர்கள் ஆகிய நிலையிலுள்ள 1,000 பெண் காவலர்களுக்குப் பயிற்சியளிக்கும் வகையில் சிறப்புப் பயிற்சி ஒன்று நடத்தப்பட்டு வருகிறது. இதுவரை 100 பேர் கொண்ட இரண்டு குழுக்களுக்கு காவல் துறை அலுவலர்களின் இரண்டு குழுக்களுக்கு இப்பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

* தமிழ்நாடு முழுவதிலுமுள்ள 52 அலுவலர்களுக்கு (உதவி ஆய்வாளர்கள், ஆய்வாளர்கள், காவல் துணைக் கண்காணிப்பாளர்கள்) 21-11-2001, 22-11-2001 ஆகிய இரு நாட்களில் 'மனிதத் தன்மையோடு காவல் பணியாற்றுதல்' குறித்த இரு நாட்களுக்கான பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.



2002 ஏப்ரல் 24]

* சாதிக் கலவரங்கள் தொடர்பாக, மாவட்ட ஆட்சியர்கள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், காவல் கண்காணிப்பாளர்கள், காவல் துணைத் தலைவர்கள் மொத்தம் 30 பேருக்கு 18-1-2002 அன்று சென்னையிலுள்ள காவல் பயிற்சிக் கல்லூரியில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

* ஒருவரது அறிவை விரிவுபடுத்துவதற்கும், திறமைகளை மேம்படுத்துவதற்கும் அவற்றுக்கான எல்லைகளை விரிவுபடுத்துவது அவசியமாகும். வெவ்வேறு துறைகளில் பயிற்சி பெறவேண்டி ஐதராபாத்திலுள்ள சர்தார் வல்லபாய் பட்டேல் தேசிய காவல் பயிற்சிக் கழகம், புதுதில்லியிலுள்ள தேசிய குற்றவியல் மற்றும் தடய அறிவியல் நிறுவனம், தேசிய குற்றப் பதிவுருக்கள் கழகம், நுண்ணறிவுக் கழக மைய பயிற்சிப் பள்ளி, காசியாபாத்திலுள்ள மத்திய புலனாய்வுப் பிரிவு, உத்திரப்பிரதேசம் முசோரியிலுள்ள இந்தோ திபெத் எல்லைக் காவல் படை, மனேசாரிலுள்ள தேசிய பாதுகாப்புக் குழு ஆகியவற்றுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். போதை மருந்து தடுப்புச் சட்டங்களை அமல்படுத்துதல், குழந்தைகள் போதை மருந்துகளைத் தவறாக பிரயோகித்தலைத் தடுத்தல், அறிவியல் ரீதியிலான புலனாய்வில் புதிய உத்திகளைக் கையாளுதல், கணினிசார் குற்றங்கள், வெடி குண்டுகளைக் கண்டுபிடித்து செயலிழக்கச் செய்தல், பயங்கரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகள், மிக முக்கியமானோர் பாதுகாப்பு, அதிரடிப்படைப் பயிற்சி, உயிரியல், வேதியியல், அணுவியல் சார்ந்த பயங்கரவாதம், மனித உரிமைகள், குற்றவியல் நீதிமுறை ஆகியவை மேற்சொன்ன பயிற்சியில் அடங்கும்.

தமிழ்நாட்டில் பின்வரும் இனங்களுக்குரிய பயிற்சிகள் முதன் முறையாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன:

**பாலின வேறுபாடின்றி அனைவரையும் மதிக்கும் பயிற்சி**

* 2001 ஆம் ஆண்டு ஜூன் மாதம் உள் துறையின் செயல்பாடுகள் குறித்து நான் நடத்திய ஆய்வுக் கூட்டத்தின் தீர்மானத்திற்கு இணங்க காவல் துறைத் தலைமை இயக்குநர் முதல் காவலர் வரை உள்ள காவல் துறைப் பணியாளர்களுக்கு பாலின வேறுபாடின்றி அனைவரையும் மதிக்கும் பயிற்சி அளிக்கும் திட்டத்தினை ரூ.1.38 கோடி செலவில் தமிழ்நாடு காவல் துறை

தொடங்கியுள்ளது. இப்பெரிய திட்டமானது இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் முதன்முறையாக அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

* அல்லலுக்காளான பெண்களிடம் மிகவும் பொறுப்புணர்ச்சியுடன் நடந்துகொள்ளவும், அனைத்து மகளிர் காவல் நிலையங்களில் உள்ள பெண் காவலர்களுக்குப் புத்துணர்ச்சி ஏற்படுத்தவும், தலைமையிடத்து காவல் துறைத் தலைவரின் வழிகாட்டுதலில் பெண் காவல் பணியாளர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும்முகமாக குழுவுக்கு 50 பெண் காவலர்கள் என்ற வீதத்தில், ஒரு வார கால சிறப்புப் பயிற்சித் திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. 20-8-2001 அன்று முதற் குழுவுக்கான பயிற்சி தொடங்கியது. 15-3-2002 வரை 2,521 பெண் காவல் துறைப் பணியாளர்களைக் கொண்ட 26 குழுக்களுக்கு, பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. தற்சமயம், தமிழ்நாடு சிறப்புக் காவல் படை, ஆயுதப் படையிலுள்ளவர்களுக்கு விழிப்புணர்வுப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. 42 வார காலத்திற்குள் தமிழ்நாடு காவல் துறையிலுள்ள அனைத்துப் பெண் காவல் துறைப் பணியாளர்களுக்கும் இப்பயிற்சி அளிக்கப்பட்டுவிடும். பேரும் புகழும் பெற்ற குற்றவியலாளர்கள், பேராசிரியர்கள், மருத்துவர்கள், வழக்குரைஞர்கள், காவல் துறைப் பெண் அதிகாரிகள், அரசு சாரா அமைப்பினரைக் கொண்டு இப்பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

* 16-3-2002 வரை காவல் துறை இயக்குநர் (பயிற்சி), காவல் துறைத் தலைமை இயக்குநர், தலைமையிடத்து காவல் துறைத் தலைவர் ஆகியோர்களது ஒட்டுமொத்த மேற்பார்வை மற்றும் வழிகாட்டுதலின்பேரில் மாவட்டக் காவல் கண்காணிப்பாளர்கள், காவல் ஆணையர்கள் உள்ளிட்ட 75,000 காவல் துறைப் பணியாளர்களில் 16-3-2002 வரை 33,250 நபர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

* 7-11-2001 முதல் 11-1-2002 வரை உள்ள காலத்தில் காவல் கண்காணிப்பாளர் முதல் காவல் துறை இயக்குநர் வரை உள்ள இந்தியக் காவல் பணியைச் சேர்ந்த 200 அலுவலர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.





* காவல் துணைக் கண்காணிப்பாளர் முதல் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் வரை உள்ள பதவிகளில் உள்ளவர்களுக்கு சென்னையிலும், திருச்சிராப்பள்ளியிலும் உள்ள காவல் பயிற்சிக் கல்லூரிகளில் இத்திட்டத்தின்படி பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

**பயிற்சியாளர்களுக்குப் பயிற்சி அளித்தல்**

* பயிற்சியாளர்களுக்குப் பயிற்சி எனும் திட்டத்தின் மூலம் பயிற்சி நிலைப் பணியாளர்களின் திறமைகளை வளர்ப்பதற்கான முயற்சிகள் முதன்முறையாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இங்கிலாந்தில் பயிற்சி பெற்ற புது தில்லியிலுள்ள காவலர்கள் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிக் கழகத்தைச் சேர்ந்த மூன்று பயிற்சியாளர்களால் காவல் பயிற்சிக் கல்லூரியில் 20 பயிற்சியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. 2 காவல் துணைக் கண்காணிப்பாளர்களுக்கும், காவல் துணைத் தலைவர் (பயிற்சி) காவல் துறைத் தலைவர் (பயிற்சி) ஆகியோர்களுக்கும் தேசிய காவலர் பயிற்சிக் கழகத்தைச் சேர்ந்தவர்களால் பயிற்சி அளிக்கப்பட்டது. ஆந்திரப் பிரதேச காவலர் பயிற்சிக் கழகத்தில் ஆய்வாளர் ஒருவருக்கும் பயிற்சி அளிக்கப்பட்டது. பொதுமக்களிடம் பேசுதல், ஆதாரங்களைத் திரட்டுதல், பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல், பயிற்சி வடிவமைப்பு, நிகழ்ச்சிகளைத் தொகுத்தல், பயிற்சி அளிக்கும் பணியில் பல்வேறு பயிற்சி முறைகள், பல்வேறு ஒலி-ஒளிச் சாதனங்களை உபயோகித்தல், பன்முனை ஊடக விசைப்புள்ளி அளிப்பு முறையைப் பயன்படுத்துதல், கணினிகளைப் பயன்படுத்துதல் ஆகியவற்றின் உபயோகம் குறித்து பயிற்சியாளர்களுக்குப் போதுமான பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

* நாடகங்கள், செயல்முறைகள், வழக்கு ஆய்வு, தெளிவாக எடுத்துரைக்கும் திறன், குழு விவாதங்கள், சிறுகுழுப் (சிண்டிகேட்) பணி, புலங்களைப் பார்வையிடுதல், குழுப் பணிகள், தனி நபர் பணிகள், தனி நபர் செய்முறை வகுப்புகள், படக் காட்சிகள் மூலம் பயிற்சி ஆகியவைகளைக் கொண்ட ஒரு பொருளை மையப்படுத்தி விரிவுரையாற்றும் பாணி, போதிக்கும் திறன் ஆகியவை கடந்த 8-9 மாதங்களில் பயிற்சியாளர்களுக்கு விளக்கப்பட்டு அவர்கள் மூலம்

அவர்களிடம் கற்போருக்கு மாற்றும் மைய அணுகுமுறை பின்பற்றப்படுகிறது.

*** பணியமர்த்தலும், ஊக்கத் தொகைகளும்**

உதவி ஆய்வாளர், ஆய்வாளர், காவல் துணைக் கண்காணிப்பாளர் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் பதவிகளில் ஏற்படும் காலியிடங்களை நல்ல ஆசிரியரைக் கொண்டு நிரப்புவதற்கு புதிய வழிமுறை கடைப்பிடிக்கப்படுகிறது. சட்ட வகுப்புகளைக் கையாளுவதற்கு ஏதுவாக இரண்டு உதவி குற்ற வழக்கு நடத்துநர் பதவிகள் ஏற்படுத்தப்பட உள்ளன காவல் பயிற்சிக் கல்லூரி, காவலர் பயிற்சிப் பள்ளி ஆகியவற்றில் பணியாற்ற சிறந்த அலுவலர்களைக் கவரும் பொருட்டு பயிற்சி அலுவலர்களுக்கு இதுவரை தரப்பட்டுவரும் ஊக்கத் தொகை அடிப்படை ஊதியத்தில் 10 விழுக்காடு என்பதிலிருந்து 15 விழுக்காடு என உயர்த்தப்பட உள்ளது.

*** விரிவுரையாளர்களைக் கண்டறிதல்**

இதுநாள் வரை துறைப் பயிற்சியாளர்களால் மட்டுமே நடத்தப்பட்டு வந்த பயிற்சி சென்னையிலும் மாவட்டத் தலைநகர்களிலும் உள்ள இந்திய தொழில்நுட்பக் கழகம், அண்ணா பல்கலைக் கழகம், சென்னை தொழில் நுட்பக் கழகம், சென்னைப் பல்கலைக்கழகம், வளர்ச்சி மற்றும் சிறப்பு தன்மைக்கான இந்தியன் வங்கியின் மேலாண்மைக் கழகம், அண்ணா மேலாண்மை நிறுவனம், பிற உயர் நிலை நிறுவனங்கள், மென்பொருள் நிறுவனங்கள், வழக்கறிஞர்கள் மற்றும் நீதிபதிகள், மருத்துவர்கள் மனநலவியலாளர்கள், சமூகவியலாளர்கள், மனநோய் வல்லுநர்கள் சமுதாய அமைப்புகள், அரசு சாரா அமைப்புகள் ஆகியவற்றைச் சேர்ந்த திறனமிகு விரிவுரையாளர்கள் பல்வேறு தலைப்புகளில் பயிற்சியளிப்பதற்கென கண்டறியப்பட்டுள்ளனர். எனவே, பயிற்சி அளிக்கும் முயற்சிகளில் இம்முறை முன்னேற்றமானதொன்றாகும்.

*** விரிவுரையாளர்களுக்கான தொகுப்பூதியம்**

தற்சமயம் விரிவுரையாளர்களுக்கு அளிக்கப்படும் தொகுப்பூதியமான ரூ. 150/-ஆனது ரூ. 350/-ஆக உயர்த்தப்பட உள்ளது.



*** குறுகிய காலப் பயிற்சி**

உதவி ஆய்வாளர் மற்றும் அதற்கும்மேல் நிலையில் உள்ள பதவிகளில் உள்ளவர்களுக்கான பல்வேறு தலைப்புகளைக் கொண்ட இரண்டு நாள் குறுகிய காலப் பயிற்சிகள் பல தொடங்கப்பட்டுள்ளன.

உதவி ஆய்வாளர் முதல் காவல் துறை இயக்குநர்கள் வரையிலான அலுவலர்கள் சிறந்த தொழில் முறையாளர்களாவதற்காக அடிக்கடி வருகை தரும் காவல் பயிற்சிக் கல்லூரியானது கலந்துரையாடலுக்கான ஒரு துடிப்பான நிறுவனமாக மாறி உள்ளது.

*** பணி செய்து கொண்டே பயிற்சி பெறுதல்**

பொதுமக்களின் எதிர்பார்ப்புகளைச் சமாளிக்கும் பொருட்டு களப் பணியாற்றும் காவல் அலுவலர்களுக்கு பணி செய்யும்போதே பயிற்சியளிக்கும் திட்டமொன்று தமிழ்நாட்டில் முதல்முறையாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. காவல் பயிற்சிக் கல்லூரி இதற்கான 20 தலைப்புகளில் உள்ள பயிற்சிகளை அடையாளம் கண்டுள்ளது. மாவட்ட காவல் கண்காணிப்பாளர்களும், மாநகர ஆணையாளர்களும் தம்முடைய தலைமையிடங்களில் மாதம் ஒருமுறை இப்பயிற்சிக்கு ஏற்பாடு செய்வார்கள்.

*** கணினிசார் குற்றங்கள்**

பெருகிவரும் கணினிசார் குற்றங்களைக் கருத்தில் கொண்டு இத்தகைய குற்றங்கள் குறித்த மூன்று வார காலப் பயிற்சி ஒன்று 20-1-2002 அன்று தொடங்கப்பட்டுள்ளது. இரண்டாண்டு காலத்தில் 500 காவல் கண்காணிப்பாளர்களுக்கு இப்பயிற்சி அளிக்கப்படும். காவல் கண்காணிப்பாளர், கூடுதல் காவல் துறை இயக்குநர் ஆகிய இந்தியக் காவல் பணியைச் சேர்ந்த 150 அலுவலர்களுக்கும் ஒருவார காலமுள்ள இப்பயிற்சி அளிக்கப்படுகிறது. கணினிசார் குற்றங்களுக்கான பயிற்சி காசியாபாத்திலுள்ள மைய குற்றப் புலனாய்வுத் துறை மற்றும் ஐதராபாத்திலுள்ள தேசிய காவலர் கழகம் ஆகியவற்றிற்கு அடுத்தபடியாக தமிழ்நாடு காவல் பயிற்சிக் கல்லூரியில் மட்டுமே அளிக்கப்படுகிறது.

*** போக்குவரத்துத் திட்ட மேலாண்மை**

காவல் துணைக் கண்காணிப்பாளர்கள். ஆய்வாளர்கள். உதவி ஆய்வாளர்கள் ஆகியோருக்கு போக்குவரத்துத் திட்ட மேலாண்மை மற்றும் செயலாக்கம் குறித்த பயிற்சி ஒன்று முதன்முறையாக நடத்தபபட்டு

வருகிறது. 903 அலுவலர்களில் 120 பேருக்கு இதுவரை இப்பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

* **கற்றதைப் பகிர்தல்**

பயிற்சிக்கென அனுப்பப்படும் 2 அல்லது 3 அலுவலர்களைத் தவிர பெருவாரியான பிற அலுவலர்களும் தங்களை ஆயத்தப்படுத்திக் கொள்ளும்பொருட்டு 'கற்றதைப் பகிர்ந்து கொள்ளும்' பல நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. வேதியியல், உயிரியல், அணுவியல் பயங்கரவாதம் குறித்து புது தில்லியில் பயிற்சி பெற்ற மூத்த காவல் துறை அலுவலர்களுடன் அவர்கள் கற்றதை பிற அலுவலர்களுடன் பகிர்ந்து கொள்ளும் நிகழ்ச்சி 8-1-2002 அன்று முதன்முறையாக சென்னை காவல் பயிற்சிக் கல்லூரியில் நடத்தப்பட்டது.

* **தொழில்நுட்பப் பிரிவு உதவி ஆய்வாளர்களுக்கான பயிற்சி**

தொழில் நுட்பப் பிரிவைச் சேர்ந்த 151 உதவி ஆய்வாளர்களுக்கு, சட்டம், வீட்டிற்கு வெளியே நடந்துகொள்ளும் முறை, மனித உரிமைகள், கணினித் திறமைகள், பொதுமக்களிடம் பேசும் திறமைகள், பன்முனை ஊடக மூலமாகத் தெளிந்துரைத்தல் குறித்து மூன்று மாத கால பயிற்சி முதன்முறையாக நடத்தப்பட்டது.

* **பயிற்சிக்கான புத்தகங்களைத் தரப்படுத்துதல்**

பயிற்சிக்கான தரம் வாய்ந்த புத்தகங்கள், புலனாய்வு வழிகாட்டி (ஆங்கிலம்), பெண்களுக்கெதிரான குற்றங்களில் புலனாய்வு வழிகாட்டி (தமிழ் மற்றும் ஆங்கிலம்), பாலின வேறுபாடின்றி அனைவரையும் மதித்தல் (தமிழ்-பெண் காவலர்களுக்காக), பெண்கள் உதவிக்கரம் (தமிழ் மற்றும் ஆங்கிலம்), பாலின வேறுபாடின்றி அனைவரையும் மதித்தல் (ஆங்கிலம்-மூத்த அலுவலர்களுக்காக) ஆகியவற்றை மூத்த காவல் துறை அலுவலர்களின் உதவியோடு காவல் பயிற்சிக் கல்லூரி தயாரித்துள்ளது. பிறபொருள்களின் மீதான பயிற்சிப் புத்தகங்களும் தயாரிப்பில் உள்ளன.

* **கணினி அறிவு**

அண்ணா பல்கலைக்கழக வழிகாட்டுதலின்படி 224 பொறியியல் கல்லூரிகளில் தமிழ்நாடு முழுவதிலும் உள்ள காவல் துறைப் பணியாளர்களுக்கு கணினி அறிவு கற்றுத் தரப்படும்.



* **வாகனம் ஓட்டும் திறமைகள்**

புதிதாக நியமிக்கப்பட்ட 3,525 காவலர்களுக்கும் 14 காவலர் பயிற்சிப் பள்ளிகளில் வாகனம் ஓட்டும் திறமைகளில் பயிற்சி அளிக்கப்படும்.

* **நூலக அட்டவணையை கணினிப்படுத்துதல்**

நூலகத்திலுள்ள 17,000 புத்தகங்கள் அண்மையில் கணினிப்படுத்தப்பட்டுள்ளன. காவல்துறை மீதான நடப்புத் தலைப்புகளில் 621 புத்தகங்கள் வாங்கப்பட்டுள்ளன.

* **பயிற்சி நாள்காட்டி**

பயிற்சி நாள்காட்டி ஒன்று முதன் முறையாகத் தயாரிக்கப்பட்டுள்ளது.

* **மின்வழிப் பரிபாலனம்**

காவல் பயிற்சிக் கல்லூரியில் 24 மணி நேரமும் இணையத்தின் இணைப்பு கிடைக்குமாறு செய்யப்பட்டுள்ளது. காவல் துறைக்குள் உள்ளூர் இணையம் (LAN) வாயிலாக வீடியோ மாநாடு வசதியும், எதிர்காலத்தில் கம்பியில்லா உள்ளூர் இணையம் (WAN) மூலம் காவல் நிலையங்களையும், பிற பயிற்சி நிறுவனங்களையும் இணைப்பு ஏற்படுத்திக் கொள்ளவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாண்டு ஏப்ரல் மாத இறுதியில் வீடியோ மாநாடு வசதியின் மூலம் ஐதராபாத்திலுள்ள தேசிய காவலர் பயிற்சிக் கழகத்துடன் காவலர் பயிற்சி இணையம் (POTNET) வழியாகத் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளும் முதல் நிறுவனம் இந்தியாவில் தமிழ்நாடு காவல் பயிற்சிக் கல்லூரியாகத்தான் இருக்கும். ஆரம்பகட்ட சோதனைமுறைக்கான பூர்வாங்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன. சிறந்த பயிற்சிக்கென பெண்டியம்-4 பொருத்திய 72 கணிப்பொறிகளும், 15 எல்.சி.டி. படக் கருவிகளும், 3 கையில் எடுத்துச் செல்லும் கணிப்பொறிகளும், 2 வெப் கேமராக்களும், 2 டிஜிட்டல் கேமராக்களும் வாங்கப்பட்டுள்ளன. சிறந்த ஆயுதப் பயிற்சிக்கென கணினிகளால் இயக்கப்படும் மூன்று பயிற்சி உபகரணங்கள் துப்பாக்கி சுடும் திறமைகளை உயர்த்துவதற்கென வாங்கப்பட்டுள்ளன.

* **பயிற்சியாளர்களை மதிப்பிடுதல்**

நடைமுறையிலுள்ள எழுத்துத் தேர்வுகள் மூலம் மதிப்பீடு செய்யும் வழக்கமான முறையானது பங்குகொள்ளும் மற்றும் தொடர்ச்சியாகக்

கண்காணித்து மதிப்பீடு செய்யும் முறைக்கு மாற்றப்பட்டுள்ளது. பயிற்சியின் நோக்கங்கள், பொருளடக்கம், பயிற்சி முறைகள் ஆகியவையும் மதிப்பீடு செய்யப்பட்டு வருகின்றன. கற்போர், உடன் பணிபுரிவோர், பயிற்சி அளிப்பவர், பயிற்சி நாட்குறிப்புகள், பயிற்சிப் பதிவுகள், செயல்முறை மற்றும் முன்னேற்ற அறிக்கை ஆகியவற்றிலிருந்து மதிப்பீடு செய்யப்படுகிறது. நாள்தோறும் பயிற்சி நடைபெறும்போதும் பயிற்சி முடிந்தவுடனும் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் மதிப்பீடு செய்யப்படுகிறது.

**உள் கட்டமைப்பு**

15 காவல் துணைக் கண்காணிப்பாளர்களுக்கென புதுப்பிக்கப்பட்ட மேம்பட்ட நவீன மாநாடு நடத்தும் இடவசதிகொண்ட அறையும் வகுப்பறையும் கட்டப்பட்டுள்ளன. மழைக்காலங்களில் சேறும், சகதியுமாகக் காட்சியளிக்கும் உடற்பயிற்சி மைதானம் ஒரு அடி உயர்த்தப்படவுள்ளது. கலையரங்கம் புதுமையாக்கப்படுகிறது. காவல் பயிற்சிக் கல்லூரியிலுள்ள அனைத்து மின் கம்பிகளும் புதிதாக மாற்றப்படவுள்ளன.

**முடிவுரை**

2001 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களிலிருந்து காவலர் பயிற்சியில் மாபெரும் திருப்பம் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக காவல் துறையில் முன்னணியிலுள்ள காவலர்கள்மீதும், படையின் விளிம்பிலுள்ள உதவி ஆய்வாளர்கள், ஆய்வாளர்கள், காவல் துணைக் கண்காணிப்பாளர்கள் ஆகியோர்மீதும் மிகுந்த கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. சிறந்த தன்மைகளுடன், தகுதிவாய்ந்த காவல்படை உருவாவதற்கும் பயிற்சி இன்றியமையாத ஒன்று என்பதாலும் பயிற்சிக்கு தொடர்ந்து முக்கியத்துவம் அளிக்கப்படும். இது முடிவில் நமது நல்வாழ்வுக்கு சிறந்த பாதுகாப்பினை நல்கும்.

## 10. விருதுகளும் வெகுமதிகளும்

2001 ஆம் ஆண்டில் 2 காவல் கண்காணிப்பாளர்கள், 4 ஆய்வாளர்கள், 1 உதவி ஆய்வாளர், 1 முதல்நிலைக் காவலர், 1 நாயக், 2 இரண்டாம் நிலைக் காவலர்களுக்கு வீரச் செயல்களுக்கான தமிழ்நாடு முதலமைச்சரின் காவலர் பதக்கங்கள் வழங்கப்பட்டன.

***2001 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு முதலமைச்சரின் மெச்சத் தகுந்த பணிக்கான காவலர் பதக்கம்*** - 2001 ஆம் ஆண்டில், இரண்டாம் நிலைக் காவலர் முதல் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் வரை உள்ள



96 நபர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சரின் மெச்சத் தகுந்த பணிக்கான காவலர் பதக்கம் வழங்கப்பட்டுள்ளது.

***2001 ஆம் ஆண்டு சுதந்திர தினத்தன்று வழங்கப்பட்ட குடியரசுத் தலைவர் பதக்கங்கள்.***

**1. பாராட்டத்தக்க பணிகளுக்கான பதக்கம்**

கூடுதல் காவல் துறை இயக்குநர் ஒருவருக்கு 2001 ஆம் ஆண்டு சுதந்திர தினத்தன்று இப்பதக்கம் வழங்கப்பட்டது.

**2. மெச்சத் தகுந்த பணிகளுக்கான பதக்கம்**

**10 காவல் துறைப் பணியாளர்களுக்கு 15-8-2001 அன்று இப்பதக்கம் வழங்கப்பட்டது.**

***2001 ஆம் ஆண்டு குடியரசு நாளன்று வழங்கப்பட்ட குடியரசுத் தலைவர் பதக்கங்கள்.***

**1. பாரட்டத்தக்க பணிகளுக்கான பதக்கம்**

காவல் துறைத் தலைவர் ஒருவருக்கு 2001 ஆம் ஆண்டு குடியரசு நாளன்று இப்பதக்கம் வழங்கப்பட்டது.

**2. மெச்சத் தகுந்த பணிகளுக்கான பதக்கம்**

17 காவல் துறைப் பணியாளர்களுக்கு இப்பதக்கம் வழங்கப்பட்டுள்ளது.

***2001 ஆம் ஆண்டு முதலமைச்சரின் ஊர்க்காவல்படை பதக்கம் (அண்ணா பதக்கம்)*** - மெச்சத் தகுந்த பணிகளுக்காக 3 கம்பெனி கமாண்டர்களுக்கும், ஓர் உதவி பிளட்டூன் கமாண்டருக்கும், ஓர் உதவிப் பிரிவுத் தலைவருக்கும் இப்பதக்கம் வழங்கப்பட்டுள்ளது.

***2001 ஆம் ஆண்டு குடியரசு நாளன்று வழங்கப்பட்ட உத்தமர் காந்தி காவலர் பதக்கம்***-இப்பதக்கம் 2001 ஆம் ஆண்டில் நான்கு காவல் துறைப் பணியாளர்களுக்கும், 2002 ஆம் ஆண்டில் ஐந்து நபர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

***(2002 ஆம் ஆண்டிலிருந்து இப்பதக்கத்தின் பெயர் மகாத்மா காந்தி பதக்கம் என மாற்றப்பட்டுள்ளது).***

[2002 ஏப்ரல் 24

***2001 மற்றும் 2002 ஆண்டுகளில் பொங்கல் திருநாளன்று வழங்கப்பட்ட தமிழ்நாடு முதலமைச்சரின் காவலர் பதக்கம்*** - தமிழ்நாடு முதலமைச்சரின் காவலர் பதக்கங்கள் பின்வருமாறு வழங்கப்பட்டுள்ளன:

| பதவி | 2001 | 2002 |
|---|---|---|
| தலைமைக் காவலர் | 766 | 742 |
| பெண் தலைமைக் காவலர் | 106 | 53 |
| முதல் நிலை, இரண்டாம் நிலைக் காவலர் | 628 | 655 |

***மெச்சத் தகுந்த பணிகளுக்கான ஊர்க்காவலர், குடிமுறைப் பாதுகாப்புப் பதக்கம்*** - கோட்டக் கமாண்டர் ஒருவருக்கும், பிளட்டூன் கமாண்டர்கள் இருவருக்கும் குடியரசு நாளன்று இப்பதக்கம் வழங்கப்பட்டது.

கம்பெனி கமாண்டர் ஒருவருக்கு மெச்சத் தகுந்த பணிகளுக்கான ஊர்க்காவலர் குடிமுறைப் பாதுகாப்புப் பதக்கம் 2001 ஆம் ஆண்டு சுதந்திர தினத்தன்று வழங்கப்பட்டது.

கோட்டக் கமாண்டர் ஒருவருக்கு மெச்சத் தகுந்த பணிகளுக்கான ஊர்க்காவலர் குடிமுறைப் பாதுகாப்புப் பதக்கம் 2002 ஆம் ஆண்டு குடியரசு நாளன்று வழங்கப்பட்டது.

மெச்சத் தகுந்த பணிகளுக்கான குடியரசுத் தலைவரின் பதக்கம் 2002 ஆம் ஆண்டு குடியரசு நாளன்று பின்வரும் அலுவலர்களுக்கும் காவலர்களுக்கும் வழங்கபபட்டது :

1. திரு. பி.ப்பி. நெயில்வால், இ.கா.ப. காவல் துறை தலைமை இயக்குநர்.
2. திருமதி ஜி. திலகவதி, இ.கா.ப. காவல் துறைத் தலைவர்.
3. திரு. ஜே.கே. திரிபாதி, இ.கா.ப., காவல் துறைத் துணைத் தலைவர்.
4. திரு. சஞ்சீவ் குமார், இ.கா.ப., காவல் துறைத் துணை தலைவர்.
5. திருமதி ஸ்ரீலஷ்மி பிரசாத், இ.கா.ப., காவல் துறைத் துணைத் தலைவர்.
6. திரு. அசுதோஷ் சுக்லா, இ.கா.ப., காவல் துறைத் துணைத் தலைவர்.
7. திரு. என். தமிழ்ச் செல்வன், இ.கா.ப., காவல் துறைத் துணைத் தலைவர்.



2002 ஏப்ரல் 24]

8. திரு. டி. இராஜேந்திரன், காவல் கண்காணிப்பாளர்.
9. திரு. கே.ஆர். உத்தமன், காவல் துணை ஆணையர்.
10. திரு. எம். இராஜு, கூடுதல் காவல் கண்காணிப்பாளர்.
11. திரு. கே. சீனிவாசகம், காவல் துணைக் கண்காணிப்பாளர்.
12. திரு. டி. ஜெயநந்தன், உதவி ஆய்வாளர்.
13. திரு. எல். தனசேகரன், தலைமைக் காவலர்.

## 11. வீட்டு வசதியும் கட்டடங்களும்

1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் கீழ் 27-9-1980 ஆம் நாளிட்ட உள் துறையின் அரசாணை நிலை எண். 2500இன் படி காவல் துறைப் பணியாளர்களுக்கு வீட்டுவசதிகளுக்கான திட்டங்களை தயாரித்து செயல்படுத்தும் பொருட்டு காவலர் வீட்டுவசதிக் கழகம் தோற்றுவிக்கப்பட்டது. ரூ. 100 இலட்சம் முதலீட்டுடன் இக்கழகம் 13-4-1981 முதல் செயல்படத் தொடங்கியது. இக்கழகம் 31-3-1989 அன்று மூடப்பட்டு 18-11-1991 அன்று மீண்டும் திறக்கப்பட்டது.

### தற்போதைய நடவடிக்கைகள்

பின்வரும் கட்டுமானப் பணிகளை இக்கழகம் மேற்கொண்டுள்ளது:

- காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை, சிறைத் துறைப் பணியாளர்களுக்கான வாடகைக் குடியிருப்புகள்.
- காவல் துறைப் பணியாளர்களுக்கென 'சொந்த வீடு பெறுங்கள்' திட்டத்தின்கீழ் தனி வீடுகள் மற்றும் அடுக்குமாடிக் குடியிருப்புகள்.
- சிறப்பு திட்டங்கள் (1) தலைமையிடம் மற்றும் மண்டலங்களுக்கான அலுவலகக் கட்டடங்கள், கடலோரக் காவல்படையின் சோதனைச் சாவடிகளை மேம்படுத்துதல் (2) வீராபுரத்தில் துப்பாக்கி சுடும் பயிற்சிக் களம் (3) வண்டலூருக்கருகில் உள்ள ஊனமாஞ்சேரியில் காவலர் பயிற்சிக் கழகத்திற்கான கட்டடம் (4) காவலர் பயிற்சிப் பள்ளிகளை வலுப்படுத்துதல் மற்றும் அரசினால் அவ்வப்போது அளிக்கப்படும் இதர திட்டங்கள்.

தமிழ்நாடு விற்பனைக் கழகத்திற்கு மாநிலமெங்கும் அலுவலகத்துடன் கூடிய கிடங்குகள்.

தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகம், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், பொதுப் பணித் துறை ஆகியவற்றால் கட்டப்பட்ட அனைத்து காவல் துறைக் கட்டடங்களையும் உள்ளிட்ட காவலர் குடியிருப்புகளுக்கு சிறப்பு பழுதுநீக்கும் பணி.

31 காவல் நிலையக் கட்டடங்களை மேம்படுத்துதல்.

ஏற்பளிக்கப்பட்ட குடியிருப்புகள் மற்றும் கட்டி முடிக்கப்பட்டவை பற்றிய விவரம்.

| ஆண்டு | கட்டடம் | ஏற்பளிக்கப் பட்டவை | கட்டி முடிக்கப் பட்டவை | கட்டி முடிக்கப் பட்டு பெற்றும் கொள்ளப் பட்டவை | நடந்து கொண்டி ருக்கும் கட்டுமானப் பணிகள் |
|---|---|---|---|---|---|
| 1997-98 | 6 | 2500 | 2500 | 2500 | - |
| 1998-99 | 7 | 2500 | 2500 | 2500 | - |
| 1999-2000 | 8 | 2500 | 2500 | 2410 | 90 |
| 2000-2001 | 9 | 3000 | 3000 | 1337 | 1663 |

2001-2002 ஆம் ஆண்டில் பத்தாவது கட்டமாக ரூ. 115.20 கோடி செலவில் 3000 குடியிருப்புகள் கட்டுவதற்கு அரசு ஏற்பளித்துள்ளது.

1-1-2002 அன்றுள்ள நிலவரப்படி உள்ள காவல் களப்பணியாளர்களின் மொத்த எண்ணிக்கை 94,271 ஆகும். இதில் 35,426 நபர்களுக்குக் காவலர் குடியிருப்புகள் வழங்கப்பட்டுள்ளன. 31 விழுக்காடு என உள்ள தேசிய சராசரியுடன் ஒப்பிடும்போது தமிழ்நாடு காவலர்களுக்கு இதுவரை அளிக்கப்பட்ட வீட்டுவசதி 38 விழுக்காடு ஆக உள்ளது திருப்தி அளிப்பதாக உள்ளது.

**சொந்த விடு பெறுங்கள் திட்டம்**

இத்திட்டத்தின்கீழ் கட்டப்படும் வீடுகள் காவல் துறைப் பணியாளர்களுக்கு உடனடித் தொகைக்கு விற்கப்படுகின்றன. வீட்டுவசதிக் கடனுக்காக தமிழ்நாடு காவல் துறைக்கு ஆண்டுதோறும் ஒதுக்கப்படும்



ரூ. 2 கோடியை இத்திட்டத்திற்கான முன்பணமாக தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகம் உபயோகித்துக் கொள்கிறது. ரூ. 597 இலட்சப செலவில் கட்டப்பட்ட 175 வீடுகளில், 138 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு 1999-2000 ஆம் ஆண்டில் ஒதுக்கீடுதாரர்களிடம் ஒப்படைக்கப்பட்டு விட்டன. ஆசூர் திட்டத்தில் கட்டப்பட்ட 37 வீடுகள் 2001 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் விண்ணப்பதாரர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன.

**காவலர் கல்விக் கழகம்**

ரூ. 36.23 கோடி செலவிலான காவலர் கல்விக் கழகத் திட்டத்தை சுழற்சாவி அடிப்படையில் செயல்படுத்த அரசு ஆணையிட்டுள்ளது. வண்டலூருக்கு அருகில் உள்ள ஊனமாஞ்சேரியில் 132.92 ஏககர் பரப்பளவில் காவலர் கல்விக் கழகம் நிறுவப்பட உள்ளது. இதற்கென ரூ. 51 கோடிக்கு திருத்திய மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. 2001-2003 ஆம் ஆண்டுகளில் காவல் துறையை நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ் மைய அரசு இதற்கென ரூ. 19 கோடிக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

**கடலோரப் பாதுகாப்புப் படைக்கான கட்டடம்**

கடலோரக் காவல் படைக்கென சென்னையில் தலைமை அலுவலகக் கட்டடமும், தூத்துக்குடி, நாகப்பட்டினம், வேதாரண்யம், பட்டுக்கோட்டை, இராமநாதபுரம் ஆகிய இடங்களில் மண்டல அலுவலகமும், 60 வெவ்வேறு இடங்களில் சோதனைச் சாவடிகளும் ரூ. 325 இலட்சம் செலவில் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. சென்னையில் நிர்வாக அலுவலகக் கட்டடமும், ஐந்து மண்டலங்களுக்கான அலுவலகக் கட்டடங்களும், 57 சோதனைச் சாவடிகளுக்கான கட்டடங்களும் கட்டி முடிக்கப்பட்டு கடலோரப் பாதுகாப்புப் படையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

**ஏழு காவலர் பயிற்சிப் பள்ளிகளை மேம்படுத்துதல்**

ரூ. 8 கோடி செலவில் மதுரை, திருநெல்வேலி, விழுப்புரம், திருச்சிராப்பள்ளி, வேலூர், சேலம், கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலுள்ள காவலர் பயிற்சிப் பள்ளிக் கட்டடங்களை மேம்படுத்தும் பணியும், இவற்றுக்கான கூடுதல் கட்டடங்கள் கட்டும் பணியும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவற்றில் ஏழு காவலர் பயிற்சி பள்ளிகளை மேம்படுத்தும் பணி முடிக்கப்பட்டு விட்டது. இதில் மிச்சப்படுத்தப்பட்ட பணத்தைக் கொண்டு இப்பள்ளிகளில் முதல்வர் அறை, கணினி அறை, வகுப்பு அறை ஆகிய கட்டுமானப் பணிகள் அரசு பணித்துள்ளவாறு ...ள்ளன.

[2002 ஏப்ரல் 24

## சிறப்பு பழுது பார்ப்புப் பணிகள்

சிறப்பு பழுது பார்க்கும் பணியை 1-4-1998க்கு முன்பு வரை பொதுப் பணித் துறை செய்து வந்தது. 1-4-1998-லிருந்து இப்பணி தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகத்திடம் தரப்பட்டுள்ளது. 1998-99லிருந்து 2001-2002 வரை உள்ள காலத்திற்கு ஆண்டுதோறும் ரூ. 5 கோடி இப்பணிக்காக அளிக்கப்படுகிறது.

மேற்கொள்ளப்பட்ட பழுதுபார்க்கும் பணிகள் எண்ணிக்கை பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1998-99 | 8331 | பழுதுபார்க்கும் பணிகள் |
| 1999-2000 | 5267 | பழுதுபார்க்கும் பணிகள் |
| 2000-2001 | 6042 | பழுதுபார்க்கும் பணிகள் |

**தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகத்திற்கென தனியாகக் கட்டடம் கட்டுதல்** - சென்னை பூந்தமல்லி நெடுஞ்சாலையில் கீழ்பாக்கம் காவல் நிலையத்திற்கு அருகில் தற்போது இக்கழகம் குத்தகைக்கு எடுத்துள்ள நான்குமனை + 1902 சதுர அடி உள்ள மனையில் இதற்கான சொந்தக் கட்டடம் ரூ. 1.50 கோடி மதிப்பீட்டில் இக்கழகத்தின் சொந்தப் பணத்தில் கட்டப்பட்டு வருகிறது. இக்கட்டடம் 2002 ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்குள் கட்டி முடிக்கப்படும்.

## 12. பொதுமக்கள் ஒத்துழைப்பு

பொதுமக்களின் ஒத்துழைப்பை முறையாகப் பெறும் பொருட்டும், மக்களின் நல்லெண்ணத்தை உபயோகப்படுத்திக் கொள்ளவும், பொதுமக்கள் - காவலர் நல்லுறவினை வளர்க்கவும், 'காவலர் நண்பன்' என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவ்வமைப்பு இராமநாதபுரம் மாவட்டத்தில் முதலில் ஆரம்பிக்கப்பட்டு பின்னர் பிற மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. குடிமை அல்லது குற்றவியல் வழக்குகளில் ஈடுபடாத எவரும் காவலரின் நண்பராகலாம். இவ்வமைப்பு காவல் துறையின் பெருமையை அதிகப்படுத்துவதுடன், தொடர்புகளுக்கான வழிகளையும் திறந்துவிடும்; நல்லெண்ண இருப்புகளையும் ஏற்படுத்தும் இவ்வமைப்பு, குறிப்பாக அமாவாசையன்றும், அதற்கு முன்னும் பின்னும் உள்ள இரவு நேரங்களிலும் குற்றங்கள் நடக்க வாய்ப்புள்ள பகுதிகளில் இரவு ரோந்துப் பணிகளில் ஈடுபடும் உள்ளூர் காவல் துறையினருக்கு உதவி செய்கிறது.



2002 ஏப்ரல் 24]

நெரிசல் நேரங்களில் மக்கள் பெருமளவு கூடும் இடங்களில் போக்குவரத்தைக் கட்டுப்படுத்தவும், முக்கியமான விழாக் காலங்களில் கூட்டத்தைக் கட்டுப்படுத்தவும், இவ்வமைப்பு உதவி வருகிறது. '**சமுதாயப் பாதுகாவல்**' எனப்படும் இத்திட்டத்தைப் பற்றிய விவரங்கள் இணைய தளத்தில் கிடைக்கின்றன. குடிசைப் பகுதிகளில் வாழ்வோரின் ஆரோக்கியம் மற்றும் பிற நலன்களை மேம்படுத்தும் பொருட்டு கோயம்புத்தூர் மாநகரில் உள்ள குடிசைப் பகுதிகளை காவல் துறை தத்தெடுத்துள்ளது. காவல் துறையின் ஈடுபாட்டோடு, ஏழை மக்களும், குடிசையில் வாழ்வோரும் பயன்பெறும் வகையில் இலவச மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன.

## 13. விளையாட்டுகளும் விளையாட்டுப் போட்டிகளும்

இந்தியாவிலுள்ள காவல்படையினரின் தொழில் முறை விளையாட்டுத் திறனை மேம்படுத்தும் பொருட்டு அனைத்திந்திய காவலர் விளையாட்டுப் போட்டிகள் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகின்றன. நாடு முழுவதிலுமுள்ள காவல்படையினரின் தொழில் முறை விளையாட்டுத் திறனை வளர்ப்பதிலும், ஆரோக்கியமான போட்டிகளைத் தூண்டுவதிலும், காவலர்களிடையே தோழமை உணர்வை ஏற்படுத்துவதிலும் இத்தகைய விளையாட்டுப் போட்டிகள் உபயோககரமாக விளங்கி வருகின்றன.

18-12-2001 முதல் 22-12-2001 வரை டேராடூனில் நடைபெற்ற அனைத்திந்திய காவலர் விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாடு அதிரடிப்படை மற்றும் அதிரடிப்படைப் பள்ளியின் பணியாளர்கள், துப்பாக்கி சுடும் போட்டியில் ஒரு தங்கப் பதக்கம் வென்றுள்ளனர்.

2001 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மலேசியாவில் நடந்த சிறந்த தடகள வீரர்களுக்கான திறந்த போட்டியில் தமிழ்நாடு அதிரடிப்படையைச் சேர்ந்த உதவி ஆய்வாளர் திரு. எம். ஜோசப் சாம், மும்முறை நீளம் தாண்டும் போட்டியில் இரண்டாம் பரிசினை வென்று தமிழ்நாடு அதிரடிப்படைக்கு புகழ் சேர்த்துள்ளார்.

27-6-2001 முதல் 29-6-2001 வரை சென்னையில் தமிழ்நாடு மாநில காவலர் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டன. குற்றப்பிரிவு, குற்றப் புலனாய்வுக் கூடுதல் காவல் துறை இயக்குநர் இப்போட்டிகளின் அமைப்பாளராவார்.

[2002 ஏப்ரல் 24

தமிழ்நாடு அதிரடிப்படை, தமிழ்நாடு அதிரடிப்படை பள்ளியின் பணியாளர்கள் கூட்டாக 11 தங்கம், 14 வெள்ளி, 8 வெண்கலப் பதக்கங்களை வென்றதோடு, துப்பாக்கி சுடுதல், புகைப்படம் எடுத்தல், நாசவேலைத் தடுப்புச் சோதனை, தடகளம், நாய்ப்படை ஆகிய போட்டிகளில் ஒட்டுமொத்த இரண்டாம் நிலைக்கான இடத்தினையும் வென்றுள்ளனர்.

சென்னையில் 2001 ஆம் ஆண்டு நடந்த மாநில காவலர் விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொண்டு வெடிகுண்டுகளைக் கண்டுபிடித்து செயலிழக்கச் செய்யும பிரிவினர் ஒரு தங்கப் பதக்கத்தினை பெற்றுள்ளனர். இதே போட்டிகளில் தமிழ்நாடு அதிரடிப்படை பள்ளியைச் சேர்ந்த நாய்ப்படைப் பிரிவு வெள்ளி பதக்கம் ஒன்றினையும் ஒட்டுமொத்த இரண்டாம் நிலைக்கான இடத்தினையும் பெற்றுள்ளது.

## 14. புதிய தொடக்கங்கள்

2001-2002 ஆம் ஆண்டுக்கான கொள்கை விளக்கக் குறிப்பில், செயல்படுத்துவதற்குரிய புதிய கொள்கைகளும் புதிய திட்டங்களும் பற்றி கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன. தற்போது 21-9-2001 ஆம் நாளிட்ட உள்(காவல்-14) துறையின் அரசாணை நிலை எண் 913 இல் கோட்டத்திற்கு ஒன்று வீதம் 126 அனைத்து மகளிர் காவல் நிலையங்களை படிப்படியாக அமைப்பதற்காக பின்வருமாறு உத்தரவிடப்பட்டுள்ளது:—

| | |
|---|---|
| 2001-2002இல் | 50 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் |
| 2002-2003இல் | 40 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் |
| 2003-2004இல் | 36 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் |

இதற்கிணங்க 2001-2002 ஆம் ஆண்டில் 50 மகளிர் காவல் நிலையங்களை ஏற்படுத்த ஆணையிடப்பட்டுள்ளது.

வளர்ப்பு முறையில் பெண்களுக்கு பாரபட்சம் காட்டப்படுவது போன்றே அவர்களை நடத்தும் விதத்திலும் பாரபட்சம் காட்டப்படுகிறது என்பதனை மறுக்க இயலாது. தவறிழைப்போர் தண்டனை பற்றி அச்சமின்றி உலாவரும் அதேநேரத்தில், பெண்கள் தங்களுக்கெதிராக இழைக்கப்படும் வன்முறைகளுக்கு அஞ்சி வாழவேண்டிய நிலையே தொடர்ந்து நிலவுகிறது. ஆண் காவலர்களினால் அவமானப்படுத்தப்படும் நிலை உள்ளதால், பெண்கள் அச்சமின்றி காவல் நிலையம் சென்று புகார் செய்ய இயலாத நிலை உள்ளது. எனவே, அனைத்து மகளிர் காவல்



2002 ஏப்ரல் 24]

நிலையங்களை ஏற்படுத்தினாலும், பிற வழக்கமான காவல் நிலையங்களில்
பெண் காவல் பணியாளர்களை நியமிப்பது தவிர்க்க முடியாததாகிறது.
எனவே, மேற்சொன்ன அரசாணையிலேயே, மாநிலத்திலுள்ள 1217
வழக்கமான காவல் நிலையங்களிலும், ஒரு பெண் உதவி ஆய்வாளரையும்,
இரண்டு இரண்டாம் நிலைப் பெண் காவலர்களையும் நியமனம் செய்ய
ஆணையிடப்பட்டுள்ளது. குறைந்த அளவே பெண் காவல் பணியாளர்
உள்ளதைக் கருத்தில் கொண்டு 2001-2002 ஆம் ஆண்டில் 287 வட்டக்
காவல் நிலையங்களில் மட்டும் ஒரு பெண் உதவி ஆய்வாளரையும் இரண்டு
இரண்டாம் நிலைப் பெண் காவலர்களையும் நியமிக்க அரசு
ஆணையிட்டுள்ளது. இதற்கான பெண் காவல் பணியாளர்கள் பிற
படைகளிலிருந்து பெற்று நியமிக்கப்படுவர். கோட்டத் தலைநகருக்கு ஓர்
அனைத்து மகளிர் காவல் நிலையம், ஒவ்வொரு காவல் நிலையத்திலும்
ஒரு பெண் உதவி ஆய்வாளர், இரண்டு இரண்டாம் நிலைப் பெண்
காவலர்கள் என்ற நிலையை விரைவில் எய்திட 1638 இரண்டாம் நிலைப்
பெண் காவலர்கள் மற்றும் 1119 பெண் உதவி ஆய்வாளர் பதவிக்குத்
தகுதியான பெண்களை அடுத்த இரண்டாண்டிலிருந்து
மூன்றாண்டுகளுக்குள் தெரிந்தெடுத்து தரும் பணியை தமிழ்நாடு சீருடைப்
பணியாளர் தேர்வு வாரியம் மேற்கொள்ளும்.

அனைத்து மகளிர் காவல் நிலையங்களில் பணிபுரியும்
பணியாளர்களுக்கென திறநுட்பப்படுத்தும் திட்டம் எடுத்துக்
கொள்ளப்படும் என 2001-2002 ஆம் ஆண்டுக்கான கொள்கை விளக்கக்
குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. 100 பேர் கொண்ட குழுக்களாக பெண்
காவல் பணியாளர்கள் பிரிக்கப்பட்டு, அக்குழுக்களுக்கு சென்னையிலுள்ள
காவல் பயிற்சிக் கல்லூரியில் திறநுட்பப்படுத்துதல், மறு
திறநுட்பப்படுத்துதல் குறித்து ஒருவார கால பயிற்சி அளிக்கப்படும். 2001 ஆம்
ஆண்டு ஆகஸ்டு மாதம் தொடங்கிய இப்பயிற்சி 42 வாரங்களுக்கு
நடைபெறும்.

இன்னல்களுக்காளான பெண்களுக்கு முடிந்தவரை குறைந்த நேரத்தில்
உதவி அளிக்கும்பொருட்டு பெரம்பலூர் தவிர்த்து மற்ற மாவட்டங்களில்
1091 என்ற பொது எண் கொண்ட உதவிக்கரம் தொலைபேசி
நிறுவப்பட்டுள்ளது. பெரம்பலூர் மாவட்டத்தில் தொழிநுட்பக்
காரணங்களுக்காக இத்தொலைபேசி நிறுவப்படவில்லை. காவல்
துறையினரும் அரசு சாரா அமைப்பினரும் இதில் மாற்றுமுறையில
பணிபுரிகின்றனர். 2001-2002 ஆம் ஆண்டில் புதிதாக அமைக்கப்படும் 50
காவல் நிலையங்களிலும் உதவிக்கரம் தொலைபேசி இணைப்பு தரப்பட

உள்ளது. அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் நன்முறையில் செயல்படுவதை உறுதிசெய்யும் பொருட்டு காவல் கண்காணிப்பாளர்களும் காவல் துறை ஆணையர்களும், சரக காவல் துறைத் துணைத் தலைவர்களும் அவற்றை முறையான கால இடைவெளிகளில் ஆய்வு செய்து வருகின்றனர்.

காவல் துறை நவீனப்படுத்தும் திட்டத்தின் மூலமும், மாநில வரவு செலவுத் திட்டத்தின் மூலமும் அனைத்து மகளிர் காவல் நிலையங்களுக்குத் தேவையான உள் கட்டமைப்பு வசதிகள் செய்து தரப்படுகின்றன. 18-2-2002 ஆம் நாளிட்ட உள் (நவீனம்) துறையின் அரசாணை நிலை எண் 107இல் 17 நடமாடும் ஆலோசனை மையங்கள் ஏற்படுத்தவும் ஆணையிடப்பட்டுள்ளது.

மகளிர் நலத்திற்கான ஆலோசனைக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு அக்குழுக்கள் முறையான கால இடைவெளிகளில் கூடி ஆக்கப்பூர்வமான கலந்துரையாடலில் ஈடுபடுவதை உறுதிசெய்ய மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

திறமையான, பொறுப்புள்ள காவல்படையை உருவாக்க பயிற்சி அவசியம் என்பதைக் கருத்தில் கொண்டு, காவல் துறைப் பணியாளர்களுக்கு பயிற்சி, மறுபயிற்சி ஆகியவை அளித்தல் முடுக்கி விடப்பட்டுள்ளது. மாநிலம் முழுவதும் உள்ள ஆண் பணியாளர்களுக்கு இருபாலரையும் மதித்தலில் பயிற்சி அளிக்க ஆறுநாள் பயிற்சி முதற்படியாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. காவல் துறை இயக்குநர் (பயிற்சி) மற்றும் தலைமையிடத்து காவல் துறைத் தலைவர் ஆகியோர்களது மேற்பார்வையிலும், வழிகாட்டுதல்படியும், காவல்துறை இயக்குநர், மாவட்ட காவல் துறைக் கண்காணிப்பாளர்கள், மாநகர காவல் துறை ஆணையர்கள் ஆகியோரை ஈடுபடுத்தி சென்னையிலும், மாவட்டங்களிலும், இப்பயிற்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. பணிநியமனமும், பயிற்சியும் என்ற அத்தியாயத்தில் கூறியுள்ளபடி இன்னும்பல புதிய பயிற்சித் திட்டங்களும் தொடங்கப்படவுள்ளன.

பயிற்சி நிறுவனங்களுக்கு திறமையான, பொறுப்புணர்வு உள்ள அலுவலர்களை தேர்ந்தெடுக்கும் பொர்ருட்டு, ஒரு பட்டியலை காவல் துறை தலைமை இயக்குநர், காவல் துறை இயக்குநர் (பயிற்சி) அவர்களுக்கு அனுப்பி வைப்பார். பயிற்சி தரும் அலுவலர் மற்றும் பணியாளர்களுக்குத் தரும் ஊக்கத் தொகையினை 10 விழுக்காட்டிலிருந்து 15 விழுக்காடாக உயர்த்தி அரசு ஆணையிட்டுள்ளது. பயிற்சி அளிக்கும் பணியாளர்களிடையே



தேவையான மாற்றங்களை செய்த பிறகு பயிற்சியாளர்களுக்கும் பயிற்சி தரும் அடையாளம் காணப்பட்ட திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இந்தியக் காவல் பணியைச் சேர்ந்த அலுவலர் பலர் பல்வேறு பயிற்சி நிறுவனங்களில் சிறப்பு பயிற்சி பெற அனுப்பப்பட்டுள்ளனர்.

பணியாளர்களுக்கு பயிற்சி அளிப்பதோடு மட்டுமல்லாமல் தகுந்த காவலர்களை நியமனம் செய்யும் பணியைப் பொறுத்தே காவலர்கள் செயல்பாடு அமைகிறது. தற்போது படையிலுள்ள குறைகளைக் களைவு செய்யும் அதே நேரத்தில் புதிய சேர்க்கைக்கான நியமனங்கள் முறையாக நடக்க வேண்டுமென்பதே மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். 2001 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் நடைபெற்ற காவல் துறை அலுவலர் மாநாட்டில், தேர்வுகளில் நடைபெறும் குளறுபடிகளை குறைக்கும் பொருட்டு தேர்வு நடவடிக்கைகள் நெறிப்படுத்தப்பட்டு உடல்திறன் தேர்வு, நேர்முகத் தேர்வு ஆகியவற்றுக்குத் தரப்படும் முக்கியத்துவம் குறைக்கப்பட்டு எழுத்துத் தேர்விற்கு அதிக மதிப்பெண் தரப்படும் என்று எனது தொடக்க உரையில் நான் குறிப்பிட்டேன். அதன்படி காவலர் தேர்வில் நேர்முகத் தேர்வு ரத்து செய்யப்பட்டும், உதவி ஆய்வாளர்களின் இத்தேர்விற்கான மதிப்பெண் 10 விழுக்காடாக குறைத்தும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இதேபோல, அனைத்துப் பதவிகளுக்குமான உடல்தேர்விற்கான மதிப்பெண் 15 விழுக்காடாக குறைக்கப்பட்டுள்ளது. எழுத்துத் தேர்விற்கான மதிப்பெண் உயர்த்தப்பட்டுள்ளது. துணை இராணுவப்படை, எல்லையோரக் காவல்படை, மைய ஆயுதப்படை ஆகியவற்றில் உள்ளது போன்று, மாநிலக் காவல்படையிலும் தற்போது படையில் பணிபுரிவோர், பணி ஓய்வு பெற்றோர், இறந்துவிட்டோர், மருத்துவ அறிக்கையின்பேரில் பணிஓய்வு பெற்றோர் ஆகியோரது குழந்தைகள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்களுக்கென நியமனங்களில் 10 விழுக்காடு ஒதுக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் பணிபுரியும் நிலையிலுள்ள படைவீரர்களின் விசுவாசத்தை வலுப்படுத்துவதோடு அவர்களது நல்லெண்ணத்தையும் உயர்த்தும் என நம்பப்படுகிறது.

மேலே சொன்ன கொள்கையை அனுசரித்து சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் பணியாளர்களைத் தேர்வு செய்வதற்கு உகந்தவாறு பணி விதிகளில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதனால் நியமனங்களின்போது நடைபெறும் ஊழல், உறவினர்களுக்குச் சலுகை காட்டுதல் போன்றவை கணிசமாகக் குறையும்.

பணிமாறுதல்களில், வேண்டியவர்களுக்கு சலுகை காட்டுவதை தடுக்கும் பொருட்டு மாவட்டங்களுக்கிடையிலும், சரகங்களுக்கிடையிலும்

பணியாளர்களை மாறுதல் செய்வதைத் தீர்மானிப்பதற்காக, மாவட்ட அளவிலும், சரக அளவிலும் மாறுதல் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. விருப்பு, வெறுப்பிற்குட்பட்ட மாறுதல்களை தடுக்கும் பொருட்டு இக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

போக்குவரத்து விபத்துகள் மாநில அரசை கவலை கொள்ளச் செய்யும் ஒரு பொருளாகும். 2001 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவல் துறை அலுவலர்கள் மாநாட்டில் இப்பொருள் குறித்து விவாதிக்கப்பட்டதைத் தொடர்ந்து இதன் நான்கு பகுதிகளான சாலைப் பாதுகாப்பு (பொறியியல்), அமலாக்கம், கல்வி, மருத்துவ உதவி ஆகியவற்றை ஆராய பல கூட்டங்கள் நடத்தப்பட்டன. சாலைப் பாதுகாப்புக்கான கூட்டுச் செயல் திட்டத்தின்மீது ஒரு முடிவெடுக்கும் முன்னதாகவே, சாலை விபத்துகளை கையாள உதவியாக போக்குவரத்துக் காவல் பிரிவின் உபயோகத்திற்கென ரூ.3.75 கோடி செலவில் சாலை பாதுகாப்புச் சாதனங்கள் வாங்க உத்தரவிடப்பட்டது. மினுங்கும் தடிகள், மினுங்கும் ஜாக்கெட்டுகள், போக்குவரத்துக் கூம்புகள், மினுங்கும் தடுப்புக் கட்டைகள், இரப்பர் டிசெலரேட்டர்கள், பிளாஸ்டிக் சங்கிலியுடன்கூடிய பிளாஸ்டிக் தூண்கள், போக்குவரத்தை முறைப்படுத்தும் விளக்குகள், சாலையைக் குறிக்கும் பூனைக் கண் பிரதிபலிப்பான்கள், ராடார் துப்பாக்கிகள், மூச்சுப் பகுப்பான்கள் ஆகியவை மேற்சொன்ன தொகையில் வாங்கப்பட்டன.

தேசிய நெடுஞ்சாலை எண்கள் 4,7,45,46 ஆகியவற்றில் ஐம்பது கிலோமீட்டர் இடைவெளியில், நோயாளர் ஊர்தி, கம்பியில்லாத் தகவல் தொடர்பு கருவி, மருத்துவ வசதிகள், துணை மருத்துவப் பணியாளர்கள் ஆகியவற்றுடன் கூடிய 13 அவசர விபத்து நிவாரண மையங்களை அமைக்குமாறு சாலை பாதுகாப்புக் குழு அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது. மைய அரசு நிறுவனங்களிலிருந்தோ அல்லது தனியார் மருத்துவமனைகளிலிருந்தோ நோயாளர் ஊர்தி பெற்றுக் கொள்ளப்படும். மாதந்தோறும் ஒவ்வொரு மையத்திற்கும் இதற்கென ஆகும் தொகையான ரூ.50,000 சாலை பாதுகாப்பு நிதியிலிருந்து வழங்கப்படும். இவை போக்குவரத்து உதவி மையங்களாகவும் செயல்படும். இம்மையங்கள் காவல் பணியாளர்களுடன் இணைந்து போக்குவரத்து உதவி மையங்களாகவும் செயல்படும். கிருஷ்ணகிரி, ஒசூர், ஆம்பூர், திருப்பெரும்புதூர், திண்டிவனம், ஆகிய ஊர்களில் உள்ள வழக்கமான மருத்துவமனைகளின் விபத்து அவசர சிகிச்சைப் பிரிவுகளில் உள்ள வசதிகளை ரூ.3.38 கோடி செலவில் தரம் உயர்த்துமாறும் இக்குழு பரிந்துரைத்துள்ளது. இதற்கென நோயறியும்



கருவிகள், எலும்பு சிகிச்சைக் கருவிகள், பொது அறுவை சிகிச்சை அரங்கிற்கான கருவிகள், ஒலி-ஒளிக் கருவிகள், அறைகலன்கள், தொடர்புச் சாதனங்கள் ஆகியவை வாங்க வேண்டியுள்ளது. பெரும்பாலான கோர விபத்துகள் ஓட்டுநர்களது கவனக் குறைவினால் நிகழ்வதாகக் கண்டறியப்பட்டுள்ளதால் சாலை விதிகளை கடைப்பிடிப்பதற்கான பயிற்சி அளிப்பதற்கு மிக முக்கியத்துவம் தரப்படும். போக்குவரத்து மற்றும் விபத்துகள் குறித்த தகவல்களைப் பெறவும், பகுப்பாய்வு செய்யவும் காவல் துறை தலைமை இயக்குநர் அலுவலகத்தில் சாலைப் பாதுகாப்பு மையம் ஒன்று செயல்பட்டு வருகிறது.

பொது மக்களின் பங்கு என்பது சிறந்த போக்குவரத்து மேலாண்மையில் மிக முக்கியமானதொன்றாகும்.

காவல் துறையில், குறிப்பாக கீழ்மட்டத்தில் உள்ளவர்கள் பொதுமக்களிடம் இரக்கமின்றி நடந்துகொள்கிறார்கள் என்ற ஒரு கருத்து உள்ளது. இறுக்கம் நிறைந்த பணிச்சூழ்நிலை, போதுமான வசதிகளின்மை, ஊக்கமின்மை ஆகியவற்றை, ஒரு காவலர் பயங்கரமானவராகக் காட்சியளிப்பதற்கு ஓரளவுக்கு காரணங்களாகக் கொள்ள முடியும். எனவே காவல் பணியாளர்களின் நலன்களை நன்முறையில் கவனித்துக் கொள்வது மிக முக்கியமாகும். இக்குறிக்கோளை அடைய விழுப்புரம், தூத்துக்குடி, திண்டுக்கல், கோயம்புத்தூர், விருதுநகர், நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் ரூ.26 இலட்சம் செலவில் காவலர் தங்குமிடங்கள் கட்ட அரசு ஆணையிட்டுள்ளது. இப்பணி மற்ற மாவட்டங்களில் படிப்படியாக மேற்கொள்ளப்படும். காவலர்களுக்கு முறையான மருத்துவ வசதிகளையும், சிகிச்சைகளையும் மேம்படுத்தவேண்டி தனியார் மருத்துவமனைகளுடன் இணைப்பு ஏற்படுத்திக் கொள்ளும் திட்டம் ஒன்றினை அரசு தயார் செய்து வருகிறது.

2001-2002 ஆம் ஆண்டுக்கான காவல் துறை கொள்கை விளக்கக் குறிப்பில் சொல்லப்பட்ட புதிய திட்டங்கள், மானியக் கோரிக்கை மீது நடைபெற்ற விவாதத்தின்போது அவையில் செய்யப்பட்ட அறிவிப்புகள் ஆகியவற்றின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் கீழே தரப்பட்டுள்ளன:

27-9-2001 ஆம் நாளிட்ட உள் துறை அரசாணை நிலை எண் 949-இல், ஆணையரகங்கள், புதிதாக ஏற்படுத்தப்பட்ட மாவட்டங்கள் மற்றும் படையணிகள் ஆகியவற்றுக்கு சீருடைகளும் இசைக் கருவிகளும் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

வரவு செலவுத் திட்டத்தில் பாதிக்கப்பட்டோர் நல நிதிக்கு இதுவரை ஒதுக்கப்பட்டு வந்த ரூ.1 கோடி, ரூ.2 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

பெண் தலைமைக் காவலர்களுக்கும், பெண் காவலர்களுக்கும் சேர்ஜ் (Searge) தொப்பிகள் வழங்கப்பட்டுள்ளன.

4-2-2002 ஆம் நாளிட்ட உள்(காவல்-10) துறையின் அரசாணை நிலை எண் 88-இல் காவல் துறைப் பணியாளர்களுக்கென 3000 குடியிருப்புகள் கட்ட உத்தரவிடப்பட்டுள்ளது.

பணியிலிருந்தபோது இறந்துவிட்ட காவல் துறைப் பணியாளர்களின் வாரிசுகளைக் கருணை அடிப்படையில் பணியமர்த்துவது குறித்து பரிசீலிக்கப்பட்டு ஏற்கெனவே 78 வாரிசுகள் தட்டச்சர்களாகவும், ஒருவர் சுருக்கெழுத்து-தட்டச்சராகவும் பணி நியமனம் செய்யப்பட்டதோடு, மேலும் 282 வாரிசுகள் காவலர்களாவும், இளநிலை உதவியாளர்களாகவும் நியமனம் செய்வது குறித்து பரிசீலனை செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை மாநகரங்கள் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் 11 காவலர் மருத்துவமனைகள் உள்ளன. 1-9-1991 அன்று நடைபெற்ற காவல் துறை மானியக் கோரிக்கையின்போது தமிழ்நாட்டிலுள்ள காவலர் மருத்துவமனைகளின் தரம் உயர்த்தப்படும் என்று நான் சட்டமன்றப் பேரவையில் அறிவித்ததைத் தொடர்ந்து சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை ஆகிய நகரங்களிலுள்ள மருத்துவத்தில் பல்வேறு துறைகளில் சிறப்பு பெற்று விளங்கும் தனியார் மருத்துவமனைகளுடன் ஓர் இணைப்பை ஏற்படுத்திக் கொள்வதன்மூலம் காவல் துறைப் பணியாளர்களுக்கு நியாயமான கட்டணத்தில் மருத்துவ வசதிகள் கிடைக்கச் செய்யும் சாத்தியக்கூறுகள் பற்றி பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றன. இதற்கான வழிமுறைகள் தற்போது ஆராயப்பட்டு வருகின்றன. பெருநகரங்களைத் தவிர பிற இடங்களில் உள்ள மருத்துவமனைகளுக்கு தகுந்த உள்கட்டமைப்பு வசதிகள் அளிப்பதன் மூலம் படிப்படியாக 10 படுக்கை/20 படுக்கை/30 படுக்கை வசதி கொண்டவையாக உயர்த்தப்படும்.

கண்காணிப்பாளர் பதவியிலிருந்து பதவி உயர்வு பெற நீண்டகாலமாவதால் அதிலுள்ள தேக்க நிலையைப் போக்க, 72 நேர்முக உதவியாளர் (நிர்வாகம்) பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.



சென்னை மாநகரிலும், பிற இடங்களிலுமுள்ள பகுதி நேர துப்புரவாளர்களுக்கான ஊதியம் ரூ.455-ஆக இருந்ததை ரூ.900-ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

13-11-2001 ஆம் நாளிட்ட உள்(காவல்-14) துறையின் அரசாணை நிலை எண் 1125-இல் கோயில் பாதுகாப்புப் படையினருக்கான தொகுப்பூதியம் ரூ.1435/-இலிருந்து ரூ.1500/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

மைய அரசு அளிக்கும் காவல் துறையை நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ் பின்வருவனவற்றிற்கு ஏற்பளிக்கப்பட்டுள்ளது.

மைய அரசு அளிக்கும் காவல் துறையை நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ் அவ்வரசின் 18-12-2001 ஆம் நாளிட்ட கடிதத்தின்படி ரூ.244.82 கோடிக்கான திட்டங்களுக்கு மைய அரசு ஏற்பளித்துள்ளது. இதற்கிணங்க 8-2-2002 ஆம் நாளிட்ட உள்(நவீனம்) துறையின் அரசாணை நிலை எண் 107-இல் பின்வருவனவற்றை நிறைவேற்ற அரசு ஆணையிட்டுள்ளது:

* 11 சரகங்களுக்கும் நீர் பீரங்கி 'வருணா' வழங்குதல்.
* சென்னை மாநகரில் நவீன மின்னணு ரோந்து முறை ஏற்படுத்துதல்.
* 184 காவல் நிலையங்களில் ஒளிநகல் இயந்திரம் (Xerox) வசதி ஏற்படுத்துதல்.
* 100 காவல் நிலையங்களுக்கான கட்டடங்கள் கட்டுதல்.
* 184 கோட்டங்களில் உள்ள சுருக்கெழுத்துக் கூடங்களுக்கு துணைக் கருவிகளுடன் கூடிய வீடியோ கேமராக்கள் வழங்குதல்.

2001 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் நடைபெற்ற மாவட்ட ஆட்சியர், காவல் துறை அலுவலர்கள் மாநாட்டில் காவலர்களின் குறைகளைத் தீர்க்க ஒரு நிறுவனம் ஏற்படுத்த வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது. இதற்கிணங்க காவல் கண்காணிப்பாளர்களும், காவல் ஆணையர்களும் அவர்களது அதிகார வரம்பிற்குள் உள்ள காவல் துறைப் பணியாளர்களின் குறைகளைக் கேட்டறியும் பொருட்டு மாதந்தோறும் ஏதாவது ஒருநாளை ஒதுக்க வேண்டுமென அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. அதேபோல மாநிலம் முழுவதும் உள்ள காவல் துறைப் பணியாளர்களின் குறைகளை காவல் துறைத் தலைவர் (நிர்வாகம்) அவர்களோ அல்லது காவல் துறைத் துணைத் தலைவர் (நிர்வாகம்) அவர்களோ மாதத்தில் ஒருநாளும், காவல்

[2002 ஏப்ரல் 24

துறைத் தலைமை இயக்குநர் மூன்று மாதங்களில் ஒருநாள் ஒதுக்க வேண்டும். 9-1-2002 அன்று காவல் துறை தலைமை இயக்குநர் நடத்திய குறைதீர்க்கும் நாளில் தமது குறை தீர்க்கவேண்டி 584 காவல் துறைப் பணியாளர்கள் மனுச் செய்துள்ளனர்.

திட்டமிட்டு இழைக்கப்படும் குற்றங்கள் சிறிதுகாலமாக நமது சமுதாயத்தை வெகுவாக அச்சுறுத்திக் கொண்டிருக்கின்றன. இத்தகைய குற்றங்கள் நாடுகளின் எல்லை கடந்தும் இழைக்கப்படுகின்றன. ஒப்பந்தக் கொலைகள், அச்சுறுத்திப் பணம் பறித்தல், கடத்தல், போதைப் பொருள்களைக் கள்ளத்தனமாக விற்றல், ஆள்கடத்தல், காப்புத் தொகை வசூலித்தல், கருப்புப் பணத்தை சட்டத்திற்குப் புறம்பான வழிகளில் வெள்ளைப் பணமாக்குதல் ஆகிய தகாத வழிகளில் மிகப்பெரிய அளவில் கள்ளச் செல்வம் சேர்க்கப்படுகிறது. இத்தகையவர்களால் நமது நாட்டின் பொருளாதார நிலை வெகுவாக பாதிப்பிற்கு உள்ளாகிறது. இவ்வாறு அமைப்புரீதியான குற்றங்கள் மூலம் இத்தகைய திட்டமிட்ட குற்ற-குழுமமானது எல்லைக்கு அப்பாலுள்ள பயங்கரவாதக் குழுக்களுடன் சேர்ந்து போதை பயங்கரவாதத்தை வளர்த்து வருவதை பொது நோக்கமாகக் கொண்டுள்ளதும் தெரிய வருகிறது. திட்டமிட்ட குற்றங்களைக் கையாளவும், கட்டுப்படுத்தவும் தற்போதுள்ள குற்றவியல் சட்டங்களும், நடைமுறைச் சட்டங்களும், நீதிமன்ற அமைப்புகளும் போதுமானவையாக இல்லை.

திட்டமிட்ட குற்றங்களை சமாளிக்கவேண்டி மஹாராஷ்டிர மாநிலத்தின் 1999 ஆம் ஆண்டு திட்டமிட்ட குற்றங்கள் (தடுப்புச்) சட்டம் போன்றதொரு சட்டத்தை இயற்ற நமது அரசு ஆலோசித்து வருகிறது. பின்வரும் குற்றங்கள் இழைப்பதை வழக்கமாகக் கொண்டிருப்பவர்களை, மிக்க பலத்துடன் சமாளிப்பதே உத்தேசச் சட்டத்தின் குறிக்கோளாகும்:

1. ஒப்பந்தக் கொலைகள்.
2. திட்டமிட்டு போதை மருந்து கடத்துதல்.
3. பணத்திற்காக ஆள் கடத்துதல்.
4. அச்சுறுத்தி பணம் பறித்தல்.
5. வழிப்பறி, கூட்டுக்கொள்ளை, சொத்துக் குற்றங்கள் போன்ற கூட்டு நடவடிக்கைகள்.



2002 ஏப்ரல் 24]

6. திட்டமிட்டு சாராயம் காய்ச்சுதல் மற்றும் விஷத்தன்மையுள்ள சாராயம் தயாரித்தல்.
7. பெண்கள், குழந்தைகளைக் கடத்துதல்/பிச்சையெடுக்கச் செய்வதற்காகக் கடத்துதல்/குழந்தைத் தொழிலாளர் முறை.
8. வங்கிசாரா நிதி நிறுவனங்கள் தொழில்முறையாக ஏமாற்றுதல்.
9. திட்டமிட்டு பொதுச் சொத்துக்களை அழித்தல்.
10. கள்ளத்தனமாக ஆயுதங்களை தயாரித்து விற்பனை செய்தல்.
11. சுரங்க முதலாளிகளும், பிறரும் வெடிப் பொருட்களை சட்டத்திற்குப் புறம்பான வேலைகளுக்குப் பயன்படுத்துதல்.
12. கள்ளத்தனமாக மணல், கல் சுரங்கங்கள் நடத்துதல்.
13. உணவுக் கலப்படம், பதுக்கல், கருப்புச் சந்தை.
14. சந்தனக்கட்டை, தந்தம், புராதனப் பொருட்களைக் கடத்துதல்.
15. கனிமிசார் குற்றங்கள்.
16. கருப்புப் பணத்தைச் சட்டத்திற்குப் புறம்பான வழிகளில் வெள்ளைப் பணமாக மாற்றும் குழுமங்கள்.
17. ரூபாய் நோட்டுகளையும், மதிப்புமிக்க பத்திரங்களையும் போலியாக தயாரித்தல்.
18. குடிசைகளை அபகரித்தல்.

குழுக்குற்றவாளிகள், திட்டமிட்டு கொடுஞ்செயல்களை நடத்தும் குற்றவாளிகள், ரௌடிகள், அரசியல்வாதிகளின் ஆதரவு பெற்ற வன்முறையாளர்கள், பிற சமூக விரோதிகள் ஆகியோர் இச்சட்டத்தின் வரம்பிற்குள் வருவார்கள்.

1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு பெண்களைக் கேலி செய்தல் தடுப்புச் சட்டம் இயற்றிய பின்னரும், பெண்களைக் கேலி செய்வதும் அதனால் கல்லூரி, பள்ளி மாணவிகள் தங்களின் விலை மதிப்பற்ற உயிரை மாய்த்துக் கொள்வதும் குறையாதிருப்பதனால் இச்சட்டத்தை மேலும் வலுவுள்ளதாக்க வழிவகைகளைக் கண்டறியுமாறு நீதியரசர் எம்.எம். இஸ்மாயில் தலைமையில் அமைந்த மாநில சட்ட ஆணையம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

[2002 ஏப்ரல் 24

இச்சட்டம் இயற்றப்பட்டதன் நோக்கங்களை நிறைவேற்றத் தேவையான கூறுகள் இச்சட்டத்தில் இல்லை என்பது அறியப்பட்டுள்ளது. இச்சட்டத்தில் சொல்லப்படும் குற்றங்கள் எதுவும் பிடியாணைக் குற்றங்களாக இல்லாததால், உரிய நீதித் துறை நடுவரிடம் ஆணை பெற்ற பின்பே ஒரு காவல் துறை அலுவலர் பெண்களைக் கேலி செய்யும் குற்றங்களில் புலனாய்வு மேற்கொள்ள வேண்டிய நிலையுள்ளது. பெண்களைக் கேலி செய்வதைத் தடுக்க தனிச் சட்டம் இயற்றப்பட்டபோதிலும், இந்தியத் தண்டனைச் சட்டத்தின் பல்வேறு பிரிவுகளைப் பிரயோகிக்க வேண்டியுள்ளதால் மேற்கண்ட குற்றத்தினை தடுப்பதற்கென இயற்றப்பட்ட இத்தனிச் சட்டத்தின் நோக்கம் நிறைவேறாமல் போக வாய்ப்பு உள்ளது. மேலும், இவை பிணை விடு குற்றங்களாக இருப்பதால், குற்றவாளி உடனடியாக பிணையில் விடுதலை செய்யப்படவேண்டிய நிலையும் உள்ளது.

எனவே, 1998 ஆம் ஆண்டு, தமிழ்நாடு பெண்களைக் கேலி செய்தல் தடுப்புச் சட்டத்தின் 4 முதல் 7 வரையிலான பிரிவுகளில் சொல்லப்பட்ட குற்றங்களை பிடியாணைக் குற்றங்களாக மாற்றவும், பிரிவு 4-ன்கீழ் இழைக்கப்படும் குற்றங்களுக்கு கடுமையான தண்டனை வழங்கவும், இன்ன பிற மாற்றங்களையும் ஏற்படுத்தும் வகையில் இச்சட்டத்தைத் திருத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு (நிதி நிறுவனங்களில்) முதலீட்டாளர்கள் நலன்காக்கும் சட்டம், அச்சட்டத்திலுள்ள சிலகுறைபாடுகளின் காரணமாக நிதி நிறுவனங்களால் ஏமாற்றப்பட்ட முதலீட்டாளர்களுக்கு நிவாரணம் பெற்றுத் தருவதற்கு போதுமான திறனுடையதாக இல்லை. எனவே, நிதி நிறுவனங்களில் வைக்கப்படும் காலவைப்பின் பொருளை அவற்றுக்கான தகுந்த அலுவலரின் அதிகாரத்தின் பொருள் ஆகியவற்றின் வரம்பினை விரிவுபடுத்தும் வகையில் அச்சட்டத்திற்குத் திருத்தம் வெளியிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதனால் பாடுபட்டுச் சம்பாதித்து நிதி நிறுவனங்களில் வைத்த தங்கள் பணத்தை முதலீட்டாளர்கள் விரைந்து திரும்பப் பெற வழிவகை ஏற்படும்.



2002 ஏப்ரல் 24]

**முடிவுரை**

கடந்த ஆண்டில் பல போராட்டங்கள் நடந்தபோதிலும், சட்டம் ஒழுங்கினை நன்முறையில் பராமரித்து நாட்டில் சமாதானமும் அமைதியும் நிலவிட தமிழ்நாடு காவல் துறை பெரிதும் பாடுபட்டுள்ளது. மிகையான பலப்பிரயோகம் தவிர்க்கப்பட்டுள்ளது. தவிர்க்க இயலாது போகும்போது தவிர மற்ற நேரங்களில் துப்பாக்கிச்சூடு நடத்தக் கூடாது என்பது இலட்சியமாக இருந்தது. குற்ற நிகழ்வு விகிதம் குறைக்கப்பட்டது. நெடுங்காலமாக நிலுவையிலுள்ள வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டன. மத அடிப்படைவாதிகள், தீவிரவாத பயங்கரவாத குழுக்களின் நடவடிக்கைகள் வெற்றிகரமாக கட்டுப்படுத்தப்பட்டன. ஆள் பலம் குறைவாக இருந்தபோதிலும் மிக மிக முக்கியமானோர், மிக முக்கியமானோர், அச்சுறுதலுக்குள்ளான பொதுப் பிரமுகர்கள் ஆகியோருக்கு பாதுகாப்பளிக்கப்பட்டது. தமிழ்நாடு காவல் துறை உயர்ந்த நடத்தையைப் பேணி வருகிறது. எல்லாத் துறைகளிலும் மிகுந்த பொறுப்புடன் தனது கடமைகளை சிறந்த முறையில் ஆற்றியுள்ளது. தமிழ்நாடு காவல் துறையை அகிலத்திலேயே சிறந்ததாக ஆக்குவது தற்போது தமிழக அரசின் நோக்கமாகும்.

[2002 ஏப்ரல் 24

## இணைப்பு-1

**1-1-2002 அன்று தமிழ்நாடு காவல் துறையில் உள்ள பதவிகள் எண்ணிக்கை**

| வ. எண் | பதவிகளின் பெயர் | ஏற்பளிக்கப்பட்டவை | நிரப்பப்பட்டவை |
|---|---|---|---|
| 1. | காவல் துறை இயக்குநர் | 4 | 3 |
| 2. | கூடுதல் காவல் துறை இயக்குநர் | 21 | 17 |
| 3. | காவல் துறைத் தலைவர் | 23 | 20 |
| 4. | காவல் துறைத் துணைத் தலைவர் | 36 | 31 |
| 5. | காவல் கண்காணிப்பாளர்-I | 104 | 103 |
| 6. | காவல் துறை துணை ஆணையர் (ஆயுதப்படை கண்காணிப்பாளர் வகை-II) | 5 | 5 |
| 7. | தளவாய் | 12 | 11 |
| 8. | கூடுதல் காவல் கண்காணிப்பாளர் வகை-I | 80 | 53 |
| 9. | கூடுதல் காவல் கண்காணிப்பாளர் வகை-II | 7 | 6 |
| 10. | துணை தளவாய் | 12 | 8 |
| 11. | காவல் துணைக் கண்காணிப்பாளர் வகை-I | 482 | 482 |
| 12. | காவல் துணைக் கண்காணிப்பாளர் வகை-II (ஆயுதப்படை) | 57 | 51 |
| 13. | உதவி தளவாய் (தமிழ்நாடு சிறப்புக் காவல்) | 41 | 37 |
| 14. | காவல் ஆய்வாளர் (வட்டம்) | 2130 | 2124 |
| 15. | காவல் ஆய்வாளர் (தமிழ்நாடு சிறப்புக் காவல்) | 121 | 95 |
| 16. | காவல் ஆய்வாளர் (ஆயுதப்படை) | 166 | 163 |
| 17. | உதவி ஆய்வாளர் | 4382 | 4371 |
| 18. | உதவி ஆய்வாளர் (ஆயுதப்படை) | 726 | 678 |
| 19. | உதவி ஆய்வாளர் (தமிழ்நாடு சிறப்புக் காவல்) | 410 | 386 |
| 20. | தலைமைக் காவலர் (வட்டம்/ ஆயுதப்படை) | 10337 | 10337 |
| 21. | ஹவில்தார் (தமிழ்நாடு சிறப்புக் காவல்) | 1341 | 1324 |
| 22 | முதல் நிலைக் காவலர்/இரண்டாம் நிலைக் காவலர் (ஆயுதப்படை/வட்டக் காவல் நிலையம்) | 56696 | 46917 |
| 23. | நாயக் (தமிழ்நாடு சிறப்புக் காவல்) | 1406 | 1375 |
| 24. | இரண்டாம் நிலைக் காவலர் (தமிழ்நாடு சிறப்புக் காவல்) | 8329 | 7489 |
| 25. | பெண் ஆய்வாளர் | 180 | 78 |
| 26. | பெண் உதவி ஆய்வாளர் | 1371 | 115 |
| 27. | பெண் தலைமைக் காவலர் | 933 | 483 |
| 28. | முதல்நிலை பெண் காவலர் | 547 | 464 |
| 29. | இரண்டாம் நிலை பெண் காவலர் | 4312 | 3052 |
| | மொத்தம் | **94271** | **80278** |



2002 ஏப்ரல் 24]

[2002 ஏப்ரல் 24

## இணைப்பு-2

**1-1-2002 அன்று உள்ளபடி தமிழ்நாடு காவல் துறையில் உள்ள அமைச்சுப் பணியாளர் எண்ணிக்கை**

| வ. எண் | பதவி | ஏற்பளிக்கப்-பட்டவை | நிரப்பப் பட்டவை |
|---|---|---|---|
| 1. | முதன்மை நிருவாக அலுவலர் | 1 | 1 |
| 2. | நிதிக் கட்டுப்பாட்டு அலுவலர் | 1 | 1 |
| 3. | முதுநிலை நிருவாக அலுவலர் | 18 | 14 |
| 4. | மக்கள் தொடர்பு அலுவலர் | 1 | 0 |
| 5. | நேர்முக உதவியாளர் | 172 | 76 |
| 6. | சட்ட ஆலோசகர் | 9 | 8 |
| 7. | உதவி இயக்குநர் (புள்ளியியல்) | 1 | 1 |
| 8. | முதுநிலை பட்டயக் கணக்கர் (குற்றப் புலனாய்வுத் துறை) | 1 | 1 |
| 9. | உதவி இயக்குநர் (தணிக்கை) | 1 | 0 |
| 10. | புள்ளியியல் அலுவலர் | 1 | 1 |
| 11. | புள்ளியியல் ஆய்வாளர் | 1 | 1 |
| 12. | கண்காணிப்பாளர் | 860 | 855 |
| 13. | உதவியாளர் | 1458 | 1412 |
| 14. | சுருக்கெழுத்து-தட்டச்சர் | 107 | 87 |
| 15. | இளநிலை உதவியாளர் | 1195 | 1094 |
| 16. | தட்டச்சர் | 271 | 218 |
| 17. | பதிவுரு எழுத்தர் | 112 | 98 |
| 18. | அலுவலக உதவியாளர் | 1012 | 962 |
| | மொத்தம் | **5222** | **4830** |



2002 ஏப்ரல் 24]

## இணைப்பு-3

**1-1-2002 அன்று உள்ளபடி தமிழ்நாடு காவல்துறை சுருக்கெழுத்துப் பிரிவில் உள்ள களப் பணியாளர்கள் எண்ணிக்கை.**

| வ. எண் | பதவி | ஏற்பளிக்கப்-பட்டவை | நிரப்பப் பட்டவை |
|---|---|---|---|
| 1. | தலைமை நிருபர் (அரசிதழ் பதிவு பெற்றவர்) | 1 | 1 |
| 2. | முதுநிலை நிருபர் | 36 | 36 |
| 3. | இளநிலை நிருபர் | 55 | 47 |
| | மொத்தம் | **92** | **84** |

## இணைப்பு-4

**1-1-2002 அன்று உள்ளபடி விரல்ரேகைக் கூடத்தில் பணியாற்றுபவர்கள் எண்ணிக்கை.**

| வ. எண் | பதவி | ஏற்பளிக்கப்-பட்டவை | நிரப்பப் பட்டவை | காலியாக உள்ளவை. |
|---|---|---|---|---|
| 1. | காவல் கண்காணிப்பாளர் | 1 | - | 1 |
| 2. | கூடுதல் காவல் கண்காணிப்பாளர் | 15 | - | 15 |
| 3. | காவல் துணைக் கண்காணிப்பாளர் | 35 | 11 | 24 |
| 4. | ஆய்வாளர் | 154 | 154 | - |
| 5. | உதவி ஆய்வாளர் | 84 | 77 | 7 |
| | மொத்தம் | **289** | **242** | **47** |

[2002 ஏப்ரல் 24

# இணைப்பு-5

**1-1-2002 அன்று உள்ளபடி காவல் தொலைத் தொடர்புப் பிரிவில் பணியாற்றுபவர்கள் எண்ணிக்கை.**

| வ. எண் | பதவி | ஏற்பளிக்கப்பட்டவை | நிரப்பப் பட்டவை | காலியாக உள்ளவை. |
|---|---|---|---|---|
| 1. | காவல் துணைக் கண்காணிப்பாளர் (தொழில் நுட்பம்) | 14 | 9 | 5 |
| 2. | காவல் துணைக் கண்காணிப்பாளர் (வகை-I) | 1 | 1 | 0 |
| 3. | காவல் துணைக் கண்காணிப்பாளர் (வகை-II) | 1 | 1 | 0 |
| 4. | ஆய்வாளர் (தொழில்நுட்பம்) | 134 | 133 | 1 |
| 5. | ஆய்வாளர் | 36 | 34 | 2 |
| 6. | உதவி ஆய்வாளர் (தொழில்நுட்பம்) | 517 | 428 | 89 |
| 7. | உதவி ஆய்வாளர் | 218 | 217 | 1 |
| 8. | தலைமைக் காவலர் | 252 | 250 | 2 |
| 9. | முதல்நிலைக் காவலர் | 161 | 109 | 52 |
| 10. | இரண்டாம்நிலைக் காவலர் | 322 | 53 | 269 |
| 11. | நேர்முக உதவியாளர் | 2 | 2 | 0 |
| 12. | கண்காணிப்பாளர் | 12 | 12 | 0 |
| 13. | உதவியாளர் | 19 | 19 | 0 |
| 14. | சிறப்புப் பிரிவு உதவியாளர் | 1 | 0 | 1 |
| 15. | இளநிலை உதவியாளர்-தட்டச்சர் | 21 | 20 | 1 |
| 16. | தட்டச்சர் | 3 | 3 | 0 |
| 17. | சுருக்கெழுத்து-தட்டச்சர் | 2 | 2 | 0 |
| 18. | பதிவுரு உதவியாளர்/ பதிவுரு எழுத்தர் | 4 | 4 | 0 |
| 19. | அலுவலக உதவியாளர் | 7 | 6 | 1 |
| 20. | அடிப்படை அரசு ஊழியர் | 32 | 31 | 1 |
| | மொத்தம் | **1759** | **1334** | **425** |



2002 ஏப்ரல் 24]

# இணைப்பு-II

***(76 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)***

## கோரிக்கை எண் 22

## தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை

## கொள்கை விளக்கக்குறிப்பு 2002-2003

**1. பணிகள்-ஒரு கண்ணோட்டம்:**

வாழ்க்கைக்கு தீ உறுதுணையானது. பார்க்கப்போனால் தீ இல்லாத வாழ்க்கை நினைப்பதற்கரியதும் அர்த்தமற்றதுமாகும். அதே சமயத்தில் மனிதனுக்கும், வாழ்க்கைக்கும் உற்ற நண்பனாக திகழும் தீ, சில சமயங்களில் எதிரியாக மாறிவிடுகிறது. அவ்வப்போது ஏற்படுகின்ற கடுமையான தீ விபத்துகளால் மனிதர்களுக்கும் கோடிக்கணக்கான மதிப்புடைய உடைமைகளுக்கும் அழிவு ஏற்படுகிறது. மனிதர்கள் அல்லது பிற கவனக்குறைவுகளால் அநேக தீ விபத்துகள் ஏற்பட நேரிடுகின்றன. தீ விபத்துகளை முழுமையாகத் தவிர்க்க இயலாவிடினும் அவை ஏற்படாது தடுக்கவும் அநேக தீ விபத்துகளைக் குறைக்கவும் இயலும். சில அடிப்படை முன்னெச்சரிக்கை முறைகளை கடைபிடிப்பதன் மூலம் நூற்றுக்கணக்கான உயிர்களை மட்டுமின்றி கோடிக்கணக்கான மதிப்புடைய உடைமைகளையும் தீயின் கோரப் பிடியிலிருந்து காப்பாற்ற இயலும்.

தீ விபத்துகளைத் தவிர, இயற்கை மற்றும் செயற்கையான காரணங்களால் நிகழும் பிறவிபத்துகளையும் தற்போதைய நாகரீக வாழ்க்கை ஏற்படுத்துகிறது. 26-1-2001 அன்று குஜராத்தை உலுக்கிய பூகம்பத்தால் ஏற்பட்ட விவரிக்க முடியாத உயிரிழப்பு மற்றும் பொருட்சேதம் ஆகியவை இன்னும் நம் மனதில் நீங்கா நினைவாகவுள்ளது. தமிழ்நாட்டில், புயல் மற்றும் வெள்ளம் ஆகியவற்றால் மனிதர்களுக்கும், உடைமைகளுக்கும் இழப்புகள் ஆண்டுதோறும் நேரிடுகின்றன.

தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி அலுவலர் மற்றும் பணியாளர்கள் மீட்பு பணிகளில் முன்னணியில் உள்ளனர். தீயணைப்பு மற்றும் மீட்பு நடவடிக்கைகளில், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை அலுவலர்களும் பணியாளர்களும் எவ்வாறு முக்கிய பங்கு வகிக்க இயலும் என்பதற்கு குஜராத்தில் நிகழ்ந்த பூகம்பத்தின் போது அவர்கள்

ஆற்றிய மீட்புப் பணி குறிப்பிடத்தக்க ஓர் உதாரணமாகும். பல நேரங்களில், இடர்பாடுகளுக்குள்ளானவர்களை மீட்கக் கோரும் அழைப்புகளில் இத்துறையின் செயல்பாடு குறிப்பிடத்தக்கதாகும்.

சட்டம் மற்றும் ஒழுங்கு சீர்கெட்டு, கலவரங்கள் ஏற்படும்போது தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் உதவி கோரப்படுகிறது. மேலும் பொருட்காட்சி, திருவிழாக்கள், மிக முக்கியப் பிரமுகர்களின் வருகை மற்றும் தேர்தல் நடைபெறும் நேரங்களில் தயார் நிலையில் இருக்கவும் இத்துறையின் சேவை கோரப்படுகிறது.

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை, தீத்தடுப்புக் குறித்த பிரச்சாரத்தையும் மேற்கொள்கிறது. குடும்பப் பெண்கள், ஊரகப் பெண்கள், பள்ளி மாணவர்கள், தொழிற்சாலைகளில் பணிபுரிபவர்கள், குடிசை வாசிகள், வியாபாரத் தளங்கள், திரையரங்குகள், பலமாடிக் கட்டடங்கள் மற்றும் அலுவலகக் கட்டடங்கள் ஆகியவற்றிற்கு வருகைபுரிபவர்களிடையே தீத்தடுப்பு மற்றும் தீ பாதுகாப்புப் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பிரச்சார நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

**2. குறிக்கோள்:**

தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையானது, நாட்டில் உள்ள பெரிய, மிகத் திறமையான அமைப்புகளில் ஒன்றெனப் புகழ் பெற்றுள்ளது. சேவையை அடிப்படையாகக் கொண்டு செயல்படும் இத்துறையின் பணிகள் பல்வேறு வகைப்பட்டதாகவும், முதன்மையானதாகவும் உள்ளன. இச்சேவையைத் தவிர, தீத்தடுப்புக் குறித்த சட்ட ரீதியான பணிகள், முறைப்படுத்தல் மற்றும் ஆலோசனை நல்குதல் போன்ற பணிகளையும் இத்துறை ஆற்றுகிறது.

தீயணைப்புப் பணியைப் பொறுத்தவரையில், தீ மற்றும் இதர விபத்துகளால் ஏற்படும் அபாயம், சேதம் மற்றும் அழிவிலிருந்து உயிர்களையும், உடைமைகளையும் காப்பாற்றுவதே இத்துறையின் முக்கியக் குறிக்கோளாகும். இவை தவிர, தேர்தல்கள், கலவரங்கள், பொருட்காட்சிகள், திருவிழாக்கள், முக்கியப் பிரமுகர்களின் பாதுகாப்பு ஆகிய நிகழ்வுகளில் காவல் துறைக்கும், தொற்று நோய் பரவும் காலங்களில் பொது சுகாதாரத் துறைக்கும், இத்துறை உதவுகிறது. நோயுற்றவர்களையும், காயமுற்றவர்களையும் உடனடியாக மருத்துவச் சிகிச்சைக்காக



மருத்துவமனைக்குக் கொண்டு செல்ல இத்துறையில் உள்ள நோயாளர் ஊர்திகள் பயன்படுத்தப்படுகின்றன.

சட்டரீதியான மற்றும் முறைப்படுத்தல் பணிகளில் உரிமம் மற்றும் தடையின்மைச் சான்றுகள் வழங்கப்படும்போது, தீயணைப்புத் துறை சட்டத்தினை இத்துறை செயல்படுத்துகிறது. ஆலோசனைப் பணிகளில், தீயணைப்புத் துறைச் சட்டங்கள் மற்றும் விதிகளின் கீழ், பலமாடிக் கட்டடங்கள், தொழிற்சாலைகள் கட்டுதல், பொது மக்கள் கூடுமிடங்கள் மற்றும் பொருட்காட்சிகள், திருவிழாக்கள் ஆகியவற்றை நடத்துபவர்கள் மேற்கொள்ள வேண்டிய தீத்தடுப்பு ஏற்பாடுகள் குறித்து, இத்துறையின் இயக்குநரகம் ஆலோசனை வழங்குகிறது.

**3. நிறுவனம் மற்றும் நிருவாக அமைப்பு:**

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் நிறுவன அமைப்பு குறித்த விவரத்தை இணைப்பு I-ல் உள்ள அட்டவணை தெரிவிக்கிறது:

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை, தமிழ்நாடு அரசின் உள் துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வருகிறது. இயக்குநர், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் தலைவர் ஆவார். நான்கு மண்டலத் துணை இயக்குநர்கள் இவருக்கு உதவியாக உள்ளனர். ஒவ்வொரு மண்டலத்திலும், 4 முதல் 9 கோட்டங்கள் உள்ளன. கோட்ட அலுவலர்களின் கட்டுப்பாட்டின்கீழ், 28 கோட்டங்கள் செயல்படுகின்றன. ஒவ்வொரு கோட்டத்திலும் 4 முதல் 16 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் உள்ளன. நிலைய அலுவலரின் பொறுப்பின்கீழ், ஒவ்வொரு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையமும் செயல்பட்டு வருகிறது. 12 கோட்டங்களில் தீத்தடுப்புக் குழுக்கள் உள்ளன. இது தவிர, துணை இயக்குநர் பதவி தரத்தில் உள்ள இயக்குநர் (பயிற்சி) அவர்களது கட்டுப்பாட்டின்கீழ் ஒரு மாநிலப் பயிற்சி மையம், தாம்பரத்தில் செயல்பட்டு வருகிறது. சென்னையில் உள்ள மாநிலப் பணிமனையும் இவருடைய கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகிறது.

**4. ஒருங்கிணைக்கப்பெற்ற செயல்படு அணுகுமுறைகள்:**

**(அ) தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள்:**

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம், இத்துறையின் அடிப்படை அமைப்பாகும். மாநிலத்தில் தற்பொழுது 280 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் உள்ளன. ஒரு பகுதியில், புதிய

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் ஏற்படுத்தப்பட வேண்டுமானால், அவ்விடத்தைச் சுற்றி 25 கிலோ மீட்டர் தொலைவிற்குள் வேறு நிலையம் இருக்கக்கூடாது, குறைந்தபட்சம் மக்கட்தொகை 50,000 இருக்கவேண்டும், ரூ.50,000-க்குக் குறைவில்லாத இழப்புகள் ஏற்பட்டிருக்க வேண்டும். நாட்டில் உள்ள சுமார் 2000 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களில், ஏறத்தாழ ஏழில் ஒரு பங்கு நிலையங்கள் தமிழகத்தில் உள்ளன.

**(ஆ) ஒருவருக்கொருவர் உதவி:**

பொதுமக்களுக்கு ஆற்றிடும் சேவையின் ஆற்றலை உயர்த்திடவும், சேவையை மேம்படுத்தவும், தீயணைப்புப் படைகளைக் கொண்டுள்ள பொதுத் துறை மற்றும் தனியார் துறையினர், மக்கள் அவதியுறும் காலங்களில் ஒருவருக்கொருவர் உதவி புரிய வேண்டுமென அறிவுரை வழங்கி அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

**5. உள் கட்டமைப்பு வசதிகள்:**

**(அ) மனித ஆற்றல்:**

இத்துறையில் உள்ள செயல் பணியாளர், களப் பணியாளர் மற்றும் நிருவாகப் பணியாளர்களின் தற்போதைய எண்ணிக்கை 6,606 ஆகும். இவைகளின் பதவி வாரியான எண்ணிக்கை விவரங்கள் இணைப்பு-II மற்றும் III-ல் கொடுக்கப்பட்டுள்ளன. கோட்ட அலுவலர், தானியங்கிப் பொறியாளர் (மாநிலப் பணிமனை), நிலைய அலுவலர், இளநிலை உதவியாளர், தட்டச்சர், சுருக்கெழுத்துத் தட்டச்சர் ஆகிய பதவிகளுக்கான நேரடி நியமனம் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் மேற்கொள்ளப்படுகிறது. தீயணைப்போர் பதவிக்கான நேரடி நியமனம் தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமத்தால் மேற்கொள்ளப்படுகிறது.

இத்துறைக்கு ஒப்பளிக்கப்பட்ட 6288 செயல் பணியாளர்களில், 3987 நபர்கள், தீயணைப்போர் ஆவர். இவ்வரசு பதவி ஏற்றபோது, தீயணைப்போர் பதவியில் 1,000-க்கும் மேற்பட்ட காலியிடங்கள் இருந்தமையால், தேர்வுப் பணிகளை விரைந்து முடிக்குமாறு தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம் முடுக்கிவிடப்பட்டது. இதன் காரணமாக, தீயணைப்போர் பதவிக்கு தேர்வு செய்யப்பட்ட 985 நபர்களில், 22-10-2001 முதல், 330 நபர்களுக்கு மூன்று மாத கால பயிற்சி



அளிக்கப்பட்டு பணியமர்த்தப்பட்டுள்ளனர். மீதமுள்ள 655 நபர்கள் பணியமர்த்தப்பட்டு, பயிற்சி வழங்கும் பணி விரைவில் தொடங்க உள்ளது. 1-6-2001 அன்று நேரடி நியமனம் மூலம் தேர்வு செய்யப்பட்ட 102 நிலைய அலுவலர்களுக்கு, மாநிலப் பயிற்சி மையத்தில் 4 மாத கால அடிப்படைப் பயிற்சி அளிக்கப்பட்டு பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் இதுவரை பெண்கள் எவரும் நியமனம் செய்யப்படவில்லை. மனித சமுதாயத்தில் பெண்களுக்கு எல்லா நிலைகளிலும் சம வாய்ப்புகள் வழங்கப்படுதல் வேண்டும் என்பதில் இவ்வரசு கொண்டிருக்கும் உறுதியான நிலைப்பாட்டினால், பாலின வேறுபாடுகளை நீக்கி, இத்துறையில் பெண்களை நியமனம் செய்யும் வகையில், தொடர்புடைய பணி விதிகளுக்கு திருத்தம் வெளியிட தக்க ஆணைகள் 12-10-2001 அன்று வெளியிடப்பட்டுள்ளன. அதன் மூலம், இத்துறையின் அனைத்து நிலைகளிலும் உள்ள பதவிகளுக்கும், அதாவது கோட்ட அலுவலர், நிலைய அலுவலர் மற்றும் தீயணைப்போர் போன்றவற்றிலும்கூட பெண்கள் நியமனத்திற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், பெண்களை தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் நியமனம் செய்யும்போது, நியமனம் செய்யப்படும் பதவிக்கு ஈடான காவல் துறை பதவிக்கு பின்பற்றப்படும் உடற்தகுதிகளை இவர்களுக்கும் கடைப்பிடிக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது. தொடர்புடைய பணி விதிகளுக்கு தக்க திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டவுடன் பெண்களை அப்பதவிகளுக்கு தேர்ந்தெடுக்கும் பணி மேற்கொள்ளப்படும்.

**(ஆ) ஊர்திகளும், சாதனங்களும்**

தீ விபத்துகள் மற்றும் பல்வேறு சீற்றங்களினால் விளையும் இடர்களின்போது மேற்கொள்ளப்படும் துயர்துடைப்புப் பணிகளில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித் துறையின் பங்கு மிக முக்கியமானதாகும். இதனை விரைந்து சிறப்பாக செயல்படுத்துவதற்காக, இத்துறையில் 326 நீர்தாங்கி ஊர்திகளும், 79 நோயாளர் ஊர்திகளும், 13 சிறு நுரை தகர்வு ஊர்திகளும், 5 அவசரகால மீட்பு ஊர்திகளும், 1 ஹைட்ராலிக் பிளாட்பார்ம் (இங்கிலாந்து-சைமன் ஸ்நார்கல்) ஊர்தியும், 1 சுழல் மேஜை ஏணி ஊர்தியும் (இசுசூ மோரிடா ஜப்பான் தயாரிப்பு), 37 மீட்டர் மற்றும் 42 மீட்டர் உயரம் செல்லக்கூடிய 2 ஹைட்ராலிக் ப்ளாட்பார்ம் மற்றும் சுழல் மேஜை ஏணி ஊர்திகளும் (பிரான்டோ ஸ்கைலிப்ட்-பின்லாந்து தயாரிப்பு), 1 நீர்விடுகுழாய் ஊர்தியும், 36 தண்ணீர் லாரிகளும், 1 ரெக்கரும், 2 நடமாடும் பழுது பார்க்கும் ஊர்திகளும், 228

அதிக அளவு நீர் வெளியேற்றும் திறனுள்ள எளிதில் தூக்கிச் செல்லக்கூடிய பம்புகளும், 93 மிதவைப் பம்புகளும் தகுந்த தொழில்நுட்பப் பணியாளர்களைக் கொண்டு பயன்படுத்தப்படுகின்றன. பணி உதவிகளுக்காக கம்பியில்லாத தந்தி தொலைத் தொடர்பு சாதனம் பொருத்திய சீருந்துகள், ஈப்புகள், பேருந்துகள், மோட்டார் சைக்கிள்கள் போன்ற 61 துணை ஊர்திகளும் இத்துறையில் இயங்கி வருகின்றன. கழிவு செய்யப்பட்ட ஊர்திகளுக்கு பதிலாக, ரூ.2.43 கோடி செலவில் 18 நீர்தாங்கி வண்டிகளை வாங்குவதற்கு ஏதுவாக இவ்வரசு, ஆகஸ்ட் 2001-ல் ஒப்பளிப்பு ஆணை வழங்கியுள்ளது.

இவையன்றி, சில முக்கியமான தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களுக்கு நவீன உபகரணங்களான, உயர்த்தும் பைகள், புகை வெளியேற்றும் கருவிகள், நச்சு வாயுக் கண்டுபிடிப்பான்கள், ஜெனரேட்டர்கள் மற்றும் கோம்பி-டூல்ஸ் என்று அழைக்கப்படும் சிறிய மீட்பு உபகரணங்கள் போன்ற நவீன கருவிகள் மீட்புப் பணிகளுக்கென வழங்கப்பட்டு அவை பயன்பாட்டில் உள்ளன. மேலும், இத்துறையில் மோட்டார் பொருத்திய பைபர் படகுகள் 3, தலைக்கவசமாக அணிந்து பயன்படுத்தக்கூடிய வெப்ப தத்துவ நிழற்படக் கருவி 1, கையில் எடுத்துச் செல்லும் வெப்ப தத்துவ நிழற்படக் கருவிகள் 2, உயிர் கண்டுபிடிப்பான் கருவிகள் 2 மற்றும் பல்வகை வாயுக் கண்டுபிடிப்பான்கள் 2 போன்ற உபகரணங்களும் உள்ளன.

பதினொன்றாவது நிதிக்குழு மானியத்தைப் பயன்படுத்தி, 2002-2003 மற்றும் 2003-2004 நிதியாண்டுகளில், ரூ.2.00 கோடி மதிப்பீட்டுச் செலவில் அத்தியாவசியமான உபகரணங்களை வாங்குவதற்கு ஏதுவாக ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

### 6. தகவல் தொடர்பு

#### (அ) தொலைபேசி மற்றும் கம்பியில்லாத் தொலைத் தொடர்புக் கருவிகள் வழங்குதல்:

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகளை செவ்வனே செய்வதற்கு உரிய நேரத்தில் சேவை செய்தல் இன்றியமையாததாகும். எனவே, ஒவ்வொரு தீயணைப்பு நிலையத்திற்கும் விரைவான திறன்மிக்க தகவல் தொடர்புகள் இன்றியமையாததாகிறது. தற்போது ஒவ்வொரு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கும் தொலைபேசி வசதி வழங்கப்பட்டுள்ளதால், அதன்மூலம் உடனடியாக தீயழைப்புகள் மற்றும் மீட்பு அழைப்புகள்



பெறப்பட்டு, அப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சில மாவட்ட தலைநகரங்களில் '101' என்ற எண் கொண்ட இலவச தொலைபேசி வசதி உள்ளது. சென்னை மாநகரில், வாக்கிடாக்கிகள், ரிபீட்டர் செட்டுகள் உள்பட குறைந்த அலைவரிசை கொண்ட 122 கம்பியில்லாத் தகவல் தொடர்புக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

சமீபத்தில், மாநில தலைமையகம், மாவட்ட தலைமையகத்துடனும் மற்றும் சில முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளுடனும் அதிநுண் அலைவரிசைக் கருவித் தொடர்புகள் மூலம் இணைக்கப்பட்டுள்ளது. மொத்தத்தில் 32 அதிநுண் அலைவரிசைக் கருவிகள் வாங்கப்பட்டு அவை பயன்பாட்டில் வைக்கப்பட்டுள்ளன.

சென்னை மாநகரம், திருவள்ளூர் மாவட்டம், காஞ்சிபுரம் மாவட்டம் மற்றும் கோயம்புத்தூர் மாநகரம் ஆகியவற்றில் உள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்களில் கம்பியில்லாத் தந்தி தகவல் தொடர்புக் கருவிகள் உள்ளன. இன்னும் பல தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள் இவ்வசதியினை கொண்டிருக்கவில்லை. தகவல் தொடர்பில், கம்பியில்லாத் தகவல் தொடர்புக் கருவிகளின் உபயோகம் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளதாலும், உரிய நேரத்தில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் ஊர்திகளை அனுப்பிவைத்து, பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சென்றடையும் நேரத்தினை குறைக்க ஏதுவாக்வும், பிற மாவட்டங்களில் உள்ள அனைத்து தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களில் பொருத்தும் வகையில் நிலையான கருவிகள் 233, ஊர்தியில் பொருத்தக்கூடிய கருவிகள் 263, கையில் எடுத்துச் செல்லக்கூடிய கம்பியில்லா தகவல் தொடர்புக் கருவிகள் 233 ஆகிய தகவல் தொடர்புக் கருவிகளை ரூ.2.05 கோடி செலவில் வாங்குவது குறித்த ஆணையை, 27-12-2001 அன்று இவ்வரசு வெளியிட்டுள்ளது. இது பகுதி பகுதியாக, இரண்டு ஆண்டு காலத்திற்குள் நிறைவேற்ற முடிவெடுக்கப்பட்டுள்ளது. இதன்மூலம், விரைவாக தகவல் பரிமாற்றம் செய்யவும், நீர்தாங்கி வண்டிகள் உடனடியாக தீ விபத்து இடத்திற்கு விரைந்து சென்று பணியாற்றவும், மேற்கொண்டும் உதவிகள் தேவைப்பட்டால் தகவல் கட்டுப்பாட்டு அறையுடன் தொடர்பு கொள்ளவும் இயலும்.

#### (ஆ) பதில்செயல்பாடு நேரம் (Response Time):

விபத்து குறித்த அழைப்பு பெறப்பெற்றதும், தீயணைப்பு ஊர்தி விபத்து இடத்தை அடைய எடுத்துக்கொள்ள ஆகும் நேரம், விபத்து அழைப்பு பதில் செயல்பாடு நேரமாகும். பொதுவாக, இது சென்னை மாநகரில் 10

[2002 ஏப்ரல் 24

நிமிடங்களுக்கு மேற்படாமல் இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்நேரத்தினைக் குறைக்க, தொடர் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விரைவில் செய்திப் பரிமாற்றம் பெற்றிடவும், இந்நேரத்தைக் குறைக்க உதவும் வகையிலும் தனியே ஒரு தகவல் தொடர்பு மையமும் '101' மற்றும் '102' எண்கள் கொண்ட தொலைபேசி இணைப்புகள் மற்றும் கம்பியில்லா தகவல் தொடர்புக் கருவி இணைப்புகள் ஆகியவை கொண்ட ஒரு கட்டுப்பாட்டு அறையும் சென்னையில் உள்ளது. பல வழிமுறைகள் கண்டறியப்பட்டு, அதன் மூலம் இந்நேரத்தைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சென்னை காவல்துறைப் போக்குவரத்து கட்டுப்பாட்டு அறையுடனான ஒருங்கிணைப்பு, வேகத்தடைகளை சீரமைத்தல், சாலைகளைப் பிரிக்கும் மத்திய தடத்தில் அவசர வாயில்களை அமைத்தல், தீயணைப்பு ஊர்திகள் அடிக்கடி பயன்படுத்தும் சாலைகளை மேம்படுத்துதல் ஆகியவை இவ்வழிமுறைகளில் அடங்கும்.

தீயணைப்பு ஊர்திகள் அடிக்கடி பயன்படுத்தும் சாலைகளை மேம்படுத்துவது குறித்து நெடுஞ்சாலைத் துறை தலைமைப் பொறியாளருக்கும், தீயணைப்பு ஊர்திகள் தங்குதடையின்றி செல்வதற்கு ஏதுவாக சரிவர வடிவமைக்கப்படாத வேகத்தடைகளை சீரமைப்பது குறித்து இணை ஆணையாளர் (போக்குவரத்து) மற்றும் சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஆகியோருக்கும் அரசு அறிவுரை வழங்கியுள்ளது.

**(இ) இணையதளம்:**

தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறைக்கென இணையதளம் தேசிய தகவல் தொடர்பு மையத்தினரால் உருவாக்கப்பட்டு பயன்பாட்டில் வைக்கப்பட்டுள்ளது. இணையதளத்தினை http//www.tn.nic.in/fireservice (or) http://www.tn.gov.in/fireservice ஆகிய முகவரிகளில் தொடர்பு கொள்ளலாம். பொதுமக்களுக்குத் தேவையான விவரங்களைக் கொண்டிருப்பதுடன், உபயோகிப்போர் விவரங்களைக் தெளிவாக, விளக்கமாக அறிந்து கொள்ளும் வகையில் இவ்விணையதளங்கள் அமைக்கப்பட்டுள்ளன.



2002 ஏப்ரல் 24]

**7. பயிற்சி வசதிகள்:**

எந்த ஒரு படையையும் மிடுக்காகவும், போராடத் தகுதியுடையவர்களாகவும் வைத்திருக்க பயிற்சி அவசியமானதாகும். அவ்வாறே தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி துறையினருக்கும் பயிற்சி அவசியமாகிறது. இத்துறையில் எல்லா நிலைகளிலும் உள்ள பணியாளர்களுக்கு அளிக்கப்பட்டுவரும் பயிற்சியின் தரத்தினை மேம்படுத்துவதற்கு ஏதுவாக, நவீன தொழில்நுட்ப உத்திகள் மற்றும் நவீன வசதிகளைக் கொண்ட தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி பயிற்சிகளை அளிக்கக்கூடிய வகையில் ரூ.4.50 கோடி செலவில் பயிற்சி மையம் கட்டப்பட்டுள்ளது. அவசர கால மீட்பு ஊர்தி, இழுத்துச் செல்லக்கூடிய உயரமான கம்பத்துடன் பொருத்தக்கூடிய விளக்கு (டிராலி டைப் லைட் டவர் மாஸ்ட்), கணினிகள், இரசாயன அங்கிகள், நீர்மூழ்கி கவச உடைகள், மல்டி மீடியா புரஜெக்டர், நடமாடும் பழுது பார்க்கும் ஊர்தி மற்றும் உடற்பயிற்சிக் கருவிகள் போன்றவை அடங்கிய நவீன பயிற்றுவிப்பு உபகரணங்களுடன் இப்பயிற்சி மையம் தற்போது தாம்பரத்தில் செயல்பட்டு வருகின்றது. மேலும் பயிற்சியாளர்களுக்கு நல்ல களப் பயிற்சி அளிக்கும் வகையில், இப்பயிற்சி மையத்தில் எல்லா பருவகாலங்களிலும் பயன்படுத்தத்தக்க கான்கிரீட்டிலான பயிற்சி மைதானம், புகை அறை, வி-நாட்ச் டேங்க் அமைக்கப்பட்டுள்ளன. நல்ல வகுப்பறைகள், சிறப்பான நூலகம், மாதிரி வடிவமைப்புகள், நல்ல உணவகம் மற்றும் தங்குவதற்கான வசதி ஆகியவை பயிற்சியின் மொத்த தரத்தை உயர்த்துவதற்கு ஏதுவாக அமைக்கப்பட்டுள்ளன. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகளுக்காக அளிக்கப்படும் பயிற்சி அதி முக்கியத்துவம் பெறுகிறது. இந்தப் பயிற்சி மையம் நாகபுரியிலுள்ள தேசிய தீயணைப்புப் பயிற்சி கல்லூரிக்கு இணையானதாகும். இப்பயிற்சி மையத்தில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி துறையின் தீயணைப்பு வீரர்களுக்கு மட்டுமல்லாமல், பிற மாநிலங்களைச் சார்ந்த தீயணைப்பு வீரர்களுக்கும், பொதுத் துறை, அரசு நிறுவனங்களைச் சார்ந்தவர்கள் மற்றும் பெருமளவில் பொது மக்களுக்கும், குறைந்த கட்டணத்தில் பயிற்சியளிக்கப்படுகிறது. மாநிலப் பயிற்சி மையத்தில் ஓராண்டில் அளிக்கப்படும் சிறப்புப் பயிற்சித் திட்டம் குறித்த நாள்காட்டி ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

பணியாளர்களுக்கு பயிற்சி அளிப்பவர்களை ஊக்குவிக்கும் வகையிலும், பயிற்சி மையத்தில் பணிபுரிய திறமை வாய்ந்தவர்களை ஈர்க்கும்வகையிலும், பயிற்சி மையத்தில் பயிற்சி அளிப்பவர்களின் அடிப்படை ஊதியத்தில் 10 விழுக்காடு தொகையினை அவர்களுக்கு பயிற்சிப் படியாக வழங்க அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

கடந்த 2001-ம் ஆண்டில் நேரடியாக தேர்வு செய்யப்பட்ட 102 நிலைய அலுவலர்கள் மற்றும் 330 தீயணைப்போர்களுக்கு அடிப்படைப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மேலும், தீயணைப்பு-மீட்புப் பணித் துறை சாராத 10 நபர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. தீயணைப்போர் பதவியிலிருந்து தீயணைப்போர் ஓட்டுநராக தேர்ந்தெடுக்கப்பட்ட 23 பேருக்கும். இயந்திரக் கம்மியர் ஓட்டுநராக நியமிக்கப்பட வேண்டி தேர்ந்தெடுக்கப்பட்ட 28 தீயணைப்போர் ஓட்டுநர்களுக்கும், மாநில பயிற்சி மையத்தில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 37 தீயணைப்போர்கள், 20 தீயணைப்போர் ஓட்டுநர்கள்/இயந்திரக் கம்மியர் ஓட்டுநர்கள் மற்றும் 28 முன்னணி தீயணைப்போர்களுக்கு புதுப்பித்துக் கொள்ளும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மேலும் தீயணைப்பு-மீட்புப் பணித் துறையை சாராத 38 நபர்களுக்கு ஆரம்பகட்ட தீயணைப்பு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

**8. பணிமனை:**

துறை ஊர்திகள் மற்றும் சாதனங்களில் ஏற்படும் பழுதுகளைச் செப்பனிடுவதற்காக, சென்னையில் மாநிலப் பணிமனை ஒன்று இயங்கி வருகிறது. மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறையில் உள்ள அதிகாரத்தைப் போன்று, ஊர்திகளின் பழுதை செப்பனிடும் தொகை ரூ.2,500/-க்கு மிகைப்படும் இனங்களில் மதிப்பீடுகளைப் பரிசீலித்து தொழில்நுட்பச் சான்று வழங்க இப்பணிமனையின் தானியங்கிப் பொறியாளருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இது தீயணைப்பு ஊர்திகளுக்கு பணிமனையில் பழுது நீக்கம் செய்யும் பொருட்டு தொழில்நுட்பச் சான்றுகள் வழங்குவதில் ஏற்படும் காலதாமதத்தை பெருமளவில் குறைக்கும்.

**9. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையக் கட்டடங்கள் கட்டுதல்:**

மாநிலத்தில் தற்பொழுது செயல்பட்டு வரும் 280 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களில், கட்டுமானத்தில் உள்ள 3 கட்டடங்களையும் சேர்த்து, 109 நிலையங்கள் அரசுக் கட்டடங்களிலும் 42 நிலையங்கள் அரை நிரந்தரக் கட்டடங்களிலும், 129 நிலையங்கள் வாடகைக் கட்டடங்களிலும் செயல்பட்டு வருகின்றன.

2001-2002 மற்றும் 2002-2003 ஆண்டுகளில் பதினொன்றாவது நிதிக் குழு உதவித் தொகையான ரூ.8.00 கோடியிலிருந்து, ரூ.6.00 கோடி செலவில் 34 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களுக்கு பொதுப் பணித் துறையின் மூலம் கட்டடம் கட்டித் தர 16-8-2001-ல் அரசு ஆணைகள்



வழங்கியுள்ளது. 2001-2002-ல் தாம்பரம், நிலக்கோட்டை, வேப்பூர், திருமுட்டம், ராசிபுரம், திருச்செங்கோடு, ஸ்ரீவில்லிபுத்தூர், சாத்தூர், செஞ்சி, பொன்னமராவதி, கமுதி, பொன்னேரி, ஜெகதாபட்டினம், நாங்குனேரி, ஆற்காடு, சேரன்மகாதேவி, செங்கோட்டை, வேட்டவலம், வத்திராயிருப்பு, கன்னியாகுமரி, திட்டக்குடி, பரங்கிப்பேட்டை, தேவகோட்டை, இராயபுரம், வியாசர்பாடி, பேட்டை மற்றும் வால்பாறை ஆகிய இடங்களில் கட்டடம் கட்டுவதற்கான நடவடிக்கை முன்னேற்றத்தில் உள்ளது. ஜவ்வாதுமலை, குடியாத்தம், பழனி, திருப்பத்தூர் (வேலூர் மாவட்டம்), கோயம்புத்தூர் (வடக்கு), நாகர்கோவில் மற்றும் மன்னார்குடி ஆகிய இடங்களில் கட்டடம் கட்டுவதற்கான நடவடிக்கை 2002-2003ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும்.

**10. ஆற்றிய பணிகள்:**

**(அ) தீத்தடுப்பு**

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் அடிப்படைப் பணி தீத்தடுப்பு ஆகும். தீத்தடுப்புப் பணிகளைத் தீவிரப்படுத்துவதற்கென, 12 கோட்டங்களில் தீத்தடுப்புக் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. தீயினால் ஏற்படும் ஆபத்துகளைக் குறைத்திட வேண்டி, தீத்தடுப்பு முறைகளை கிராமப்புற மற்றும் நகர்ப்புற மக்கள் அறிந்து கொள்ளும் வகையில், பிரச்சாரப் பணிகளை இக்குழுக்கள் மேற்கொண்டு வருகின்றன. ஒரு திட்ட இலக்குடன் தேர்ந்தெடுக்கப்பட்ட பள்ளிகள், தொழிற்சாலைகள், அலுவலகங்கள், கிராமங்கள் மற்றும் குடிசைப் பகுதிகள் ஆகியவற்றில் தீப்பாதுகாப்பு மற்றும் தீத்தடுப்பு முறைகளை, அவர்கள் அறியும்வண்ணம் இக்குழுக்கள் சொற்பொழிவுகள், செயல்முறை விளக்கங்கள், ஆகியவற்றை செய்து வருகின்றன. சென்னையில் உள்ள இரண்டு தீத்தடுப்புக் குழுக்களுக்கு இரண்டு நிழற்படப் பிரிவுகள் உள்ளன. "வருமுன் காப்போம்" என்ற முதுமொழிக்கேற்ப அரசு தீத்தடுப்புக்கு அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது.

. மகளிர் மேம்பாட்டுக் கழகத்தினரால் நடத்தப்படும் மகளிர் சுயசேவை பிரிவுக் கூட்டத்தில், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணியாளர்கள் பங்கேற்று, தீ விபத்தின் இடர்ப்பாடுகளைக் குறைப்பதற்கும், தீத்தடுப்பு முறைகளை ஊரக மக்கள் குறிப்பாக ஊரகப் பெண்களுக்கு அடிப்படை தீத்தடுபபு முறைகளைப் பற்றிய பயிற்சிகள், அனுபவம் மிக்கவர்களால் செயல்முறை விளக்கப் பயிற்சி மற்றும் விரிவுரைகள் மேற்படி கூட்டங்களின்போது நிகழ்த்தப்படுகின்றன. இப்பயிற்சிகளில் கலந்து கொண்ட கிராமத்தினர்,

தாம் பெற்ற பயிற்சியினை பிறருக்கும் அளிப்பதன் மூலம் கிராமத்திலுள்ள அனைவரும், தீத்தடுப்பு, தீப்பாதுகாப்பு ஆகியவற்றில் பயிற்சி பெறுவார்கள் என நம்பப்படுகிறது. தீபாவளி நேரத்தில் பட்டாசுகள் வெடிக்கும்போது, பொதுமக்கள் அனுசரிக்க வேண்டிய தீப்பாதுகாப்பு வழிமுறைகள் குறித்து, விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணிகளை பல்வேறு அரசுசாரா பொதுத் தொண்டு நிறுவனங்களும் செய்கின்றன. தீபாவளி நேரத்தில் ஏற்படும் பெரும்பாலான தீ விபத்துகள், ராக்கெட் பட்டாசுகளை கொளுத்துகின்ற காரணத்தினால் ஏற்படுகின்றன என்பதனால், தீபாவளி நேரத்தில் இவற்றை சேமித்து வைத்திருப்பதற்கும், விற்பனை செய்வதற்கும் தடைசெய்யும் செயற்குறிப்பு ஒன்று அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.

**(ஆ) புறத் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள்:**

கோடைகாலத்தில் குடிசைப் பகுதியில் ஏற்படும் தீ விபத்துகளை சமாளிக்க, சென்னை நகரில் புறத் தீயணைப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தீயினை விரைந்து அணைக்க தற்போது சென்னை குடிசைப் பகுதிகளில் 16 இடங்களில் புறத் தீயணைப்பு-மீட்புப் பணி நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. இந்நிலையங்களில், உயர் கொள்ளளவு கொண்ட சின்தெடிக் அல்லது சுருங்கும் நீர்த்தொட்டிகள், கையில் எடுத்துச் செல்லத்தக்க நீர்விடுகுழாய்களுடன் கூடிய பம்புகள், கம்பியில்லா தொடர்பு சாதனங்கள் ஆகியவை வைக்கப்பட்டுள்ளன. பதற்றமான பகுதிகளை முழுநேர விழிப்புடன் கண்காணிக்கும் பொருட்டு இந்நிலையங்கள் எந்நேரமும் செயல்படுகின்றன.

**(இ) திரையரங்குகளில் தீத்தடுப்பு:**

திரையரங்குகள் பெரும்பாலும் தீவிபத்துகள் நிகழக்கூடிய இடங்களாக உள்ளன. புது தில்லியில் உள்ள உப்கார் திரையரங்கில் 13-6-1997 அன்று நிகழ்ந்த தீ விபத்துச் சம்பவமானது, திரைப்படங்களுக்குச் செல்லுவோருக்கு நேரிடும் இன்னலை உணர்த்துவதாக உள்ளது. அத்துயரச் சம்பவத்தில், 57 பொது மக்கள் உயிரிழந்தனர். எனவே, அரசு, திரையரங்குகளில் தீப்பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தீவிரம் காட்டுகிறது. திரை அரங்குகளில் பாதுகாப்பு உறுதி செய்யும் வகையில், தமிழ்நாடு முழுவதும் உள்ள திரையரங்குகளை ஆண்டுதோறும் ஆய்வு செய்ய பல்வேறு துறைகளில் பணியாற்றுவோரைக் கொண்ட குழு ஒன்று தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை இயக்குநரது தலைமையின்கீழ் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவானது திரையரங்குகளை ஆய்வு செய்து,



உரிம நிபந்தனை மீறல்களை, தக்க நடவடிக்கைக்காக உரிமம் வழங்கும் அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு செல்லும். திரையரங்குகளை ஆய்வு செய்தமைக்கான வருடாந்திர ஆய்வு அறிக்கை மற்றும் தீ விபத்துகளை தவிர்ப்பதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய தீர்வு நடவடிக்கை தொடர்பான அறிக்கை ஆகியவற்றை சமர்ப்பிக்க தீயணைப்பு-மீட்புப் பணித் துறை இயக்குநருக்கு அரசு ஆணையிட்டுள்ளது. 2001-ம் ஆண்டில் 1533 திரையரங்குகள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

**(ஈ) தீ விபத்து குறித்த அழைப்புகள்:**

2000 மற்றும் 2001-ம் ஆண்டுகளில், முறையே 16,987 மற்றும் 17,697 தீ விபத்து அழைப்புகள் வரப்பெற்றன. 2000-ஆம் ஆண்டில் உயிரிழந்தவர்கள் 47 நபர்கள், காப்பாற்றப்பட்டவர்களின் எண்ணிக்கை 77 ஆகும். 2001-ஆம் ஆண்டில், தீ விபத்தில் 112 உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன. 107 நபர்கள் காப்பாற்றப்பட்டுள்ளனர். 2000-ல் ஏற்பட்ட பொருட்சேதத்தின் மதிப்பு ரூ.13.99 கோடியாகும். காப்பாற்றப்பட்ட உடைமைகளின் மதிப்பு ரூ.157.24 கோடியாகும். 2001-ஆம் ஆண்டில், இழப்பு ஏற்பட்ட உடைமைகளின் மதிப்பு ரூ.15.80 கோடியும், மீட்கப்பட்ட உடைமைகளின் மதிப்பு ரூ.137.86 கோடியுமாகும். சென்னை மாநகரில், தீவிபத்து நிகழ்வுகள் 1999-2001-ஆம் ஆண்டுகளில் படிப்படியாகக் குறைக்கப்பட்டுள்ளன. 1999-ஆம் ஆண்டில் 1603 ஆக இருந்த தீ விபத்து அழைப்புகளின் எண்ணிக்கை, 2000-ஆம் ஆண்டில் 1570 ஆகவும், 2001-ஆம் ஆண்டில் 1546-ஆகவும் குறைந்துள்ளன. சென்னை மாநகரில் தீயணைப்புப் பணிகளை முனைப்புடன் செயலாற்றிட ஏதுவாக, தீயணைப்பு ஊர்திகளுக்கு தண்ணீர் வழங்கும் பொருட்டு, குடிநீர் வடிகால் வாரியத்தின் தண்ணீர் லாரிகளை தீ விபத்து நடந்த இடத்திலேயே பயன்படுத்திக் கொள்ளப்படுவதனால், தீயணைப்புப் பணிகள் தடையின்றி மேற்கொள்ளப்படுகின்றன. இவ்வாறு செய்யவில்லையெனில், தீயணைப்பு ஊர்திகள் நீருக்காக ஏதேனும் நீர் நிரப்பு நிலையங்களுக்குத்தான் செல்லவேண்டியிருக்கும். இது உயிர்களையும் மற்றும் பொதுமக்களின் உடைமைகளையும் தீயின் அழிவிலிருந்து காப்பாற்ற பெரிதும் உதவிகரமாக உள்ளது.

24-11-2001 அன்று பலமாடிக் கட்டடமான குறளகத்தின் 5-வது தளத்தில் அமைந்துள்ள வணிக வரி அலுவலகத்தில் ஏற்பட்ட தீ விபத்தினை இத்துறையினர் கையாண்ட விதத்தை குறிப்பிடும்படியான ஒரு நிகழ்வாகக் கூறலாம். தீயணைப்பு-மீட்புப் பணி வீரர்கள் தீயை குறிப்பிட்ட நேரத்தில் திறமையாக அணைத்ததன் காரணமாக, 5-வது தளத்தில் ஏற்பட்ட தீ

[2002 ஏப்ரல் 24

மற்ற தளங்களுக்கு பரவாமல் தடுக்கப்பட்டதுடன், ரூ.4.90 கோடி மதிப்புள்ள சொத்துக்கள் முழுவதும் தீயினால் அழிக்கப்படாமல் காப்பாற்றப்பட்டன.

**(உ) மீட்பு அழைப்புகள்:**

மீட்பு அழைப்புகள் பெரும்பாலும், சாலை விபத்து, இரயில் விபத்துகளில் சிக்குண்டவர்கள், கிணறுகளில் தவறி விழுந்தவர்கள், நச்சுப்பூச்சிகளின் தாக்குதலுக்கு உள்ளானவர்கள், நச்சு வாயுக்களை சுவாசித்தவர்கள், கட்டட இடிபாடுகளில் சிக்குண்டவர்கள் மற்றும் இயற்கையான மற்றும் மனிதர்களால் ஏற்படுத்தப்படும் இடர்கள் ஆகியவற்றில் சிக்குண்டவர்களைக் காப்பாற்றக்கோரும் அவசர அழைப்புகளாக உள்ளன. 2000 மற்றும் 2001 ஆகிய இரண்டாண்டுகளில், முறையே 4170 மற்றும் 4457 மீட்பு அழைப்புகள் பெறப்பட்டுள்ளன.

இத்துறையால் மேற்கொள்ளப்பட்ட சில முக்கிய மீட்பு அழைப்புகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:—

(1) 2-6-2001 அன்று, சென்னை மயிலாப்பூரில், தண்ணீர்த் தொட்டியை சுத்தம் செய்யும்போது 15 அடி ஆழக் குழியில் தவறி விழுந்த 35 வயதுள்ள திரு. ரவி என்பவர் உயிருடன் மீட்கப்பட்டார்.

(2) 4-07-2001 அன்று, சென்னை தேனாம்பேட்டையில் 35 அடி ஆழமுள்ள கிணற்றில் தவறி விழுந்த பாரதி என்ற 7 வயது சிறுவன் உயிருடன் மீட்கப்பட்டான்;

(3) சமீபத்தில், 7-3-2002 அன்று, கோயம்புத்தூர் நகரில் கட்டுமான இடிபாடுகளில் சிக்கிய 2 நபர்கள் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பணியாளர்களால் உயிருடன் மீட்கப்பட்டனர்;

**(ஊ) கட்டண அழைப்புகளும் நோயாளர் ஊர்தி அழைப்புகளும்;**

79 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களில் நோயாளர் ஊர்திகள் உள்ளன. தீ விபத்து மற்ற இதர விபத்துகளின் போது, காயமடைந்த நபர்கள் இவ்வூர்திகள் மூலம் உடனடி மருத்துவ உதவிக்காக மருத்துவமனைகளுக்கு கொண்டு செல்லப்படுகிறார்கள். இவையன்றி, அழைக்கப்படும் தருணங்களில் நியாயமான தொகையை வாடகையாகப் பெற்றுக்கொண்டு, நோயுற்றவர்களும், காயமுற்றவர்களும் சிகிச்சைக்காக



2002 ஏப்ரல் 24]

மருத்துவமனைகளுக்குக் கொண்டு செல்லப்படுகின்றனர். 2001 ஆம் ஆண்டில், 2031 அழைப்புகள் மூலம் நோயாளர் ஊர்திகள் கோரப்பட்டுள்ளன. இவற்றுள் 1632 அழைப்புகள் கட்டண அழைப்புகளாகும். கட்டண அழைப்புகளை மேற்கொண்ட வகையில் ரூ.4,93,416/- கட்டணமாக வசூலிக்கப்பட்டுள்ளது.

**(எ) பொது நலன் கருதி ஆயத்த நிலை நிறுத்தப் பணி:**

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் வாகனங்கள் முக்கியப் பிரமுகர்களின் வருகையின்போதும், முக்கிய கருத்தரங்குகள் மற்றும் பொதுக் கூட்டங்களின் போதும், பெரும் பந்தல்கள் அமைக்கப்பட்ட திருவிழாக்களின் போதும், பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் ஆயத்த நிலை நிறுத்தப்பணிக்கு பயன்படுத்தப்படுகின்றன. இது தவிர, கட்டணங்கள் செலுத்துவதன் பேரில் தனியார்களின் விழாக்களுக்கும் இச்சேவை அளிக்கப்படுகிறது. 2001-2002 ஆம் ஆண்டில் (2002 பிப்ரவரி மாதம் முடிய) ரூ.39,99,926/- ஆயத்த நிலை நிறுத்தப் பணிக் கட்டணமாக வசூலிக்கப்பட்டுள்ளது.

**11.ஊக்குவித்தலும் ஊக்கத் தொகைகளும்:**

இத்துறைப் பணியாளர்களை, மேலும் திறம்பட பணிபுரிய ஊக்குவிப்பதற்காகவும், இத்துறையின் நோக்கங்களை அடைவதற்கு ஏதுவாகவும், பின்வரும் ஊக்கத் தொகைகள் அளிக்கப்படுவதுடன், நலத் திட்டங்களும் அளிக்கப்படுகின்றன:—

**(I) ஊக்கத் தொகைகள்**

**(அ) விருதுகளும், வெகுமதிகளும்**

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையினர் போற்றத்தக்க வகையில், கடமை உணர்வுடனும், அஞ்சா நெஞ்சத்துடனும் ஆற்றிய பணியினைப் பாராட்டும் வகையில், மாநில அரசு ஏற்படுத்திய பின்வரும் பதக்கங்கள், தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை அலுவலர்களுக்கும் பணியாளர்களுக்கும் வழங்கப்படுகின்றன:—

(I) தமிழ்நாடு முதலமைச்சரின் தீயணைப்புப் பணி பதக்கம் (அண்ணா பதக்கம்).

இப்பதக்கம் பெறுபவர்கள், அவர்களுடைய பதவித் தரத்திற்கேற்ப ரூ.2000/- முதல் ரூ.5000/- வரை ஒட்டுமொத்தத் தொகை பெறத் தகுதியுடையவராவார்கள்.

(2) தமிழ்நாடு முதலமைச்சரின் தீயணைப்பு பணி பதக்கம் (பொங்கல் தினத்தன்று வழங்கப்படுவது.)

இப்பதக்கம் பெறும் தீயணைப்போர் மற்றும் அதற்கு இணையான பதவியில் உள்ளோர் ஒவ்வொருவருக்கும், மாதாந்திர ரொக்கப்படியாக ரூ.40/-ம் முன்னணித் தீயணைப்போர் /இயந்திரக் கம்மியர் ஓட்டுநர், தீயணைப்போர் ஓட்டுநர், தீயணைப்போர்-இயந்திரக் கம்மியர் ஆகிய ஒவ்வொருவருக்கும் மாதந்தோறும் ரூ.50/- வழங்கப்படுகிறது.

(3) மாநில விருதுகள் தவிர, தீயணைப்புப் பணியாளர்களுக்கு மத்திய அரசால் ஏற்படுத்தப்பட்ட பதக்கங்களும் வழங்கப்படுகின்றன. அதன் விவரங்கள் பின்வருமாறு:—

(அ) சுதந்திர தினத்தன்று வழங்கப்படும் பாராட்டத்தக்க பணிக்கான தீயணைப்புப் பதக்கம்.

(ஆ) குடியரசு தினத்தன்று வழங்கப்படும் பாராட்டத்தக்க பணிக்கான தீயணைப்புப் பதக்கம்.

(இ) வீரதீரச் செயலுக்கான தீயணைப்பு பணிப் பதக்கம்

(4) தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பணியாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டும், அவர்கள் உத்வேகத்துடனும், உயர் நோக்கினை அடையும் வகையில் ஊக்குவிக்கவும், "சிறந்த பணிக்கான தமிழ்நாடு முதலமைச்சர் தீயணைப்புப் பணி பதக்கம்" 5-7-2001-ல் அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. நிலைய அலுவலர், முன்னணித் தீயணைப்போர், தீயணைப்போர் மற்றும் அப்பதவிகளுக்கு இணையான பதவித் தரத்தில் உள்ளவர் ஒவ்வொருவருக்கும், ஆண்டுதோறும் 3 பதக்கங்கள் தீத்தொண்டு நாள் (ஏப்ரல், 14) அன்று வழங்கப்படுகிறது. ஒவ்வொரு பதக்கமும் 22 கேரட் தங்கத்தில் செய்யப்பட்ட 8 கிராம் எடை கொண்டதாகும். மேலும், இப்பதக்கம் பதவித் தரவாரியான மொத்தத் தொகை அதாவது நிலைய அலுவலர் மற்றும் அப்பதவிக்கு இணையான தரத்தில் உள்ளவர்களுக்கு ரூ.3000/-ம், முன்னணி தீயணைப்போர் மற்றும் அப்பதவிக்கு இணையான தரத்தில் உள்ளவர்களுக்கு ரூ.2500/-ம், தீயணைப்போர் மற்றும் அப்பதவிக்கு இணையான தரத்தில் உள்ளவர்களுக்கு ரூ.2000/-ம், வழங்கப்படுகிறது.



இப்பதக்கம் தனிப்பட்ட திறமையை வெளிப்படுத்துபவர்களுக்கு மட்டுமே வழங்கப்படுகிறது.

**(ஆ) நலத் திட்டங்கள்:**

**(1) தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை நல நிதி**

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் துயருக்கு ஆளான பணியாளர்களுக்கு நிதி உதவி செய்வதற்கென 1962 ஆம் ஆண்டில் தமிழ்நாடு தீயணைப்புத் துறை நல நிதி ஏற்படுத்தப்பட்டது. இந்நிதி அவர்களது நலனை மேம்படுத்துகிறது. இதன் உறுப்பினர்களுக்குப் பின்வரும் தேவைகளுக்கு நிதியுதவி அளிக்கப்படுகிறது:

(அ) காசநோய், தொழுநோய், புற்றுநோய் போன்ற கொடிய நோய்களினால் அவதியுறும் தீயணைப்புப் பணியாளர்களுக்கும் மற்றும் அவர்களைச் சார்ந்திருப்போருக்கும் சத்துணவு வாங்க;

(ஆ) அவர்களுடைய குழந்தைகளின் உயர் கல்விச் செலவிற்கு;

(இ) மரணமுற்ற பணியாளர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்க;

(ஈ) பணியாளர்களோ அல்லது அவர்களைச் சார்ந்தவர்களோ இறந்துவிட்டால், அவர்களது ஈமச் சடங்கு செலவிற்கு;

இத்திட்டத்தில் 5,617 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். உறுப்பினர்களிடமிருந்து இந்நலநிதிக்கு சந்தாத் தொகையாக ரூ.4,05,385/- வசூலிக்கப்பட்டது. 2001-2002 ஆம் ஆண்டில் இந்நிதியிலிருந்து உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட மொத்த நிவாரணத் தொகை ரூ.4,53,399/- ஆகும். இந்நல நிதிக்கு அரசு மானியமாக வழங்கி வந்த ரூ.3,00,000/-ஐ, ரூ.4,00,000/- ஆக உயர்த்தி, 13-12-2001-ல் அரசு ஆணையிட்டுள்ளது.

**(2) குடும்ப நல நிதித் திட்டம்**

பணியிலிருக்கும்போது உயிர் துறக்கும் பணியாளர் குடும்பத்தினருக்கு குடும்ப நல நிதித் திட்டத்தின் கீழ் நிவாரணத் தொகை ரூ.1,00,000/- அரசு அளிக்கிறது. இது தவிர, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த நிவாரணத் தொகையினை, அரசு ஆணை (நிலை) எண் 1222, உள் (காவல்-17) துறை, நாள் 11-12-2001-ல் பின்வருமாறு உயர்த்தி, அரசு ஆணை வழங்கியுள்ளது:—

| | | |
|---|---|---|
| (i) | பணியில் ஈடுபடும்போது உயிர்துறக்கும் பணியாளர்களின் குடும்பத்திற்கு | ரூ.2,00,000/-லிருந்து ரூ.5,00,000/-ஆக |
| (ii) | பணியில் ஈடுபடும்போது நிரந்தர ஊனம் அடைந்தவர்களுக்கு | ரூ.50,000/- லிருந்து ரூ.1,00,000/-ஆக |
| (iii) | பணியில் ஈடுபடும்போது கடுமையாகக் காயமடைந்தவர்களுக்கு | ரூ.10,000/-லிருந்து ரூ.20,000/- ஆக |
| (iv) | பணியில் ஈடுபடும்போது சிறுகாயமடைநதவர்களுக்கு | ரூ.5,000/-லிருந்து ரூ.10,000/-ஆக |

**(3) குழு காப்புறுதித் திட்டம்**

பணியில் ஈடுபடும்போது உயிர்துறக்கும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பணியாளரின் குடும்பத்திற்கு நிவாரணம் அளிப்பதற்காக, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை இயக்குநர் முதல் தீயணைப்போர் வரையிலானவர்களுக்கு (அமைச்சுப் பணியாளர்கள் நீங்கலாக) அனைவரும் பயனடையும் வகையில் குழு காப்புறுதித் திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. உயிர் துறக்கும் பணியாளரின் குடும்பத்திற்கு இத் திட்டத்தின் கீழ் ரூ.1,00,000/- அளவிற்கு நிவாரணம் அளிக்கப்படுகிறது.

**(4) உணவுப் பொருட்களை மானிய விலையில் வழங்கும் திட்டம்**

இத்திட்டத்தின்கீழ், உதவிக்கோட்ட அலுவலர் பதவித் தரம் வரையிலான பணியாளர்களுக்கு அரிசி, கோதுமை, ரவை, மைதா, பாமாயில், துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு போன்ற உணவுப் பொருட்கள் மானிய விலையில் வழங்கப்படுகின்றன. இதற்காக ஆண்டொன்றுக்கு ஏறக்குறைய 47.82 இலட்சம் ரூபாயை அரசு செலவிடுகிறது.

**(5) குடியிருப்புகள் கட்டுதல்**

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பணியாளர்களின் செயல்திறனை நிலையாக வைக்கவும், தேவை ஏற்படும்போது அவர்களை விரைவாகப் பணிக்கு அழைக்கவும், அவர்களுக்குத் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களின் அருகிலேயே குடியமர்த்துவது இன்றியமையாததாகும். தற்போது அரக்கோணம், உடுமலைப்பேட்டை, இராணிப்பேட்டை, சிவகாசி, அசோக் நகர், வண்ணாரப்பேட்டை,



நந்தனம், பெரம்பலூர், நாகப்பட்டினம், அண்ணாநகர்(மேற்கு), மயிலாப்பூர், தாம்பரம், தர்மபுரி, மதுரை, மணலி, விழுப்புரம், திருவல்லிக்கேணி, பெரியகுளம், கோயம்புத்தூர் (தெற்கு), நுங்கம்பாக்கம், தேனாம்பேட்டை, ஜெயங்கொண்ட சோழபுரம், பாளையங்கோட்டை, ஈரோடு, செங்கல்பட்டு, திண்டுக்கல் மற்றும் ஆத்தூர் ஆகிய 27 இடங்களில் குடியிருப்புகள் உள்ளன. மேலும் தூத்துக்குடி, திருப்பூர், திண்டிவனம், கடலூர் மற்றும் சென்னை தங்கசாலை ஆகிய இடங்களில் குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன. இதற்கு முன்னர் ஆண்டொன்றுக்கு 100 குடியிருப்புகள் வீதம், தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகத்தின் மூலம் கட்டித்தருவதென அரசு கொள்கை முடிவெடுத்திருந்தது. வாடகையற்ற குடியிருப்பு வசதி பெற தகுதி பெற்ற 6,288 அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு, 777 குடியிருப்புகளே உள்ளன. இது 12.48 விழுக்காடு நிறைவினை மட்டும் அளித்துள்ளது. ஆண்டொன்றுக்கு 100 குடியிருப்புகள் மட்டும் கட்டுவது குறைவாக உள்ளதால், 2001-2002 ஆம் ஆண்டிலிருந்து 100 குடியிருப்புகளுக்குப் பதிலாக 200 குடியிருப்புகள் கட்டித்தர அரசு முடிவெடுத்துள்ளது. இதற்கேற்ப, மேட்டுப்பாளையம், திருப்பத்தூர், பழனி, மன்னார்குடி, கும்மிடிப்பூண்டி, விருத்தாச்சலம், இராமேஸ்வரம், வந்தவாசி, நாமக்கல், மறைமலைநகர், தாராபுரம், அம்பாசமுத்திரம் மற்றும் விருதுநகர் ஆகிய இடங்களில், ரூ.6.95 கோடி மதிப்பீட்டுச் செலவில் 200 குடியிருப்புகள் கட்டித் தர 7-12-2001-ல் அரசு ஆணை வழங்கியுள்ளது.

**12. புதிய முயற்சிகளும், திட்டங்களும்:**

(1) தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகளில் இத்துறையின் முக்கிய பங்கை சரியாகப் புரிந்து கொள்ளும் வகையிலும், பொது மக்களால் பாராட்டப்படும் வகையிலும், தமிழ்நாடு தீயணைப்புத் துறை என்றிருந்த இத்துறையின் பெயரை “தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை” என மாற்றியமைத்தும், துறையில் உள்ள பதவிகளின் பெயர்களையும் மாற்றி அமைத்தும் அரசு ஆணை எண் 618, உள் (காவல்-17) துறை, நாள் 2-7-2001-ல் அரசு ஆணை வழங்கியுள்ளது.

(2) கழிவு செய்யப்பட்ட ஊர்திகளுக்குப் பதிலாக, 18 நீர்தாங்கி வண்டிகள் ரூ.2.43 கோடி செலவில் வாங்கி வழங்க அரசாணை (நிலை) எண் 757, உள் (காவல்-17) துறை, நாள் 9-08-2001-ல் அரசினால் ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

(3) அரசாணை (நிலை) எண் 778, உள் (நவீனம்) துறை, நாள் 16-8-2001-ல் 2001-2002 மற்றும் 2002-2003-ஆம் நிதி ஆண்டுகளில் ரூ.6.00

கோடி செலவில் 34 நிலையங்களுக்கு கட்டடம் கட்டித்தர அரசு ஒப்பளிப்பு அளித்து ஆணை வெளியிட்டுள்ளது. மேலும், ரூ.2.00 கோடி மதிப்பீட்டில் 2002-2003 மற்றும் 2003-2004 நிதியாண்டுகளில் தீயணைப்புச் சாதனங்கள் வாங்குவதற்கு அரசு ஒப்பளிப்பு அளித்துள்ளது.

(4) பிராண்டோ ஸ்கைலிப்ட் என்கிற ஹைட்ராலிக் பிளாட்பாரம் மற்றும் சுழல் மேஜை ஏணி ஊர்தியை (42 மீட்டர்) கீழ்ப்பாக்கம் நிலையத்தில் நிறுத்திவைப்பதற்காக ரூ.12.50 இலட்சம் செலவில் கொட்டகை கட்டுவதற்காக அரசாணை (நிலை) எண் 973, உள் (காவல்-17) துறை, நாள் 3-10-2001-ல் அரசு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

(5) அரசாணை (நிலை) எண் 1304, உள் (காவல்-17) துறை, நாள் 27-12-2001-ல் மாநிலம் முழுவதும் உள்ள தீயணைப்பு நிலையங்களின் உபயோகத்திற்கென 233 நிலையான, 263 ஊர்தியில் பொருத்தக்கூடிய, 233 கையில் எடுத்துச்செல்லக்கூடிய உயர் அலைவரிசை வான்தந்தி கருவிகள் ரூ.2.05 கோடி செலவில் வாங்குவது குறித்த திட்டத்திற்கு அரசு ஒப்புதல் வழங்கி ஆணையிட்டுள்ளது. இது பகுதி பகுதியாக இரண்டாண்டு காலத்தில் நிறைவேற்றப்படும்.

(6) 985 நபர்கள் தீயணைப்போர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள்.

(7) கருணை அடிப்படையில் வேலை வாய்ப்பு பெற தகுதியுடையவர்களின் எண்ணிக்கை காத்திருப்போர் பட்டியலில் அதிகமாக உள்ளதைக் கருத்திற்கொண்டு, அப்பட்டியலில் உள்ளவர்களை சிறப்பு நேர்வாக தீயணைப்போர்களாக நியமனம் செய்து கொள்ள தீயணைப்பு மற்றும் மீட்டுப் பணித் துறை இயக்குநருக்கு அரசாணை (நிலை) எண் 514, உள் (காவல்-17) துறை, நாள் 25-05-2001-ல் அனுமதி அளித்து அரசு ஆணை வழங்கியுள்ளது.

(8) கோட்ட அலுவலர், நிலைய அலுவலர் மற்றும் தீயணைப்போர் பதவிகளுக்கான தேர்வில் பெண்களும் கலந்து கொள்வதற்கு ஏதுவாக 12-10-2001-ல் ஆணை வழங்கப்பட்டுள்ளது. தீயணைப்போர் பதவிக்கு பெண்களையும் சேர்க்க ஆணை வழங்கிய மாநிலம் இந்தியாவிலேயே தமிழகம்தான் முதலாவதாகும்.

(9) 2001-2002-ம் ஆண்டு முதல் பணியாளர்களுக்கு குடியிருப்பு கட்டித் தருவதினை 100-லிருந்து 200 ஆக உயர்த்த அரசு முடிவெடுத்து, இதற்கேற்ப அரசாணை (நிலை) எண் 1214, உள் (காவல்-17) துறை, நாள் 7-12-2001-இல்



மேட்டுப்பாளையம், திருப்பத்தூர், பழனி, மன்னார்குடி, கும்மிடிப்பூண்டி, விருத்தாசலம், இராமேஸ்வரம், வந்தவாசி, நாமக்கல் மறைமலைநகர், தாராபுரம், அம்பாசமுத்திரம் மற்றும் விருதுநகர் ஆகிய இடங்களில் ரூ.6.95 கோடி மதிப்பீட்டில் 200 குடியிருப்புகள் கட்ட அரசு ஆணை வழங்கியுள்ளது.

(10) தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பணியாளர்களை மேலும் திறம்பட பணிபுரிய ஊக்குவிப்பதற்காக, இவ்வரசு, அரசு ஆணை எண் 630, உள் (கடும் மந்தணம்) துறை, நாள்: 5-7-2001-ல் "சிறந்த திறமைக்கான தமிழ்நாடு முதலமைச்சரின் தீயணைப்புப் பணி பதக்கம்" ஒன்றை புதியதாக உருவாக்கியுள்ளது. அதன்படி ஆண்டு தோறும் 3 பதக்கங்கள் வழங்கப்படும். ஒவ்வொரு பதக்கமும் 8 கிராம் எடை கொண்ட 22 காரட் தங்கத்தினால் செய்யப்பட்டதாகும். மேலும், இப்பதக்கம் பெறுபவர்களுக்கு, பதவித் தரத்திற்கேற்ப ஒட்டுமொத்த மானியத் தொகையும் பின்வருமாறு வழங்கப்படும்:-

| | பதவி | ஒட்டுமொத்தத் தொகை |
|---|---|---|
| 1. | நிலைய அலுவலர் மற்றும் அதற்குச் சமமான பதவிகளில் உள்ளவர்கள். | ரூ.3000/- |
| 2. | முன்னணி தீயணைப்போர் மற்றும் அதற்குச் சமமான பதவிகளில் உள்ளவர்கள் | ரூ.2500/- |
| 3. | தீயணைப்போர் மற்றும் அதற்குச் சமமான பதவிகளில் உள்ளவர்கள் | ரூ.2000/- |

**(11) அரசாணை (நிலை) எண்.33, உள் (காவல்-17) துறை, நாள் 11-01-2002-ல் பணியாளர்களுக்கு வழங்கப்படும் உணவு கட்டணத் தொகையினை காவல் துறை பணியாளர்களுக்கு இணையாக ரூ.9-லிருந்து ரூ.50 ஆக உயர்த்தி அரசு ஆணை வழங்கியுள்ளது.**

**(12) தீயணைப்பு-மீட்புப் பணித்துறை பணியாளர்களுக்கு வழங்கப்படும் வாராந்திர உபரிப் பணிப்படியினை காவல் துறை பணியாளர்களுக்கு இணையாக ரு.10-லிருந்து ரூ.50-ஆக உயர்த்தி அரசாணை (நிலை) எண் 1273, உள் (காவல்-17) துறை, நாள் 20-12-2001-ல் ஆணைகள் வெளியிட்டுள்ளது.**

(13) பணியில் ஈடுபடும்போது மரணமடையும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த நிவாரண

நிவாரணத் தொகையினை அரசு ஆணை (நிலை) எண் 1222, உள் (காவல்-17) துறை, நாள் 11-12-2001-ல் பின்வருமாறு, உயர்த்தி அரசு ஆணை வழங்கியுள்ளது:

| | | |
|---|---|---|
| (அ) | பணியில் ஈடுபடும்போது உயிர்துறக்கும் பணியாளர்களின் குடும்பத்திற்கு | ரூ.2,00,000/- லிருந்து ரூ.5,00,000/- |
| (ஆ) | பணியில் ஈடுபடும்போது நிரந்தர ஊனம் அடைந்தவர்களுக்கு | ரூ.50,000/- லிருந்து ரூ.10,00,000/- |
| (இ) | பணியில் ஈடுபடும்போது கடுமையாகக் காயமடைந்தவர்களுக்கு | ரூ.10,000/- லிருந்து ரூ.20,000/- |
| (ஈ) | பணியில் ஈடுபடும்போது சிறு காயமடைந்தவர்களுக்கு | ரூ.5,000/- லிருந்து ரூ.10,000/- |

(14) அரசாணை (நிலை) எண் 1236, உள் (காவல்-17) துறை, நாள் 13-12-2001-ல் தமிழ்நாடு தீயணைப்பு-மீட்புப் பணித் துறை சேமநல நிதிக்கு அரசினால் வழங்கப்பட்டு வந்த மானியத் தொகையினை ரூ.3.00 இலட்சத்திலிருந்து ரூ.4.00 இலட்சமாக உயர்த்தி அரசு ஆணைகள் வழங்கியுள்ளது.

(15) தகவல் தொடர்பினைப் பலப்படுத்தவும், பதில் செயல்பாடு நேர்த்தைக் குறைக்கவும் வேண்டி ரூ.155.00 இலட்சம் செலவில் நிலையான உயர் அலைவரிசை வான்தந்தி கருவிகள், பிரதிபலிப்பு உபகரணத்துடன் கூடிய நிலையான மற்றும் கையில் எடுத்துச் செல்லக்கூடிய வான்தந்தி கருவிகளையும், ரூ.16.06 இலட்சம் செலவில் 9 அதிநுண் அலைவரிசை வான்தந்தி கருவிகள் வாங்கி வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(16) தீயணைப்பு மற்றும் மீட்புப் பணியை மேம்படுத்த ரூ.128.94 இலட்சம் செலவில், கழிவு செய்யப்பட்ட வாகனங்களுக்குப் பதிலாக 3 தண்ணீர் லாரிகள், 12 நோயாளர் ஊர்திகள், ஒரு வான்தந்தி சிருந்து மற்றும் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் ஆகியவைகளும், எழும்பூர் நிலையத்திற்கு அனைத்து உபகரணங்களுடன் கூடிய சிறு நுரை தகர்வு ஊர்தி ஒன்றையும், வாங்கி வழங்க அரசு முடிவெடுத்துள்ளது.



(17) விரைவாக சமுதாய வளர்ச்சியால் ஏற்படும் சவால்களை சமாளிப்பதற்கு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்களை மேன்மேலும் அமைப்பது மட்டும் தீர்வாகாது என்பதை இந்த அரசு உணர்ந்துள்ளது. பல்வேறு அரசு துறைகளும், பொது நிறுவனங்களும் தனியார் நிறுவனங்களும் அதில் பங்காற்ற வேண்டி உள்ளது. தற்போது நடைமுறையிலுள்ள தீயணைப்பு விதிகள் மாற்றியமைக்கப்பட வேண்டுமென்பதுடன், தமிழ்நாடு குடிசைப் பகுதி (மேம்பாடு மற்றும் மாற்றுதல்) சட்டம் 1971, வெடிமருந்துச் சட்டம் 1884 மற்றும் வெடிமருந்து விதிகள், 1983, தமிழ்நாடு திரைப்படங்கள் (ஒழுங்குமுறை) சட்டம் 1955, தமிழ்நாடு திரைப்படங்கள் (ஒழுங்குமுறை) விதிகள், 1957 போன்றவைகளும் மாற்றியமைக்கப்பட வேண்டியுள்ளது. அரசின் பல திட்டங்கள் தீப்பாதுகாப்பு மற்றும் மீட்புப் பணி வழி வகைகளை இணைப்பதாக இருத்தல் வேண்டும். இதில் அரசு சாரா நிறுவனங்களின் செயல்பாடு இணைக்கப்பட வேண்டிய ஒன்றாகும். நகரமைப்பு ஒழுங்குமுறைகளுக்கும் மாற்றம் தேவைப்படலாம். இவை எல்லாவற்றையும் ஆராய ஒரு சீரான மற்றும் முறைப்படுத்தப்பட்ட தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி மற்றும் தீப்பாதுகாப்பு குறித்தான பரிந்துரைகளை அரசுக்கு அளித்திட ஏதுவாக உயர் அதிகாரம் கொண்ட குழு ஒன்றினை அமைக்க அரசு தீவிரமாகப் பரிசீலித்து வருகிறது.

**(13) முடிவுரை**

1-9-2001 அன்று இந்த அவையில் வைக்கப்பட்ட 2001-2002-க்கான கொள்கை விளக்க குறிப்பில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தினரால் அமைக்கப்படும் மகளிர் சுயசேவை குழுவினருக்கு தமிழ்நாடு முழுவதும் தீத்தடுப்பு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது என தெரிவிக்கப்பட்டிருந்தது. தீத்தடுப்பு உத்திகளில் தற்போது ஆயிரக்கணக்கான ஊரகப் பெண்களுக்கு நேரடி பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. தீப்பாதுகாப்பு என்பது ஊரக வாழ்க்கையின் ஓர் அங்கமாக விளங்க வேண்டி இம்முயற்சிகள் இருமடங்காக மேற்கொள்ளப்படும்.

குடிசைப் பகுதிகளில் மாதிரி தீ விபத்துகளை ஏற்படுத்தி, அதன் மூலம், தீப்பிடித்த பகுதிகளிலுள்ளோரை வெளியேற்றுதல், தீ விபத்துக் காலங்களில் தீயணைப்புப் படையினருக்கு உதவி செய்தல், தமக்குத்தாமே உதவிக் கொள்ளுதல் ஆகியவற்றில் குடிசைவாசிகளுக்கு இத்துறை பயிற்சி அளித்து வருகிறது. இது போன்று மேற்கொள்ளப்படும் பயிற்சிகளினால் விழிப்புணர்வு நிலை அதிகரிக்கும் என நம்பப்படுகிறது.

[2002 ஏப்ரல் 24


இந்தியா முழுவதும் எல்லா வயதினரும் சேர்ந்து மகிழ்ச்சியாக கொண்டாடக்கூடிய பண்டிகை தீபாவளியாகும். இப்பண்டிகைக் காலங்களில் பட்டாசுகளை உபயோகிப்பது தொன்றுதொட்டு வரும் நிகழ்ச்சியாகும். கண்மூடித்தனமாக பட்டாசுகளை உபயோகித்ததன் விளைவாக முந்தைய காலங்களில் ஏற்பட்ட பெருந் தீ விபத்துகளில் பெரும்பாலான உயிர்சேதமும், கோடிக்கணக்கான மதிப்புள்ள உடைமைகளுக்கும் அழிவுகள் ஏற்பட்டுள்ளன. பெரு நாட்டில், லிமா என்னுமிடத்தில், 29-12-2001 அன்று மக்கள் கூட்டம் நிரம்பிவழிந்த வர்த்தக மையம் அமைந்துள்ள பகுதியில் 40 டன் எடையுள்ள வெடிமருந்து பொருட்கள் வெடித்ததினால் ஏற்பட்ட பெருந் தீ விபத்தின் போது குறைந்தது 300 பேர் கொல்லப்பட்டனர். தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிட்டால் இதுபோன்ற விபத்துகள் எந்த இடத்திலும் நிகழலாம். தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை தீவிர தீப்பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை தீபாவளி பண்டிகையை முன்னிட்டு மேற்கொண்டதன் விளைவாக ஆண்டுதோறும் விபத்துகளின் எண்ணிக்கை குறைந்து கொண்டு வருகிறது. தீபாவளி பண்டிகையின் மகிழ்ச்சி கெடாத வண்ணம், விபத்துகள், உயிரிழப்புகளின்றி மகிழ்ச்சியான பண்டிகையாக கொண்டாட பட்டாசுகள் தயாரிப்பு, சேமிப்பு, விற்பனை மற்றும் அவற்றின் உபயோகம் குறித்து பாதுகாப்பு வரன்முறை ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் பெண்களையும் நியமனம் செய்யும் முதல் மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது.

தீ ஏற்படுத்தும் அழிவிலிருந்தும், இயற்கை மற்றும் செயற்கையாக நிகழும் பேரழிவுகளிலிருந்தும் மக்களை காப்பாற்றுவதற்கான மாற்றங்களை மேற்கொள்ள வேண்டிய சரியான தருணம் வந்துள்ளது. தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை இத்தகைய அனைத்து சவால்களையும் திறம்பட எதிர்கொள்ள உறுதிபூண்டுள்ளது.



2002 ஏப்ரல் 24]



## இணைப்பு-2

### நிருவாகப் பதவிகளின் விவரங்கள்

| தொடர் எண் | பதவியின் பெயர் | மொத்தப் பதவிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | இயக்குநர், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் | 1 |
| 2. | துணை இயக்குநர், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் | 4 |
| 3. | இயக்குநர் (பயிற்சி)-துணை இயக்குநர் தரம் | 1 |
| 4. | துணை இயக்குநர் (பயிற்சி)-கோட்ட அலுவலர் தரம் | 1 |
| 5. | கோட்ட அலுவலர் | 29 |
| 6. | டெல்லர் இன்ஜினியர்-கோட்ட அலுவலர் தரம் | 1 |
| 7. | உதவிப் பொறியாளர் (உந்தூர்தி) | 1 |
| 8. | உதவிக் கோட்ட அலுவலர் | 43 |
| 9. | விரிவுரையாளர்-உதவிக் கோட்ட அலுவலர் தரம் | 1 |
| 10. | நிலைய அலுவலர் | 308 |
| 11. | நிலைய அலுவலர் (போக்குவரத்து) | 13 |
| 12. | உதவி நிலைய அலுவலர் | 16 |
| 13. | முன்னணித் தீயணைப்போர் | 719 |
| 14. | இயந்திரக் கம்மியர் ஓட்டுநர் | 249 |
| 15. | தீயணைப்போர் ஓட்டுநர் மற்றும் தீயணைப்போர் இயந்திரக் கம்மியர் | 1032 |
| 16. | தீயணைப்போர் மற்றும் அதற்கு சமமான பதவிகள் | 3869 |
| | மொத்தம் | 6288 |



D
V211,31/02
02.26

## இணைப்பு-3

### அமைச்சுப் பணியாளர்களின் விவரங்கள்

| தொடர் எண் | பதவியின் பெயர் | மொத்தப் பதவிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | துணை இயக்குநர் (நிருவாகம்) | 1 |
| 2. | இயக்குநரது நேர்முக உதவியாளர் (நிருவாகம்) | 2 |
| 3. | நிருவாக அலுவலர் | 1 |
| 4. | கண்காணிப்பாளர் | 33 |
| 5. | உதவியாளர் | 92 |
| 6. | இளநிலை உதவியாளர் மற்றும் இளநிலை உதவியாளர் தட்டச்சர் | 62 |
| 7. | சுருக்கெழுத்துத் தட்டச்சர் | 6 |
| 8. | தட்டச்சர் | 33 |
| 9. | பதிவுரு உதவியாளர் மற்றும் பதிவுரு எழுத்தர் | 31 |
| 10. | அலுவலக உதவியாளர் மற்றும் இதர கடைநிலை ஊழியர்கள் | 57 |
| | மொத்தம் | 318 |

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
224375
சென்னை-600 008
நூலகம்

அரசு மைய அச்சகம், சென்னை - 600 079.

**Copies can be had from the**
**Assistant Director,**
**Government Publication Depot,**
**816, Anna Salai,**
**Chennai-600 002.**

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.